வரு.75 இல. 34 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28பக்கங்கள் 100/-




# கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk


# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 ஓகஸ்ட் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
August 27 Sunday, 2023




ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு,கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk


/ Thinakaran.lk / ThinakaranLK



02
ரத்வத்த தோட்ட அத்துமீறல்; பின்னணி என்ன



07
சிறுபான்மை மக்களின் தேவைகளை மறைத்து விடக் கூடாது!



13
வாட்டி வதைக்கும் கடும் உஷ்ணம்



24
எல்.பி.எல் இலங்கைக்கு உதவுமா?

## 'இனிய நந்தவனம்' கொழும்பில் வெளியீடு

**இன்று தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடு**



'இனிய நந்தவனம்' இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக விழா இன்று (27) பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் 06

## திருக்கேதீஸ்வரத்தில் USA தூதுவர் வழிபாடு

**மறக்கமுடியாத அனுபவம் என டுவிட்டர் பதிவு**



மன்னாருக்கு விஜயம் செய்த அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜூலி சங், 06

### இலங்கை–இந்திய சட்டவிரோத செயற்பாடு

# தமிழகத்தில் முக்கிய நபர் ஒருவர் கைது

## பாகிஸ்தானியர் ஒருவருடனும் போதைப்பொருள் வர்த்தகம்

இந்தியா மற்றும் இலங்கையில் சட்டவிரோத போதைப்பொருள், ஆயுத வர்த்தகம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கும் முயற்சிகள் தொடர்பில் மற்றுமொரு நபரை இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு (National Investigation Agency) கைது செய்துள்ளது.

தமிழகத்தில் வைத்து முக்கிய சந்தேகநபரான லிங்கம் என்றழைக்கப்படும் ஆதி லிங்கம் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னையில் வசிக்கும் ஆதிலிங்கம் குற்றம்சாட்டப்பட்டுள்ள குணா என்றழைக்கப்படும் குணசேகரனின் நெருங்கிய நண்பனாக இருந்துள்ளார். அத்துடன் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான சந்தேக நபரான பூக்குட்டி கண்ணா என்றழைக்கப்படும் புஷ்பராஜ் ஆகியோருடனும் தொர்புள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தேசிய புலனாய்வு அமைப்பு 06

- போதைப்பொருள், சட்டவிரோத ஆயுத வர்த்தகம், புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட லிங்கம் என்பவர் N.I.A எனும் தேசிய புலனாய்வு அமைப்பினரால் கைதாகி விசாரணை

### இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சி வெற்றி

## இவ்வருட தேசிய மீலாத் விழா மன்னார் சிலாவத்துறையில்

**நேற்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம்**



மன்னார் குறூப் நிருபர்

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழாவை மன்னார் மாவட்டத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கிராமியப் பொருளாதார 06



06
இந்திய பாதுகாப்பு அமைச்சர்
## ராஜ்நாத் சிங் இலங்கை வருகிறார்

## சிங்கப்பூருடனான உடன்படிக்கை முன்னேற்ற பொறுப்பு சாகலவிடம்

**ஜனாதிபதி ரணில் தீர்மானம்**



சிங்கப்பூருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பில் விடயதானங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்படும் வரை, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். 06



## தேசிய திட்ட முகாமைத்துவ சிறப்பு; ரூபவாஹினிக்கு தங்கம், வெள்ளி விருதுகள்

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்ட முகாமைத்துவ சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் 21 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தங்கம் மற்றும் வெள்ளி 06

### முன்னாள் பிரதி அமைச்சர்

## மயோன் முஸ்தபா நேற்று அதிகாலை காலமானார்



முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா காலமானார். நேற்று (26) அதிகாலை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் காலமானதாக 06

## எங்கள் கருத்து...

## விலங்குகளிடமும் காணமுடியாத கொடிய மனம் கொண்டவர்கள்!

நாட்டில் தற்போது கொடிய வரட்சி நிலவுகின்றது. இலங்கையில் கடந்த பத்து வருடங்களில் காணமுடியாத அதியுச்ச வரட்சி இதுவென்று வானிலை அவதான நிலையம் தெரிவித்திருக்கின்றது.

கொடிய உஷ்ணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மக்கள் அவஸ்தைப்படுகின்றனர். உஷ்ணகாலத்து நோய்கள் அதிகரித்திருக்கின்றன. இரவில் வீடுகளில் நிம்மதியாக உறங்க முடியாதிருக்கின்றது.

மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மழை பெய்யாவிடின் நிலைமை மோசமடையலாம். நாட்டில் பெரும்பாலான குளங்கள் முற்றாகவே வற்றிப் போயுள்ளன. விவசாயத்துக்கும், மக்களுக்கான குடிநீருக்கும் தண்ணீரை விநியோகிப்பதில் சிக்கல் நிலைமை உருவாகியிருக்கின்றது. வரட்சி மேலும் தொடருமானால் விவசாயச் செய்கை என்னவாகுமென்ற அச்சம் உருவாகியிருக்கின்றது. கொடிய வரட்சியானது நாட்டில் உணவுப் பஞ்சத்தையும் ஏற்படுத்தி விடலாமென்பதுதான் ஆபத்தான செய்தி!

அதேசமயம், மலையகப் பிரதேசங்களிலுள்ள நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து செல்வதால் நீர் மின்சார உற்பத்தியும் குறைந்து கொண்டே 06

### வடக்கு, கிழக்கில் ஆர்ப்பாட்டம் செய்யும்

## சட்டத்தரணிகளின் சவாலுக்கு ஒரு போதும் அஞ்ச மாட்டேன்

**பாராளுமன்றில் பதிலளிப்பதாக சரத் வீரசேக்கர சூளுரை**



முல்லைத்தீவு நீதிபதியைக் காப்பாற்ற முயலும் வடக்கு கிழக்கு சட்டத்தரணிகளின் எழுச்சியைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சட்டத்தரணிகள் எனக்கு விடுத்துள்ள சவாலுக்கு நான் பாராளுமன்றத்தில் வைத்து தான் பதில் வழங்குவேனென 06

## GCE A/L பரீட்சை முடிவுகள் அடுத்தமாத முதல் வாரத்தில்



2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்தமாத முதல் வாரத்தில் வெளியிட முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட இந்த பரீட்சைகள், கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை 2,200 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெற்றன. 06

### இலங்கை விஞ்ஞானி

## இப்ராஹிம் ஜவாஹிருக்கு USAயில் உயர் விருது



அனுராதபுர மாவட்டத்திலுள்ள நாச்சியாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் விஞ்ஞானி 06

## பிரமிட் திட்டங்களை நம்பி ஏமாறவேண்டாம்

**பொதுமக்களுக்கு மத்திய வங்கி அறிவுறுத்தல்**



பிரமிட் திட்டங்களால் அவற்றின் சட்டபூர்வ தன்மையை நிரூபிக்கும் நோக்கில் வெளியிடப்படும் கூற்றுக்களில் எவ்வித உண்மையுமில்லை. அவற்றை நம்பி ஏமாற வேண்டாமென இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு அவசர அறிவுறுத்தலை 06

### வடக்கு, கிழக்கு பகுதிகளில் தேவையற்ற தலையீடு

## இன மோதல்களை உருவாக்குவது சில அரசாங்க திணைக்களங்களே

**இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றச்சாட்டு**



மட்டக்களப்பு மாவட்ட நிருபர்

வடக்கு, கிழக்கில் வன வள திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியனவே இன மோதல்கள் 06







# எதிர்பார்ப்புகளை ஈடேற்றத் தவறிய எடப்பாடியின் மதுரை மாநாடு!

## நீதிமன்றத் தீர்ப்பினால் துவண்டுபோன பன்னீர் செல்வம்

அருள் சத்தியநாதன்

அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் பிராந்திய மற்றும் தேசிய அரசியல் கட்சிகள் அனைத்துமே தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதிலும் பொதுஜனத்தின் முன்பாக தம்மை மக்கள் தொண்டனாக நிலைநிறுத்திக் கொள்வதிலும் வேகம் காட்ட ஆரம்பித்துள்ளன.

தென் மாகாணங்களான கேரளா, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகம், தமிழகம், ஒடிசா என்பனவற்றில் வெற்றி வாய்ப்புக் குறைவு எனக் கணக்கு போட்டிருக்கும் பா.ஜ.க. இந்துத்துவக் கொள்கைகளும், இராமர் கோவிலும், சிறுபான்மை மத எதிர்ப்பு மனப்பான்மையும் செல்லுபடியாகக் கூடிய வட மாநிலங்களில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

'இந்தியா' என்ற காங்கிரஸ் கட்சியின் தலைமையில் நாடு தழுவிய ரீதியான ஒரு புதிய மெகா கூட்டணியில் 26 கட்சிகள் இணைந்துள்ளதோடு, தற்போது மாநில ஆட்சியில் அமர்ந்திருக்கும் கர்நாடக முதல்வர் சித்தராமையா, தமிழக முதல்வர் எம்.கே. ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பெனர்ஜி, டில்லி முதல்வர் அர்விந்த கெஜ்ரிவால் ஆகிய செல்வாக்கு மிக்க தலைவர்கள் இந்தியா கூட்டணியில் உள்ளனர். ஐக்கிய ஜனதா தள், ராஷ்டிரிய ஜனதா தள், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகிய பீஹார் மற்றும் ஜார்கண்ட் கட்சிகளும் இதில் அடங்குகின்றன.

பா.ஜ.க. தன் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 38 கட்சிகள் அங்கம் வகிப்பதாகத் தெரிவித்துள்ளதோடு இக்கட்சிகளை அழைத்து டில்லியில் ஒரு சந்திப்பையும் நடத்தியது. ஆனால் அக் கூட்டணியில் பிரபலமான கட்சிகள் இல்லை என்பதை அக் கூட்டத்தின் தலைவர்கள் அரங்கைப் பார்த்தபோது புரிந்து கொள்ள முடிந்தது. பிரதமர் மோடியின் வலது புறமாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியே அமர வைக்கப்பட்டிருந்தார். எனினும் தமிழக – பாண்டிச்சேரிக்கு உரிய 30 பாராளுமன்றத் தொகுதிகளில் அரைவாசிக்கு குறைவாகவேனும் பா.ஜ.க. கூட்டணிக்கு பெற்றுத்தரக் கூடிய நிலையில் எடப்பாடியார் உள்ளார் என்று எந்த அரசியல் அவதானியும் கருதுவதாகத் தெரியவில்லை.


புதுடில்லியுடன் அ.தி.மு.க.வுக்கு நல்ல தொடர்பு காணப்பட்டாலும் மாநில மட்டத்தில் பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலைக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையே தொடர்ச்சியான குடுமிப்பிடிச் சண்டை நிகழ்வதை காண முடிகிறது.

தற்போது முதல் கட்டத்தை நிறைவு செய்திருக்கும் அண்ணாமலையின் பயணம் ராமேஸ்வரத்தில் ஆரம்பமான போது அதை ஆரம்பித்து வைத்தவர் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அப்படியிருந்தும் கூட, கூட்டணித் தலைவர்களில் ஒருவரான எடப்பாடியார் அந் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. அண்ணாமலை ஜெயலலிதாவை ஊழல்வாதி என்று விமர்சித்தது, அ.தி.மு.க. உயர்மட்டத் தலைவர்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் அ.தி.மு.க.வை விமர்சிப்பதை அண்ணாமலை நிறுத்தியதாகத் தெரியவில்லை. இந்தத் தமிழகப் பயணம் பா.ஜ.க.வுக்கு எழுச்சிப் பயணமாக அமையும் என்றும், பா.ஜ.க.வின் அவசியம் தமிழக வாக்காளர்களுக்கு இப்பயணத்தின் மூலம் தெரியவரும் என்றும் எல்லா இடங்களிலும் குறிப்பிடும் அண்ணாமலை, திராவிடக் கட்சிகளைத் தான் தன் தாக்குதல் இலக்காகக் கொண்டிருக்கிறார்.

தமிழக பா.ஜ.க. தலைமைக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையே இவ்வாறு முறுகல் மோதல் காணப்பட்டாலும் டில்லித் தலைமை இதைக் கண்டுகொண்டதாகவோ அல்லது சமரசம் செய்ய முற்பட்டதாகவோ தெரியவில்லை. எது மாநில அளவில் நடந்தாலும் இறுதி முடிவு எடுக்கப்போவது டில்லித் தலைமைதானே, அதற்கு தமிழக பா.ஜ.க. கட்டுப்படத்தானே வேண்டும் என்று பா.ஜ.க. தலைமை யோசிக்கிறதோ தெரியவில்லை.

இந்தப் பின்னணியில்தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுரையில் எடப்பாடியாரை உச்சாணிக் கொம்பில் நிறுத்தும் பேரெழுச்சி மாநாட்டை அ.தி.மு.க. நடத்தி முடித்தது. ஓ.பன்னீர் செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கி ஒட்டுமொத்தமாக அவரை ஓரம் கட்டும் ஒரு முயற்சியாகவும் இந்த மாநாட்டை பார்க்கலாம். அ.தி.மு.க.வுக்கும் இருப்பது ஒரே ஒரு தலைமை. அவர் எடப்பாடி பழனிச்சாமி மாத்திரமே. பெரும்பாலான அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் எடப்பாடியாரின் பின்னால் அணிவகுத்துள்ளனர். அ.தி.மு.க. தொண்டர்களின் ஏகோபித்த ஆதரவு எடப்பாடியாரின் வசமே என்பதை பறையறிவிக்கும் மாநாடாகவே இது அமைந்திருந்தது.

எனினும் அ.தி.மு.க.வுடன் தோழமை பூண்டுள்ள, பா.ஜ.க. உட்பட எந்தவொரு கட்சித் தலைவரும் இக் கூட்டத்துக்கு வருகை தராதது ஏன் என்று தெரியவில்லை. இதற்கான விளக்கத்தை அ.தி.மு.க. தலைமையகம் தெரிவிக்கவும் இல்லை.





**'டன் கணக்கில் புளிச்சோறு வீணானது, ஸ்டாலினை 'போப்பா தலையன்' என அழைத்தது, எடப்பாடி உரை நிகழ்த்துகையில் மக்கள் எழுந்து சென்றது என மாநாட்டில் பல முகச் சுளிப்புகள்'**



திராவிடக் கட்சிகளுக்கே உரிய பிரமாண்டமான முகப்பும் பந்தலும், விசால மேடையுமாக ஏற்பாடுகள் தடபுடலாக இருந்தன. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலத்தில் பெரியார், அண்ணா உருவங்கள் மேடையிலும் பந்தல் முகப்பிலும் இருக்கும். பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. நெருங்கி உறவாடத் தொடங்கிய பின்னர் எடப்பாடியார் பெரியாரை முன்னிலைப் படுத்துவதைத் தவிர்த்துவிட்டார். திராவிட கொள்கையின் தோற்றுவாயாகவும், பிராமணியத்தின் (வைதிகத்தின்) எதிரியாகவும் பெரியாரை பா.ஜ.க. சிந்தனையாளர்கள் கருதுகின்றனர்.

இம்முறை பந்தல் வாசலில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மற்றும் எடப்பாடியாரின் பிரமாண்ட 'கட் அவுட்' உருவங்கள் வாயிலின் ஒரு புறத்திலும் அறிஞர் அண்ணாவின் உருவம் இன்னொரு புறமாகவும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் மாநாடு ஆரம்பமான தினத்தன்று அண்ணாவின் படம் அகற்றப்பட்டிருந்தது. கட்சியின் பெயரிலும், கட்சிக் கொடியிலும் அண்ணாவின் பெயரையும் உருவத்தையும் வைத்திருக்கும் ஒரு கட்சி, அண்ணாவின் கட்அவுட்டை ஏன் அகற்றியது என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை.

எனினும் அ.தி.மு.க டில்லி தலைமையின் அடிவருடியாக மாறி வருகிறதா? காலப் போக்கில் திராவிடக் கொள்கைகளை ஒட்டு மொத்தமாக தலைமுழுகிவிடுமா என்ற சந்தேகத்தை இவை எழுப்பி உள்ளன. அ.தி.மு.க. தலைமை என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பது தொண்டர்களுக்கும் தெரியாது என்று அடித்துச் சொல்கிறார்கள் மதுரை பத்திரிகையாளர்கள்.

இணைய தளங்களில், தொலைக்காட்சிகளில் வெளியான காணொளிகள், பட்டுவாடா செய்யப்பட்ட மதுவைத் தொண்டர்கள் அப்போதே அருந்துவதையும், கூட்டத்துக்கு வந்தவர்களுக்கு பணம் கையளிக்கப்படுவதையும் காட்டின. இம் மாநாட்டுக்கு இரண்டு லட்சம் பேர் வந்ததாகக் கூறப்படுகிறது. இது தானா சேர்ந்த கூட்டமா அல்லது 'செட் அப்' கூட்டமா என்ற கேள்வியும் எழுகிறது. கூட்டத்துக்கான விளம்பரம் செய்யப்பட்ட போது சுவையான சாப்பாடு கிடைக்கும் என்றும், சில இடங்களில் பிரியாணி தயார் செய்யப்படுகிறது என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தரப்பட்டதோ சாம்பார் சாதமும், புளிச் சாதமும்தான்!

சாப்பிட்ட அனைவருக்கும் உணவு பிடிக்கவில்லை; சுவைக்கவில்லை. மதுரைக்காரர்களுக்கு சாம்பார், புளிச்சாதமெல்லாம் மிகச் சாதாரணம்.

வாத்தியார் கட்சி சுவையாக ஏதேனும் தரும் என வந்தவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள். இலங்கையைப் போலத்தான் அங்கும், அரசியல் கூட்டம் என்றால் சல்லி, சாப்பாடு, சாராயம் என எதிர்பார்ப்பார்கள். திராவிடக் கட்சிகள் அப்படிப் பழக்கி வைத்திருக்கின்றன.

சாப்பிட்டவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் கொஞ்சமாக சுவைத்துவிட்டு தட்டோடு எறிந்து விட்டார்கள். சோறும் தட்டுகளுமாக மலையாகக் குவிந்துகிடக்க, சாப்பாடு சரியில்லை என்ற தகவல் வந்திருந்தோர் மத்தியில் பரவவே, பலர் சாப்பிடாமலேயே திரும்பிச் சென்றுவிட்டனர். இதனால் மாநாடு முடிந்ததும் சமைத்து பரிமாறப்படாத புளிச்சோறும் சாப்பாடும் டன் கணக்கில் கீழே கொட்டப்பட்டதாக காணொளிகள் மூலம் பார்க்க முடிந்தது. எஞ்சியதை ஏழைகள் வசிக்கும் பகுதிகளுக்கும் அனாதை விடுதிகளுக்கும் விநியோகிக்கும் ஏற்பாடு இருக்கவில்லை என்பதையே இது காட்டுவதாக சில விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. எடப்பாடியார் சுமார் ஒரு மணித்தியாலம் இங்கு உரையாற்றினாலும் அது கொள்கை விளக்க உரையாகவோ அல்லது அவரது அரசியல் திட்டங்கள் தொடர்பானதாகவோ அமையவில்லை என்பது பொதுவான அபிப்பிராயம். தி.மு.க.வை. கடுமையாக விமர்சிப்பதாகவும், குடும்பக்கட்சி, குடும்ப ஆட்சி என பழைய விமர்சனங்களையே திரும்பவும் முன்வைப்பதாகவும் அவரது பேச்சு சத்தற்றதாக காணப்பட்டதாக அ.தி.மு.க. அவதானிகளே குறை சொன்னார்கள். பொதுச் செயலாளராக பதவி ஏற்ற பின்னரும் மூன்றாம் தர பேச்சாளர் போல பேசியதாகவும், தலைவருக்கு உரிய பண்பும், பக்குவமும், ஆழமும் அவரிடம் காணப்படவில்லை என்பதும் ஊடகவியலாளர்களின் கருத்தாக இருந்தது. அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே பலர் எழுந்து சென்றனர். ஒட்டு மொத்தத்தில் எடப்பாடியார் புகழ்பாடும் மாநாடே தவிர, அ.தி.மு.க.வின் அடுத்த கட்ட நகர்வுக்கு உதவாத கூட்டமே இது. கோடிகள் வீணடிக்கப்பட்டன என்பது மதுரை அபிப்பிராயமாக இருந்தது. இங்கு உரையாற்றிய ஏனைய பேச்சாளர்கள் எடப்பாடியாரை ஒன்றில் வானளாவப் புகழ்ந்து தள்ளினர் அல்லது தி.மு.க.வை மட்டமாகத் திட்டினர். இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் பெரிய எழுத்தில் தலையங்கச் செய்தி எழுத உதவவில்லை.தி.மு.க.வை விமர்சிக்கும் போது ஸ்டாலினை 'போபா தலையன்' (விக் வைத்தவர்) என அழைத்தனர்.

இதைக் கேட்டு கண்டிக்காமல் எடப்பாடியார் கைதட்டி ரசித்தது முகம் சுளிக்க வைத்ததாகவும் விமர்சனங்கள் எழுந்தன. அம்மா உணவகம் என்ற பெயர்ப்பலகை அகற்றப்பட்டபோது அதைத் திரும்ப அங்கேயே வைக்கும்படியும், குஷ்புவை ஒரு தி.மு.க. பேச்சாளர் தரக்குறைவாக விமர்சித்தபோது அவரை தி.மு.க.வின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து நீக்கும்படியும் உத்தரவிட்ட ஸ்டாலினின் உத்தரவுகளுடன் ஊடகவியலாளர்கள் இதை ஒப்பீடு செய்யத் தவறவில்லை. தலைவர்கள் மட்டத்திலாவது தனி மனிதத் தாக்குதல்கள் அரசியல் மேடைகளில் தவிர்க்க வேண்டும் என்ற உணர்வு இந்தியாவில் மேலிட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிச்சாமி, இப்பதவியை முன்னர் வகித்த எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் மான்புக்கு ஈடுகொடுப்பவராக இல்லை என்பது இம்மாநாட்டின் மூலம் வெட்ட வெளிச்சமாகி இருப்பதோடு, தன்னைத் தனிப்பெரும் தலைவனாக நிலைநிறுத்தும் எடப்படியாரின் மதுரை முயற்சி, ஒட்டு மொத்தத்தில் ஒரு தோல்வி என்கின்றனர் நடுநிலை பார்வையாளர்கள்.

ஏன் எடப்பாடியார் தென் மாவட்டத் தலைநகரான மதுரையில் விழா எடுத்தார் என்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. எடப்பாடியார் கொங்கு மண்டலத்துக்காரர். அதாவது கோயம்புத்தூரை சேர்ந்தவர். கொங்கே வேளாளர். எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தே கொங்கு மண்டலம் அ.தி.மு.க.வை ஆதரித்து வந்திருக்கிறது. 2010ஆம் ஆண்டு செம்மொழி மாநாட்டை கலைஞர் பிரமாண்டமாக கோவையில் நடத்தியதோடு கோவை வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்ததற்கு இதுவே காரணம். எடப்பாடி கொங்கு வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் கொங்கு மண்டலத்தைக் கைப்பற்றுவதில் தி.மு.க. பின்னடைவையே சந்தித்து வந்துள்ளது.

அவரது அரசியல் எதிரிகளான ஓ.பன்னீர்செல்வம், டி.டி.தினகரன், சசிகலா ஆகியோர் தென் மாவட்டத்து முக்குலத்தோர் வகுப்பை சார்ந்தோர். எனவே, கொங்கு மண்டத்தில் மட்டுமல்ல; முக்குலத்தோரின் தலைநகரிலும் என் செல்வாக்கைக் காண்பிப்பேன், அவர்களையும் என் ஆதரவாளர்களாக மாற்றுவேன் என்பதே தன் எதிரிகளுக்கு இதன்மூலம் எடப்பாடியார் விடுத்திருக்கும் செய்தியாகும்.

(05 ஆம் பக்கம் பார்க்க)

---

# மாத்தளை ரத்வத்த தோட்டத்தில் நிர்வாகத்தினரின் அத்துமீறல்

## பின்னணி என்ன?



மாத்தளை ரத்வத்த கீழ்ப்பிரிவு தோட்டத்தில் அங்கு வசித்த ஒருவரின் வீட்டை தோட்டத்தின் உதவி முகாமையாளர் தனது குழுவுடன் சென்று கடந்த வாரம் அடாவடித்தனமாக அடித்து உடைத்ததும் அந்த விரும்பத்தகாத சம்பவத்தால் மலையகம் முழுவதும் பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டதும் முழு நாடுமே அறிந்த உண்மையாகும்.

இதன்பிறகு தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளருமான அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்பவ இடத்திற்கே சென்று பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்துக்கு ஆதரவாக தோட்ட நிர்வாகத்துடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டதும் பாதிக்கப்பட்ட அப்பாவியான அந்த தோட்டத் தொழிலாளிக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் விதைக்கின்ற விடயமாகும். மட்டுமல்லாமல் உடைத்த வீட்டை தோட்ட நிர்வாகம் மீண்டும் கட்டிக்கொடுக்கின்ற நிலைக்கு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் அதன் பின்னர் மலையக அரசியல் களம் சூடுபிடித்துள்ளதோடு இந்த விடயம் தொடர்பிலான காரசாரமான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை 22.08.2023 பாராளுமன்றத்திலும் இடம்பெற்றது.

சுமார் 200 வருடங்களாக மலையகத்தில் வாழுகின்ற இந்திய வம்சாவளி மக்கள் இன்னும் தோட்டங்களில் கம்பனிக்காரர்களின் அடிமைகளைப்போலவே நடத்தப்படுகின்ற அவலம் நீடிப்பதை யாராலும் மறுக்க முடியாது. அடிப்படை வசதிகளற்ற பத்துக்கு பத்து (10 ×10) லயத்து அறைகளில் பரம்பரை பரம்பரையாக தமது வாழ்நாளை கழிக்க வேண்டியது அந்த அப்பாவி மக்களின் தலையெழுத்தாகிவிட்டது.

எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற, வாழ்வாதாரத்துக்கு நிரந்தரமாக எந்தத்தொழிலையும் செய்துகொள்ள முடியாத, முறையான சுகாதார வசதிகளோ, முறையான கல்வி வசதியோ ஆகக்குறைந்தது, பாதுகாப்பான இருப்பிடமோ இல்லாத ஒரு சமூகமாகவே அவர்களை இன்றும் அடையாளப்படுத்த முடியும். இந்த வரலாற்றுப் பின்னணியிலிருந்தே மாத்தளை ரத்வத்தை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் நடந்த அந்த சம்பவத்தை நோக்க வேண்டியுள்ளது.

மலையகத்தில் அனேகமான தோட்டங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமானவையே. இவற்றை 100 வருட குத்தகைக்கு எல்கடுவ கம்பனிக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது. சம்பவம் இடம்பெற்ற ரத்வத்த கீழ்ப்பிரிவில் சுமார் 183 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் அடங்குவர். பல தலைமுறைகளாக இந்தக் குடும்பத்தினர் இந்த மண்ணே கதி என்று மண்ணை வளப்படுத்த மாடாய் உழைத்து வருபவர்கள். காலமாற்றமானது கம்பனி நிர்வாகத்தில் மட்டுமல்ல குடும்பங்களிலும் மாற்றத்தை உண்டு பண்ணும்.

அந்த வகையில் கடந்த வாரம் தோட்ட உதவி முகாமையாளரால் பாதிக்கப்பட்ட குடும்பமானது 2005ஆம் ஆண்டிலிருந்து தோட்ட நிர்வாகத்திடமும் அப்போதைய தோட்ட முகாமையாளரிடமும் தமது குடும்பத்தில் 14 அங்கத்துவர்கள் இருப்பதையும் தந்தையும் தாயும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதையும் எடுத்துக் கூறி வந்துள்ளனர். மிகுந்த நெருக்கடியான வாழ்க்கையை இடப்பற்றாக்குறையினால் தாம் அனுபவிப்பதாகவும், தமக்கு காணித்துண்டொன்றை வழங்குமாறும் தொடர்ந்தும் கேட்டுவந்துள்ளனர். தோட்ட முகாமையாளர்கள் மாறினார்களே தவிர இவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு செவிசாய்த்த தோட்ட முகாமையாளர் 2015ஆம் ஆண்டு அவர்களின் வசிப்பிடத்துக்கு அருகாமையில் ஒரு இடத்தை சுட்டிக்காட்டி இவற்றில் வீட்டைக் கட்டிக் கொள்ளுங்கள்எனப்பணித்துள்ளார். ஆனால் அவர் எழுத்து மூலமாக எவ்வித அங்கீகாரத்தையும் வழங்கியிருக்கவில்லை. முகாமையாளர் சொன்னால் எல்லாம் சரிதான் என்ற நம்பிக்கையில் தமக்கான வீட்டை கட்டுவதற்கான பணத்தைச் சேர்க்க அந்தக்குடும்பம் அன்று தொடக்கம் ஆரம்பித்தது.

எவ்வித பொருளாதார பின்னணியுமற்ற தோட்டத்தொழிலாளர்களான அந்த குடும்பத்துக்கு நினைத்த மாத்திரத்தில் ஒரு வீட்டை கட்டிக்கொள்வது என்பது கடினமான விடயம் என்பதால், தமக்கு முகாமையாளரினால் குறித்துக் கொடுக்கப்பட்ட இடத்தில் சிறு தானியங்களை பயிரிட்டு வந்துள்ளனர். இதற்கிடையில் அவ்வப்போது ஏற்படுகின்ற பொருளாதார சுழலில் சிக்குண்ட இந்தக்குடும்பம் 2019இல் வீட்டைக் கட்ட எத்தனிக்கின்றபோது 2019இன் இறுதிப்பகுதியில் முழு உலகத்தையும் பாதித்த கொடுமையான கொரோனாவில் எல்லாச்செயற்பாடுகளும் முற்றாக முடங்கிப் போயின.

தொடர்ந்தும் 2020, 2021, 2022 காலப்பகுதியானது ஒட்டுமொத்த உலகமும் பொருளாதார சிக்கலில் சிக்குண்டு தவித்த காலமாகும். பெரும் பல்தேசியக் கம்பனிகள்கூட இழுத்து மூடப்படும் நிலை ஏற்பட்டது. எல்லாத் துறையிலும் ஒரு தேக்கமும் வீழ்ச்சியும் ஏற்பட்ட நிலையில் சாதாரண தோட்டத்தொழிலாளிக்கு இந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் வீடு கட்டுவது என்பது நடைமுறைச்சாத்தியமற்ற விடயமாகும். கையிலிருந்த சிறிய சேமிப்பு கொரோனாவில் கரைந்து போக அந்தக் குடும்பத்தின் வீட்டுக் கனவில் மண்விழுந்தது.

தற்போது கொரோனாவின் தாக்கம் தளர்ந்துள்ள பின்னர் ஒட்டு மொத்தக் குடும்பத்தினதும் எதிர்பார்ப்பாக இருந்தது வீடொன்றைக் கட்டுவதே. அந்த சிறிய குடிசையை அவர்கள் முன்னர் தமக்கு முகாமையாளர் வழங்கிய இடத்தில் கட்டிமுடித்து அந்த வீட்டில் குடியேறினர். இந்தவிடயம் தோட்ட நிர்வாகத்தின் காதுகளுக்கு எட்டவே புதிய முகாமையாளர் இந்த வீட்டை அகற்றுமாறு கூறியுள்ளார். இருந்தும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தமது அவலநிலையை தோட்ட முகாமையாளருக்கு பணிவாக முன்வைத்துள்ளனர். ஆனால் தோட்ட முகாமையாளரின் கல்மனம் கரையவில்லை. அதன் வெளிப்பாடுதான் உதவி முகாமையாளர் குழுவின் அடாவடித்தனம்.

மலையக மக்களின் பிரதிநிதிகளாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் அனேகர் முகநூலிலும், ஊடகங்களிலும் தமது கண்டனத்தை ஆக்ரோசமாக வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறித்த இடத்திற்கே சென்று அடாவடித்தனம் செய்த காடையர்களை எச்சரித்து பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்துக்கு நியாயத்தை பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந்தவிடயத்தில் ஜீவன் தொண்டமானின் வெளிப்படையான போக்கினை 22.08.2023 அன்றைய பாராளுமன்ற விவாதத்தில் அவதானிக்க முடிந்தது.

இந்தவிடயத்தில் மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே ஒட்டுமொத்தமாக ஒரே கருத்தில் இருப்பது பாராட்டத்தக்கது. மலையக மக்கள் தொடர்பில் விரிவானதும் வெளிப்படையானதுமான ஆய்வு தேவை காரணம் அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே அவர்களுக்கும்இங்கே அரசியல் உரிமை இருக்கிறது, அவர்கள் அனாதைகளல்ல!' இந்த உண்மையை தோட்ட நிர்வாகம் மனங்கொள்ள வேண்டும்.

மேற்படி வீடுடைத்தல் சம்பவம் போல இன்னும் பல அநியாயங்களுக்கு லயத்தில் வாழும் மக்கள் முகங்கொடுக்கின்றனர் ஆனால் அவை பயத்தின் காரணமாக வெளியே வருவதில்லை. அரசுக்கு சொந்தமான சுமார் 23 தோட்டங்கள் கடந்த 1991/1992 காலப்பகுதியில் 100 வருட குத்தகைக்கு கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தோட்டங்களை வாங்கிய கம்பனிகள் அங்கு வாழும் தொழிலாளர்களை அடிமைகளாக நடத்துகின்றன. சில கம்பனிகள் இதில் விதிவிலக்காக செயல்படுவதை அறிய முடிகிறது. இந்நிலையில் தோட்டத்தொழிலாளர்கள் விடயத்தில் மலையகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

நாச்சியாதீவு பர்வீன்

# ரூபவாஹினி கூட்டுத்தாபனம் வங்குரோத்தடைவதைத் தடுக்க

# வாடகைக்கு விடப்பட்ட ஐ செனல் ஒளிபரப்பு நேரம்





## தொழிற்சங்கங்களின் இணக்கத்துடனேயே வாடகைக்கு விடப்பட்டதென்கிறார் ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

கடந்த நாட்களில் அனேக சமூக ஊடகங்களிலும், அரசியலிலும் பேசப்பட்ட விடயம் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஐ செனலை விற்பனை செய்வதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதாகும். இன்னும் சிலர் அது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இது தொடர்பில் பல்வேறு கதைகள் ஊடக உலகில் உலா வந்து கொண்டிருக்கும் நிலையில் அதன் உண்மைத் தன்மை என்ன என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்று சில இணையத் தளங்களுக்கு ஏதேனும் தகவல்கள் கிடைத்ததும் அதன் உண்மைத் தன்மை எவ்வாறிருந்தாலும் நல்ல செய்தியாக இருந்தால் கண்டிப்பாக அதை வாசகர் அல்லது பார்வையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வதே இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

செனல் 'ஐ' யின் கதை இவ்வாறான ஒன்றோயாகும்.

இதன் உண்மை நிலவரம் கடந்த 22ம் திகதியே எமக்குத் தெரியவந்தது. 27/2 நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க செனல் ஐ தொடர்பில் எழுப்பிய கேள்வியே இதற்கு காரணமாக அமைந்தது.

ஐ செனலின் ஒளிபரப்பு நேரத்தை வாடகை அடிப்படையில் வழங்காவிட்டால் இன்று ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இல்லாமல் போயிருக்கும் என இதற்கு பதில் வழங்கிய போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.


'பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள பொருத்தமான வழியொன்று அவசியம்'
சமகி ஊழியர் சங்கத்தின் தலைவர் துஷித ஹேமந்த

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி தொடர்பில் ஆராய்ந்த போது 520 இலட்சம் ரூபாய் மின்கட்டணத்தை செலுத்தாததால் மின்துண்டிப்பு நிலை ஏற்பட்டிருந்தமை தெரிய வந்தது.

இவ்வாறான கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு அதிலிருந்து மீள வேண்டியிருந்தது. இதில் ஏதேனும் ஊழல் மோசடிகள் ஏற்பட்டிருந்தால் நீதிமன்றம் செல்ல முடியும் என்றும், அவ்வாறான எதுவும் இடம்பெற்றிருப்பதாக நிரூபிக்கப்படுமாயின் தான் அமைச்சுப் பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்வதாகவும் அமைச்சர் பந்துல குணவதர்ன பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.


'வாடகைக்கு வழங்குவதைத் தவிர மாற்றுவழிகள் இல்லை'
ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கத்தின் தலைவர்
கபில தசநாயக்கா

அனைத்து தொழிற்சங்கங்களின் இணக்கத்துடனேயே ஐ செனலின் ஒளிபரப்பு நேரம் குத்தகைக்கு வழங்கப்பட்டதாக அமைச்சர் அவ்வாறு கூறியதன் பின்னர் அது தொடர்பில் ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கருத்துக் கூறினார்.

இது தொடர்பில் தினகரன் அமைச்சரிடம் வினவிய போது, ஐ செனலின் ஒளிபரப்பு நேரத்தை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு சில தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்ததாக அவர் கூறினார். இங்கு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை தான் நிராகரிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சில தொழிற்சங்கங்களின் நிலைப்பாட்டைக் கேட்டோம்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கபில தசநாயக்கா இவ்வாறு கூறினார்.

பெரும் நஷ்டத்திற்கு மத்தியிலேயே ஐ செனலை நாம் நடத்திச் செல்கின்றோம். 1980, 90ம் ஆண்டு காலப்பகுதியில் 300 அல்லது 400 மில்லியன் இலாபம் கிடைத்தாலும் தற்போது இலாபமாகக் கிடைப்பது 75, 80 மில்லியன் ரூபாய்களாகும்.

முன்னர் ஐ செனலினால் விளையாட்டுப் போட்டி ஒளிபரப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. எனினும் இப்போது போட்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பெரும் நிதியினைச் செலுத்த வேண்டியுள்ளது. உதாரணமாகக் கூறுவதாயின், எல்.பி. எல் ஒளிபரப்பை மேற்கொள்வதற்கு நாம் 750 மில்லியனைச் செலுத்த வேண்டும்.

இவ்வாறான நிலையில் எமக்கு புதிய தயாரிப்புக்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. காரணம் செனல் ஐ யில் ஒரே ஒரு தயாரிப்பாளர் மாத்திரமே உள்ளார். ஒளிபரப்பு நிலையங்களை பராமரிப்பது கடினமாகிவிட்டது. குளிரூட்டிகள் இயங்காதபோது பட்டரியின் ஆயுட்காலம் குறைந்து விடுகின்றது. இவ்வாறான சூழ்நிலைகளில் உள்ள ஆபத்துகள் குறித்து நிர்வாகத்திடம் தெரிவித்தேன்.


'1500 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக கடன்பட்டிருக்கிறது'
ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் சுயாதீன ஊழியர் சங்கத்தின் தலைவர்
சம்பிக்க நரசிங்க

அதன் பின்னர்தான் குத்தகைக்கு வழங்கும் நடைமுறை வந்தது. நாம் மேற்கொண்டிருப்பது குறுகிய காலத்துக்கு வாடகைக்கு வழங்குவது மாத்திரமேயாகும். நிறுவனத்தை மீட்டெடுப்பதற்கு இதனை விட மாற்று வழிகள் எம்மிடமில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ரூபவாஹினி கூட்டுத்தாபன கிளையின் செயலாளர் தினேஷ் குணரத்ன கருத்து தெரிவிக்கையில்,

"ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சுமார் 800 ஊழியர்கள் உள்ளார்கள். நிறுவனத்தில் நிதி நெருக்கடி இருந்தாலும் எமக்கு சம்பளம் கிடைத்தது.

எனினும் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பெரும் சிக்கல்கள் தோன்றியிருந்தது. நிறுவனத்தின் நிதி நெருக்கடிக்குத் தீர்வாக சுய ஓய்வூதிய நடைமுறை தற்போது செயற்படுத்தப்படுகின்றது. உண்மையில் எமக்குள் கட்சி வேறுபாடுகள் தேவையில்லை. ஊழியர்களின் பொது பிரச்சினைகள் தொடர்பிலேயே நாம் செயற்படுகின்றோம்.


சமகி ஊழியர் சங்கத்தின் தலைவர் துஷித ஹேமந்த இவ்வாறு கூறினார்.

"தேசிய தொலைக்காட்சி தற்போது பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இந்நிலையிலிருந்து மீள்வதற்கு கண்டிப்பாக ஏதாவது நடைமுறை ஒன்று அவசியமாகும். 2013ம் ஆண்டிலிருந்தே படிப்படியாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. எம்மிடமிருந்த விளையாட்டுக்கள் அக்காலத்திலிருந்தே எமக்கு இல்லாமல் போனது. அதேபோன்று 2019ம் ஆண்டிலிருந்து லொத்தர் சீட்டிழுப்பினால் கிடைத்து வந்த 37 மில்லியன் ரூபாவும் எமக்கு இல்லாமல் போனது. இவ்வாறான நெருக்கடி நிலையில் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினார்கள்.

எனவே இந்நிலைக்குத் தீர்வாக நிறுவனத்தைப் பாதுகாக்க எந்த ஒரு தீர்வுக்கும் நாமும் எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.


'விளையாட்டு போட்டிகளை ஒளிபரப்ப வாடகைக்கு கொடுத்தமையால் பிரச்சினையில்லை'
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ரூபவாஹினி கூட்டுத்தாபன கிளையின் செயலாளர் தினேஷ் குணரத்ன

உண்மையில் ஐ செனல் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா, அல்லது வேறு நடைமுறைகளா என்பது தொடர்பில் எமக்கு பிரச்சினை ஒன்றுள்ளது. காரணம் இந்த ஒப்பந்தம் ஞாயிறுக்கிழமை ஒன்றில்தான் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இப்போதாவது ஊழியர்களை அழைத்து இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு நிறுவனத் தலைவருக்கு உள்ளது. அப்போது எந்தப் பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை".


'ரூபவாஹினி விற்கப்படவில்லை'
ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர்
நளின் மாபிடிய

ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் சுயாதீன ஊழியர் சங்கத்தின் தலைவர் சம்பிக்க நரசிங்க இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

"அண்மைய காலங்களில் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பலர் இரண்டு மூன்று மாதங்களில் விலகிச் சென்று விடுகின்றனர். அவர்களிடம் நிரந்தர வேலைத் திட்டங்கள் இருக்கவில்லை. இதனால் இந்நிறுவனம் இதுவரை 1500, 2000 மில்லியன் அளவில் கடன்பட்டுள்ளது.

நம் வீட்டில் தாங்க முடியாத கடன் சுமை ஏற்பட்டால், வீட்டுப் பொருட்களை விற்றாவது வாழ வேண்டும். மீண்டும் விழுவதற்கு இடமில்லை. அந்தளவுக்கு நெருக்கடி கடுமையாக உள்ளது. எனினும் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இருப்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

தலைவர் நல்லெண்ணத்தில் செய்யும் சில விடயங்கள் கூட வெளியில் தவறான வகையிலேயே செல்கின்றது. எனவே இது தொடர்பில் தலைவர் தெளிவான கருத்தை வெளியிடுவதே இந்த நேரத்தில் சிறந்த விடயமாகும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் நளின் மாபிடிய இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"இந்தப் பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. கடந்த காலத்திலிருந்து வந்த பிரச்சினையின் தற்போதைய வடிவத்தைத்தான் எம்மால் இப்போது பார்க்க முடிந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு எடுக்கப்பட்ட தீர்வாகத்தான் நாம் இந்த குத்தகைக்கு வழங்கலைப் பார்க்கிறோம்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ஒவ்வொருத்தரும் இவ்விடயத்தில் சப்தமிட்டாலும் உண்மையில் எம்மைப் பற்றித் தேடிப்பார்க்க யார் வருகிறார்கள்?. யார் இந்தக் கூட்டுத்தாபத்தின் மின்சாரப் பட்டியலைச் செலுத்துவது?

(17 ஆம் பக்கம் பார்க்க)

**தாரக விக்ரமசேகர**
**தமிழில் – எம். எஸ். முஸப்பிர்**



**நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதியால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு விடயமானது அரசியல் கட்சிகள் மத்தியில் இன்னமும் பேசுபொருளாகவே காணப்படுகிறது.**



# இன்றைய சந்தர்ப்பத்தை பயன்படுத்த தமிழ்த் தரப்பினர் தவறக் கூடாது!




சம்யுக்தன்

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துபவர்கள் சுயநல அரசியல் நோக்கத்தைக் கொண்டவர்கள் என்கிறார் ஈ.பி.டி.பி-யின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா**





பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுடன் பகிர்ந்து கொள்வதில் தனது தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இது பற்றிய தமது நிலைப்பாடுகளை எழுத்துமூலம் கையளிக்குமாறும் அவர் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன. 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவது தமிழர்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையாது என ஒருசில தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான அங்கம் வகிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியும் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது என்ற காரணத்தினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டையே தொடர்ந்தும் வலியுறுத்தவிருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வாறான அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை ரொமேஷ் டி சில்வா தலைமையிலான ஆணைக்குழுவில் தமிழரசுக் கட்சி எடுத்துக் காட்டியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தீர்மானம் அரசியலமைப்பாக்கப்பட்டால் அதன் ஊடாக இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற தமது நிலைப்பாடு அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாவை சேனாதிராஜா மட்டக்களப்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் வரும் ஒரு பொறிமுறை என்பதால் அதன் ஊடாக மேற்கொள்ளப்படும் அதிகாரப்பகிர்வானது தேவையான நேரங்களில் மீளப்பெற்றுக் கொள்ளப்படக் கூடியதொன்றாக இருக்கும் என்பதால், 13 ஆவது அரசியலமைப்பு தமிழர்கள் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைத் தீர்வை வழங்காது என்பது பெரும்பாலான தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

**தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13 ஆவது திருத்தம் பூர்த்தி செய்யுமா அல்லது இல்லையா என்பது வேறு விடயம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய தலைமைத்துவத்தில் கிடைத்துள்ள சந்தர்ப்பம் கடந்த கால ஆட்சிகளில் வாய்த்திருக்கவில்லை என்பதே யதார்த்தம்!**




அது மாத்திரமன்றி இதுவிடயத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஒற்றுமையாக முன்னோக்கிச் செல்ல எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.


அதேநேரம், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துபவர்கள் சுயநல அரசியல் நோக்கத்தைக் கொண்டவர்கள் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது தன்னிச்சையாக உருவானதொன்று அல்ல. ஆரம்பகாலங்களில் செயற்பட்ட ஆயுதப்போராட்ட இயக்கள் அனைத்துக்கும் இதில் பங்கு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விடுதலைப் போராட்டங்களில் பங்கெடுக்காது அவ்வப்போது கிடைக்கும் அரசியல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் செய்பவர்களே 13 ஆவது திருத்தம் தொடர்பான நம்பிக்கையீனங்களை வளர்த்து வருகின்றனர். ஆனால், வரலாற்றுத் தவறு ஒன்றினை இன்னுமொருமுறை செய்யாது, கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது இனப்பிரச்சினைக்கு ஒட்டுமொத்தத் தீர்வாக அமையுமா, அமையாதா என்ற விவாதங்களுக்கு அப்பால், அரசியலமைப்பின் ஓர் அங்கமாக இருக்கும் இதனை நடைமுறைப்படுத்த இதற்கு முன்னர் இருந்த எந்தவொரு ஜனாதிபதிகளும் முன்வரவில்லை என்ற யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான பின்புலத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அமைய அதிகாரங்களைப் பகிர்வதற்கு முன்வருகின்றார் என்ற விடயத்தை தமிழ்த் தரப்பினர் சாதகமாகப் பார்க்க வேண்டும்.

அது மாத்திரமன்றி, நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால் மிக்க சூழ்நிலையில் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நல்லிணக்க செயற்பாடுகளைக் குழப்பிய பொதுஜன பெரமுனவினர் சிலர் தற்பொழுது அவர் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் இருக்கின்றனர். அது மாத்திரமன்றி அவர்களில் பெரும்பலானவர்களின் எதிர்காலம் ரணில் விக்கிரமசிங்கவை ஒட்டியதாக அமைந்திருப்பதால் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு அவர்களால் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட முடியாத அரசியல் சூழல் உள்ளது.

அதேநேரம், தொடர்ந்தும் அடிப்படைவாதம் மற்றும் இனவாதம் என்பவற்றை மாத்திரமே தமது அரசியல் வழியாகத் தேர்ந்தெடுத்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலர் தற்பொழுது அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றனர். பழைய பாணியிலான இவர்களின் அரசியல் மக்கள் மத்தியில் எந்தளவுக்கு எடுபடும் என்பதும் கேள்விக்குறியே.



எனவே, தற்போது வாய்த்திருக்கும் அரசியல் சூழலில் கிடைக்கக் கூடிய அதிகாரப் பகிர்வுடன் முன்னோக்கிச் செல்வதற்கும், அனைத்து தமிழ்த் தரப்பினரையும் ஒன்றிணைத்து பேரம் பேசும் சக்தியை உருவாக்கி அதன் மூலம் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதே சாலப்பொருத்தமானதாக இருக்கும். இதனை விடுத்து, ஆரம்பத்திலேயே மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்த முயற்சிப்பது எந்தளவுக்கு நம்மை அளிக்கும் என்பதையும் அரசியல் தரப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது இவ்விதமிருக்க, இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டுவரும் நிலையில், இனங்களுக்கிடையில் முறுகல்நிலையை ஏற்படுத்தும் வகையில் ஒருசில செயற்பாடுகள் அமைகின்றன. குறிப்பாக குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் நல்லிணக்கம் குறித்த அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைகின்றன.

இந்த விடயத்தை ஒருசில தென்பகுதி அரசியல்வாதிகள் முன்னிலைப்படுத்திக் கொண்டு அரசியல் செய்வதால் ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகள் பாதிக்கப்படலாம். இது விடயத்தில் அரசியல்வாதிகள் மாத்திரமன்றி அரசாங்க அதிகாரிகள் குறிப்பாக தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகளும் தீவிர போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதி இதயசுத்தியுடன் மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு அடிப்படைவாதத்தைக் கொண்ட ஒரு சில அரசியல்வாதிகளின் இவ்வாறான செயற்பாடுகள் இடையூறு ஏற்படுத்திவிடலாம் என்பது நாட்டில் சமாதானத்தை விரும்பும் தரப்பினரின் அச்சமாக இருக்கின்றது. நாட்டிலுள்ள மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பத்தில் தமக்கு அரசியல் செய்ய எந்தவொரு அடிப்படையும் கிடைக்காததால் தமக்கே உரித்தான பாணியில் இனம், மதம் போன்ற இவ்வாறான விடயங்களைப் பிடித்துக் கொண்டு அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இந்த அரசியல் பொறியில் தமிழ் மக்கள் சிக்கிவிடக் கூடாது. எனவே, இவ்வாறான அரசியல் காய்நகர்த்தல்களையும் விளங்கிக் கொண்டு முன்னோக்கிச் செல்வதே நாட்டின் சுபீட்சத்துக்கும் விடிவுக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதுதான் உண்மை.

**சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுக்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்பது இலங்கை தமிழரசுக் கட்சியின் முடிவு**

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது இனப்பிரச்சினைக்கு ஒட்டுமொத்தத் தீர்வாக அமையுமா, அமையாதா என்ற விவாதங்களுக்கு அப்பால், அரசியலமைப்பின் ஓர் அங்கமாக இருக்கும் இதனை நடைமுறைப்படுத்த இதற்கு முன்னர் இருந்த எந்தவொரு ஜனாதிபதிகளும் முன்வரவில்லை என்ற யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான பின்புலத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அமைய அதிகாரங்களைப் பகிர்வதற்கு முன்வருகின்றார் என்ற விடயத்தை தமிழ்த் தரப்பினர் சாதகமாகப் பார்க்க வேண்டும்**

# கண்டி உலமாக்கள், சமூக பணியாளர்களுக்கு கௌரவம்



பள்ளிவாசல்களின் வக்பு சொத்துக்களை வைத்திருப்பவர்கள் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். முறையற்ற விதத்தில் நடப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட். ஏ. எம். பைஸல் தெரிவித்தார்.

கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சவூதி அரேபிய தூதரகத்தின் அனுசரணையுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புனித அல்குர்ஆன் மனனப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், விசேடமாக கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் முன்வாசலில் முதன் முதலில் காய்த்த பேரீச்சம் பழத்தின் குலையினை அறுவடை செய்யும் நிகழ்வும் மற்றும் கண்டி உலமாக்கள், சமூகப் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதியும் இலங்கை ஒலிப்பரக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் சபை உறுப்பினரும் பள்ளிவாசலின் தலைவருமான அப்ஸால் மரைக்கார் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பள்ளிவாசலுக்கு சிறந்த தலைமைத்துவம் வழங்குகின்ற அப்சல் மரைக்கார், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தோடு சேர்ந்து செயற்படும் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முதன் முதலாக காய்த்த பேரீச்சம் பழக் குலைகளை பிரதம அதிதி பணிப்பாளர் இஸட். ஏ. எம். பைஸல் மற்றும் பள்ளிவாசலின் தலைவருமான அப்சல் மரைக்கார் ஆகியோர் சேர்ந்து பறித்தனர். பள்ளியில் கூடி நின்ற பெரு எண்ணிக்கையானவர்கள் அவற்றை உண்டு மகிழ்ந்தனர்.

சவூதி அரேபிய தூதரகத்தின் அனுசரணையுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புனித அல்குர்ஆன் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய 10 மாணவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் உலமாக்கள் ஆறு பேர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**இக்பால் அலி**

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON Estd. 1904
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
VISIT - PickMe
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha,Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)

දේශීය ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.08.24
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5216 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,086,024.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 4 5 1 6 8 9

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1564 — 24/08/2023 — 13251 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 405,314,536.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 26 — வெற்றி இலக்கங்கள் 41 43 50 67
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

Lucky 7 — திகதி 24.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0042
வெற்றி இலக்கினம் மகரம் — L7 இலக்கம் 2 0 — வெற்றி இலக்கங்கள் 7 1 1 3 5 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,120,813.60

ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் — சீட்டிழுப்பு திகதி 2023-08-24 — 525 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,956,320.80
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 02 11 55 58 — விசேட இலக்கினம் மகரம்

தன நிதானய — தேதி 2023/08/24 — சீட்டிழுப்பு இலக்கம் 1246 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,538,199.20
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 15 42 51 61 — விசேட ஆங்கில எழுத்து B
Double Chance இலக்கம் 38121

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3458 — சீட்டிழுப்பு திகதி 2023.08.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,442,089.20
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 29 55 61 74 — விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 27285

## எதிர்பார்ப்புகளை...

(02ஆம் பக்கத் தொடர்)

இது இப்படி இருக்க, எடப்பாடியார் பொதுச் செயலாளர் மற்றும் இடைக்கால பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டதை எதிர்த்தும், பொதுக் குழு கூட்டப்பட்டது செல்லாது என அறிவிக்குமாறும் உயர்நீதிமன்றத்தில் பன்னீர் செல்வமும் மேலும் மூவரும் தாக்கல் செய்திருந்த மனுக்கள் மீதான தீர்ப்பு கடந்த வெள்ளியன்று வெளியானது. நீதிமன்றம் இம்மனுக்களை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பு எடப்பாடி பழனிச்சாமிக்கு மற்றொரு வெற்றியாகவும், அவரை அ.தி.மு.க.வின் அசைக்க முடியாத தலைவராகவும் ஆக்கியிருப்பதோடு பன்னீர் செல்வம் முகாமுக்கு மற்றொரு தோல்வியாக அமைந்து விட்டது.

எனினும், தோல்வியைத் தாங்கிக்கொண்டு ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்தும் எடப்பாடியாருக்கு எதிராக செயல்படத்தான் வேண்டும். அவர் டி.டி.வி. தினகரனோடும் சசிகலாவோடும் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளார். எடப்பாடி தி.மு.க.வை மட்டுமே எதிர்க்க வேண்டிய நிலையில் ஓ.பன்னீர் செல்வம், தனது பலவீனமான நிலையிலும் தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் ஒருசேர எதிர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். பன்னீர் செல்வம் முன்னர் மோடியின் செல்லப்பிள்ளையாக இருந்தவர்.

இப்போது கட்சி அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் எடப்பாடியே மோடிக்கு நெருக்கமானவராக மாறியிருப்பது, பன்னீருக்கு மற்றுமொரு பின்னடைவு.

சரியாகக் காய்களை நகர்த்தாவிட்டால் தீவிர அரசியலில் இருந்து ஓ. பன்னீர் செல்வம் காணாமல் போகக் கூடிய வாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன.

## கேள்வி அறிவித்தல்

ஶ්‍රී ලංකා රූපවාහිනී ரூபவாஹினி RUPAVAHINI

### இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

### 'ஐ' அலைவரிசையின் வான் காலம் மற்றும் அதன் கடத்தல் முறைமையை வாடகைக்கு வழங்குதல்

**கேள்வி இல.: 68/2023.09.13**

'ஐ' அலைவரிசையின் வான் காலம் மற்றும் அதன் கடத்தல் முறைமையை வாடகை அடிப்படையில் வழங்கும் பொருட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு தகுதி வாய்ந்த கீர்த்தி வாய்ந்த ஊடக நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் 2023.09.12ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெறுகைக்கான உதவி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகரிடமிருந்து கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை வழங்குவதற்காக கூட்டுத்தாபன பிரதான கணக்காளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமான 5000.00 ரூபாவை (ஐந்தாயிரம் ரூபா) செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 2023.09.12ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம். இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

2023.09.13ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) அவற்றை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பொறியியலுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 580 136/தொலைநகல் : +94 112 500 373).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07,**
**இலங்கை.** (SLRC Website : http://www.rupavahini.lk)

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்!

இலங்கை மத்திய வங்கிக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் நிறுவனங்கள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் நியதிகளுக்கமைய தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றனவா அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு, வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவிற்கமைவாக விசாரணைகள் நடாத்தப்பட்டன. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் சொல்லப்பட்ட சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றன அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளன எனத் தீர்மானித்துள்ளது.

1. Tiens Lanka Health Care (Pvt) Ltd.
2. Best Life International (Pvt) Ltd.
3. Global Lifestyle Lanka (Pvt) Ltd.
4. Mark-Wo International (Pvt) Ltd.
5. V M L International (Pvt) Ltd.
6. Fast 3Cycle International (Pvt) Ltd (F3C)
7. Sport Chain App, Sports Chain ZS Society Sri Lanka
8. OnmaxDT
9. MTFE App, MTFE SL Group, MTFE Success Lanka (Pvt) Ltd and MTFE DSCC Group (Pvt)Ltd.

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக திட்டமொன்றினை நேரடியாக அல்லது நேரடியற்று தொடங்குகின்ற, வழங்குகின்ற, ஊக்குவிக்கின்ற, விளம்பரப்படுத்துகின்ற, நடாத்துகின்ற, நிதியளிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது பணிக்கின்ற எவரேனும் ஆள் தண்டனைக்குரிய தவறொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

தவறுக்கான தண்டனைகளானது மூன்று வருடங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாயை விஞ்சாத தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் ஆகிய இரண்டும் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தவறானது வேண்டுமென்று அல்லது அறிந்துகொண்டு அல்லது செயற்பாடானது எவரேனும் வேறு ஆளுக்கு சேதத்தை விளைவிக்கும் அல்லது ஆபத்தாகும் என்ற அறிவுடன் புரியப்படுகின்றவிடத்து, அவர்/அவள் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத அத்துடன் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக்கு கடூழிய சிறைத்தண்டனைக்கும் அத்துடன் ரூபாய் இரண்டு மில்லியன் அல்லது திட்டத்தில் பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட இலங்கை நாணயத்திலான ஒன்றுகூட்டிய தொகையின் இருமடங்கு, இதில் எது உயர்வானதோ அதனைக் கொண்ட தண்டப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

அதற்கமைய, சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

மேலும், பிரமிட் திட்டங்களை நடாத்துகின்றதாக/நடாத்தியதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள மேலே பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுடன் மத்திய வங்கி சில உடன்பாடுகளை எட்டியுள்ளது என்ற குறிப்பிட்ட சமூகப் பிரிவினரின் கூற்றை இலங்கை மத்திய வங்கி நிராகரிக்கின்றது. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய குற்றவியல் நடவடிக்கைமுறைகளைத் தொடுப்பதைப் பரிசீலனையில் கொள்ளுமாறு கௌரவ சட்டமா அதிபரைக் கோரியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ (Hotline) 1935 / +94 11 247 7966

## RAJARATA UNIVERSITY OF SRI LANKA

### Centre for Distance and Continuing Education (CDCE)

**DIPLOMA IN ENGLISH (EXTENSION) - YEAR 2023/2024 (INTAKE 23)**

**conducted by**
**Department of English Language Teaching**
**Faculty of Social Sciences & Humanities**

Applications are invited for the above course from those employed in the public and the private sectors and school leavers. Applicants should possess the following entry requirements.

A. A candidate should have passed General Certificate of Education (Advanced Level Examination, or an equivalent qualification or a course equivalent to SLQF level 2 (Sri Lanka Qualifications Framework) or NVQ 4 (National Vocational Qualification) **and**
   a. A Pass (S) for General English at GCE (A/L) **or**
   b. A Credit pass (C) for English at GCE (A/L) **or**
   c. Basic or Professional English Certificate from a recognized University **or**
   d. A Pass at the National Certificate in English (NCE) **or**
   e. A Pass at the compulsory English Examination conducted by a University as a requirement for the award of a degree **or**
   f. A Degree in English medium from a recognized University **or**
   Any other qualification, the Board of Studies may, on case-by-case evaluation, consider suitable, and acceptable to the Senate **or**

B. An Advanced Certificate in English from a recognized University.

In addition, the candidates have to sit for a selection test conducted by the University. Those who possess a pass at the Advanced Certificate in English course conducted by a recognized university will be exempted from the selection test.

**Duration**
One Year (Saturday or Sunday)

**Course**
This course includes lessons and activities to improve advanced Listening, Speaking and Writing skills and Grammar. The course includes a Literature component as well.
The course is conducted both in the physical/in-campus mode and the online mode according to the preference of the candidate. The examinations are conducted in campus physically.

**Fees**
Course Fee - Rs. 32,500/= (With the option of paying in 2 installments : Rs. 20,000/= + Rs. 12,500/=)
Registration Fee - Rs. 1000/=

**Applications**
Application forms and further information could be downloaded from www.rjt.ac.lk/notice or http://cdce.rjt.ac.lk/cdce/news.php or obtained by personally visiting the university. Completed application should be sent to **Deputy Registrar, Centre for Distance & Continuing Education, Rajarata University of Sri Lanka, Mihintale** along with a copy of the Birth Certificate, Copies of Educational Certificates, and the bank slip after depositing the selection fee of Rs. 500.00 credited to Account No. 5022233 of Rajarata University of Sri Lanka, Bank of Ceylon, Mihintale Branch (Payment could be made at any branch of Bank of Ceylon).

**Extended Closing Date of Applications**
Applications will close on 15.09.2023.

***Inquiries : Department of English Language Teaching - 025-2266802***
***Centre for Distance and Continuing Education - 0252260220***

**Registrar**
**Rajarata University of Sri Lanka**
**Mihintale**

27.08.2023

# மயோன் முஸ்தபா மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்

## அமைச்சர் நஸீர் அஹமட்டின் இரங்கல் செய்தி

முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சரும் சமூக சேவையாளருமான மயோன் முஸ்தபாவை இழந்து விட்டோம்.

அமைச்சர் நஸீர் அஹமட்டின் இரங்கல் செய்தி அன்னாரின் ஜனாஸா செய்தி (26) கேள்விப்பட்டு மிகவும் கவலையடைந்தேன்.

மர்ஹூம் மாயோன் முஸ்தபா எல்லோருடனும் பண்பாகவும், அன்பாகவும், பழகுபவர். தனது கடமைகளை நிறைவேற்றுவதில் மிகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியவர். கல்விச் சமூகத்தின் உருவாக்கத்திற்காக குறிப்பாக கணினி கல்வியை கிழக்கு மாகாணத்தில் நிலைநாட்டுவதற்காகவும் அரும்பாடுபட்டுள்ளார். இவர் ஓர் உன்னத தூர நோக்கு சிந்தனைமிக்க மனிதராவார்.

தனது ஊரின் அபிவிருத்தி செயற்படுகளிலும், ஆன்மீக விடயங்களிலும் தனது முழுமையான கவனத்தின்பால் கொண்டு பணியாற்றியவர். அன்னார் வர்த்தக செயற்பாடுகளிலும் தனக்கென தனி நாமத்தை நிலை நாட்டியவர். அன்னாரின் இழப்பு மிகவும் கவலையளிக்கின்றது. மர்ஹூம் மாயோன் முஸ்தபாவின் இழப்பு ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு மன ஆறுதலை கொடுப்பாயாக! அன்னாரின் பாவங்களை மன்னித்து மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கத்தை வழங்குவாயாக என்று பிராத்திக்கின்றேன். ஆமீன்.

# இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கை வருகிறார்



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 02 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சீன ஆய்வுக் கப்பலான Shi Yan 6 இலங்கைக்கு வருகை தர திட்டமிட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில், அதற்கு முன்னதாக இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் இடம் பெறவுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க உள்ளிட்டோருடன்கலந்துரையாடவுள்ளதாக தெரியவருகிறது.

இதன்போது, திருகோணமலைக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் விஜயம் செய்யவுள்ளதுடன், இரு நாடுகளுக்குமிடையில் அமைக்கப்படவுள்ள எண்ணெய்க் குழாய் நிர்மாணத்தையும் அவர் பார்வையிடவுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தபோது, எண்ணெய்க் குழாய் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், பாலம் அமைப்பது தொடர்பிலும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பான உடன்படிக்கையும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## GCE A/L பரீட்சை முடிவுகள்...

278,196 பாடசாலை விண்ணப்பதாரர்களும், 53,513 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சை எழுதினார்கள்.

ஆசிரியர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கையால் உயர்தர பரீட்சையை நடத்துவதில் இடையூறுகள் ஏற்பட்டதால், இந்த வருடம் நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சையை பரீட்சை திணைக்களம் ஒத்தி வைத்தது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட உயர்கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில், பல இடையூறுகளுக்கு மத்தியில் மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

## இன மோதல்களை உருவாக்குவது...

உருவாவதற்கு காரணமென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவர்கள் கொழும்பிலிருந்து கட்டளைகளை நிறைவேற்றுவதனாலேயே மோதல் நிலை ஏற்படுவதாக அவர் கூறினார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்படிச்சேனை பிரதேசத்தில் சோதையன் கட்டு பகுதியில் கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்ட சட்டவிரோத குழுவுக்கும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனுக்குமிடையில் நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது.

சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவிலிருந்த ஒருவரை வியாழேந்திரன் கோபத்துடன் தள்ளியதால் அங்கு பதற்றம் நிலவியது.

இந்த முறுகல் நிலையையடுத்து சட்டவிரோத கிரவல் மண் அகழும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இதன் பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், தான் ஆளும் தரப்புக்கோ எதிர் தரப்புக்கோ ஆதரவு கிடையாதெனவும் மக்களுக்கே தான் ஆதரவு எனவும் குறிப்பிட்டிருந்தார்.

## எங்கள் கருத்து...

# விலங்குகளிடமும் காணமுடியாத கொடிய மனம் கொண்டவர்கள்!

செல்கின்றது. எரிபொருள் மூலமே முழுமையாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியதொரு நிலைமை உருவாகப் போகின்றது.

நாட்டு மக்களின் நெருக்கடிகள் இவ்வாறு அதிகரித்துச் சென்று கொண்டிருக்கையில், பிராணிகளின் நிலைமையும் பரிதாபமாகவே உள்ளது. வனசீவராசிகள் தண்ணீருக்காக அலைந்து திரிவதாகவும், குடிநீர் இன்றி ஏராளமான வனவிலங்குகள் இறந்து விட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

வனப்பகுதிகளிலுள்ள நீர்நிலைகள் வற்றிவிட்டதால் அவை தண்ணீரின்றித் திண்டாடுவது ஒருபுறமிருக்க, காட்டுமரங்கள் நீரின்றி வாடிப்போவதால் பிராணிகளுக்கான இலைகுழைகள் உணவாகக் கிடைப்பதே அரிதாகிப் போயுள்ளது. எனவே காட்டுவிலங்குகள் மனிதகுடியிருப்புகளை நோக்கி உணவுக்காகவும் தண்ணீருக்காகவும் வரத் தொடங்கியுள்ளன.

மனிதனைப் போலவே அவற்றுக்கும் உணவும் தண்ணீரும் அவசியமாகின்றன. அவை பரிதாப ஜீவன்கள். எங்காவது அருந்துவதற்குத் தண்ணீர் கிடைக்குமா என்று தேடியலைந்து வருகின்ற அந்த அப்பாவிப் பிராணிகளை இறைச்சிக்காக மனிதன் வேட்டையாடுவது மகாபாதகச் செயல்! அதுமாத்திரமன்றி, தண்ணீருக்குள் விஷத்தைக் கலந்து வைத்து அம்மிருகங்களை கொலை செய்து, இறைச்சியாக்கி விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டு வருவதும் தெரியவந்துள்ளது.

விலங்குகளுக்கும் இல்லாத கொடியமனம் கொண்ட பலர் நம்மத்தியில் உள்ளனரென்பதற்கு இதனைவிட வேறு உதாரணம் தேவையில்லை. இதுபோன்றுதான் அவுஸ்திரேலியா போன்ற தொலைதூர நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வருகின்ற நாரை இனத்தைச் சேர்ந்த அரியவகைப் பறவைகளை இறைச்சிக்காக வேட்டையாடும் கொடியவர்களும் எமது நாட்டில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வுலகில் வாழ்கின்ற உரிமை எங்களைப் போன்று பிராணிகளுக்கும் உள்ளது. அவை அறிவில்லாத அப்பாவி ஜீவன்கள் என்பதற்காக அவற்றை கொன்றொழிப்பது ஈவிரக்கமற்ற கொடுஞ்செயல் ஆகும். மனிதர்களே அவற்றை அழித்தொழிக்க முற்பட்டால் அவை யாரிடம் பாதுகாப்பு நாடிச் செல்லும்?

# சிறுவர் துஷ்பிரயோகம் செய்வோருக்கு மரண தண்டனை வழங்குங்கள்

## முள்ளியவளையில் விழிப்புணர்வு நடைபவனி



ஓமந்தை விஷேட நிருபர்

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி விழிப்புணர்வு நடைபவனியொன்று முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக நேற்று (26) காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சிறுவர்களுடைய உரிமைகளை பாதுகாக்க கோரி நடத்தப்பட்ட இவ்விழிப்புணர்வு பேரணி, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு நடைபவனியாக சென்று தண்ணிரூற்று பொதுச்சந்தைக்கு முன்பாக நிறைவு பெற்றது.

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யாதீர், சிறுவர் துஷ்பிரயோகத்தை கண்டால் 1929 க்கு அழைப்போம், மேதையை அழிக்கும் போதை, சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு மரண தண்டனை கொடு, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவோம், வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம், சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ள பாதுகாப்பு மிக்க சூழல் ஒன்றை உருவாக்குவோம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய விழிப்புணர்வு பதாதைகளுடன் நடைபவனி இடம் பெற்றிருந்தது .

மிஸ்வா திருச்சபையின் ஊடாக இடம்பெற்ற பேரணியில் திருச்சபையின் ஊழியர்கள் பெற்றோர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் முக்கிய நபர்...

தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தியாவிலும் இலங்கையிலும் போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகத்தின் வருமானத்தில் மோசடி செய்வது தொடர்பான சட்டவிரோத பரிவர்த்தனைகளுக்கும் ஆதிலிங்கம் முக்கியமானவராக செயற்பட்டு வந்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட ஆதிலிங்கம், இந்தியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர்களுக்கு சட்டபூர்வமாக்கும் முயற்சியில் மோசடியாக போலி அடையாள அட்டை, ஆவணங்களையும் தயாரித்துள்ளதாக என்.ஐ.ஏ விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை இவர்கள், பாகிஸ்தானியரான ஹாஜி சலீம் என்பவரிடம் இருந்து இந்த சட்டவிரோத போதைப்பொருட்களைப் பெற்றுள்ளதாகவும் என்.ஐ.ஏ விசாரணையில் தெரியவந்துள்ளது. சட்டவிரோத செயற்பாடுகள் மூலம் பெறப்படும் பணத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீளுருவாக்கத்துக்கு பயன்படுத்தியதாகவும் என்.ஐ.ஏ விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலையில் பதிவு செய்யப்பட்ட சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வியாபார வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 14ஆக உயர்ந்துள்ளதாக என்.ஐ.ஏ தெரிவிக்கப்படுகின்றது.

## இப்ராஹிம் ஜவாஹிருக்கு...

இப்ராஹிம் ஜவாஹிருக்கு 'அமெரிக்க இயந்திர பொறியியலாளர் சமூகம்' (The American Society of Mechanical Engineers) இன் 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த விருது அமெரிக்காவில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஐக்கிய அமெரிக்காவின் University of Kentucky யில் பொறியியல் துறைப் பேராசிரியராகவும் விஞ்ஞான ஆராய்ச்சி ஆய்வு கூடத்தின் தலைவராகவும் செயற்படுகிறார்.

அவர் சர்வதேசங்களில் பல முக்கிய விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருப்பதுடன் அமெரிக்காவிலுள்ள முக்கியமான நிறுவனங்களுக்கு பல மில்லியன் டொலர் செலவிலான திட்டங்களை (Projects) நிறைவேற்றிக் கொடுத்து தனது பல்கலைக் கழகத்துக்கும் ஆராய்ச்சி நிலையத்துக்கும் பாரிய வருமானத்தையும் பெருமையையும் தேடிக்கொடுத்துள்ளார்.

அவர் உலகில் உள்ள பல முன்னணி பல்கலைக் கழகங்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருவதுடன் அங்கு பல சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வருகிறார். பொறியியல் முதுமாணி மாணவர்களுக்கான பல ஆராய்ச்சிப் புத்தகங்களை அவர் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## திருக்கேதீஸ்வரத்தில்...

பாடல் பெற்ற திருத்தலமாகவும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் விளங்கும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரத்தில் வழிபாடு செய்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது,

இந்த விசேட பூஜை நாளில் என்னை வரவேற்ற இராமகிருஷ்ணன் மற்றும் கோவில் நிர்வாகத்தினரை மனதாரப் பாராட்டுகிறேன்.

2,500 வருட பாரம்பரியம் மற்றும் வரலாற்றைக் கொண்ட, இலங்கையின் மிகவும் போற்றப்படும் இந்துக் கோயில்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வரம் இந்துக் கோயிலுக்குச் சென்றது மறக்க முடியாதது எனவும் தெரிவித்துள்ளார்.

## சிங்கப்பூருடனான உடன்படிக்கை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் விஜயத்தின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையமாக வைத்து நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மற்றும் சூரிய சக்தி உற்பத்திகளை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிங்கப்பூருக்கு அனுப்புவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பான விவகாரங்களை உரிய அமைச்சுக்கள் ஒதுக்கப்படும் வரை ஜனாதிபதியின் அலுவலகத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி மற்றும் பரிமாற்றம் குறித்து எதிர்காலத்தில் பேச்சு நடத்தப்படும்.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான காலநிலை மாற்றம் தொடர்பான பணிகளை சுற்றாடல் அமைச்சுக்கு மாற்றும் வரை ஜனாதிபதியின் அலுவலகம் அதனை முன்னெடுக்கும். ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சிங்கப்பூர் இலங்கை வர்த்தக ஒப்பந்தமும், இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பும் அவ்வாறே முன்னெடுக்கப்படவுள்ளன.

சிங்கப்பூர் விஜயத்தின் போது, நிர்மாணத்துறையில் திறமையான தாதியர் மற்றும் கைவினைஞர்களை நாட்டுக்கு அனுப்புவது குறித்தும் ஜனாதிபதி அங்கு கலந்துரையாடினார்.

## பிரமிட் திட்டங்களை...

விடுத்துள்ளது. இணையத்தளங்கள் ஊடாக செயற்படும் சில பிரமிட் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்யுமாறு பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதாக தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

''இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இத்திட்டம் முதலீட்டாளர்களின் நிதியங்களைப் பாதுகாக்கின்றது. இத்திட்டம் உரிய வரிகளை அரசுக்குச் செலுத்துகின்றது, நிதியங்களை மீளப்பெறும் பொருட்டு இத்திட்டத்தில் பங்கேற்பவர்கள் தமது நிதியங்களிலிருந்து தனிப்பட்ட வருமான வரியை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டும். அன்றேல் அவர்களது நிதியங்கள் மத்திய வங்கியினால் முடக்கப்படும், இத்திட்டம் இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது' என்பன போன்ற விடயங்களே தமது திட்டத்தை நியாயப்படுத்துவதற்காக சில பிரமிட் திட்ட ஏற்பாட்டாளர்களால் கூறப்படுவதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.''

இவ்வாறான கூற்றுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும், இக்கூற்றுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எனவே இத்தகைய திட்டங்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடனும், விழிப்புடனும் செயற்படுமாறு மத்திய வங்கி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இத்திட்டங்களில் முதலீடு செய்வதனூடாக பொதுமக்கள் பணத்தை இழக்கக்கூடும் என்பதனால், இவ்வாறான திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டாம் என்றும் மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் விபரங்களை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலும், வெளிநாட்டுச்செலாவணித் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் பார்வையிட முடியும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

# மலையக கல்வி அபிவிருத்தி மன்ற சேவைகள் தொடர வாழ்த்துகிறேன்



மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் சேவை பல்லாண்டுகள் தொடர வாழ்த்துகிறேன் சுப்பையா ஆனந்தகுமார் பெருந்தோட்ட பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கிவரும் மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் 17ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் இத்தருணத்தில் அவர்களது சேவை தொடர வேண்டுமென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார். மலையக கல்வி அபிவிருத்தி மன்றம், ஒரு சமூக நோக்குடன் இயங்கும் அமைப்பாகும். 17ஆண்டுகளாக எவ்வித எதிர்பார்ப்பும் இலாபநோக்கமும் இன்றி மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைய வேண்டுமென்ற ஒற்றை இலக்குடன் தமது சேவையை வெற்றிகரமாக முன்னெடுத்துவருகிறது. ஆரம்ப கல்வியைக் கூட பெறமுடியாது பல மாணவர்களின் வாழ்க்கை இடைநடுவில் திசைத் திரும்புகிறது. அவர்களை போன்றவர்களுக்கு மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் சேவை உண்மையில் ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். இலவச கருத்தரங்குகளை நடத்துவது, மாதாந்த புலமைப்பரிசில் வழங்கல், தொண்டர் ஆசிரியர்களுக்கான ஊக்கத்தொகை, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம் மற்றும் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் வழங்குவது என இவர்களது கல்வி சேவை பரந்ததாகவுள்ளது. ஆகவே மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் சேவை இன்னும் பல ஆண்டுகள் தொடர வாழ்த்துகிறேன்'' என்றும் அவர் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

## இவ்வருட தேசிய மீலாத் விழா...

இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் முயற்சியின் பலனாக வரலாற்றில் முதல் தடவையாக மன்னாரில் இந்த விழாவை நடத்தவிருப்பது வரலாற்றுச் சிறப்பம்சமாகும்.

இதன்படி நடைபெறவுள்ள தேசிய மீலாதுன் நபி விழாவை எவ்வாறு நேர்த்தியான முறை நடத்துவது தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று புத்தசாசன சமய விவரங்கள் மற்றும் கலாச்சார அலுவலர்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் பங்கேற்போடு நேற்று (26) மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் பிரதேசச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## தேசிய திட்ட முகாமைத்துவ...

விருதுகளை பெற்றது. முறையான திட்ட முகாமைத்துவத்தை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்காக பொறியியல் பிரிவு தங்க விருதையும், கல்வி திட்ட பிரிவில் 'நெனமிஹிர' திட்டம் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அக்கறை க்காக வெள்ளி விருதையும் பெற்றது.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பல அரச மற்றும் தனியார் திட்ட முகாமைத்துவ நிறுவனங்கள் இதற்காக பரிந்துரைக்கப் பட்டிருந்தன. அமெரிக்கா, போலந்து, இந்தியா போன்ற பல நாடுகளின் பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கோப் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் நடைபெற்ற விழாவில், ரூபவாஹினி வென்ற தங்க விருதை, உலகத் திட்ட முகாமைத்துவ நிறுவனர் லீலம்பேர்ட்டிடமிந்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) கபில தசநாயக்க மற்றும் (இடது) பொறியியல் திட்ட முகாமைத்துவ பிரிவின் தொழில்நுட்ப நிர்வாகி சமிலா ஜயசுந்தரஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## சட்டத்தரணிகளின் சவாலுக்கு...

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக சரத் வீரசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்து வடக்கு, கிழக்கில் சட்டத்தரணிகள் (25) நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து தத்தமது நீதிமன்றங்கள் முன்பாக அடையாள கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள், "பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு பேசாமல் தைரியம் இருந்தால் வெளியில் வந்து பேச வேண்டும்" என்று சவால் விடுத்திருந்தனர்.

இந்தச் சவால் தொடர்பாகச் சரத் வீரசேக்கரவிடம் வினவியபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் "பாராளுமன்றத்தில் நான் தெரிவித்திருந்த கருத்துக்குத் தான் வடக்கு கிழக்கு சட்டத்தரணிகள் சவால் விடுத்துள்ளனர். எனவே, அவர்களின் சவாலுக்கு நான் பாராளுமன்றத்தில் வைத்து தான் பதில் வழங்குவேன்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 'இனிய நந்தவனம்'...

சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் தலைமை தாங்கவுள்ளார்.

தமிழ் வாழ்த்தை கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவி சக்திகா சிறிகுமரனும், வரவேற்புரையை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தனும், தலைமையுரையை 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனும், ஏற்புரையையும் நன்றியுரையையும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்பு அதிதிகளாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ஶ்ரீகஜன், தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே.பி.ஆர்.ஹரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.சிவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராஜா, எழுத்தாளர் 'சாகித்திய ரத்னா' மு.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வை கவிதா ராம்குமார் (டான் ரீ.வி.) தொகுத்து வழங்கவுள்ளதுடன், 'கலாபூஷணம்' பொன்னுத்துரை நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்யவுள்ளார்.

## மயோன் முஸ்தபா நேற்று...

அவரது உறவினர்கள் தெரிவித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அஷ்ரப்பின் தலைமையில் இணைந்து செயல்பட்ட இவர், மிக நீண்ட காலம் முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராக பணியாற்றினார்.

பின்னர் கருத்து வேறுபாடுகளால் அதிலிருந்து பிரிந்து செயல்பட்டவர், உம்மா என்ற அமைப்பை உருவாக்கி முஸ்லிம் சமூகத்துக்காக தனது பணியை முன்னெடுத்தார்.

அரசியல் குழப்ப நிலைகள் காரணமாக, இலங்கையில் இருந்து வெளிநாடு சென்றிருந்த அவர், சிறிது காலம் அங்கு தங்கி இருந்து, பின்னர் நாடு திரும்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது அவரது தலைமையிலான அரசாங்கத்தில் உயர்கல்வி பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்தப்பதவியில் சிறப்பாக பணியாற்றி நாட்டு மக்கள் மத்தியில் நல்லபிமானத்தை பெற்றிருந்தார்.

இவருடைய MY OWN என்ற கம்ப்யூட்டர் நிறுவனத்தின் மூலம் சிறந்த இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதிலும் இவரது பங்கு அளப்பரியது.

இதன் மூலமே மீரா மொஹிதீன் மொஹமட் முஸ்தாபா (Meera Mohideen Mohamed Musthaffa) வான இவர் மயோன் முஸ்தபா என மக்கள் மத்தியில் அறிமுகமானார். கடந்த 1999 ஆண்டுகளில் தனியொரு மனிதனாக நாட்டின் தேசிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அம்பாரை கரையோர பிரதேசமெங்கும் பாரிய பங்களிப்பை வழங்கியதுடன் ஐக்கிய தேசிய கட்சிக்கு எழுச்சியை உருவாக்க முன்னின்று செயற்பட்டவராவார். முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் ஜனாஸா கொழும்பு கிருலப்பனையில் உள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு நேற்று இஷா தொழுகையின் பின்னர் தெஹிவளை ஜும்மா பெரிய பள்ளிவாயலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.




**'சிறுபான்மை மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெரும்பான்மைவாதம் மறைத்துவிடக் கூடாது' என்று கூறுகின்றார் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய. 'இராஜதந்திர ரீதியிலான பாரம்பரிய பங்காளர்கள் மற்றும் உலகில் வளர்ச்சியடைந்துவரும் பங்காளர்கள் என இரு தரப்புக்கிடையிலும் சமநிலையைப் பேணுவதற்கான கொள்கையை இலங்கை கடைப்பிடித்து வருகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் நாடு தற்பொழுது பின்பற்றிவரும் வெளிநாட்டு உறவுகள் பற்றி எம்முடன் அவர் விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.**



# சிறுபான்மை மக்களின் உரிமைகள், தேவைகளை பெரும்பான்மைவாதம் மறைத்து விடக் கூடாது!

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய கூறுகின்றார்

**கேள்வி: வெளிநாட்டு விவகாரங்களில், ஏனைய நாடுகளுடனான இலங்கையின் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த எவ்வாறான முயற்சிகள் அல்லது கொள்கைகளை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

பதில்: இருதுருவ கட்டமைப்பில் முன்னர் காணப்பட்ட உலகம் பின்னாளில் பலதுருவ அமைப்புக்கு மாறியது. கடுமையான கருத்தியல் பிளவுகள் மற்றும் தொகுதி அடிப்படையிலான பொருளாதாரங்கள் நிலவிய காலம் கடந்துவிட்டது. இன்றைய சூழலில், நாடுகள் நடைமுறைரீதியாக சிறந்த வருமானத்தை வழங்கும் வாய்ப்புகளை நாடுவதுடன், ஜனநாயக மற்றும் குறைந்த சர்வாதிகார ஆட்சி அமைப்புகளுடன் இணைந்து செயற்படவே விரும்புகின்றன. விரைவான பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்பைக் கொண்டவையாகக் கருதப்படும் நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு எதிரான போர் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது. உலகளாவிய கூட்டாண்மைகளை வலுப்படுத்த இத்தகைய கொள்கைகளை வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் இலங்கை பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் பணியில் இறங்கியுள்ளது. சமீபத்தில் சீனாவுடன் ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கி, இந்தியாவுடன் இதேபோன்ற ஒப்பந்தங்களை உருவாக்க பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம். உலகப் பொருளாதாரம் ஆபிரிக்க, ஆசிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பிராந்திய குழுக்களால் வகைப்படுத்தப்படுவதால், வணிகவாய்ப்புகள் நம்பிக்கைக்குரியதாக இருக்கும் இடத்தில் நாங்கள் நம்மை நிலைநிறுத்திக் கொள்கிறோம். நமது பொருளாதார சீரமைப்பு நடைமுறை மற்றும் பரஸ்பர நன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

நேட்டோவுடன் முன்னர் நாம் கொண்டிருந்த வலுவான ஈடுபாட்டிலிருந்து மாறியிருந்தாலும், பாதுகாப்புத் தொடர்பில் காணப்படும் பொதுவான சவால்களில் ஏனைய நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் இலங்கை உறுதியாக உள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு, சட்டவிரோத குடியேற்றங்களைக் கையாள்வது மற்றும் உளவுத்துறைத் தகவல்களைப் பகிர்வது ஆகியன இந்த ஒத்துழைப்பின் முக்கிய பகுதிகளாகும். இலங்கை ஒரு நடுநிலை நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதுடன் எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் சேரவில்லை என்பது இங்கு முக்கியமாகும்.

எந்தவொரு குறிப்பிட்ட தொகுதியுடனும் இணையாமல் உலகளாவிய பாதுகாப்புக்கு ஆக்கபூர்வமாக பங்களிப்பதில் எங்கள் கவனம் உள்ளது. இலங்கையின் அணுகுமுறை ஆற்றல் மிக்கது மற்றும் பன்முகத்தன்மை கொண்டது. பல்வேறு அம்சங்கள் மற்றும் ஆர்வங்களின் அடிப்படையில் பல நாடுகளுடன் நாம் ஈடுபாடுகளை அதிகரித்துள்ளோம். எங்கள் நடுநிலைக் கொள்கை என்பது செயலற்ற நிலைக்குச் சமமானதல்ல. மாறாக, நாங்கள் பல்வேறு துறைகளில் தீவிரமாகப் பங்கேற்கிறோம். திறந்த உரையாடல், பரஸ்பர மரியாதை மற்றும் புரிதல், பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கு சாதகமாக பங்களிக்கும் உறவுகளை வளர்ப்பதற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்.

இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறை அனுசரிப்பு, நடைமுறைவாதம் மற்றும் செயலில் ஈடுபாடு ஆகியவற்றில் வேரூன்றியுள்ளது. உலகம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் நிலையில், நல்லாட்சி, பொருளாதார வளர்ச்சி மற்றும் கூட்டுப் பாதுகாப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் சர்வதேச அரங்கில் ஆக்கபூர்வமான பங்கை வகிக்க இலங்கை முயல்கிறது.

**கே: இலங்கையில் பல்வேறு வகையான இராஜதந்திர பங்காளர்கள் இருக்கின்றனர். இதில் பாரம்பரியமான பங்காளர்கள் மற்றும் வளர்ச்சியடைந்துவரும் முன்னணி நாடுகள் ஆகியவற்றுக்கிடையில் இலங்கை எவ்வாறு சமநிலையைப் பேணுகிறது?**

பதில்: இலங்கையின் இராஜதந்திர உறவுகள், நேசத்துக்குரிய பாரம்பரிய கூட்டணிகள் மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் ஆகியவற்றுடனான கூட்டாண்மைகளுக்கு இடையே ஒரு நுட்பமான சமநிலையை உள்ளடக்கியது. பாரம்பரிய நட்பு நாடுகளுக்கான எங்கள் அர்ப்பணிப்பு உறுதியாக உள்ளது. உதாரணமாக, ரஷ்யாவுடனான நமது நீடித்த அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ உறவுகள் உக்ரைன் நெருக்கடியின் போது எங்கள் நடுநிலை நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் பேணுவதற்கு ஒரு காரணியாக இருந்தது.

ரஷ்யா மற்றும் சீனாவுடனான எமது உறவுகள் வரலாற்று ரீதியில் ஆழமாக வேரூன்றியுள்ளன. ஐ.நா மனித உரிமைகள் பேரவை போன்ற சர்வதேச அரங்குகளில் சவாலான காலங்களிலும் கூட, இந்த நாடுகள் போரின் போது எமக்கு ஆதரவாக நின்றன. எங்கள் தொடர்புகள் அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு பகுதிகளை உள்ளடக்கிய பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியவை. மூலோபாய மற்றும் நுணுக்கமான ஈடுபாடுகளை வளர்ப்பதன் மூலம், எங்கள் பாரம்பரிய கூட்டணிகள் பொருத்தமானதாக இருப்பதையும், நமது தேசிய நலன்களுக்கு சாதகமான பங்களிப்பையும் உறுதிசெய்கிறோம்.

உலகளாவிய அரசியலின் இயக்கவியல் மாறுகிறது, மேலும் புதிய நாடுகள் முன்னணியில் இருந்து வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் எங்களின் மூலோபாயம் நன்கு சிந்திக்கப்பட்ட மற்றும் விரிவான அணுகுமுறையை உள்ளடக்கியது. எங்கள் தேசிய நலன்களுடன் ஒத்துப்போகும் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்கும் ஒத்துழைப்பையே நாம் நாடுகின்றோம். எனவே, இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறையானது பழைய மற்றும் புதிய, பாரம்பரியம் மற்றும் புதுமை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கவனமான சமநிலையைப் பேணுகிறது. காலத்தால் மதிக்கப்படும் கூட்டணிகளை வளர்ப்பதன் மூலமும், புதிய கூட்டாண்மைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமும், உலகளாவிய அரங்கில் மாறும் மற்றும் இணக்கமான எதிர்காலத்திற்கு நாங்கள் வழிவகுக்கிறோம்.

**கே: இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை மூலோபாய ரீதியான இடத்தில் அமைந்துள்ளது. நாட்டின் புவிசார் அரசியல் செல்வாக்கை மேம்படுத்த இந்த புவியியல் நன்மையை எவ்வாறு பயன்படுத்த திட்டமிட்டுள்ளீர்கள் என்பதை விரிவாகக் கூற முடியுமா?**

பதில்: இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை ஆக்கிரமித்துள்ளது என்பது மறுக்க முடியாதது என்றாலும், அத்தகைய சலுகை பெற்ற ஒரே நாடு நாங்கள் அல்ல என்பதை ஒப்புக்கொள்வது மிகவும் முக்கியமானது. பல நாடுகள் மூலோபாய ரீதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன, ஒவ்வொன்றும் தனித்துவமான திறனைக் கொண்டு வருகின்றன. கடல்சார் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்றவை நாம் கவனம் செலுத்தும் முக்கியமான விடயங்கள். கொழும்பு துறைமுகம், உலகின் மிகவும் பரபரப்பான துறைமுகமாக தரப்படுத்தப்பட்டுள்ளது, இது எங்களின் நன்மைக்கான ஒரு கலங்கரை விளக்கமாகும்.

பங்களாதேஷ் கப்பல் போக்குவரத்தில் 40 சதவீதம் கப்பல்கள் கொழும்பு வழியாகச் செல்கின்றன. இது உலகளாவிய கப்பல் வலையமைப்புக்களில் முக்கியத்துவத்திற்கு ஒரு சான்றாகும். வலுவான வர்த்தக கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும், எங்கள் போக்குவரத்துத் திறன்களை மேம்படுத்துவதன் மூலமும் இந்த நன்மையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இலங்கையை எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு உந்துதல் நமது புவியியல் நன்மையுடன் எதிரொலிக்கிறது. தடையற்ற வர்த்தகத்தை எளிதாக்குவதன் மூலமும், பிராந்தியத்தை உற்சாகப்படுத்துவதன் மூலமும், அண்டை நாடுகளின் வளர்ச்சிக்கு பங்களிப்பதன் மூலமும், நமது புவிசார் அரசியல் செல்வாக்கை இயல்பாக மேம்படுத்தும் பரஸ்பர நன்மை பயக்கும் சூழலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

**கே: இலங்கையின் அண்டை நாடுகளுடன் உறவுகளை வளர்ப்பதற்கான உங்கள் அணுகுமுறையைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில்: இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதாரப் பிணைப்பு ஆழமாகக் காணப்படுகிறது. இது நமது நாடுகளின் பின்னிப்பிணைந்த வரலாறுகளை பிரதிபலிக்கிறது. பொருளாதார நிலையில் இந்தியா ஒரு முக்கிய இடத்தை நோக்கிப் பரிணமித்து வரும் நிலையில், செழுமைக்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் அங்கீகரிக்கிறோம். பிராந்திய ஒத்துழைப்பிற்கான எங்கள் அர்ப்பணிப்பு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியுடன் தடையின்றி இணைந்துள்ளது. இந்தியா உட்பட அண்டை நாடுகளுடனான கூட்டாண்மை மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், பிராந்தியத்தின் பாதுகாப்புத் தேவைகளை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம்.

**கே: பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அதை செயல்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரையும் பங்களிக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இந்த நேரத்தில் 13 ஆவது திருத்தத்தின் முக்கியத்துவம் யாது?**

பதில்: 13 ஆவது திருத்தத்தின் முக்கிய சாராம்சம், நமது தேசத்தின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர மற்றும் விரிவான தீர்வை வழங்குவதில் உள்ளது. ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் எமது நாட்டின் முன்னேற்றத்தில் சமபங்குதாரராக மாறுவது மிகவும் முக்கியமானது. 13 ஆவது திருத்தம் அரசியலுக்கான ஆடுகளத்தை சமன் செய்யும் திறனைக் கொண்டுள்ளது, பின்னணியைப் பொருட்படுத்தாமல் வாய்ப்புகள் மற்றும் பங்களிப்புகள் அனைவருக்கும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்கிறது. உணவு அல்லது உடைகளைப் பகிர்ந்து கொள்வது என்ற சொல்லாட்சிக்கு அப்பால், உண்மையான சாராம்சம் அரசியல் அதிகாரத்தை சமமாகப் பகிர்வதாகும். சிறுபான்மையினரின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் மறைக்கப்படாத இடத்தில் பெரும்பான்மைவாதத்தை ஒழிப்பது ஒரு மூலக்கல்லாகும். இந்தத் திருத்தம் அனைத்து சமூகங்களின் குரல்களும் எதிரொலிக்கும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சியின் சகாப்தத்திற்கான நுழைவாயிலாகும்.

பல தசாப்தகால மோதலுக்குப் பின்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் வருந்தத்தக்க வகையில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும், தற்போதைய தருணம் சரியான சந்தர்ப்பத்தை வழங்குகிறது. போராட்டம் மூலம் உருவகப்படுத்தப்பட்ட மக்களின் உணர்வு மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றம் இனப்பிரச்சினைக்கான நமது அணுகுமுறையை மறுசீரமைக்க வேண்டிய அவசரத்தை வலியுறுத்துகிறது.

ஜனநாயகம், அதன் பரிணாம வளர்ச்சியில், தவிர்க்க முடியாமல் அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகத்தை நோக்கி ஈர்க்கிறது. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலம், ஒவ்வொரு குடிமகனும் தங்கள் இடத்தைக் கண்டுபிடிக்கும் சூழலை வளர்ப்பதன் மூலம் 13 ஆவது திருத்தம் இந்தப் பாதையை இணைக்கிறது.

பிளவுபட்ட கடந்த காலத்திலிருந்து கூட்டு முன்னேற்றம் மற்றும் புரிதல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் எதிர்காலத்திற்கு மாறுவது இந்த ஜனநாயகப் பயணத்தின் ஒருங்கிணைந்ததாகும். சிறுபான்மை மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெரும்பான்மைவாதம் மறைத்துவிடக் கூடாது.



**பல தசாப்தகால மோதலுக்குப் பின்னர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் வருந்தத்தக்க வகையில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை**

# பொதுமக்கள் செலுத்தும் வரிப்பணத்தை பொறுப்புடன் கையாளுவது அவசியம்!



**மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்**

மிலிந்த மொரகொட

ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் இந்தியா, அறுபது முக்கிய நகரங்களில் அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் மற்றும் உயர்அதிகாரிகளுடன் இருநூற்றுமுப்பது வெவ்வேறு விவாதங்கள் மற்றும் மாநாட்டு அமர்வுகளை ஏற்பாடு செய்கின்றது. உச்சிமாநாட்டு அமர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்க தேவையான வாகனங்கள் இல்லாததால், இந்திய காவல் துறை சமீபத்தில் அவர்களின் வாகனங்களது கணக்கெடுப்பை நடத்தியது.

புதிய வாகனங்களை வாங்காமல் அல்லது வாடகைக்கு எடுக்காமல் செலவுகளை முகாமைத்துவம் செய்வதே நோக்கமாக இருந்தது. இந்திய பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கும் வாகனங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக வாகனங்கள் வழங்கப்படுவதுமில்லை. அரச அதிகாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களின் வரிப்பணத்தை கவனமாகக் கையாளும் உணர்வை ஏற்படுத்த இந்தியத் தலைவர்களிடமிருந்து கிடைக்கும் எடுத்துக்காட்டு மிக முக்கியமானது.

பிரதமராகப் பதவியேற்ற பிறகு, அவருக்கு வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனத்தை பிரதமர் நரேந்திர மோடி நிராகரித்து விட்டார். முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட இந்தியத் தயாரிப்பான ஜீப் பிரதமர் மாளிகைக்குக் கொண்டுவரப்பட்டு, தேவையான நவீனமயமாக்கலுக்குப் பிறகு அதனைத் தொடர்ந்து பயன்படுத்த அவர் விரும்பினார். இந்திய பாதுகாப்புத் தலைவர்கள் அதற்கு இணங்காததால், பிரதமர் தனது முடிவை மாற்ற வேண்டியிருந்தது.

இந்திய அமைச்சரவையின் தலைவர்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வழக்கமான வாகனங்களையே பயன்படுத்துகின்றனர். புதுடெல்லி நகரில் வெளியுறவுத்துறை அமைச்சரும், நிதியமைச்சரும் பயணிக்கும் சாதாரண வாகனங்களுடன் அரச வாகனம் மற்றும் ஒரு துணை வாகனம் ஆகிய இரண்டு வாகனங்கள் மட்டுமே இணையாகச் செல்கின்றன. அதிகாரிகளுக்கு சொகுசு வாகனங்களும் வழங்கப்படவில்லை. அரசாங்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் வெள்ளைநிற வாகனங்களைப் பயன்படுத்துகின்றமையும் விசேட அம்சமாகும்.

அமைச்சர்களும் சிறப்பு அனுமதியின்றி சிவப்பு சமிக்ஞை விளக்குகள் உள்ள வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. பாராளுமன்றத்தில் மற்றும் அமைச்சரவையில் மட்டுமன்றி செல்வந்த குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரபுக்கள் கூட சாதாரணமாக வழங்கப்பட்ட வாகனங்களையே பயன்படுத்துகின்றனர்.

தனிப்பட்ட பயணங்களுக்காக சில அமைச்சர்களும், முதல்வர்களும் சொந்த வாகனங்களை தாமே செலுத்திச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மகாராஷ்டிரா முதல்வர் இயலுமான போதெல்லாம் சாரதி இல்லாமல் வாகனத்தை தானே செலுத்திச் செல்கிறார். ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும் அவ்வாறானவரே ஆவார். அவர் பழைய வாகனத்தை ஓட்டிச் செல்வதை மாநில மக்கள் விரும்பிப் பார்க்கின்றனர்.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரான ஜோதிந்தய ஸ்விந்தா என்பவர் மகாராஜா குடும்பத்தைச் சேர்ந்தவர், ஆனால் அவர் அமைச்சுப் பணிகள் இல்லாத வேளைகளில் தனது வாகனத்தை சுதந்திரமாக பாதையில் ஓட்டுகிறார். காங்கிரஸ் தலைவர்கள் பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி மற்றும் சச்சின் பைலட் போன்ற அரசியல்வாதிகளும் வாகனம் செலுத்த விரும்புகிறார்கள். எளிமையான வாகன பயணமும், சாதாரண மனிதர்களாக சமூகத்தில் நடமாடுவதும் இந்தியர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

பொதுமக்களின் வரிப்பணத்தில் வாங்கப்பட்ட அதிசொகுசு வாகனங்களில் உத்தியோகபூர்வ வாகனங்கள் புடைசூழ பாதையில் வேகமாகச் செல்வது புதுடில்லியில் அரிதான காட்சி. ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சரின் பயணத்தின் போது, பாதுகாப்பு கருதி நெடுஞ்சாலை மூடப்பட்டாலும், உண்மைகளை புரிந்து கொண்ட மக்கள் எந்த ஆட்சேபனையும் தெரிவிப்பதில்லை.

இந்திய நிர்வாக விதிகளின்படி, அரசு ஊழியர்களுக்கு வாகனங்கள் கிடைப்பதில் கட்டுப்பாடுகள் உள்ளன. ஒரு அதிகாரி வாகனம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருக்க வேண்டும். உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அரசால் பணியாளர்கள் வழங்கப்படுவதில்லை. தலைமை நீதிபதிக்கு வழங்கப்படும் வாகனத்துக்குக் கூட விலை வரம்பு உண்டு. எரிபொருளும் அதிகாரி தரத்தின்படி வழங்கப்படுவதோடு, எரிபொருளை பயன்படுத்தி அதிக தூரம் பயணிக்கக் கூடிய இந்திய வாகனங்களைப் பயன்படுத்தவே அதிகாரிகள் விரும்புகிறார்கள்.

சுற்றுலாத் துறைக்குத் தேவையான சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும். அதுமட்டுமின்றி இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சூப்பர் கார்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளுக்கு வரியில்லாத இறக்குமதி சலுகைகள் கிடையாது.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை கடைப்பிடித்த கொள்கையும் இதைப் போன்றதே என்பதைக் குறிப்பிட வேண்டும். பாராளுமன்ற அமர்வுகளுக்கு வெகுதொலைவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ரயிலில் வந்தனர். ரயிலில் சந்திக்கும் மக்கள் தங்களது குறைகளை தெரிவிக்கவும் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். ரயில் பயணத்திற்கான இலவச டிக்கட்டுகள் வழங்கப்பட்டன. தாமதம் ஏற்படும் பட்சத்தில் மக்கள் பிரதிநிதிகளை கொழும்பில் தங்கவைப்பதற்கு பொதுவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. அதிகாரிகள் பயணத்திற்கான அனுமதி முறையையும் கொண்டிருந்தனர், அவற்றைச் சேகரித்து வைத்து குடும்பப் பயணங்களை ஏற்பாடு செய்வது கடந்த காலங்களில் வழக்கமாக இருந்தது.

அமைச்சரின் வாகனம் ஜீப் ஆகும். அது கிராமங்களில் உள்ள கடினமான பாதைகளில் பயணித்தால் போதும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் திறந்த பொருளாதாரத்தை அமுல்படுத்தியதுடன், நிறைவேற்று ஜனாதிபதி என்ற பட்டத்துடன் புதிய அரசியலமைப்பு முறைமையை வேறு திசையில் திருப்பியது. சொகுசு ஜீப்கள் இறக்குமதி, வரியில்லா வாகன உரிமம் வழங்குதல், வெளிச்சந்தையில் உரிமம், ஏலம் விடுதல் போன்றவை அவையாகும்.

அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுக்கு வரிவிலக்கு என்பது ஒவ்வொரு முறையும் பொதுமக்களுக்கு மாற்றப்படும் சுமை. இலங்கை போன்ற ஒரு ஏழை நாடால் சொகுசு வாகனங்களையும், அதற்கு அவர்கள் செலுத்தும் எரிபொருளின் அளவையும் வாங்க முடியாது. சாதாரண வாகனத்தில் மணிக்கணக்கில் பயணிக்க முடியாது என சொகுசு வாகனங்களைப் பயன்படுத்தும் அமைச்சர்கள் உள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் பணத்தை கவனமாகப் பயன்படுத்த வேண்டும். அரசின் வருவாயில் ஒவ்வொரு சதமும் பொதுமக்கள் சம்பாதிப்பதில் ஒரு பங்கு ஆகும். அரசவாகனங்கள் மற்றும் எரிபொருள் நுகர்வு தொடர்பாக புதிய விதிமுறைகளைக் கொண்டு வருவதற்கு இது சரியான நேரம் என்று தெரிகிறது. மிகவும் வளமான பொருளாதாரத்தைக் கொண்ட இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உதாரணம் முக்கியமானது. அரசு மற்றும் அமைச்சர்களின் பயன்பாட்டுக்காக இந்தியாவின் எளிமையான வாகனங்களைக் கொண்டு வருவதை கருத்தில் கொள்ள வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டாலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு விடிவு!

**பெருந்தோட்டத்துறையானது இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. சுமார் 200 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதாரத்துக்கு உந்துசக்தியாகக் காணப்படும் இத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் போதுமானவையாக உள்ளனவா என்ற கேள்வி தொடர்ந்தும் காணப்படுகிறது.**



குறிப்பாக இந்தத் துறைக்கு முதுகெலும்பாக உள்ள பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த மக்கள் பரம்பரை பரம்பரையாக இதனை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களின் நலன்புரி மற்றும் நல்வாழ்வுக்கான வசதிகளில் தொடர்ந்தும் குறைபாடுகள் நிலவி வருகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக மாத்தளை ரத்தவத்தை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தைக் குறிப்பிட முடியும்.

மாத்தளை மாவட்டத்திலுள்ள எல்கடுவ பிளாண்டேசனுக்கு உட்பட்ட ரத்தவத்தை தோட்ட கீழ்ப்பிரிவில் தோட்டத் தொழிலாளர் குடும்பத்தவர்கள் வசித்து வந்த தற்காலிக வீடொன்று அதே தோட்டத்தின் அதிகாரியின் தலைமையில் கடந்த வார இறுதியில் தகர்த்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அக்குடியிருப்பில் குடியிருந்ததாகக் கூறப்படும் மூன்று குடும்பங்கள் இருப்பிடத்தை இழந்துள்ளன. இச்சம்பவம் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கண்முன்பாகவே இடம்பெற்றுள்ளதோடு, அவர்களது பிள்ளைகள் கதறி அழுத போதிலும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது பலவந்தமாக உடைத்து தற்காலிக குடியிருப்பு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.



**மாத்தளை ரத்தவத்தை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவமானது மனித உரிமையை மீறுகின்ற அப்பட்டமான செயல்!**

இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இச்சம்பவம் குறித்துக் கேள்வியுற்று சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த தோட்ட உட்கட்டமைப்பு நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், சம்பந்தப்பட்ட அதிகாரியைக் கடுமையாகக் கடிந்து கொண்டதுடன், அவரைப் பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பெருந்தோட்டத்துறை மக்கள் பிரதிநிதிகள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததுடன், இவ்விடயம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஒன்றிணைந்து சபை நடுவில் கோஷம் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக உடனடியாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர்கள் வலியுறுத்தியதுடன், இவர்களின் போராட்டத்தினால் பாராளுமன்றத்தில் பரபரப்பும் ஏற்பட்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரும் இவ்விடயம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தக் கோரியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன குறிப்பிடுகையில், ' உண்மையில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடாது. தோட்டத் தொழிலாளர் மூவர் சட்டவிரோதமாக 03 வீடுகளை அமைத்திருந்தனர். அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையின் போது தோட்ட முகாமையாளர் நேரடியாக இதில் தலையிட்டுள்ளார். தோட்ட நிர்வாகம் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்காமல், உதவி முகாமையாளர் நேரடியாக இதில் ஈடுபட்டுள்ளார். அவ்வாறு செயல்பட்டுள்ளமை முறையற்றது. இச்சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உதவி முகாமையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவருக்கு விடுமுறை வழங்கப்பட்டு அவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவத்தை அறிந்த உடனேயே 24 மணி நேரத்துள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்துள்ளார். அதன் போது நாம் அந்த தோட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோரையும் அந்த இடத்துக்கு அனுப்பினோம். அதனைத் தவிர மேற்படி சம்பவம் தொடர்பில் என்னுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துரையாடினர். தோட்ட மக்களுக்கு அவர்களின் உரிமையை பெற்றுக் கொடுக்க மறுப்பது பிரச்சினைக்குரிய விடயம். இதனால்தான், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, தோட்ட மக்களுக்கு பத்து பேர்ச் காணி வழங்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினோம். அதனை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்' என்றார்.



**தனியாரின் பராமரிப்பில் உள்ள பெருந்தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கான அடிப்படை வசதிகள் தோட்ட நிர்வாகத்தினால் செய்து கொடுக்கப்படுவதில்லை. அம்மக்கள் தமக்குத் தேவையான சில வசதிகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் அதற்கு இடமளிக்கப்படுவதில்லை!**

பெருந்தோட்டத்துறையில் உள்ள மக்களுக்குக் காணிகளை வழங்கும் விடயத்தில் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளபோதும், அதனை நடைமுறைப்படுத்துவதிலேயே தொடர்ந்தும் தடைகள் காணப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏழு பேர்ச் காணிகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்திலும் இதற்கான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பெருந்தோட்ட நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

பெருந்தோட்டங்கள் பல அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருந்தாலும் அவை நீண்டகால குத்தகையின் அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்ட பின்னர் அதில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடுவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதைப் பெருந்தோட்டத்துறை அமைச்சு பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக சில பெருந்தோட்ட நிறுவனங்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளாமல், காணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்தாமல் இருப்பதாக மலையகப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இருந்தபோதும் அரசாங்கத்துக்கு இதில் நேரடியாகத் தலையிட முடியாதிருப்பதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அது மாத்திரமன்றி தனியாரின் பராமரிப்பில் உள்ள பெருந்தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கான அடிப்படை வசதிகள் தோட்ட நிர்வாகத்தினால் செய்து கொடுக்கப்படுவதில்லை என்பதுடன், மக்கள் தமக்குத் தேவையான ஒருசில வசதிகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் அதற்கு இடமளிப்பதில்லையென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, கொள்கை அளவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த பெருந்தோட்டங்களுக்கு உரிய வலியுறுத்தலை அரசாங்கம் வழங்க வேண்டும்.

அரசாங்கத்தின் இந்தக் கொள்கைத் திட்டத்துக்கு ஒத்துழைக்காத பெருந்தோட்டங்களை அரசாங்கம் மீளக்கைப்பற்றி அவற்றை வேறு தரப்பினருக்கு வழங்க வேண்டும். அத்துடன், பெருந்தோட்டங்களில் பலமாகவுள்ள தொழிற்சங்கங்கள் இது விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். மக்களின் அடிப்படை வசதி மாத்திரமன்றி அவர்களின் சம்பளம் குறித்த விடயத்திலும் கவனம் செலுத்தப்பட்டு நீடித்துவரும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

பி.ஹர்ஷன்...

# விண்வெளி அறிவியலில் உச்சம் தொட்ட இந்தியா!

**உலகமே தற்போது இந்தியாவை வியந்து பார்க்கின்றது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அனுப்பியிருந்த சந்திரயான் விண்கலம் கடந்த புதனன்று நிலவின் தென்துருவத்தில் பத்திரமாகத் தரையிறங்கியதையடுத்து உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு பலமடங்கு உயர்ந்துள்ளது.**





அறிவியல்துறையில் உலக நாடுகள் அத்தனையையும் முந்திக் கொண்டு பெரும் சாதனை படைத்துள்ள இந்தியாவை இன்று உலக வல்லரசு நாடுகளே பாராட்டுகின்றன. ஏனெனில் நிலவின் முதுகுப்புறமான தென்துருவமானது இதுவரை காலமும் மர்மமாகவே இருந்தது. அது இருண்ட பகுதி மாத்திரமன்றி, கடும் குளிர் நிலவுகின்ற பகுதியுமாகும். அங்கு இதுவரை எந்தவொரு நாடும் விண்கலங்களை அனுப்பி வெற்றி கண்டதில்லை. அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. ஆனால் இந்தியா அதனைச் சாதித்துள்ளது.

சந்திரயான் 3 விண்கலத்தின் ரோவர் கடந்த புதனன்று மாலை பத்திரமாக நிலவில் இறங்கிய போது உலகமே எழுந்து நின்று வியப்புடன் பார்த்தது. இச்சாதனையை இந்தியா எப்படி தன்வசப்படுத்திக் கொண்டது என்பதுதான் அந்த வியப்புக்குக் காரணம் ஆகும்.

ரோவர் நிலவில் தரையிறங்கியதில் சில அடிப்படை விஷயங்களைப் பார்க்க வேண்டியது முதலில் அவசியம். சந்திராயன் 3 இல் பின்வரும் மூன்று முக்கியமான பாகங்கள் உள்ளன.

ப்ரோபல்ஷன் மொடியூல் என்பது சந்திராயன் ரொக்கெட்டின் தலப்பகுதியில் இருக்கும் மொத்த அமைப்பில் கீழ் உள்ள பகுதி ஆகும். சந்திராயன் 3 பூமியின் சுற்றுவட்டப்பாதையில் நிறுத்தப்பட்ட பின்னர் அதை நிலவை நோக்கி கொண்டு செல்ல, அவ்வப்போது பாதை மாற்ற பயன்படுத்தப்பட்ட சிறிய எஞ்சின்தான் இந்த ப்ரோபல்ஷன் மொடியூல்.

பூமியின் வட்டப்பாதையில் இருந்து நிலவில் இருந்து 100 கிமீ தூரம் உள்ள வட்டப்பாதை வரை சந்திராயன் 3 ஐ கொண்டு சென்றது இந்த ப்ரோபல்ஷன் மொடியூல்தான். அதில் திரஸ்டர்களுக்கு 'சார்ஜ்' கொடுப்பதற்காக சூரியப்படல் பனல் இருக்கும். இதில்தான் லேண்டர் பொருத்தப்பட்டு இருக்கும். அதன் உள்ளே ரோவர் இருக்கும்.

இதில் லேண்டர், ரோவர் தவிர்த்து ஷேப் Spectropolarimetry of Habitable Planet Earth (SHAPE) எனப்படும் அமைப்பும் உள்ளது. இது பூமியின் அளவு குறித்த ஆய்வை நிலவின் வட்டப்பாதையில் இருந்து மேற்கொள்ளும்.

சந்திரயான் 3 விண்கலத்தில் விக்ரம் (சமஸ்கிருதத்தில் 'வீரம்') என்ற பெயரிடப்பட்ட லேண்டர் உள்ளது. உள்ளே இருக்கும் பிரக்யான் ரோவரை நிலவில் களமிறக்க இதுதான் உதவியது. இது தரையிறங்கும் பகுதியில் வெப்ப கடத்துத்திறனைப் பதிவுசெய்யவும் மற்றும் நிலநடுக்கங்களை உணரவும் உதவும். இதில் நான்கு கால் பகுதிகள் இருக்கும். இது 800 நியுட்டன் சக்தியைக் கொடுக்கக் கூடியது.

இது விக்ரமில் இருந்து விலகிச் சென்றாலும் எல்லா நேரமும் விக்ரமின் கண்பார்வையில் இருக்கும். நிலவின் தரைப்பகுதி, மண்பகுதியை இது ஆய்வு செய்யும். இதில் சூரிய வெளிச்சத்தை, குளிரை தாங்க தங்க நிறத்தில் மூடப்பட்ட பகுதி இருக்கும். இது 14 நாட்கள் இயங்கும். சூரியசக்தியில் இயங்க கூடியது.

சந்திரயான் 3 தரையிறங்கிய பின்னர் சந்திரயான் 2 ஓர்பிட்டர் மூலம் சந்திரயான் 3 இன் விக்ரம் லேண்டருக்கு 'முன்னேறிச்செல்' என்ற சிக்னல் அனுப்பப்பட்டது. இது விக்ரம் லேண்டர் இறங்கி சரியாக 4 மணி நேரம் கழித்து புழுதி எல்லாம் அடங்கிய பின்னர் அனுப்பப்பட்டது. விக்ரம் லேண்டரால் ஏற்பட்ட புழுதி ரோவரின் மீது படியாமல் இருக்க இந்தக் காலநேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதையடுத்து ரோவருக்கு ஓர்பிட்டர் கொடுத்த சிக்னலை லேண்டர் பகிர்ந்து கொண்டது. விக்ரமின் ஒரு பக்க பனல் விரிவடைந்தது, பிரக்யான் ரோவர் வெளியே வருவதற்கு ஒரு சரிவை உருவாக்கியது.

பிரக்யானின் சக்கரங்களில் மூவர்ணக் கொடி மற்றும் இஸ்ரோவின் லோகோ பொறிக்கப்பட்டுள்ளன. விக்ரமின் வயிற்றுப் பகுதியில் இருந்து பிரக்யான் வெளியே வந்து, லேண்டரில் இருக்கும் பனல் வழியாக சரிந்து ரோவர் வெளியே வந்தது. இது ஒரு சின்ன சோதனைக்கூடம் போலவே செயல்படும். இது நிலவின் மேல்பகுதி ஆய்வு, மாதிரி ஆய்வு, மாதிரி எடுத்து வைத்துக்கொள்வது, சில புகைப்படங்களை பூமிக்கு அனுப்புவது, உள்ளே இருக்கும் இரசாயனப் பதார்த்தங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யும். இதில் மொத்தம் 6 சக்கரங்கள் இருக்கும்.

**நிலவில் சந்திரயான் தரையிறங்கிய வேளையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்களது வருடக்கணக்கான உழைப்புக்கு கிடைத்த வெற்றி அதுவாகும். அவர்களில் அரைவாசிப் பேர் பெண் விஞ்ஞானிகள் என்பது இந்தியாவுக்கு மற்றொரு பெருமை. இந்தியா பால்சமத்துவம் பேணும் நாடு என்பதையும், பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நாடு என்பதையும் சந்திரயான் 3 வெற்றி உறுதிப்படுத்தியுள்ளது**



லேண்டர் தொகுதியானது 26 கிலோ ரோவர் உட்பட 1752 கிலோ எடை கொண்டது. சந்திரயான் 3 திட்டத்திற்கு இஸ்ரோ மூன்று முக்கிய குறிக்கோள்களை நிர்ணயித்துள்ளது. லேண்டரை சரியாக நிலவில் தரையிறக்குதல், சந்திரனில் ரோவரின் நகரும் திறன்களைக் கவனித்து கண்காணித்தல். நிலவின் இரசாயன மற்றும் இயற்கை கூறுகள், மண், நீர் பண்புகளை ஆய்வு செய்தல் ஆகியனவே அவையாகும்.

நிலவின் தென்பகுதிக்கு செல்வது தொடர்ந்து சவாலான விஷயமாகவே இருந்த நிலையில், உலகின் எந்த நாடும் நிலவின் தென்பகுதிக்கு செல்லாத நிலையில் இந்தியாவின் சந்திரயான் 3 நிலவில் வெற்றியாக கால்பதித்து உள்ளது. நாசா மற்றும் ஐரோப்பிய நாடுகளும், சீனாவும் கூட நிலவின் தென்பகுதிக்கு செல்லவில்லை. நிலவின் தென்பகுதிக்குச் செல்லும் நாடுகளின் முயற்சியும் கூட தொடர்ந்து தோல்வியை சந்தித்து வந்தது. நிலவின் தென்துருவத்தை நெருங்க முயன்ற போது கூட விண்வெளித் திட்டங்கள் அடுத்தடுத்து தோல்வி அடைந்தன.



**நிலவின் தென்துருவத்தைத் தொடுகின்ற முயற்சியில் உலகின் அத்தனை வல்லரசுகளும் தோல்வியடைந்த நிலையில், அனைத்து நாடுகளையும் முந்திக் கொண்டு சாதனை படைத்த பாரதம்!**

ரஷ்யாவும் லூனா 25 திட்டத்தை விண்ணுக்கு அனுப்பி தோல்வி அடைந்தது. கடந்த 50 வருடங்களில் நிலவிற்கு ரஷ்யா அனுப்பிய முதல் ஆய்வு திட்டம் லூனா 25. இந்த லூனா 25 லேண்டர் நிலவில் உயரும் குறைக்கும் நேரத்தில் அப்படியே கட்டுப்பாட்டை இழந்து விழுந்துள்ளது.

தென்துருவத்தில் இந்த 800 கிலோ எடை கொண்ட லூனா 25 தரையிறங்கி சாதனை படைக்க இருந்தது. அதாவது கணக்குப்படி இந்த லூனா 25 சந்திரயானுக்கு முன்பாகவே தரையிறங்கி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்னரே உயர குறைப்பு செய்யும் போது அது கீழே விழுந்துவிட்டது.நிலவில் இருந்து ஒருவருடம் ஆய்வு செய்வது தான் லூனா 25 இன் திட்டம் ஆகும்.

இந்தியாவின் சந்திரயான் 3 விக்ரம் லேண்டர் நிலவில் இறங்கும் முன்பதாக வேகமாக இறங்க வேண்டும் என்று லூனா 25 அவசரமாகவே நிலவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் தோல்வியைத் தழுவி விட்டது.

நிலவின் தென்பகுதியை தொட்ட முதல் நாடு என்ற பெயர் இருக்க வேண்டும் என்று ரஷ்யா நினைத்தது. நிலவிற்கு மனிதரின் பொருளை இறக்கிய முதல் நாடு ரஷ்யா என்பதால் தென்துருவத்தில் தங்கள் பொருளே முதலில் இறங்க வேண்டும் என்று ரஷ்யா நினைத்தது. இதன் காரணமாகவே சந்திரயான் 3 அனுப்பப்பட்ட பின்னர் அவசர அவசரமாக லூனா 25 அனுப்பப்பட்டது.

ஆனால் உலக அறிவியலில் இந்தியாதான் முதலில் சாதித்து விட்டது. நிலவின் தென்துருவத்துக்கு முதலில் விண்கலத்தை அனுப்பிய நாடாக சாதனை படைத்துள்ளது பாரதம்.

நிலவில் சந்திரயான் தரையிறங்கிய வேளையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்களது வருடக்கணக்கான உழைப்புக்கு கிடைத்த வெற்றி அதுவாகும். அவர்களில் அரைவாசிப் பேர் பெண் விஞ்ஞானிகள் என்பது இந்தியாவுக்கு மற்றொரு பெருமை. பால் சமத்துவம் பேணும் நாடு என்பதையும், பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நாடு இந்தியா என்பதையும் சந்திரயான் 3 வெற்றி உறுதிப்படுத்தியுள்ளது.

சந்திரயான் 3 நிலவில் தரையிறங்கிய வேளையில் பிரதமர் நரேந்திர மோடி தென்னாபிரிக்காவில் இருந்து அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். அவர் இந்திய தேசியக் கொடியை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன், உலக மக்களுக்காக உரையொன்றையும் ஆற்றியிருந்தார். உலகமே வியந்து பார்த்த இக்காட்சியை வெற்றியுடன் அறிவித்தார் நரேந்திர மோடி.


எஸ்.சாரங்கன்...



ஜெனரல் கமல் குணரத்னவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தா கோல்ஃப் எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் வெற்றியைத் தனதாக்கியது. கீழ்ப்பிரிவு சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பிரிவு ப் போட்டியில் ஆனந்தா கல்லூரியின் ரோனல் ஸ்கோஃபீல்ட் வெற்றிபெற்றார்.

# 'இருளின் ஓசை' குறும்படம் ஆரம்பம்






'இருளின் ஓசை' என்ற பெயரில் குறும்படம் ஒன்றை தயாரிப்பதற்கான ஆரம்ப பூஜை, கடந்த புதனன்று கொழும்பு11, செட்டியார் தெருவிலுள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத் தில் நடைபெற்றது. தலைநகரில் கடந்த 43 ஆண்டுகளாக இளம் கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கு களம் அமைத்து அவர்களை ஊக்குவித்து வரும் புதிய அலை கலை வட்டம் உருவாக்கியுள்ள இளைஞர் அமைப்பின் ஊடாக இந்த முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய அலை கலை வட்டத்தின் தலைவர் சண்முவின் வழிகாட்டுதலில் இந்த ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.
இதில் பிரதம அதிதியாக புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகரும் மூத்த ஊடகவியலாளருமாக ராதா மேத்தா கலந்து கொண்டார். கொழும்பு நகரில் வாழும் இளம் சந்ததியினருக்கு முன்னோடி முயற்சியாக உருவாகும் இந்த குறும்படத்துக்கான கதை, வசனம் மற்றும் இயக்கம் ஆகியவற்றை கணேசலிங்கம் ரித்தியன் ஏற்றுள்ளார். முற்றிலும் இளம் நடிக, நடிகைகள் நடிக்க விருக்கும் இக்குறும்படத்தின் படப்பிடிப்பு வரும் சனியன்று ஆரம்பமாகின்றது. இதில் இணைந்து கொள்ள விரும்பும் இளம் ஆர்வலர்கள் 0776274099 என்ற அலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

## சதுரங்கத்தின் புதிய அத்தியாயம்;

# பிரக்ஞானந்தா



சதுரங்க வரலாற்றில் இந்தியாவின் பக்கங்கள் விஸ்வநாதன் ஆனந்தோடு முடிந்துவிடப் போவதில்லை என்பதை நிரூபித்திருக்கிறது உலகக் கோப்பை செஸ் தொடரில் பிரக்ஞானந்தாவின் செயல்திறன். இறுதிப் போட்டியில் அவர், சாதாரண வீரரிடம் ஒன்றும் வீழவில்லை. 10 ஆண்டுகளுக்கும் மேலாக சதுரங்க கட்டங்களை தன்னுள் அடக்கி வைத்து உலகின் நம்பர் 1 வீரராக கோலோச்சும் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனிடமே மகுடத்தை இழந்துள்ளார்.

இருப்பினும், முன்னெப்போதும் இல்லாத வகையில் மகத்துவத்திற்கு நெருக்கமாக இருக்கிறார் பிரக்ஞானந்தா. பாகுவில் முடிவடைந்த ஃபிடே உலகக் கோப்பையில் அற்புதமான செயல்திறனை பிரக்ஞானந்தா வெளிப்படுத்தியதன் மூலம் நடப்பு உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரெனுக்கு எதிராக மோதும் போட்டியாளரைத் தீர்மானிக்கக்கூடிய கேண்டிடேட்ஸ் போட்டிக்கு அவரை அழைத்துச் சென்றுள்ளது. முக்கியத்துவமான இந்த தொடர் அடுத்த ஆண்டு கனடாவில் நடைபெறுகிறது. உலக செஸ் அரங்கில் தனது அடுத்த பாய்ச்சலுக்கு தயாராகி உள்ள பிரக்ஞானந்தாவின் பயணமானது நான்கரை வயதில் பல அரிய சாதனைகளுடன் தொடங்கியது. ஒரு கட்டத்தில் விஸ்வநாதன் ஆனந்த் வழிகாட்டியாக மாற பிரக்ஞானந்தாவின் பயணம் நிலையான ஏற்றம் கண்டது.

7 வயதில் தேசிய அளவிலான பட்டத்தை வென்றார். தொடர்ந்து 10 வயதில் சர்வதேச மாஸ்டரான அவர், அடுத்த 2 ஆண்டுகளில் இந்திய கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றார். 2019ம் ஆண்டின் பிற்பகுதியில், 14 வயது மற்றும் 3 மாதங்களில் 2600 என்ற இஎல்ஓ மதிப்பீட்டை அடைந்தார். கொரோனா தொற்று காலக்கட்டத்தில் இணையதள செஸ் போட்டிகளில் கவனம் செலுத்தினார். 2021ல் மெல்ட்வாட்டர் சாம்பியன்ஸ் டூர் போட்டியில் முன்னணி வீரர்களான செர்ஜி கர்ஜாகின், டீமோர் ராட்ஜபோவ் மற்றும் ஜான்கிரிஸ்டோஃப்டுடா ஆகியோரை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸ் ரேபிட் போட்டியில் கார்ல்சனை, பிரக்ஞானந்தா வீழ்த்திய போதுதான் உலகத்தின் பார்வை அவர் பக்கம் திரும்பியது. இருப்பினும் கிளாசிக்கல் வடிவத்தில் பிரக்ஞானந்தாவின் திறன் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்தன. அவற்றுக்கு அவர், தற்போது பாகுவில் நடைபெற்ற உலகக் கோப்பையின் வாயிலாக பதில் கொடுத்துள்ளார்.

மேஜை முன் இருக்கும் போது பிரக்ஞானந்தாவின் அமைதியான நடத்தையானது அவருக்குள் இருக்கும் நம்பிக்கையான மற்றும் ஆக்ரோஷமான வீரரை மறைக்கிறது. பொதுவாகவே செஸ் விளையாட்டில் முகத்தில் உணர்ச்சிகளை காட்டக்கூடாது என்பது அடிப்படை விதி. ஆனால், வெற்றி பெற்றாலும் கூட பிரக்ஞானந்தா, அதனை தலைக்கு ஏற்றிக்கொள்வது இல்லை.

உலகக் கோப்பை தொடரில் அவர், சிறந்த போர்க் குணங்களை வெளிப்படுத்தியுள்ளார். கால் இறுதி ஆட்டத்தில் உலகின் நம்பர் 2 வீரரான ஹிகாரு நகமுராவுக்கு எதிரான ஆட்டம் இதற்கு சாட்சியாக அமைந்தது. அரையிறுதியில் உலகின் நம்பர் 3 வீரரான ஃபேபியானோ கருனாவுக்கு எதிராக, அவரது தற்காப்பு திறன்கள் முன்னணியில் இருந்தன.

உலகக் கோப்பை தொடரின் இறுதி ஆட்டத்தில் பிரக்ஞானந்தாவுக்கு கிடைத்த அனுபவம் அவர், தன்னை அடுத்த ஆண்டு நடைபெறும் கேண்டிடேட்ஸ் தொடருக்கு மேலும் பட்டைதீட்டிக் கொள்ள உதவும். அவர், தனது 18 வயதிலேயே செஸ் உலக அரங்கில் நிறைய சாதித்துள்ளார். அவரை வழிநடத்த ஆனந்த், பயிற்சியாளர் ரமேஷ் போன்ற சிறந்த ஆளுமைகள் உள்ளனர். இதனால் உலக சாம்பியன் பட்டத்தை பிரக்ஞானந்த எட்டிப்பிடிக்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை என்றே தோன்றுகிறது.



தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

077438169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும், விற்பதற்கும். 0777282147. 052211

### 208 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு/குத்தகைக்கு

0777282147 கண்டி நகரிற்கு 500 மீட்டர் தூரத்தில் சகல வசதிகளுடனான வீடுகள் 3+4 20, 15, 14, 10 பேர்ச். 70 மில்லியனுக்குக் குறைவு. 0777438164. 052239

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

வத்தளை தொழிற்சாலை அலுவலக வேலைவாய்ப்பு, A/ L வணிக பிரிவில் தேர்ச்சி பெற்ற கணனி அறிவு மற்றும் EXCE L அறிவுள்ள பெண் காசாளர் தேவை. நேர்காணலுக்கு கீழ் உள்ள முகவரிக்கு சமூகமளிக்கவும். No. 18, Weliamuna Road, Hekitta, Wattal a, Number: 0766200300, Email: hr@cliftextiles.com 053760

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதி உரிமம் சகிதம் சாரதி டிலிவரி வாகனத்திற்கு இரத்மலானை, மொரட்டுவ, கல்கிசை சுற்றுப் புறத்தில் தேவை. சம்பளம் 50, 000/ = பெற்றுக் கொள்ளலாம். விசாரணைகளுக்கு நெஸ்கோ என்டர்பிரைசஸ், இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 048078

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

அம்பிட்டிய வீதி, கண்டி வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு விருப்பமான 60 வயதிற்குக் குறைந்த ஆரோக்கியமான பெண் தேவை. சாதாரண வீட்டு வேலைக்காக சிங்களம் கதைக்கக்கூடிய, சுத்தம் மற்றும் ஒழுங்குகள் அவசியம், நோயாளிகள்/ வயோதிபர்களை கவனிக்கும் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை. மாதாந்த சம்பளம் ரூ. 40, 000 - 60, 000 இற்கிடையில். தரகர்கள் வேண்டாம். 0776278650. 052878

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு03இல் அமைந்துள்ள சர்வதேச உணவக நெட்வர்க் இற்கு அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் தேவை. Supervisor, Waiter, Cook, Kitchen Helpers நேர்முகத் தேர்வு கிழமை நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 5 மணி வரை நடைபெறும். இல. 315, ஆர்.ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 03. 0 772241 9 14. 053587

### 325 தொழில்துறை பொது

கொழும்பு தொட்டலங்க சேதவத்த பாதையிலுள்ள பேக் தொழிற்சாலை நிறுவனத்திற்கு க.பொ.த. சா/ த பரீட்சையில் சித்தியுடன் கணனியில் கணக்கிடல் செய்யும் கொழும்பு புறநகரிலுள்ள ஆண்/ பெண் ஆகியோருக்கு வேலையுண்டு. சம்பளம் நேர்முகப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும். 0777106502, 0740327786. 052301

தங்கொட்டுவ, போலவத்த வயோதிபர் பாதுகாப்பு நிலையத்தில் வயோதிபர்களை கவனித்துக் கொள்ள பயிற்சி பெற்ற பெண் பராமாிப்பாளர் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். சம்பளம் ரூ. 30, 000 / =. தொடர்பு 0312 265 17 7, 0773 268 91 5. 053107

## பொது

### 432 நானாவிதப் பொருட்கள்

உங்களது வியாபாரத்திற்குத் தேவையான சீனாவில் அல்லது இந்தியாவில் இருந்து தருவிப்பதற்கு WhatsApp அழையுங்கள். 0706723953. 053551

## காணி/தோட்டம்

### 615 வீடு சொத்து சேவைகள்

எமது நிறுவனத்தில் 15 வருட நம்பிக்கையான சேவையை வழங்கி நாடு பூராகவும் உள்ள உங்களது சொத்துக்களை தகைமையுள்ள அனுபவமுள்ள நம்பிக்கையான மதிப்பீட்டாளரின் கீழ் மதிப்பீடு செய்து மிக அதிக விலைக்கு விரைவாக விற்பனை செய்வதற்கு பொறுப்பேற்கப்படும். அழையுங்கள் 0777120992, 0718184096. lankaproperty.lk@gmail.com 053517

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா நகர மத்தியில் குடியிருப்புக்கு மிகவும் பொருத்தமான சகல வசதிகளுடனான சிறந்த காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 11.50. 0706460360, 0717590601. 049800

களுபோவில 20 பேர்ச் காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு. டி சில்வா வீதியில் அமைந்துள்ளது. வைத்தியசாலைக்கு மிக அருகில். விலை 140 (மில்.) (தரகர்கள் வேண்டாம்). 0776492313, 0776310866. 047409

கொள்ளுப்பிட்டியில் முஹந்திரம் வீதி 3 அறைகள், 2 குளியலறையுடன் முழுமையான வீடு விற்பனைக்கு. 0775262362. 050434

நாரஹேன்பிட்டி, எல்விட்டிகல மாவத்த 30 பேர்ச் நேஷன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 300 மில்லியன். 0773427535. 053604

வீடு, காணி விற்பனைக்கு அல்லது கூலிக்கு எடுத்துக் கொடுப்போம். கைவசம் வீடு காணி உண்டு. 0775141889. 053846

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 35.8 மில்லியன். 0773427535. 053596

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, திகன வீதி 12.1 பேர்ச் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட அரைவாசி முடிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 9.7 மில்லியன். 0773427535. 053601

கண்டி, ஹுலுகங்க 157.7 பேர்ச் நேஷன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13.5 மில்லியன். 0773427535. 053598

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவர் காட்சிகளைக் கொண்ட குளிர்ச்சியான மலைநாட்டின் சுகத்தை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான பாதைக்கு முகப்பாக சிறந்த வர்த்தக மற்றும் குடியிருப்பு 100 காணித்துண்டுகள். கீழ்ப்பகுதி 25 இலட்சம். சிறந்த கழிவுடன் வட்டி இன்றிய தவணைக் கட்டணம். அழையுங்கள் சிரிபெல லேண்ட்ஸ் 0702484848. 053608

ஹட்டன் நகரிற்கு அருகில் 10 பேர்ச் கொண்ட பெறுமதியான காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று சுற்று மின்சாரத்துடன். முழுத் துண்டும் 25 இலட்சம். தவணைக் கட்டணம் மற்றும் விசேட கழிவுடன் உங்களது காணியை இன்றே ஒதுக்கிக் கொள்வதற்கு அழையுங்கள் சிரிபெல லேண்ட்ஸ் 0702484848. 053606

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 26.2 மில்லியன். 0773427535. 053605

திஸ்ஸமஹாராம, கதிர்காம வீதி 171 பேர்ச் நேஷன் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2023.09.10 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு02 என்ற முகவரிக்கு ஆகக் குறைந்த கோரிக்கை 34.2 மில்லியன். 0773427535. 053592

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

Bambalapitiya இல் பிரபல பாடசாலைக்கு அண்மித்ததாக தளபாடங்களுடன் கூடிய மூன்று அறைகள் கொண்ட புதிய நவீன வீடு 1ம் மாடியில். முதல் தனி குடியிருப்பாளராக வாடகைக்குண்டு. மாத வாடகை Rs. 100, 000/ = முற்பணம் 600, 000/ =. 0714 275 38 4. 053866

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகள்

வயது வந்தவர்களுக்குத் தகுந்த ஜோடி சேர்த்து கொடுப்போம். மணமகன், மணமகள் இருவரும் தொடர்பு கொள்ளவும். 0812109406, 0775141889. B205529

### மணமகன்

39 வயதுடைய 5'7" உயரமுடைய பொது நிறமான DOUBLE POST GRADUATED CIMA & CIM தகைமையுடைய முகாமையாளர் மகனுக்கு தொழில்சார் தகைமையுடைய மணப்பெண்ணொருவரை இளைப்பாறிய முஸ்லிம் பெற்றோர் தேடுகின்றனர். மின்னஞ்சல்: alem44704@gmail.com G205141



வாரமஞ்சரி
திருமண சேவைகள்
classified@lakehouse.lk
077 7 278 948 | 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/343

வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்
330/- ரூபா
E-Mail :- classified@lakehouse.lk
011 2 429 383 / 011 2 429 347

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ராகம, வெலிசர வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கு வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைப் பெற்றுக்கொள்ளல்

1. வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவிற்கு (CEFAP Unit) பின்வரும் வெடி பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மட்டும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| File No. | Description | QTY |
|---|---|---|
| CFE AP/PRT/10/2022 | Cartridges 12SG | 125,000 Nos |
| | Cartridges 12/4 | 100,000 Nos |
| | Cartridges 16/SG | 12,500 Nos |
| | Cartridges 16/4 | 12,500 Nos |

2. இதில் ஆர்வம் காட்டும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 3ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3. முகவரி:

கவனத்திற்கு பணிப்பாளர், வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு

தொலைபேசி இல. 0112958227/0112955514
தொலைநகல் 0112955515
மின்னஞ்சல் director.cefap@gmail.com

4. ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து ஒரு விலைமனுவிற்கு மீளளிக்கப்படாத 4,500.00 ரூபா (நான்காயிரத்து ஐந்நூறு ரூபா) கட்டணத்தை கடற்படை தளபதியின் 701344ஆம் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

5. 2023 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படைத் தலைமையகம்.**

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## NMRA இன் சி.சி.டி.வி. கெமரா அமைப்பின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தலின் பெறுகை

1) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) அதன் இல. 42, ராமநாயக்க கட்டிடத்தில் சி.சி.டி.வி. கெமரா அமைப்பை நிறுவுவதற்கு அங்கீகாரம் பெற்ற வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2) தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3) ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் இலங்கை வங்கி (ரீஜன்ட்ஸ் வீதிக் கிளை) கணக்கு இலக்கம் 78088835 (தலைவர்/NMRA) இற்கு 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து 2023.08.28 ஆம் திகதி தொடக்கம் 2023.09.15 ஆம் திகதி வரை மு.ப. 09.30 தொடக்கம் பி.ப. 03.00 வரை வேலை நாட்களில் கொழும்பு 02, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, இல. 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, கணக்காளரிடம் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
4) விலைமனு 91 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
5) விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு NMRA புதிய கட்டிடத்தின் (இல. 47, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02) கேட்போர்கூடத்தில் 2023.09.08 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இதில் பங்கேற்க அழைக்கப்படுகின்றனர்.
6) ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 011-230 31 57 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.30 வரை வேலை நாட்களில் கொழும்பு 02, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, இல. 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
7) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணத்தின் தொகுதியை 2023.09.18 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைமை நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இல. 47, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொழும்பு 02, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, இல. 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, கணக்கு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "சி.சி.டி.வி கெமரா நிறுவுதல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8) அனைத்து விலைமனுக்களும் 119 நாட்களுக்கு செல்லுபடியானதாக 120,000.00 இலங்கை ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
9) தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கொழும்பு 02, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, இல. 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, கணக்கு பிரிவில் 2023.09.18 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
10) விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர்.

**தலைவர்**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

### 2023/2024 ஆம் வருடங்களுக்குத் தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்

**ஒப்பந்த இல.: SU/GA/GS3/2023**

1. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2023/2024 வருடங்களுக்கு தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. உத்தேச சேவைக் காலப்பகுதியானது 365 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கு குறிப்பிட்ட வருடத்திற்காக தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக **பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்ட உரிமத்தைக்** கொண்டுள்ள விலைமனுதாரர்களே விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வர்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக நிருவாக கிளையின் உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 045-2280027 மற்றும் பின்வரும் முகவரியில் 2023.08.28ஆம் திகதியிலிருந்து 2023.09.18ஆம் திகதி வரையுமான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2023.08.28ஆம் திகதியிலிருந்து 2023.09.18ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக இருபதினாயிரம் ரூபாவை (20,000.00 ரூபா) செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2023.09.05ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தரின் சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். இக்கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்கள்/ விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் அனைவரும் சமுகமளிக்கும்படி அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
8. 2023.09.19ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுவை தாங்கி வரும் முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2023/2024 வருடங்களுக்கு தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட பின்னர் பின்வரும் முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
9. இறுதித் தீர்மானம் திணைக்கள பெறுகைக் குழுவினாலேயே மேற்கொள்ளப்படும்.
10. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் ஆவணத் தரவில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:**

**விலைமனுக்கோரல் ஆவணங்களின் பரீட்சித்தல், விலைமனுக்கோரல் ஆவணங்களுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களை ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கானது.**

உதவிப் பதிவாளர்/நிர்வாகம்
நிர்வாகக் கிளை
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
த.பெட்டி 02
பெலிஹுல்ஓயா.

**விலைமனுக்களை திறப்பதற்கானது:**

பதிவாளரின் அலுவலகம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
த.பெட்டி 02
பெலிஹுல்ஓயா.

**தலைவர்/திணைக்கள பெறுகைக் குழு**
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுல்ஓயா.

**திகதி: 2023-08-27**

The Housewives' companion
Classifieds on
Daily News

# BUDGET ADZ

It suits your budget


0777 394 679 | 070 653 33 88

MITSUBISHI • NISSAN • LANDROVER • TOYOTA JEEPS DOUBLE CABS
RECONDITIONED / BRAND NEW ACCESSORIES BODY PARTS
071-7 808 043

S N TRADING COMPANY (PVT) LTD

070 524 70 45

077 7 369 080

COUNTRY STONES
PAVING & WALLING
THROUGH COLOUR PRODUCTS - CHILD FRIENDLY
SLIP RESISTANT - TERMITE PROOF - ALL WEATHER
COLOURCON
0773 660673 COLOURCON.COM


CHEFF SCHOOL
THE BEST TRAINING CENTER IN COLOMBO
DIPLOMA IN COOKERY
DIPLOMA IN BAKING PASTRY
International Diploma recognized all over the world
best opportunity to get foreign jobs
CONTACT US ON WHATSAPP
+94 77 914 4219

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOUR STOREY WITH SIX APARTMENTS BUILDING AND 9.5 PERCH BARE LAND
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814


NUGEGODA JUNCTION
BARE LAND FOR IMMEDIATE SALE
off Stanly Thilakarathne Mawatha on Railway avenue
15 perches

ARIYARATHNE CONSTRUCTIONS
WARE HOUSE CONSTRUCTION
Polycarbonate
0777 24 23 19 / 0711 24 23 19

We are Looking for
STUDENT/ MIGRATION COUNSELLORS
FOR IMMEDIATE PLACEMENTS
Please forward your CV to
RELIANCE INTERNATIONAL EDUCATION & MIGRATION SERVICES (PVT) LTD

INJECTION MOLDING 650MT MACHINE
Asian plastic - Made in Taiwan
Suitable for Furniture Manufacturers

FOR SALE
Please call for more details
0773961438
0740125902

ARAUWALA
Maldeniyawatta - Rathmaldeniya
Located in calm environment,
3 roomed house with 2 A/C's,
Living room, Bathroom,
Servant bathroom, Garage,
Additional spaces for four vehicles,
Jack tree, Coconut, King coconut
with large garden,
Surrounded by a parapet wall
with a Roller gate.
Monthly rent Rs.60,000,
Key money for 3 months.
Please reserve a time for inspection
0752 000 000
No brokers

Artificial Green Wall & Turf

Sky Plants
Tel: 0114 845 835 0777 257 486


## Advertise Here

BUDGET ADZ

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368

## BUDGET ADZ போட்டோ குறும் விளம்பரம்






Looking for Your Life Partner..,
Marriage Proposals
Pay online and save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067

பொருளாதார அரசியல்

# பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்கு வந்துவிட்ட பின்னரும் தவித்த முயல் அடிக்கும் வங்கிகளும் நிதி நிறுவனங்களும்



கலாநிதி
**எம்.கணேசமூர்த்தி**
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

2022ஆம் வருடம் இலங்கையில் பொருட்கள் சேவைகளின் சராசரி விலைகள் சுமார் 70 சதவீதம் வரையில் அதிகரித்திருந்ததாக அரசாங்கத்தின் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் கூறியது. ஆனால் அதேகாலப்பகுதியில் இலங்கையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் 115 சதவீதம் வரையில் அதிகரித்தாக ஜோன் ஹொப்கின்சன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் பணவீக்க குரு என அழைக்கப்படுபவருமான ஹெங்கே குறிப்பிட்டார். நாம் நடைமுறையில் கண்டு அறிந்தவரையில் 1000 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு கிலோ பால்மா 3500 ரூபா வரையிலும் 117ரூபாவாகக் காணப்பட்ட ஒரு லீட்டர் பெற்றோல் 450 ரூபாவாகவும் 1350ரூபாவுக்கு விற்கப்பட்ட எரிவாயு சிலிண்டர் 5000 ரூபா வரையிலும் (கள்ளச் சந்தையில் 10000 வரையிலும் விற்கப்பட்டது வேறு கதை) மூன்று மடங்காக அதிகரித்தமை மறக்கக் கூடிய விடயமா? எவரோ செய்த பாவத்துக்காக சாதாரண சனம் அனுபவித்த, அனுபவித்துவரும் துன்பங்களும் துயரங்களும் கொஞ்ச நஞ்சமா? இவ்வாறு பொருட் தட்டுப்பாடும் செயற்கையாக வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட டொலர் தட்டுப்பாடும் பண்டவிலைகளை உதைத்து உயரத்தில் தள்ளியமை விந்தையல்ல. விலை அதிகரிக்கிறபோது இலங்கை ரூபாவின் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடையும். விலையதிகரிப்பு 70 சதவீதம் என்றால் 1000 ரூபா பெறுமதியான நாணயத்தாளின் உண்மையான பெறுமதி வெறும் 300 ரூபா மாத்திரம் தான். இந்நிலையில் இலங்கை ரூபாவின் விலையை அதிகரித்தால் தான் அதன் பெறுமதி வீழ்ச்சியடைவதைத் தடுத்து நிறுத்தலாம். பொருட்கள் சேவைகளுக்கு விலை இருப்பது போல பணத்தின் விலையைத்தான் நாம் வட்டிவீதம் என்கிறோம். பொருட்கள், சேவைகளின் விலைகள் துரிதமாக அதிகரிக்கும் காலத்தில், பணத்துக்கு பெறுமதி குறைவதால், மக்கள் பணத்தை வைப்புகளாக வைத்திருப்பதைக் கைவிட்டு, காணி, பூமி, வீடு,வாசல் தங்கம், வெள்ளி போன்ற அசையும் மற்றும் அசையாத ஆதனங்களில் தமது சொத்துகளை வைத்திருக்க விரும்புவர். வங்கிகளில் வைப்புச் செய்யவோ வட்டி ஈட்டித்தரும் ஏனைய முதலீடுகளையோ மேற்கொள்ளவோ விருப்பம் இருக்காது. ஏனென்றால் அதன் மூலம் கிடைக்கும் பணத்தின் பெறுமதி படிப்படியாகக் குறைந்த செல்லும். ஆகவே வங்கிகளில் வைப்புகளை வைத்திருப்பவர்கள் தமது வைப்புகளை மீளப்பெறுவர். இதனைத் தடுக்க வேண்டுமாயின் நாட்டின் வட்டி வீதங்களை அதிகரித்தால் மட்டுமே சாத்தியப்படும். இலங்கையில் மத்தியவங்கி வட்டி வீதங்களை மிகக் கூடியளவுக்கு அதிகரிக்க, இதுவே முக்கிய காரணம். மறுபுறம் கடன் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில் வட்டிவீதம் அதிகரிக்கும் போது, அது மிகுந்த செலவு கூடியதாக ஆகும். இதனால் கடன் வாங்கிச் செலவழிப்பவர்களுக்கும், கடன் வாங்கி முதலீடு செய்பவர்களுக்கும் இப்போது அது செலவு மிக்கதாக அமையும். நாட்டில் மக்கள் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் அளவும் தனியார் முதலீட்டாளர்கள் கடன் வாங்கி முதலீடுகளை மேற்கொள்வதும் குறையும். ஒட்டு மொத்தமாக நாட்டின் கேள்விப்பக்கம் சுருங்கும். அதனால் பொருளாதார வளர்ச்சி குறையும் எதிர்க்கணியமாகவும் மாறும். இலங்கை அரசாங்கம் பணவீக்கத்தைக் குறைப்பதற்காக வட்டிவீதத்தை அதிகரித்து பொருளாதாரத்தை சுருங்கச் செய்துள்ளது. 2022ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 7.8 சதவீத வீழ்ச்சியையும். இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 11.5 சதவீத வீழ்ச்சியையும் அடைந்திருக்கிறது. இப்போது ஆகஸ்ட் மாத இறுதிக்காலப்பகுதியாகி விட்டது. இன்னும் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான இரண்டாம் காலாண்டுக்குரிய வளர்ச்சித் தகவல்கள் வெளியிடப் படவில்லை. அது மட்டுமல்லாமல் மிகக் கடுமையான வரிக் கொள்கைகள் மக்களின் வருமானத்தின் பெரும் பகுதியை உறிஞ்சிக்கொண்டுள்ளது. முன்னர் தமது குடும்பத்தின் தேவைகளுக்காக செலவழித்தபணத்தை இப்போது வரியாக செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால் மக்கள் பொருட்கள் சேவைகளை முன்பு போல வாங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. ஒரு புறம் விலைகள் அதிகரித்து இடியாக இறங்கியது மறுபுறம் அரசாங்கத்தின் வரிகள் அடுத்த இடியாக இறங்கி மக்களின் செலவிடக்கூடிய வருமானத்தில் ஒன்றுமே மிஞ்சவில்லை என்னும் அளவுக்கு குறைத்து விட்டுள்ளது. அதனால் பொருள்கள் சேவைகள் மீதான மக்களின் கேள்வி வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்துச் செல்லும் வேகமாகிய பணவீக்கம் குறைந்து 6.3 சதவீதம் என்ற ஒற்றை இலக்கத்தை அடைந்துள்ளதாக மத்தியவங்கி கூறுகிறது. ஆனால் பணவீக்கவேகம் குறைந்தாலும் பொருள்கள் சேவைகளின் விலைகள் இன்னமும் குறையவில்லை. அது குறைவதற்கான நடைமுறைச் சாத்தியங்கள் மிகவும் குறைவு. ஆனால் பணவீக்க வீழ்ச்சியை அரசாங்கம் ஒரு சாதனையாகக் காட்டினாலும் கூட சாதாரண பொதுமக்கள் அதற்காகச் செலுத்திய விலை மிக மிக அதிகம். பசி, பட்டினி, போசாக்கின்மை, தற்கொலைகள், வேலையின்மை மந்தபுத்தியுள்ள சந்ததியின் தோற்றம், பாடசாலை இடைவிலகல், மனநோய்களின் அதிகரிப்பு நாட்டை விட்டோடல் என மிகப்பெரிய அவலத்தை மக்கள் சந்தித்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரிது. அதிலும் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட பின்னடைவு மிகப் பெரிது. அவற்றைச் சீர்செய்வது இலகுவானதல்ல. நாட்டின் முதலீட்டாளர்கள் படிப்படியாக வெளியேறி வருகின்றனர். ஆடைதயாரிப்புத் துறை மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளதாக துறைசார் வல்லுநர்கள் வழங்கும் தகவல்கள் கூறுகின்றன.

அரசாங்கம் கூறுவது போல பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்கு குறைந்துள்ளதாயின் அதன் பின்னர் வட்டிவீதங்கள் ஆகாய மட்டத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை. பணவீக்கத்தால் வைப்புகளுக்கு ஏற்படும் இடர்அபாயத்தை குறைப்பதற்கே அதிக வட்டிவீதங்கள் அறவிட அனுமதிக்கப்பட்டது. ஆனால் பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்குத் திரும்பிய பின்னரும் அரசாங்கம் தயார்நிலை வைப்பு வசதியினை (11 சதவீதம்) மற்றும் தயார்நிலை கடன்வழங்கல் (12 சதவீதம்) வீதங்களையும் குறைத்துள்ள நிலையிலும் அத்தோடு மட்டுமன்றி நியதி ஒதுக்குத் தேவையினை 2 சதவீதமாகவும் குறைத்து வங்கித்துறையின் திரவத்தன்மையை மேலும் அதிகரித்துள்ள நிலையிலும் அரச வங்கிகள் உட்பட வணிக வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் இன்னமும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் வட்டிவீதங்களைக் குறைக்கவில்லை. மத்தியவங்கியின் வேண்டுகோளை அவை கணக்கெடுக்கவுமில்லை. அது மட்டுமன்றி அரச வங்கியாகிய மக்கள் வங்கி தான் ஏற்கெனவே நிலையான வட்டிவீதத்தில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன்களின் வட்டிவீதங்களையும் கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வட்டிவீதத்துக்கு மேலாக வாடிக்கையாளரது விருப்பத்துக்கு மாறாக ஒருதலைப்பட்சமாக அதிகரித்துள்ளது. இவ்வாறு வணிக வங்கிகள் தவித்தமுயல் அடித்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளமையால் அண்மைக்காலத்தில் அவற்றின் இலாபங்கள் அதிகரித்துள்ளதாக செய்திகள் வருகின்றன. இவை நியாயமான செயல்களல்ல. பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்கு வந்துவிட்டதாக மார்தட்டும் மத்தியவங்கி வட்டிவீதங்களையும் முன்னைய மட்டத்திற்கு கொண்டுவருவதை உறுதிப்படுத்த சட்டரீதியில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

வங்கிகளும் நிதிநிறுவனங்களும் மக்களைத் தவித்த முயல் அடித்து இலாபம் சம்பாதிப்பதை தடுக்கவும் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் பொதுமக்களுக்கு எந்தப்பயனுமில்லை.




- **செயற்கையாக வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட டொலர் தட்டுப்பாடு பண்டவிலைகளை உதைத்து உயரத்தில் தள்ளியமை விந்தையல்ல**
- **பொருட்கள் சேவைகளுக்கு விலை இருப்பது போல பணத்தின் விலையைத்தான் நாம் வட்டிவீதம் என்கிறோம்**
- **பணவீக்கம் குறைந்து 6.3 சதவீதம் என்ற ஒற்றை இலக்கத்தை அடைந்துள்ளதாக மத்தியவங்கி கூறுகிறது**
- **பணவீக்கத்தால் வைப்புகளுக்கு ஏற்படும் இடர்அபாயத்தை குறைப்பதற்கே அதிக வட்டிவீதங்கள் அறவிட அனுமதிக்கப்பட்டது.**

# பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்த்த நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு

## வழக்கு தாக்கல் செய்து பிள்ளைகளின் காலத்தை வீணடிப்பது குற்றமாகும்

### ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன

ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்து கொள்ளுமாறு மாகாண சபைகளுக்கு அமைச்சரவைப் பத்திரம் தற்போது வெளியிடப்பட்டுள்ள போதும் ஆட்சேர்ப்பு செய்து கொள்ள முடியாதுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இரண்டு வருடங்கள் வீடுகளிலிருந்த பிள்ளைகளுக்கு எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் முடியாமல் போகும். அதிபர்களது, ஆசிரியர்களின் சம்பளத்தை வெட்டுவதற்கு முன்னர் அமைச்சு செயலாளர்கள், ஆளுநர்கள் உள்ளிட்ட அதிகாரிகளது சம்பளம் எப்போது வெட்டப்படும்?



பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கும் நிலையில் மாணவர்களின் சாதாரண தரம், உயர் தரப் பரீட்சைகளில் உயர் பெறுபேற்றை எதிர்பார்க்க முடியாது. சாதாரண தரப் பரீட்சையில் பெறுபேறுகள் குறைவாயின் அதிபர்களது சம்பளத்தை அதிகரிக்க முடியாது எனத் தெரிவித்து மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் சுற்று நிருபம் வெளியிட்டிருப்பது சட்டவிரோதமானது. இதனை உடனடியாக இடைநிறுத்த கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய மாகாணத்தினுள் 5878 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வானது பொது நிர்வாக அமைச்சின் அரச ஊழியர்களின் செயல்திறன் மதிப்பீடு என்ற தலைப்பின் கீழான 798 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படுவதோடு, செயற்திறன் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது நிறுவனத் தாபனக் கோவையின் 7ம் அத்தியாயத்தின் பிரகாரமேயாகும். மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்துவது அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உள்ள கடமைகளில் ஒன்று மாத்திரமேயாகும். அதற்கு மேலதிகமாக மேலும் சுமார் 45 பிற கடமைகள் உள்ளன. ஆசிரியர்கள், அதிபர்கள், அமைச்சின் செயலாளர், அமைச்சர் ஆகியோருக்கும் கல்வி தொடர்பில் இலக்குகள் இருந்தால் நல்லதொரு பயணத்தை முன்னெடுக்க முடியும்.

## நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவின் காரணமாக மாணவர்களின் வாழ்க்கை ஆபத்தில்!

### சிவில் வழக்கு நடைமுறைச் சட்டம் திருத்தப்பட வேண்டும் – கல்வி அமைச்சர் சட்டத்தரணி, கலாநிதி சுசில் பிரேமஜெயந்த்



ஆறு மாத இடைக்கால தடை உத்தரவின் காரணமாக பாடசாலைகளுக்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியாத நிலை உள்ளது. இந்த இடைக்காலத் தடை உத்தரவினால் மாணவர்களுக்கு அநீதி ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த அநீதி தொடர்பில் எவரும் பேசுகிறார்கள் இல்லை. இடைக்கால தடை உத்தரவுக்கு காலம் இருக்க வேண்டும். இதற்காக சிவில் வழக்கு நடைமுறைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும். இடைக்காலத் தடை உத்தரவு அமுல்படுத்தப்படும் காலத்தைத் தீர்மானித்து சிவில் வழக்கு நடைமுறைச் சட்டத்தை திருத்துவதற்கு நீதி அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டால் அது மிகவும் வரவேற்கத்தக்க விடயம் என்பதோடு, அதனை நடைமுறைப்படுத்துமாறு நீதி அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இடைக்கால தடை உத்தரவை தொடர்ந்தும் தடை உத்தரவாகவே ஆக்கிக் கொள்வதற்கு சிலர் முயற்சிப்பதனாலாகும். மாணவர்களின் கல்வி உரிமையை மீறும் வகையில் வழக்குத் தாக்கல் செய்யும் முறைப்பாட்டாளர்களுக்கு அதன் ஆபத்தான தன்மை தெரியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். காரணம் ஆசிரியர்கள், அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது காணி வழக்கைப் போன்றதல்ல.

32000 ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுதோடு, கடந்த3 வருடங்களுக்கு முன்னர் எந்த ஒழுங்கு முறைகளுமின்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்த போது 22000 பேர் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்பட்டார்கள். ஆசிரியர் சேவையில் முறையான ஆட்சேர்ப்பைத் தடுக்கும் வகையில் அவர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளதோடு, அதற்காக வழங்கப்பட்டுள்ள ஆறு மாத இடைக்கால உத்தரவை நிரந்தர உத்தரவாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர்.

ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருந்து விலகிச் சென்ற ஆசிரியர்களுக்கு பதிலாக பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்குத் தேவையான அதிகாரத்தை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவுள்ளதோடு ஆசிரிய சேவை யாப்புக்கு அமைய இந்த அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் இதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்படவுள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பட்டதாரிகள் 700 பேர் மத்திய மாகாணத்துக்கு இணைத்துக் கொள்வதற்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, எவ்வாறான தடைகள் வந்தாலும் மாணவர்களுக்கு முறையான ஆசிரியர்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.


உதாரணமாக, தொல்லியல் துறையில் பட்டம் பெற்ற ஒருவரைப் பாடசாலையின் ஆரம்ப பிரிவுக்கு நியமிப்பதன் மூலம், பாடசாலையின் முறையான கல்வி வீழ்ச்சியடைவதோடு, ஆரம்பப் பிரிவின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதற்கு கொவிட் அழுத்தம் மாத்திரமின்றி, இவ்வாறான முறையற்ற ஆசிரியர் நியமனங்களும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை 90 வீதம் வரைக்கு உயர்த்தாத அதிபர்களின் வருடாந்த சம்பள உயர்வினை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபம் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கல்வி தொடர்பான கொள்கை கொள்கை ரீதியான தீர்மானங்கள் கல்வி அமைச்சினால் எடுக்கப்படுவதோடு, மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அந்தந்த மாகாணம் தொடர்பான நிர்வாகப் பணிகளைச் செய்ய முடியும் என்றாலும், இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. அமைச்சர் என்ற வகையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுடன் மாதந்தோறும் சூம் மூலம் கலந்துரையாடல்களை மேற்கொள்வதோடு, இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சிடம் கேட்காமல் சுற்றறிக்கைகளை வெளியிடக் கூடாது.

**மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன கடந்த 24ம் திகதி பாராளுமன்றத்தில் வாய்மூலமான பதிலை எதிர்பார்த்து வினவிய, தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை, வருடாந்த இடமாற்ற பிரச்சினை என்பனவற்றுக்கு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்த மற்றும் நீதி, அரசியலமைப்பு மறு–சீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் வழங்கிய பதில்கள்.**

**ஸ்வர்னா விஜேகோன்**
**சந்தியா கருணாரத்ன**
தமிழில்
**எம். எஸ். முஸப்பிர்**

## இடைக்கால தடை உத்தரவு தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள தயார்



**நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஸ**

நீதிமன்றங்கள் மூலம் இடைக்கால தடை உத்தரவு வழங்குவதற்காக கொள்கை ஒன்று தேவையாயின் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு தயார் என்றும் இடைக்கால தடை உத்தரவுகள் தொடர்பாக சிவில் வழக்கு நடைமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சபாநாயகரிடம் அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்த கோரிக்கை விடுத்த பின்னர் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு ஆயத்தமான போது சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும், இது மாணவர்களுக்கான ஆசிரியர்கள் பணியாகும் என்பதை அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கூறினார். எனினும் இதற்கு மூன்று வருட காலத்துக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, இடைக்காலத் தடை உத்தரவு ஒன்று மூன்று, நான்கு வருடங்களுக்கு வழங்க முடியாது . இதனால் பாதிக்கப்படுவது மாணவர்களே என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். இடைக்காலத் தடை உத்தரவுக்கு உறுதியான காலத்தைக் குறிப்பிடும் வகையில் சிவில் வழக்கு நடைமுறைகளில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பில் எவரும் பேசுவதில்லை என்றும், பாராளுமன்றம் சட்டங்களை இயற்றும் இடமாக இருப்பதோடு, நீதிமன்றம் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். இந்த திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் நீதி அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.




லோரன்ஸ் செல்வநாயகம்

# கல்வித்துறை எதிர்நோக்கும் சவால்களும் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்களும்

**அரசாங்கமானது நாட்டின் கல்வித்துறை தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருவதுடன் கல்வித்துறை முன்னேற்றத்திற்காக பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்கள் காலத்துக்குக்காலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

வரவு செலவு திட்டத்திலும் கூட பாதுகாப்பு, சுகாதாரம், என்பனவற்றுக்கு அடுத்தபடியாக கல்வித்துறைக்கு அதிக நிதியை அரசாங்கம் ஒதுக்கி வருகின்றது.

நாட்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற அரசாங்கத்தின் கொள்கையின் கீழ், நாடு எத்தகைய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட போதிலும் இலவசக் கல்வியை தொடர்ந்து காத்திரமானதாக முன்னெடுப்பதிலும் அதற்கு தேவையான அனைத்து வசதி வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுப்பதிலும் அரசாங்கம் ஒரு போதும் பின்னிற்பதில்லை.



அரசாங்க பாடசாலைகளில் இலவச கல்வியை பெற்றுக் கொண்டவர்களே பெரும்பாலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் செல்வாக்குடனும் பதவிகளுடனும் வாழ்கின்றனர்.

கல்வித்துறையை பொறுத்தவரையில் தமிழ் மொழி மூலமான பிரிவை கண்காணித்துக் கொண்டு நடத்துவதற்காக எப்போதுமே கல்விப் பிரதி அமைச்சர் அல்லது கல்வி ராஜாங்க அமைச்சர் என தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டு வருவது தொடர்ச்சியாக வரும் அரசாங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்.

அந்த வகையில் தற்போதைய அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக ஊவா மாகாணத்தைச் சேர்ந்த அரவிந்தகுமாரும் அதேபோன்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சராக வடக்கைச் சேர்ந்த கலாநிதி சுரேன் ராகவனும் நியமிக்கப்பட்டு, அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றார்கள்.

அதனூடாக பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் தமக்கான வரப்பிரசாதங்களை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிரதிபலனாக கல்வியில் ஆர்வம் காட்டாத அல்லது பின்தங்கிய நிலையில் கடந்த காலங்களில் காணப்பட்ட மலையகப் பெருந்தோட்ட பிரதேசங்களின் கல்வி செயற்பாடுகளிலும் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்டப் பகுதி இளைஞர்கள் சிறப்பான பதவிகளில் அனைத்து துறைகளிலும் செயற்பட்டு வருவதுடன் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் சட்டத்தரணிகளும் டாக்டர்களும் அங்கிருந்து உருவாகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

இத்தகைய பின்னணியில் தான் கடந்த வாரம் பாராளுமன்ற அமர்வுகளில் கல்வித்துறை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு கல்வியமைச்சரால் அவற்றுக்கு பதில்கள் வழங்கப்பட்டன.

குறிப்பாக கொழும்பு போன்ற பெருநகர் பகுதிகளை விடுத்து நாட்டின் ஏனைய பகுதிகளை பார்க்கையில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. கட்டடங்கள், பாடசாலைகளுக்கான அடிப்படை வசதிகள் தொடர்பில் பேசப்பட்டாலும் ஆசிரியர்கள் வெற்றிடமே அங்கு முக்கிய கவனத்திற்குரியதாக காணப்படுகின்றது.

பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதும் வயதுப் பிரச்சினைகள் அவர்களுக்கு ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படாத பிரச்சினைகள் என பல சிக்கல்கள் தடையாக உள்ளது.

அவ்வாறு பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிகளை வழங்கி அவர்களை ஆசிரிய வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்வதற்கு கல்வியமைச்சர் எடுத்த நடவடிக்கைகள் சில காரணங்களுக்காக சிலரால் மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தடையுத்தரவு காரணமாக காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பி ரோகினி குமாரி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த,

கல்வித்துறை சார்ந்த இத்தகைய சிக்கல்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்பவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும்.

தடை உத்தரவுகள் மூலம் காணிப் பிரச்சினைகள் அல்லது ஏனைய பிரச்சினைகள் மாதக்கணக்கில் வருடக்கணக்கில் காலம் தாழ்த்தப்படலாம் ஆனால் கல்வி அவ்வாறல்ல.

காலம் தாழ்த்தப்படும் ஒவ்வொரு நாளும் அதன் பாதிப்புகளை மாணவர்களே எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கனவே கொவிட், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் கல்வித்துறையில் ஈட்ட முடியாத பல விடயங்களை நாம் அவசரம் அவசரமாக நிவர்த்தி செய்ய முற்படுகையில் இத்தகைய தடையுத்தரவுகள் அதற்கு பெரும் பாதிப்பாகவே அமைகின்றன.

ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான நீதிமன்றத்தின் தடை உத்தரவு ஆறு மாதங்கள் தொடருமானால் நாம் எடுக்கும் முயற்சிகள் அர்ப்பணிப்புகள் பலனற்றுப் போகும் என்பதை சபையில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



அதனால் அந்த விடயம் நீதியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு கல்வித்துறைக்கு இத்தகைய தடை உத்தரவுகளை விதிப்பதை நிறுத்தும் வகையில் நடைமுறையில் உள்ள சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

அதற்கு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் தமது இணக்கத்தை தெரிவித்தார். அவ்வாறான செயற்பாடுகள் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

**கல்வியியற் கல்லூரிகளை இணைத்து பல்கலைக்கழகம் அமைக்க திட்டம்**

நாட்டில் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து பல்கலைக்கழகமாக உருவாக்குவதற்கான விசேட திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் போவதாக கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஆசிரியர் கல்விச் சேவைக்கு புதிதாக 2,100 பேரை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர் சேவை சம்பள உயர்வு தொடர்பான யோசனையையும் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக மாற்றும்போது அந்த பல்கலைக்கழகத்தின் உதவி விரிவுரையாளர்களாக இரண்டாம் தர உயர் சித்தி பெற்ற பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வித்துறை தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

கல்வித்துறையில் தற்போது கல்வி நிர்வாக சேவை, போதனா ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் வழிகாட்டல் சேவை, ஆசிரியர் சேவை என ஐந்து சேவைகள் தனித்தனியே உள்ளன. திறமை மற்றும் மாவட்ட அடிப்படையிலேயே கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள். அந்த வகையில் கடந்த காலங்களில் 7500 பேர் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகிறது.

எனினும் இதற்கு முற்பட்ட காலங்களில் வருடத்துக்கு 4000 பேரே ஆசிரிய பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டனர். அந்த எண்ணிக்கை தற்போது சுமார் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்விச் சேவையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் கல்விச் சேவைக்கு 2100 பேரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த சேவையில் இதற்கு முன்னர் 866 பேரே இருந்தனர். கல்வியமைச்சரின் நடவடிக்கைகளால் அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

போதனா ஆசிரியர் கல்வி சேவைக்காக 705 பேர் இணைத்துக் கொள்ளப்பட வுள்ளதுடன் அவர்களுக்கான பரீட்சை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிறைவு பெற்றுள்ளது. அதற்கான செயன்முறைப் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளது. இக்காலங்களில் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பிலும் மற்றும் கல்வித் துறை சார்ந்த ஏனைய பதவி நிலைகளில் காணப்படும் சம்பள முரண்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் 12 சம்பள தரங்களில் அதிகரிப்பை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கும் செயற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன. அதற்காக திறைசேறி மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அவசியமாகிறது.

அது தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை பிரதமரின் தலைமையில் இடம்பெறும் குழுவில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அந்த யோசனைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**புனர்வாழ்வு நிலையங்களாக மாற்றப்பட்ட கல்வியியற் கல்லூரிகள்**

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலைக் காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகள் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையங்களாக மாற்றப்பட்டன.

அவை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் அக்காலத்தில் கொரோனா வைரஸ் புனர்வாழ்வு நிலையங்களாக அந்த கட்டடங்கள் மாற்றப்பட்டதால் அதற்கான வசதிகளை கருத்திற்கொண்டு அங்குள்ள பௌதிக வளங்கள் இல்லாதொழிக்கப்பட்டன.

மீண்டும் அவற்றை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதனால் ஏற்பட்ட நட்டம் 936 மில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கல்வியமைச்சர் சபையில் தெளிவுபடுத்தினார்.

மேற்படி கல்வியில் கல்லூரிகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக உலக வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டதாகவும் கல்வியமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

எவ்வாறெனினும் கல்வியமைச்சுக்கு உலக வங்கி அதற்காக 200 மில்லியன் ரூபாவை முதற்கட்டமாக வழங்கியுள்ளதாகவும் ஏனைய நிதி படிப்படியாக கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வித்துறை வளர்ச்சிக்காக அரசாங்கமும் கல்வி அமைச்சரும் இராஜாங்க அமைச்சர்களும் முன்னெடுக்கின்ற பயனுள்ள திட்டங்கள் கால தாமதம் இன்றி நடைமுறைக்கு வர வேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

---

# வாட்டி வதைக்கும் கடும் உஷ்ணம்







- உணவுப் பயிர்கள் வாடி கருகும் நிலை
- வரண்டு போயுள்ள நீரேந்து பிரதேசங்கள்
- சில மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம்
- நீர் பாவனையில் அதிகரிப்பு
- சமுத்திரங்கள் புவிக்கு அரைவாசிக்கும் மேற்பட்ட ஒட்சிசனை வழங்குபவை
- அடுத்த வருடமும் பாரிய விளைவை ஏற்படுத்துமா?

**உரிய நேர காலத்தில் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் விளைவாக வரட்சி ஏற்பட்டுள்ளது. அதனால் குளங்கள், நீர்த்தேக்கங்கள் உள்ளிட்ட எல்லாற்றினதும் நீர் மட்டங்கள் நாளுக்கு நாள் குறைவடைந்து வருவதோடு பல குளங்களும் நீரேந்து பிரதேசங்களும் வற்றி வரண்டு போயுள்ளன.**

இதன் விளைவாக தோற்றம் பெற்றுள்ள தாக்கங்களும் பாதிப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல. மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் அவற்றுக்கு முகம் கொடுத்துள்ளன. குறிப்பாக மனிதர்களும் கால்நடைகள் உள்ளிட்ட வன விலங்குகளும் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. அதிலும் வனவிலங்குகளும் ஏனைய கால்நடைகளும் தண்ணீருக்காக அலையும் நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் நெற்செய்கை உட்பட உணவு உற்பத்தி பயிர்ச் செய்கையும் இவ்வரட்சியின் தாக்கத்துக்கும் பாதிப்புக்கும் முகம் கொடுத்துள்ளன. இற்றை வரையும் 51,055 ஏக்கர் பரப்பளவிலான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள விவசாய அமைச்சு, 450 ஏக்கருக்கும் மேற்பட்ட உப உணவுப் பயிர்ச்செய்கையும் அழிவடைந்துள்ளதாகத் தெரிவித்திருக்கின்றன.

அனுராதபுரம் மாவட்டத்தின் திறப்பனை பிரதேசத்தில் மிளகாய்ப் பயிர்கள் வாடி வதங்கி கருகியுள்ள படமொன்றுக்கு தேசிய ஊடகமொன்று சில தினங்களுக்கு முன்னர் முக்கியத்துவம் அளித்திருந்தது. தற்போதைய வரட்சியின் அகோரத்தை அந்தப் படம் வெளிப்படுத்தியிருந்தது.

வரட்சியான காலநிலையோடு, உஷ்ணமும் பெரிதும் அதிகாரித்துள்ளது. 1982 இலும் 1996 இலும் ஏற்பட்ட உஷ்ண அதிகரிப்பை விடவும் இவ்வருடம் அதிகம் என்று சர்வதேச வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

என்றாலும் வரட்சியும் உஷ்ணத்தின் உயர்வும் தோற்றுவித்துள்ள தாக்கங்களும் பாதிப்புக்களும் எல்லா மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளன. 'வெயில் நெருப்பாக கொளுத்துகிறதே...' என்பவர்களையும் 'பகல் வேளையில் தான் கடும் உஷ்ணம் என்றாலும் இரவிலும் அதன் தாக்கம் காணப்படுகிறதே...' எனக் கூறுபவர்களையும் பரவலாகக் காண முடிகிறது. இந்த உஷ்ணத்தின் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளும் வகையில் வழமைக்கு மாறாகத் தினமும் மூன்று, நான்கு தடவைகள் நீராடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதோடு நீர்ப்பயன்பாடும் உயர்ந்துள்ளது.

தற்போது நிலவும் கடும் உஷ்ண காலநிலை குறித்து நாளாந்தம் சில மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துவரும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம், நீரைப் போதியளவில் பருகுமாறும், நிழல்மிக்க இடங்களில் ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறும், முதியவர்கள், நோயாளர்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துமாறும் கடும் உடலுழைப்பில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொள்ளுமாறும் வெள்ளை மற்றும் வெளிறிய நிற ஆடைகளை அணிந்து கொள்ளுமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்தோடு உடலில் நீரிழப்பு காரணமாக தசைப் பிறழ்வு, அதிக களைப்பு, heat stroke கூட ஏற்படலாம் என்பதை குறிப்பிட்டுக் கூறவும் தவறவில்லை.

இந்த உஷ்ண அதிகரிப்பின் தாக்கங்களை இலங்கையர் மாத்திரமல்லாமல், உலகில் பல பகுதியினரும் அனுபவிக்கக் கூடியவர்களாக உள்ளனர். உஷ்ண அதிகரிப்பால் புவி வெப்பமடைகிறது. அதனால் நிலத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் பாதிப்புக்களும் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் கடலிலும் இதன் தாக்கங்கள் ஏற்படுவதை மறந்துவிடலாகாது.

பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பினால் காற்றுவீசும் திசை மாற்றமடைவதோடு மழை மேகங்களும் வேறு திசைக்குச் செல்கின்றன. இது இலங்கையின் தென்மேல் பருவபெயர்ச்சி மழைவீழ்ச்சி தாமதமடையவும் காரணமாக அமைகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால் உஷ்ண அதிகரிப்பால் சமுத்திரங்களில் ஏற்படுகின்ற தாக்கங்கள் குறித்து நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கையும் கவனம் செலுத்த வேண்டிய தேவைக்கு உள்ளாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை கண்காணிப்புக்கான கொபர்நிகஸ் நிறுவனம் தெரிவித்துள்ளபடி, கடல் மேற்பரப்பின் வெப்பநிலை 20.96 செல்சியஸை எட்டியுள்ளது. இது 2016 ஆண்டில் ஏற்பட்ட உஷ்ண அதிகரிப்பை விடவும் அதிகமாகும்.

இதேவேளை இங்கிலாந்தின் கடல் வெப்பநிலை கடந்த ஜுன் (2023) மாதம் வழமையை விடவும் 3 டிகிரி செல்சியஸ் முதல் 5 டிகிறி செல்சியுஸ் வரை உயர்ந்து காணப்பட்டதாக அந்நாட்டு வானிலை நிலையம் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவின் தேசிய சமுத்திரவியல் மற்றும் வளிமண்டவியல் நிர்வாக அமைப்பு, 'புளோரிடாவிலும் கடலின் மேற்பரப்பு வெப்ப நிலை வழமைக்கு மாறாக அதிகரித்து காணப்படுகிறது என்றுள்ளது.

அத்தோடு கிழக்கு பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதையும் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு சமுத்திரங்களின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதால், அடுத்த வருடம் (2024) மிகப் பாரிய காலநிலை விளைவுக்கு முகம் கொடுக்கக்கூடிய சாத்தியமுள்ளதாக அமெரிக்காவின் நாசா நிறுவனத்தின் குட்டார்ட் விண்வெளி கற்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால் சமுத்திரங்கள் காலநிலையை சீராக்குபவை. வெப்பத்தை உள்ளீர்த்து ஒட்சிசனை உற்பத்தி செய்பவை. புவிக்கு அரைவாசிக்கும் மேற்பட்ட ஒட்சினை வழங்குவதோடு வானிலையை கட்டுப்படுத்தக் கூடியனவாகவும் சமுத்திரங்கள் உள்ளன.

அவ்வாறான முக்கியத்துவம் மிக்க பணியை மேற்கொள்ளும் சமுத்திரங்களது நீரின் வெப்பநிலை அதிகரித்தால் காபனீரொட்சைட்டை உறிஞ்சும் அதன் திறன் குறைவடையும். அதன் விளைவாக புவியில் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டு வளிமண்டலத்திலேயே தங்கியிருக்கும். இது புவியின் உஷ்ணம் அதிகரிப்பதில் பங்களிப்பதோடு கடலின் பனிப்பாறைகள் உருகவும் துணைபுரியும். அதனால் கடல் மட்டமும் உயர முடியும்.

இது இவ்வாறிருக்க, சமுத்திரங்களின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிக்கும் போது திமிங்கிலங்கள், மீன்கள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்கள் குளிர்ந்த நீர்ப்பகுதியைத் தேடி நகர முடியும். அதன் காரணத்தினால் மீன்களின் பெருக்கமும் உற்பத்தியும் பாதிக்கப்படையக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது. அதன் தாக்கங்கள் கடற்றொழிலிலும் வெளிப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக நீரியல் வள விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த சூழலில் சமுத்திரங்களின் மேற்பரப்பு உஷ்ணம் அதிகரிப்பது இப்போது தானா இடம்பெறுகின்றது? இதற்கான காரணம் என்ன? என்றவாறான கேள்விகள் பலர் மத்தியில் ஏற்படலாம். அது நியாயமான வினாவும் கூட.

உலகில் 1900 முதல் கடல் வெப்பநிலை குறித்த கணிப்பு இடம்பெறுகிறது. அதன் படி கடல் மேற்பரப்பு நீரின் வெப்ப நிலை தொடர்ந்து அதிகரித்து வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. என்றாலும் கடந்த நூறு வருடங்களில் 2012இல் தான் கடல் நீரின் வெப்பம் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் தற்போதைய நிலைமை அதனையும் முறியடித்து விடக்கூடியதாக உள்ளது.

சமுத்திரங்களின் மேற்பரப்பு உஷ்ணம் இவ்விதமாக அதிகரிப்பதற்கு பெற்றோல், டீசல், மண்ணெண்ணைய் உள்ளிட்ட புதைபடிம எரிபொருட்களின் பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே காரணம். இந்த எரிபொருட்கள் வெளியிடும் காபனீரொட்சைட்டு உள்ளிட்ட பச்சைவீட்டு வாயுக்களில் 90 வீதமானவற்றை மாத்திரமல்லாமல் தொழிற்சாலைகள், வாகனங்கள், மனிதனின் பிற நடவடிக்கைகளால் வெளிப்படும் பெரும்பாலான காபனீரொட்டையும் கூட கடல் நீரே உறிஞ்சிக் கொள்கின்றது. அவை கடல் நீரின் வெப்பம் அதிகரிக்க பெரிதும் பங்களிக்கின்றன என காலநிலை தொடர்பான விஞ்ஞானி கலாநிதி சமந்தா பர்கஸ் குறிப்பிட்டுள்ளார்.

சமுத்திரங்களின் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வதானது, கடல்களில் அமிலங்களின் அளவு அதிகரித்து கடல் வாழ் உயிரினங்களின் பெருக்கத்தைப் பாதிக்கக்கூடியதாகவும் அமைந்துவிடலாம். சில உயிரினங்கள் அழிந்து அருகிவிடக்கூடிய அபாயமும் உள்ளதாக முன்னணி காலநிலை ஆராய்ச்சி நிறுவனங்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

அதனால் புவி வெப்பமாதல், கடலின் மேற்பரப்பு நீரின் உஷ்ண அதிகரிப்பு என்பன சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடியவை அல்ல. அவை மனித இருப்புக்கே சவாலாக அமைந்து விடக்கூடியவையாக விளங்குகின்றன. அதனால் தான் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆகவே தற்போதைய வரட்சிக் காலநிலைக்கும் வெப்பநிலை அதிகரிப்புக்கும் காரணமாக அடையாளப்படுத்தப்படும் புதைபடிம எரிபொருள் பயன்பாடு மற்றும் காபனீரொட்சைட்டு உள்ளிட்ட பச்சைவீட்டு வாயுக்களை வெளியிடும் செயற்பாடுகளைக் குறைத்து கட்டுப்படுத்துவதில் அதிகம் கவனம் செலுத்துவது அவசியம். இது தனியே ஒரு நாட்டினாலோ, பிராந்தியத்தாலோ செய்யக்கூடிய பணியுமல்ல. இது ஒரு உலகளாவிய விவகாரம். அதனால் நாடு, தேசம் என்ற பேதம் பாராது முழு உலகமும் கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது. இதனை ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகம் அந்தோனியோ குட்டரெஸும் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.



மர்லின் மரிக்கார்

# பெருந்தோட்டங்களில் இருந்து



# தொழில் திறனுடனான புலம்பெயர் தொழிலாளர்களே இன்றைய அவசியத் தேவையாகும்

மலையக பெருந்தோட்ட பகுதிகளிலிருந்து வெளிநாட்டு தொழில் தேடி செல்பவர்களின் எண்ணிக்கை பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் அதிகரித்து காணப்படுகின்ற போதிலும் தொழில் திறன், தொழில்சார் பயிற்சிகள், மொழியறிவு என்பன இன்மையால் பல துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்கள், சுரண்டலுக்கும் உள்ளாகுகின்றனர். அதே வேளை போலிமுகவர்களிடமும் மாட்டிக் கொள்கின்றனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரங்களின் படி மலையக பெருந்தோட்ட மக்கள் செறிந்து வாழும் கண்டி, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, மொனராகலை, நுவரெலியா, கேகாலை மாவட்டங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் (2018 – 2022) தொழிலுக்காக நாட்டை விட்டு வெளியேறிய 64,309 பேரில் அதிகமானோர் குறைந்த தொழில் திறன் (low skills) அல்லது ஓரளவு தொழில் திறன், பயிற்சிகளுடனேயே சென்றுள்ளதை காணமுடியும்.

கண்டி மாவட்டத்திலிருந்து 2022 ல் வெளிநாடுகளுக்கு சென்ற 30,672 பேரில் தொழில் வல்லுநர்களாக 116 பெண்களும் 1,757 ஆண்களும் தொழில்திறன் பயிற்சிகளுடன் 515 பெண்களும் 7,820 ஆண்களும் குறைந்த தொழில்திறனுடன் (Low skills) 3,535 பெண்களும் 6,850 ஆண்களும் சென்றுள்ளனர். மேலும் ஓரளவு தொழில்திறன், பயிற்சிகளுடன் 7,498 பெண்கள் வீட்டு பணியாளர்களாக சென்றுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 2022 ல் வெளிநாடுகளுக்கு சென்ற 7,765 பேரில் தொழில் வல்லுநர்களாக 20 பெண்களும் 172 ஆண்களும் தொழில்திறனுடன் 144 பெண்களும் 1,561 ஆண்களும் குறைந்த தொழில்திறனுடன் (Low skills) 1,306 பெண்களும் 1,079 ஆண்களும் ஓரளவு தொழில்திறன் பயிற்சிகளுடன் வீட்டு பணியாளர்களாக 3,109 பெண்களும் சென்றுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு சென்ற 10,740 பேரில் தொழில் வல்லுனர்களாக 32 பெண்களும் 450 ஆண்களும் தொழில் திறனுடன் 274 பெண்களும் 3,016 ஆண்களும் ஓரளவு தொழில் திறனுடன் வீட்டு பணியாளர்களாக 2,711 பெண்கள் சென்றுள்ளனர். குறைந்த தொழில்திறனுடன் 1,381 பெண்களும் 2,145 ஆண்களும் சென்றுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 2022 ல் வெளிநாடுகளுக்கு சென்ற 8,601 பேரில் தொழில் வல்லுநர்களாக 18 பெண்களும் 249 ஆண்களும் தொழில்திறனுடன் 138 பெண்களும் 2,148 ஆண்களும் ஓரளவு தொழில்திறனுடன் வீட்டு பணியாளர்களாக 2,449 பெண்கள் சென்றுள்ளதுடன் குறைந்த தொழில்திறனுடன் 1,537 பெண்களும் 1,469 ஆண்களும் சென்றுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் 2022 ல் வெளிநாடுகளுக்கு சென்ற 2,446 பேரில் தொழில் வல்லுநர்களாக 2 பெண்கள், 53 ஆண்கள், தொழில்திறனுடன் 96 பெண்கள், 567 ஆண்களும் ஓரளவு தொழில்திறனுடன் வீட்டு பணியாளர்களாக 695 பெண்கள் சென்றுள்ளதுடன் தொழில்சார் தகைமைகளின்றி 354 பெண்களும் 551ஆண்களும் சென்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 2022 ல் வெளிநாடுகளுக்கு சென்ற 5,463 பேரில் தொழில் வல்லுநர்களாக 06 பெண்கள், 32 ஆண்கள், தொழில்திறனுடன் 85 பெண்கள், 551 ஆண்களும் ஓரளவு தொழில்திறனுடன் வீட்டு பணியாளர்களாக 3,426 பெண்கள் சென்றுள்ளதுடன் குறைந்த தொழில்திறனுடன் 701 பெண்களும் 517 ஆண்களும் சென்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு சென்ற 9,362 பேரில் தொழில் வல்லுநர்களாக 27 பெண்கள் , 213 ஆண்கள் , தொழில்திறன்களுடன் 327 பெண்கள், 1,495 ஆண்கள், குறைந்த தொழில் திறனுடன் 1,392 பெண்களும் 2,302 ஆண்களும் ஓரளவு தொழில்திறன்களுடன் வீட்டு பணியாளர்களாக 3,221 பெண்களும் சென்றுள்ளனர்.

இப்புள்ளி விபரங்களின் படி மலையகத்திலிருந்து தொழில்திறனுடன் வெளிநாடுகளுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே காணப்படுவதை அவதானிக்க முடியும். அதிலும் பெண்கள் குறைந்த தொழில்திறனுடனேயே வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ளதுடன் அதிகளவில் வீட்டு பணியாளர்களாக சென்றுள்ளனர்.

இதுதொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சி மற்றும் ஊடக பிரதிப் பொது முகாமையாளர் செனரத் யாப்பா தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்வோரில் 23 வீதமானோர் வீட்டுப் பணிப்பெண்களாகவிருக்கின்றனர். சமீப காலங்களாக வீட்டுப்பணிப் பெண்களாக செல்லும் இலங்கை பெண்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு 35 வீதமான பெண்களும் 2022 இல் 40 வீதமான பெண்களும் 2023 ஆம் ஆண்டு ஜூலை வரையான காலப்பகுதியில் 43 வீதமான பெண்களும் இவ்வாறு வீட்டுப் பணிப்பெண்களாக சென்றுள்ளனர். மலையகத்தை பொறுத்தவரை அதிகளவான பெண்கள் வீட்டுப்பணியாளராகவே செல்கின்றனர். குறைந்த தொழில்திறன் (Low Skills) காரணமாகவே அவர்கள் பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு பணியாளர்களாக செல்கின்றனர். அதுமட்டுமன்றி ஆளுமை, மொழியறிவு, தொடர்பாடல் திறன் போன்ற மென்திறன்களின் முன்னேற்றம் ஏற்படாமை காரணமாகவும் இவர்களால் ஏனைய தொழில்களுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. அதிகளவான முறைப்பாடுகளும் வீட்டுப் பணியாளர்களாக செல்பவர்களிடமிருந்தே கிடைக்கின்றன. இதனை தடுப்பதற்காக பயிற்சி நாட்களை அதிகரித்துள்ளோம். மத்திய கிழக்கு மற்றும் ஏனைய நாடுகளுக்கு வீட்டு உதவிப் பணிப் பெண்களுக்காக முதல் தடவையாக பணிக்குச் செல்லும் பெண்களுக்கு 28 நாட்கள் கட்டாய தங்குமிட (NVQ 03 ) பயிற்சிநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. NVQ 03 சான்றிதழ் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவினாலேயே வழங்கப்படுகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பன்னிப்பிட்டிய, தங்காலை, தம்புள்ள, கண்டி, இரத்தினபுரி, பதுளை, மத்துகம மற்றும் குருநாகல் போன்ற இடங்களில் பயிற்சி நெறியைத் தொடரலாம்.

தற்போது பெண்களுக்கான பராமரிப்பாளர்களுக்கான (Care Givers)வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. இதற்காக NVQ 03 சான்றிதழை வழங்கக்கூடிய 45 நாட்கள் தங்குமிட பயிற்சி நெறியை தொடர்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 22,042 ரூபா கட்டணமாக



**மலையகத்தை பொறுத்தவரை அதிகளவான பெண்கள் வீட்டுப்பணியாளராகவே செல்கின்றனர். குறைந்த தொழில்திறன் (Low Skills) காரணமாகவே அவர்கள் பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு பணியாளர்களாக செல்கின்றனர். அதுமட்டுமன்றி ஆளுமை, மொழியறிவு, தொடர்பாடல் திறன் போன்ற மென்திறன்களின் முன்னேற்றம் ஏற்படாமை காரணமாகவும் இவர்களால் ஏனைய தொழில்களுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.**

அறவிடப்படுகின்றது. எனினும் இவை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டிய பயிற்சியாக காணப்படுவதால் அவற்றை பெரும்பாலும் அக்கறையுடன் பின்பற்றுவதில்லை. அதேபோல் இத்தொழிலுக்கு போதிய ஆங்கில மொழியறிவு தேவைப்படுகின்றது.

வெளிநாட்டு தொழிற்சந்தையில் அதிக கேள்வியுடைய தொழில்களுக்கான பாடநெறிகள் மலையக தொழில்பயிற்சி நிலையங்களில் இல்லை. நாங்கள் தொழில் பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளோம். அதற்கமைய மத்திய மாகாணத்திலுள்ள தொழில்பயிற்சி நிலையங்களில் அத்தகைய 20 பாடநெறிகளை உள்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆனால் ஜப்பான் மொழியை கற்பிக்கக் கூடிய தமிழ் வளவாளர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே அத்தகைய வளவாளர்கள் இருப்பின் எங்களை தொடர்பு கொள்ளமுடியும். NVQ சான்றிதழ் சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

## குறைந்த தொழில்திறனே பிரச்சினைகளுக்கு மூல காரணமாகலாம்

இச்சான்றிதழை கொண்டே தொழில்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது. சிங்கப்பூரில் நிர்மாணத்துறை வேலைவாய்ப்புகளுக்கு NVQ சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தகவல்களின் படி இரத்தினபுரி மாவட்டத்தில் 12 தொழிற்பயிற்சி நிலையங்களும் கேகாலை மாவட்டத்தில் 08 தொழிற் பயிற்சி நிலையங்களும் பதுளை மாவட்டத்தில் 08 தொழிற்பயிற்சி நிலையங்களும் மொனராகலை மாவட்டத்தில் 9 தொழிற்பயிற்சி நிலையங்களும் காணப்படுகின்றன. அதேபோல் மத்தியமாகாணத்தில் 09 தொழில் பயிற்சி நிலையங்களும் மாத்தளை மாவட்டத்தில் 06 தொழிற்பயிற்சி நிலையங்களும் நுவரெலியா மாவட்டத்தில் 05 தொழில் பயிற்சிகளும் இயங்குகின்றன.

எனினும் இவற்றில் வருடாந்தம் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிக குறைவாக காணப்படுவதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்துறையில் NVQ சான்றிதழ் ஆனது பட்டதாரி மட்டம் வரை காணப்படுகிறது. 18 துறைகளில் 134 மேற்பட்ட டிப்ளோமா பாடநெறிகள் காணப்படுகின்றன. NVQ 07 படிநிலைகளை கொண்டுள்ளது. இளைஞர் யுவதிகள் பயிற்சி நிலையங்களில் இவற்றுள் ஏதாவது ஒரு படிநிலையைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டு வெளியேற முடியும். மாணவர்கள் டிப்ளோமா மட்டம் (NVQ 05) உயர் டிப்ளோமா ( NVQ 06) அதனைத் தொடர்ந்து பட்டதாரி மட்டம் (NVQ 07) வரை தமது தகைமையை வளர்த்துக் கொள்ளலாம். தொழில்பயிற்சி அதிகாரசபையின் NVQ 04 சான்றிதழ் மட்டத்தை பூர்த்தி செய்த மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறந்த வேலைவாய்ப்புக்களைப் பெறலாம்.

பெருந்தோட்டத்துறையை சேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் செயற்பட்டு வருகின்றது. இங்கு 17 மேற்பட்ட பாடநெறிகள் காணப்படுகின்றன. பயிற்சிகளின் பின்னர் சர்வதேச ரீதியில் தொழிற்தகைமை சான்றிதழ்களை (NVQ) வழங்கப்படுகின்றது.

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விடுதி மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது. இங்கு 6 மாத கால மற்றும் ஒரு வருடகால பயிற்சி நெறிகள் காணப்படுகின்றன. 6மாத கால கற்கை நெறி நிறைவடைந்த பின்னர் தொழிற் பயிற்சிநெறி 06 மாத காலம் பெறவேண்டும். அதன் பின்னர் வருட இறுதியில், இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தொழில்பயிற்சி கல்லூரியில் இணையும் மாணவர் ஒருவர் பயிற்சி மட்டம் 01முதல் 07வரை கற்க முடியும். மட்டம் 03, மட்டம் 04 என்பவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையத்தில் (NVQ) மட்டம் 04இன் நிலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த ஒருவர் இலங்கையிலுள்ள ஏனைய தொழிற்பயிற்சி நிலையங்களில் மட்டம் 05 தேசிய டிப்ளோமா மட்டம் 06 உயர் தேசிய டிப்ளோமா 07தொழில்சார் பட்டதாரி தகைமை சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் அவற்றில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு பொருத்தமான பயிற்சிநெறிகள் காணப்படாமை பெரும் குறைப்பாடாகவுள்ளது. தமிழ்மொழி மூலம் கற்பிப்பதற்கான வளவாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தவிர தொழில் பயிற்சிகளில் சேர்வதற்கான அடிப்படை தகைமைகளின்மை,மொழியறிவின்மை, பயிற்சிநெறிகள் தொடர்பான தெளிவான



**ஆரம்பத்தில் ஜப்பான் மொழி பாடநெறி தொண்டமான் பயிற்சி நிலையத்தில் கற்பிக்கப்பட்ட போதும் வளவாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான சூழல் காரணமாக அப்பாடநெறி நிறுத்தப்பட்டது. இன்றைய சூழலில் மாணவர்களிடமிருந்தும் அதனை அறவிடமுடியாத நிலை காணப்படுகின்றது. இது தவிர தலைமைத்துவ பயிற்சிகள், மொழியறிவு, ஆளுமை திறன், தகவல் தொடர்பு, போன்ற மென்திறன்களை மேம்படுத்த சில வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.**

தகவல்கள், விளக்கங்கள் கிடைக்காமை, பயிற்சிநெறிகளில் இணைவதில் நிலவும் கடும்போட்டி, பொருளாதார வசதிகளின்மை, தொழிற்பயிற்சி மையங்கள், நிறுவனங்கள் என்பன தோட்டங்களுக்கு வெளியே தொலை தூரங்களில் அமைந்திருத்தல், தொழில் பயிற்சி தொடர்பான ஆர்வமின்மை போன்ற காரணங்களும் தொழில் பயிற்சியை பெறுவதில் தடையாகவுள்ளது.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் 1,368 பேர் தொழில் பயிற்சிகளை பெற்றுள்ளதுடன் அதில் 875 ஆண்களும், 495 பெண்களும் உள்ளனர்.

இதில் 1,113 பேர் பயிற்சிநெறியை முறையாக பூர்த்திசெய்து சென்றுள்ளதுடன் 255 பேர் இடைநடுவே பயிற்சிநெறியிலிருந்து விலகிச் சென்றவர்கள். தொண்டமான் பயிற்சி நிலையத்தில் தொழில் பயிற்சிகளை பெற்று 45 பேர் வெளிநாடு தொழிலுக்காக சென்றுள்ளதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அதில் ஆடை தயாரித்தல் சார் பாடநெறியை பூர்த்திசெய்த 16 பேரும் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளராக 04 பேரும் வீட்டு உபகரண பாரமரிப்பு தொழில்நுட்பவியலாளராக ஒருவரும் காய்ச்சி இணைத்தல் 04பேரும் ஹோட்டல் அறை பாரமரிப்பாளர், உணவு பரிமாறுபவர்கள் 04 பேரும் மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பாளராக 01 தச்சு வேலைகளுக்காக 05 பேரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.


**பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத் தலைவர் பாரத் அருள்சாமி**

சர்வதேச தொழிற்சந்தைக்கு ஏற்புடைய புதிய பாடநெறிகளை தொண்டமான் பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தவுள்ளோம். உதாரணமாக மோட்டார் , இலத்திரனியல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தவுள்ளோம். அதேபோல் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலம் குழாய் பொருத்துனர் பாடநெறிகளை புதிதாக அறிமுகப்படுத்தவுள்ளோம். சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் குழாய் பொருத்துனர்களுக்கு அதிக கேள்வி நிலவுகின்றது. தற்போது இரத்மலானையில் இப்பாடநெறி உள்ளது. இதனை நாங்கள் செப்டெம்பர் மாத இறுதியில் தொண்டமான் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக சிறிய கட்டணமொன்றும் அறவிடப்படவுள்ளது. அதேபோல் ஜப்பான் தூதரகத்துடன் இணைந்து ஜப்பான் மொழி பாடநெறியொன்றையும் ஆரம்பிக்கவுள்ளோம். அதற்கான பேச்சுவார்த்தைகளும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றுள்ளன. ஆரம்பத்தில் ஜப்பான் மொழி பாடநெறி தொண்டமான் பயிற்சி நிலையத்தில் கற்பிக்கப்பட்ட போதும் வளவாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான சூழல் காரணமாக அப்பாடநெறி நிறுத்தப்பட்டது. இன்றைய சூழலில் மாணவர்களிடமிருந்தும் அதனை அறவிடமுடியாத நிலை காணப்படுகின்றது. இது தவிர தலைமைத்துவ பயிற்சிகள், மொழியறிவு, ஆளுமை திறன், தகவல் தொடர்பு, போன்ற மென்திறன்களை மேம்படுத்த சில வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். ஆரம்ப கட்டமாக கொத்மலை, மஸ்கெலியா, புசல்லாவ போன்ற பகுதிகளில் செயலமர்வுகளை நடாத்தியுள்ளோம். இதனை ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் ஆங்கில மொழியறிவு வீதம் குறைவாக காணப்படுகின்றமையால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை மட்டுமன்றி உள்நாட்டு நிறுவனங்களில் கூட தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை பாடசாலை மட்டத்திலிருந்து மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் மத்திய மாகாணத்தில் கல்வி. பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலபாட பெறுபேறுகளை அதிகரிக்க பரீட்சை முன்னோடி கருத்தரங்குகளை நடத்தினோம். பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து எதிர்காலத்தில் spoken english பாடநெறிகளை நடாத்தவுள்ளோம். இதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. இவற்றை தமிழ் வளவாளர்களை கொண்டு நடாத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



வசந்தா அருள்ரட்ணம்

# பி விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் வெளியீடு!





ஒளி/ஒலிபரப்பு துறையில் 50 வருடங்களுக்கும் மேல் அனுபவம் கொண்டவரும் ரூபவாஹினி தமிழ்ப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியுமான பி. விக்னேஸ்வரனின் அனுபவ பகிர்வு நூலான 'நினைவு நல்லது' நூல் வெளியீடு நாளை மறுதினம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக ஊடக கற்கைத் துறை தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளதுடன் தலைமை உரையை யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் வழங்கவுள்ளார்.

அறிமுகவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும், வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் என். சண்முகலிங்கமும், ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும் வழங்கவுள்ளனர்.

நூலுக்கான நயவுரை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவு முன்னாள் பணிப்பாளர் எஸ். விஸ்வநாதனால் நிகழ்த்தப்படவுள்ளதுடன் நூலாசிரியரினால் ஏற்புரையும், சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஷ் நன்றியுரையையும் வழங்குவார்.






யாழ். நல்லூர் துர்க்கா மணிமண்டபதில் நடைபெற்ற கம்பன் கழக சிறப்பு இசை நிகழ்ச்சியில் செல்வி சாய்லக்ஷ்மி லோகேஸ்வரனின் வாய்ப்பாட்டு இசைக்கச்சேரி நடைபெற்றது. வாசுகி சுவாமிநாதன் சர்மா வயலின் வாசிக்க, பிரம்மஶ்ரீ AGS சுவாமிநாதன் சர்மா மிருதங்கத்திலும் சு. அனந்த நாராயணன் சர்மா கஞ்சீராவிலும் இசை வழங்கினர்.

## GCE O/L விடைத்தாள் திருத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை





க.பொ.த சாதாரண தர விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு திங்கள் 28ஆம் திகதி செவ்வாய் 29ஆம் திகதிகளில் விடுமுறை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. கடந்த 18ஆம் திகதி ஆரம்பமான இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தப்பணிகள் இன்று 27ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இதன்படியே விடைத்தாள் திருத்தப்பணிகளில் நேரடியாக ஈடுபட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு 28 மற்றும் 29ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தப்பணிகளில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்கள் விடுமுறையை பெற்றுக்கொள்வதற்காக தங்களது வரவு பதிவேடுகளை கையளிக்குமாறும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.






# கல்வியில் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட கொழும்பு ஸாஹிராக் கல்லூரி




(கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் ஸ்தாபகர் தினத்தை (22.08.1892) முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகிறது)

**இலங்கை வாழ் முஸ்லிம்களின் இதயமாய் விளங்கும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு, பதின்மூன்று தசாப்தங்களைக் கடந்து 131ஆவது வருடத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. முழு இலங்கையின் முஸ்லிம் பாடசாலைக் கல்வியின் மத்திய நிலையமாகவும், இஸ்லாமிய சிந்தனைகளைப் பரப்பும் கேந்திர மையமாகவும் நிலைபெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி நிறுவப்பட்டது.**

பௌத்த மக்களின் தலைவர்களும் தமிழ் மக்களின் தலைவர்களும், தமக்கெனத் தனித்துவம் வாய்ந்த பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்ட காலகட்டத்தில் முஸ்லிம்களும் இதே சிந்தனையுடன் செயற்படத் தொடங்கினர். இவ்வுயரிய நோக்கத்துக்காக முன்நின்று உழைத்தவர்களின் வரிசையில், அறிஞர் எம். சி. சித்திலெப்பை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், புரவலர் வாப்பிச்சி மரைக்கார், எகிப்தியப் பெரியார் ஒராபி பாஷா, என் டீ. எச். அப்துல் கபூர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஸாஹிராவின் வரலாற்றுப் பாதையில் அதன் வெற்றிக்கான ஸ்தாபகர்களின் பங்களிப்பும், தியாகமும் மகத்தானது. 131ஆவது வருடத்தில், பல சவால்களுக்கு மத்தியிலும், பல கல்விச்சாதனைகளோடு முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடும் இச்சந்தர்ப்பத்தில் அதன் ஸ்தாபகர்களை நன்றியுடன் நினைவுகூர வேண்டியதும், அவர்கள் எதிர்நோக்கிய சிரமங்களை அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமும், காலத்தின் தேவையுமாகும்.

கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அறிஞர் சித்திலெப்பை ஒரு சட்டத்தரணியாகவும், மாநகர சபை உறுப்பினராகவும் இருந்தது மட்டுமன்றி, சிறந்த எழுத்தாளராகவும் கல்வியியலாளராகவும் காணப்பட்டார். அரபு பாடப்புத்தகங்கள் பல எழுதியுள்ள இவர் "முஸ்லிம் நேசன்" என்னும் பத்திரிகையை நடாத்தி அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்கும், விழிப்புணர்வுக்கும் வித்திட்டார்.

முஸ்லிம்களுக்கான ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை கொழும்பில் ஆண்களுக்கான ஒரு மத்திய பாடசாலை என்பவற்றை அமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். 1880 இல் சித்திலெப்பை கண்டியிலிருந்து கொழும்பு வந்து முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக ஓர் இயக்கத்தைத் துவங்கிய போது அவருக்கு முழு ஆதரவு அளித்தவர் வாப்பிச்சி மரிக்கார் ஆவார். ஆயினும் பல எதிர்ப்புகளுக்கும் முகம் கொடுத்த சித்திலெப்பை மனமுடைந்து 1887இல் மீண்டும் கண்டிக்குத் திரும்பிவிட்ட நிகழ்வானது, அக்கால முஸ்லிம் மக்களிடையே நவீன கல்வி முறையை அங்கீகரிக்கச் செய்வது எவ்வளவு சிரமமாக காரியமாக இருந்தது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

1891 இல் மீண்டும் கொழும்பு வந்த அறிஞர் சித்திலெப்பை, அப்துல் அஸீஸுடன் இணைந்து கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை உருவாக்கினார். மருதானை பள்ளிவாசலில் நடைபெற்ற இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சித்திலெப்பை சமுதாய மக்களுக்கு கல்வியின் அவசியம் பற்றி உணர்ச்சிபூர்வமான உரையொன்றை ஆற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இக்காலப் பகுதியில் எகிப்திய தேசிய விடுதலை வீரர் ஒராபி பாஷா பிரித்தானிய அரசால் நாடு கடத்தப்பட்டு 1883இல் இலங்கை வந்தடைந்தார். இலங்கை முஸ்லிம்களிடையே புதிய கல்வி உத்வேகத்தை வழங்கி, சித்திலெப்பை, வாப்பிச்சி மரைக்கார், ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் ஆகியோருக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டார். அறிஞர் சித்திலெப்பையும் வாப்பிச்சி மரைக்காரும் தனிப்பட்ட பாடசாலைக்கான இடத்தைத் தேடிய வேளையில் மருதானை பள்ளிவாசல் கைவிடப்பட்டிருந்த நிலப் பகுதியை அவதானித்து மருதானை பள்ளிவாசல் பரிபாலனக் குழுவினரிடம் கேட்டுக் பெற்றுக் கொண்டார்.

இவ்விடத்தில் வாப்பிச்சி மரைக்கார் தன் சொந்த செலவில் ஆரம்பக் கட்டடமொன்றைக் கட்டிக் கொடுத்தார். 1892ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அல்மத்ரஸதுஸ் ஸாஹிரா என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு பெயரை இட்டவர் ஒராபி பாஷா ஆவார்.

இப்பாடசாலைக்கான இன்னொரு கட்டடம் 1905 இல் கட்டப்பட்டு ஒராபி பாஷாவினால் திறந்து வைக்கப்பட்டது. வாப்பிச்சி மரைக்காரின் தூண்டுதலின் பேரில் கரீம் ஜீ ஜாபிர் ஜீ இப்பாடசாலைக்கான மேலதிக கட்டடமொன்றைக் கட்ட நிதி வழங்கினார். 1911ஆம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு 1913 ஆம் ஆண்டில் ஸாஹிராக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது. ஓ. ஈ. மார்ட்டினஸ் கல்லூரியின் முதல் அதிபராக நியமிக்கப்பட்டார்.

பாடசாலையின் ஆரம்பகாலம் முதல் முகாமையாளராகக் கடமையாற்றி வந்த வாப்பிச்சி மரைக்கார் அவர்கள் 1917 ஆம் ஆண்டில் சட்டசபையில் முஸ்லிம் அங்கத்தவரான என். எச். ஏம். அப்துல் காதரிடம் முகாமைத்துவப் பொறுப்பை ஒப்படைத்தார். இவரது தூண்டுதலின் காரணமாக 1921ஆம் ஆண்டில் ரீ. பீ. ஜாயா அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். அவ்வேளையில் மிகவும் பின் தங்கியிருந்த ஸாஹிராவை ஒரு சில ஆண்டுகளில் உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமை ரீ. பீ. ஜாயாவையே சாரும். இக்காலகட்டத்தில் ஸாஹிராவின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட என். டீ. எச். ஆர்துல் கபூர், பி. பி. உம்பிச்சி மரைக்கார் ஆகியோர் கல்லூரிக்கான கட்டடங்களை நிறுவுவதற்கு நிதியுதவி வழங்கினர். என். டீ. எச். அப்துல் கபூர் பதினாறு வகுப்பறைகளைக் கல்லூரிக்காக கட்டிக் கொடுத்ததுடன் ஒரு பூரண விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் கட்டிக் கொடுத்து அதற்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கினார்.

மேலும் ஸாஹிராக் கல்லூரி மாணவர் விடுதிக்காக ஒரு கட்டடத்தை நிறுவ ஒரு லட்சம் ரூபாவையும் அன்பளிப்புச் செய்தார். அத்துடன் மகரகமையில் கல்லூரிக்கான பதினெட்டு ஏக்கர் காணியையும் அன்பளிப்புச் செய்தார்.

1947ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் ரீ. பீ. ஜாயா சமூக சேவைகள் அமைச்சராக நியமிக்கப்பட்டதன் காரணமாக அதிபர் பொறுப்பை அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸின் கரங்களில் ஒப்படைத்தார். ஜாயாவின் காலத்தில் வளர்ச்சியடைந்த ஸாஹிரா அறிஞர் அஸீஸின் காலத்தில் பெரு விருட்சமாகியது. ஸாஹிராவின் பொற்காலம் எனக் கூறுமளவுக்கு அஸீஸின் காலம் அமைந்திருந்தது. (1948 – 1961)

நாட்டில் ஏற்பட்ட கல்வித்துறை மாற்றங்கள் காரணமாக 1961ஆம் ஆண்டு கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் காரணமாக அஸீஸ் பதவி விலகிக் கொண்டார். தொடர்ந்து வந்த காலப்பிரிவில் பல இன்னல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. 1967ஆம் ஆண்டு ஸாஹிராக் கல்லூரி மீண்டும் அதன் பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டதும் ஷாபி மரைக்கார் அதன் அதிபராக பணியாற்றத் தொடங்கினார். கல்வியில் தேக்கமடைந்திருந்த கல்லூரி இவரது உழைப்பின் காரணமாக மறுமலர்ச்சி அடைந்தது எனலாம். எனினும் 1983ஆம் ஆண்டு ஷாபி மரைக்காரின் இராஜினாமாவின் பின்னர் மீண்டும் அந்த உன்னத நிலையை இழக்கத் தொடங்கியது. எனினும் கடந்த பல வருடங்களாக ஸாஹிரா பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. 1892 ஆகஸ்ட் 22 இல் தன் முதல் காலடியை எடுத்து வைத்த அன்னை ஸாஹிராவின் கல்விப் பயணத்தில் 131 வருடங்கள் தாண்டிய கல்லூரியின் வரலாற்றுத் தடங்களில் சந்தித்த சோதனைகளும், அதனைத் தாண்டிய சாதனைகளும் எண்ணற்றவை. இதயத்தில் என்றும் மறக்க முடியாதவை. அறிஞர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் மாணவர்கள் பயனடைந்த காலம் பொற்காலம் என வர்ணிக்கப்பட்டது. இடையில் பல தடைகளை எதிர்நோக்கிய ஸாஹிரா இன்று கல்வி, விளையாட்டு, கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றில் பல சாதனைகள் படைத்து அந்தப் பொற்காலத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. இறுதியாக க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 36 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 5 மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது, ஸாஹிராவின் தற்போதைய சாதனைகளுக்குச் சான்றாக விளங்குவதுடன் ஸாஹிராவின் பொற்காலத்தை நினைவூட்டுவதாகவும் அமைந்துள்ளது. 330 ஆசிரியர்களையும், 5500 மாணவர்களயும் கொண்ட எமது கல்லூரியானது அதிபர் ரீ. ரிஸ்வி மரிக்காரின் நிர்வாகத்தின் கீழும் பௌஸுல் ஹமீட்டை தலைவராகக் கொண்ட ஆளுனர் சபையின் வழிகாட்டலிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை, க. பொ. த. (சாதாரண தரம்) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சாதனைபடைத்து வருகிறது. புதிய உத்வேகத்துடன் வெற்றிப்பாதையில் பயணித்து வரும் ஸாஹிரா அதன் பழைய உன்னத நிலையை அடைவதற்கும், பொற்காலத்தை நோக்கிய பயணத்துக்கும் நாம் பிரார்த்திப்போம்.

**யாழ் அஸீம்**

# பாராளுமன்றத்தில் அல் குர்ஆனை ஆதாரங்காட்டி உரையாற்றிய முஸ்லிம் தலைவர்: ஏ.எச்.எம். அஸ்வர்



ஆன்மீகம், பொதுச்சேவை, அரசியல், ஊடகம், இலக்கியம், விளையாட்டு போன்ற பல் துறைகளில் பிரகாசித்த ஒருவர் தான் மர்ஹூம் ஏ. எச். எம். அஸ்வர். இலங்கைப் பாராளுமன்றத்தில் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து ஐந்து முறை நியமனம் பெற்று கின்னஸ் சாதனை புரிந்த ஏ.எச்.எம். அஸ்வர் இறைவனடி எய்தி இம்மாதம் 29 ஆம் திகதியுடன் ஆறு வருடங்களாகின்றன. 1937.08.08 அன்று பிறந்த அப்துல் ஹமீது முஹம்மது அஸ்வர் எண்பது வருடங்கள் வாழ்ந்து 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி காலமானார். 1950ஆம் ஆண்டில் இடதுசாரி அரசியல் கட்சியான லங்கா சமசமாஜிக் கட்சி மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த அஸ்வர் 1989ம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி தேசிய பட்டியல் மூலம் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆசீர்வாதத்துடன் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். அதன்பின் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர், பாராளுமன்ற விவகாரங்கள் ராஜாங்க அமைச்சராக பதவிகளை வகித்த மர்ஹூம் அஸ்வரின் பொது வாழ்வு பத்திரிகை துறையில் ஆரம்பமானது. லேக் ஹவுஸ் தினகரன் பத்திரிகையில் நுகேகொட செய்தியாளராக பணிபுரிந்து அரசியலில் உயர் இடத்திற்கு வந்த அஸ்வர், இலங்கை முஸ்லிம் அரசியலில் மறக்க முடியாத ஒருவராக திகழ்ந்தார்.

கொழும்பு ஸாகிரா கல்லூரியில் கலாநிதி ரி.பி. ஜாயாவின் வழிகாட்டலில் கல்வி கற்று வெளியேறினார். அதன் பின் சட்டக்கல்லூரிக்கு அனுமதி கிடைத்த போதும் போதிய நிதி வசதி இல்லாமையால் கல்வியைத் தொடர்வதை கைவிட்டு தொழில் செய்வதில் ஈடுபட்டார்.

அஸ்வரின் அரசியல் ஆர்வம் ஸாகிரா கல்லூரியில் ஆரம்பம் ஆனது. ஸாகிரா கல்லூரி மாணவ பாராளுமன்றமே இந்த ஆர்வத்தை வழங்கியது. அந்த பாராளுமன்றத்தில் பிரதமராக நியமிக்கப்பட்டார். பாராளுமன்ற சட்ட திட்டமான எஸ்கின் மேயின் புத்தகத்தின் விடயங்களை மனப்பாடம் செய்தார். பிற்காலத்தில் அவர் பாராளுமன்றத்தில் எஸ்கின் மேயின் கூற்றுகளை அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசினார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாராளுமன்ற விவகாரம் ஒன்று தொடர்பாக அஸ்வரிடம் தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றது பலருக்கும் நினைவிருக்கும்.

கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கல்வி கற்ற இவர் மூத்த முஸ்லிம் தலைவராக இருந்த மர்ஹூம் எம்.சி.எம். கலீல், எம். எச். முஹம்மது, எம்.ஏ. பாக்கீர் மாக்கார் ஆகிய முஸ்லிம் தலைவர்களுடன் மிகவும் நெருங்கி செயல்பட்டார். எம்.எச். முஹம்மது போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டபோது அவருடைய அந்தரங்கச் செயலாளராக பதவி வகித்தார். பாக்கீர் மாக்கார் சபாநாயகராக நியமிக்கப்பட்டபோது அவரது அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

மர்ஹூம் அஸ்வர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றவராக இருந்தார். இம் மும்மொழிகளிலும் பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்பன அஸ்வரின் உயர்வுக்குக் காரணமாக அமைந்தது. 2019இல் ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுக்கு ஆதரவாக 200க்கும் மேற்பட்ட பொதுக் கூட்டங்களில் அஸ்வர் உரையாற்றினார்.

2019இல் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியலில் எம்.பி.யாக நியமிக்கப்பட்டதற்கு இது ஒரு பிரதான தகைமையாக அமைந்தது. அன்று முதல் அஸ்வர் தொடர்ந்து 5 முறை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு நியமனம் பெற்றார். அஸ்வர் மொத்தமாக 19 வருடமும் ஒரு மாதமும், 29 நாட்களும் இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் அல் குர்ஆனையும் ஹதீசினையும் கூடுதலாக ஆதாரங்காட்டி பேசிய ஒரே முஸ்லிம் தலைவர் அஸ்வர் என வரலாற்றில் பதிவாகியுள்ளது. அஸ்வர் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக செயல்பட்டார். அகில இலங்கை முஸ்லிம் லீக்குடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்குடன் மிக நெருங்கி செயல்பட்டது. அஸ்வர் அதன் தலைவர்களான சிராஜுல் மில்லத் அ.க.ஆ. அப்துல் ஸமது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஆகியோருடன் நெருங்கிச் செயல்பட்டார். இவர் இலங்கை இந்திய முஸ்லிம்களின் இணைப்பு பாலமாகச் செயல்பட்டார். 7 தசாப்தங்களுக்கு மேலாக உரிமை மறுக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் தனது இறுதி மூச்சுவரை குரல் கொடுத்தார். மீலாது விழாக்களில் இந்திய உலமாக்கள் மற்றும் தலைவர்களை இலங்கைக்கு அழைத்துச் சென்று உரையாற்றுவதற்கு இவர் முக்கிய பங்களிப்பு செய்தார்.

இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு காப்பகமாக மர்ஹூம் அஸ்வர் திகழ்ந்தார். இவர் இலங்கையில் மட்டுமல்லாது உலக முஸ்லிம்களின் தலைவர்களின் விபரங்களை நன்கு அறிந்து வைத்திருந்த ஒருவராக இவர் திகழ்ந்தார். இலங்கையின் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சராக இவர் பணிபுரிந்தபோது இஸ்லாமிய கலைஞர்களை கௌரவிக்கும் 'வாழ்வோரை வாழ்த்துவோம்' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினார். இவருடைய காலத்தில் 60க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்கு அரபு மொழி பட்டப் பெயர்களுடன் பணமுடிப்புகள் வழங்கி அவர்களது சேவைக்கு அரச கௌரவம் வழங்கி கலைஞர்களுக்கு மதிப்பளித்தார். அஸ்வரின் மறைவுக்குப் பிறகு இந்த வாழ்வோரை வாழ்த்தும் திட்டம் தொடரவில்லையென்பது கலைஞர்கள் மத்தியில் இன்றும் இருக்கும் கவலையாகும். மர்ஹூம் அஸ்வரின் வாழ்வில் பொற்காலம் அவர் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பதவி வகித்த காலம் ஆகும். அந்த அமைச்சின் ஊடாக வியக்கதக்க பணிகளை நிறைவேற்றினார். மாவட்ட மட்டத்தில் தேசிய மீலாது விழாக்களை கொண்டாடும் திட்டத்தை அவரே ஆரம்பித்து வைத்தார்.

மீலாது விழா நடக்கும் மாவட்டத்தின் முஸ்லிம்களின் வரலாற்றினை ஆவணப்படுத்தும் முயற்சி இவருடைய காலத்தில் ஆரம்பமானது. 1100 வருடத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் தொன்மையான வரலாறு ஆவணப்படுத்தப்படாத நிலையில் இவரது இந்த முயற்சியால் பல மாவட்டங்களில் முஸ்லிம்கள் வரலாறு ஆவணப்படுத்தப்பட்டது. 50 வருடங்களுக்கும் மேல் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்காக உழைத்த அஸ்வரை அக் கட்சி கைவிட்டதென கூறி அவர் பின்பு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கினார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# குணநலப்பேற்றுக்கு வழிகோலும் அறிவுத் திருக்கோயில்கள்

## இலங்கை மனவளக்கலை மன்ற அறிவுத் திருக்கோயில் திறப்புவிழா சிறக்க வாழ்த்துகள்



அருள்நிதி. பத்மஸ்ரீ. S.K.M.மயிலானந்தன் – உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்



அ. மதுரைவீரன் இலங்கை மனவளக்கலை மன்ற தலைவர்




மெய்யறிவு பெறாது பிற அறிவெல்லாம் பெற்றிருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை என்கிறார் அறிஞர் திருமூலர்.

இதே போன்று சித்த வேதம்| எனும் நூலில் சுவாமி சிவானந்த பரமஹம்சர் "தன்னை உணராத படிப்பு எதுவாயினும் பொருளற்றதே; தன்னை உணர, தன்னைத்தான் படிக்க வேண்டும்." என்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த மகாகவி பாரதியார் (1882-1921) அறிவே தெய்வம் என்று வேதங்களும், சுருதிகளும் கூறியதை கேட்டதில்லையா என சமுதாயத்தை வினவினார். இருபதாம் நூற்றாண்டில் அவதரித்த, அறிஞர் திருமூலரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்ட, வேதாத்திரி மகரிஷி (1911_2006) இறையைப் பற்றிய தெளிவான விளக்கங்களைக் கூறினாலும், |சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்| என்கிறார். 1992ஆம் ஆண்டில் உறுதியாக "அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே தெய்வம்" என்கிறார்.

அறிவே தெய்வம் என்று அவ்வாறு உறுதியாக கூறுவதற்கான காரணம் மகரிஷி கூறுகின்ற தெய்வம் பற்றிய விளக்கம் விஞ்ஞான அடிப்படையிலும், அறிவுபூர்வமாகவும், மனித அறிவிற்கு ஏற்புடையதாகவும், பொருத்தமானதாகவும் அறிவே தெய்வம் என உறுதியாகக் கூறினாலும் மகரிஷி வழக்கமாகக் கூறும் ஆலோசனை , நான் கூறுவது தகவல் மட்டுமே. அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பிறகு அதற்கேற்றவாறு உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் ''Information, Confirmation, Transformation' என்பது அவர் அறிவே தெய்வம் என உறுதியாகக் கூறியதற்கும் பொருந்தும். அவர் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நம்மை உறுதிப்படுத்திக் கொள்ளவே, சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய் என்கிறார்.

'அறிவே தெய்வம்| என்பதை உறுதி செய்துகொள்வதில் மனித குலத்துக்கு இருக்கின்ற ஐயத்தை இயற்கை (இறை), நீக்கித் தெளிவுபடுத்துவதற்காக இணைகோடுகளாகவே இருந்து வந்த விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைய வேண்டும் என்கின்ற தேவையை உலகப்புகழ் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் (1879_1955) வாயிலாக ""Science without Religion is lame, Religion without Science is blind'' என்கின்ற எண்ணத்தை எழுப்பி, ஐன்ஸ்டீன், பாரதியார் இருவருக்கும் பின்னவரான வேதாத்திரி மகரிஷி வாயிலாக அறிவிற்கான அறிவுபூர்வமான உறுதியான இறுதியான விளக்கம் அளித்து "அஞ்சுவதேன் துணிந்துரைப்போம்! அறிவே தெய்வம்" எனவும் உரைக்க வைத்தது இறை. இதுவன்றோ இயற்கையின் (இறை) திருவிளையாடல்.

இத்திருவிளையாடல், மேற்குறித்த மூவரும் சமகாலத்தில் வாழ்ந்ததால் மெய்ப்பொருள் விளக்கம் ஒருவரிடமிருந்து அடுத்தடுத்து மற்றவர்களிடம் விரிவாகித் தெளிவாகியது எனலாம். இந்நிகழ்வு இறைக்கு எவ்வாறு சாத்தியமாகியது? இறை அறிவாக இருப்பதனால்தான் சாத்தியமாகியது. இயற்கையின் ஆதிநிலை அறிவாக இருந்ததால்தான் சாத்தியமாகியது. வார்த்தைகளால் கூற முடியாத சிறப்பு வாய்ந்த இத்தகைய அரூபமான அறிவாகிய இறையை மனிதன் தன் அறிவால் நேரிடையாகவே வழிபட பிரத்தியேகக் கோயில் அவசியம் தானே!

எனவே இயற்கை (அறிவு, இறை) 1984இல் தனக்கென ஒரு கோயிலை நிறுவ வேதாத்திரி மகரிஷி யை திருக்கருவியாகக் ஏற்படுத்திக்கொண்டது. அதுதான் ஆழியாறிலுள்ள உலகின் முதல் அறிவுத்திருக்கோயிலாகும். அதனைத் தொடர்ந்து, மகரிஷியின் (இயற்கையின் இறையின்) எண்ணம் ஈடேறும் வகையில் உலகெங்கிலும் ஆங்காங்கே அறிவுத்திருக்கோயில்கள் உருவாகி வருகின்றன. இயற்கையே அறிவே, இறையே உருவாக்கிய அறிவுத்திருக்கோயில்கள் வரிசையில் ஒன்று இப்போது கொழும்பில் திறக்கப்பட இருக்கும் அறிவுத்திருக்கோயில் என்று அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மனிதன் துன்பமில்லாமல் வாழ்வதற்கு திருவள்ளுவர் கூறும் பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல் அவசியமாகின்றது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## குணநலப்பேற்றுக்கு... (16 ஆம் பக்கத் தொடர்)

மனிதன் மனிதனாக வாழ்வதற்கான ஒழுக்கவியல் கல்வி அவசியமாகின்றது. எனவே ஒழுக்கவியல் கல்வியைப் போதிக்க உருவாக்கப்பட்ட புனித இடங்களே அறிவுத் திருக்கோயில்கள்.

மக்களில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 100 சதவீதத்தை எட்ட வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் கல்வித்துறை, ஆவன செய்து வருவதுபோல், மனித அறிவின் முழுமைப்பேற்றிற்கு ஒழுக்கவியல் மாண்பியல் கல்வியை கற்பிக்கும் திருவேதாத்திரியமும் மனிதகுலம் மெய்விளக்கத் தெளிவு பெறுவதற்கு ஏதுவாக வினைப்பதிவில் முன்பின்னாய் உள்ளதை சரி செய்து மனிதகுலத்தின் வினைப்பதிவுகளை நல்வினைப் பதிவுகளாக உயர்த்த, அறிவுத் திருக்கோயில்களை ஏற்படுத்தி, பேறுகளில் சிறந்த தான, உன்னதமான, புனிதமான குணநலப்பேற்றினை அடையும் வழிகளைக் கூறுகின்றது. குணநலப்பேறு என்பதில் பேறு என்பது என்ன? பெறுவது பேறு. மனிதன் வாழ்நாளில் பலவற்றைப் பெறுகிறான். பெறுவது பேறு என்றாலும் பெறுவதெல்லாமே பேறுகள் ஆகா. ஆனால் அவற்றில் ஒருசில மட்டுமே பேறு எனக் கருதப்படுகின்றது. பெறுவதில் அரிய ஒன்றுதான் பேறாகக் கருதப்படுகின்றது.

அரிதான மனிதப்பிறவியின் நோக்கம் பேறுகளில் அரிதான மெய்விளக்கப் பேற்றினைப் பெற்று மனிதன் வாழும்போதுதான் மற்றெல்லா உயிர்களைக் காட்டிலும் (ஓரறிவிலிருந்து ஐந்தறிவு வரை) மனிதப்பிறவியை அரிய பிறவியாகக் கருத முடியும். மற்ற உயிர்களுக்குக் கிடைக்காத பேறு மனிதன் மெய்விளக்கம் பெறுவது. மெய்விளக்கம் பெறுவதில் பூரணத்துவம் எய்துவதற்கு, மனிதன், குணநலப்பேற்றைப் பெற்று அறிவின் முழுமையில் வெற்றியடைய வேண்டும்.

குணநலப்பேறு, என்கின்ற சொல்லைக் கேட்பதே காதுகளுக்கு இனிமையாக உள்ளதால், தற்சோதனைப் பயிற்சிகளால் குணநலப்பேற்றையே பெற்றுவிட்டால் எப்போதுமே ஆனந்தம்தான். சிந்தனையையே மூச்சாகக் கொண்ட வேதாத்திரி மகரிஷி, "சிந்தனையின் பயனாக அறுகுணச் சீரமைப்பு என்ற ஒரு பெரிய உலக நலக் கருத்து உருவாகியது; அக்கருத்தே தற்சோதனை எனும் உளப்பயிற்சி முறையாக உருவானதற்கு காரணம்" என்கிறார். குணநலப்பேறு மூன்று சொற்களைக் கொண்டதால், அம் மூன்று சொற்களையும் பிரித்து தனித்தனியாக பொருள் கொண்டால் மகரிஷி கூறும் குணநலப்பேற்றின் மகத்துவம் விளங்கிவிடும்.

மனித அறிவு, அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் ஆகிய மூவகை ஏழ்மையில் சிக்கித் தவிக்கின்றது. இம்மூன்று ஏழ்மைகளாலேயே மனிதன் துன்புறுகின்றான். உணர்ச்சி நிலையால் ஏற்படுகின்ற பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய அறுகுணங்களை சீரமைக்கவே மனவளக்கலை எனும் அருமருந்தை வேதாத்திரி மகரிஷி வாயிலாக இயற்கை (இறை) மனிதகுலத்துக்கு அளித்துள்ளது.

மனவளக்கலை எனும் அருமருந்தால் அறுகுணங்கள் சீரமைக்கப்படும்போது அதன் விளைவுகளான நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, சமநோக்கு, மன்னிப்பு ஆகிய மனித மாண்பினை உயர்த்தும் நற்பண்புகள் மனிதனிடம் மேலோங்கி விலங்கினப் பண்புகள் எழா வண்ணம் எப்போதும் அயரா விழிப்புணர்வு மனிதனை ஆளுமை செய்யும். எனவே மனிதனின் தரம் உயரும். ஆதிமனிதனிடத்திலிருந்து கருத்தொடராக வந்துள்ளவன்தான் தற்போதைய மனிதனும். இதற்கிடையில் எங்கேயும் தொடர் விட்டுப்போகவில்லை. ஆகவே விலங்கினப்பண்பு மனிதர்களிடம் மறைந்தோ அல்லது மேலோங்கியோ உள்ளது. இதுவரை பல்லாயிரம் பிறவிகளாக மனிதனுக்கு விலங்கினப்பண்பை செயலற்றதாக்கும் பயிற்சி கிட்டவில்லை. இப்போது திருவேதாத்திரியத்தின் தோற்றத்தால் விலங்கினப்பண்பை செயலற்றதாக்கும் அறுகுணசீரமைப்பு பயிற்சி கிட்டுவதால் விலங்கினப் பண்புகள் எழாநிலையில் விழிப்புடன் மனிதன் மனிதனாக வாழ்வான். இது கிடைத்தற்கரிய பேறுதானே! ஆகையால் அறுகுணச்சீரமைப்பின் வாயிலாக மனிதன் குணநலப்பேற்றினை பெற்று அறிவின் முழுமைப்பேற்றில் வாழ்வாங்கு வாழ்வான்.

மனிதகுலம் உய்வதற்குத் தேவையான அறிவுத் திருக்கோயில்களை உருவாக்கும் புனிதப்பணியில் இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை அன்பர்களை ஈடுபடுத்தி, உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கச் செய்து, இயற்கையே (இறையே அறிவே) தனக்கென ஏற்படுத்திக் கொண்ட அறிவுத்திருக்கோயில்கள் வரிசையில், இலங்கை மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோயில் நிறுவப்பட்டு திறப்பு விழா கொண்டாடப்படுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. நிர்வாகிகள் மற்றும் மன்ற அன்பர்களின் அறிவுத்தொண்டு பாராட்டுதற்குரியது. எனது உளங்கனிந்த பாராட்டுகள்.

## பாராளுமன்றத்தில்... (16 ஆம் பக்கத் தொடர்)

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் அவர் ஊடக ஆளாட்சி அதிகாரியாக நியமிக்கப்பட்டதுடன் பின்பு தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியில் அஸ்வருக்கு கணிசமான பங்களிப்பு உண்டு. மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பத்துக்குரிய தலைவராகவும் அஸ்வர் திகழ்ந்தார். அஸ்வரின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் பேரிழப்பாகும். ஏனெனில் அஸ்வரின் மும்மொழியாற்றலும் எவருக்கும் தயங்காது உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும் அக்காலத்தில் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று கொடுப்பதற்கு உதவியது. எல்லா தலைவர்களையும் நேரில் அறிந்த ஒரு தலைவராக அஸ்வர் இருந்தார். தனது நல்லுறவின் மூலம் சிங்கள, தமிழ்த் தலைவர்களுடன் முஸ்லிம் சமூகத்தை இணைப்பதில் அஸ்வர் சிறந்த பங்களிப்புச் செய்தார். நாட்டுக்காகவும் சமூகத்துக்காகவும் அளப்பரிய பங்காற்றிய அஸ்வர் நேர்மையான ஒரு தலைவராக மதிக்கப்பட்டார்.

## ரூபவாஹினி (03 ஆம் பக்கத் தொடர்)

ஊழியர்களின் வைத்திய காப்புறுதி பாதிப்புக்குள்ளானது. இதை யார் பார்த்துக்கொள்வது?

நாம் ஐந்து தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்திருக்கின்றோம். நாங்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பாகவே செயற்படுகின்றோம். இது விற்பனை அல்ல என்பதை நாங்கள் புரிந்து கொண்டிருக்கின்கிறோம். அதேபோன்று தற்போதைய தலைவர் எம்மை அழைத்து இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டு விட்டுத்தான் ஐ செனல் ஒளிபரப்பு நேரத்தை குத்தகைக்கு விட தீர்மானித்தார். அதனடிப்படையில்தான் ஆறு மாத காலத்திற்கு நிறுவனத்தின் ஐ செனல் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகளை வழங்க முடியாது. ஒரு தடவை மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது. இன்னும் பல சந்தர்ப்பங்களில் மின்சார சபையினர் மின்சாரத்தைத் துண்டிப்பதற்காக வந்தார்கள். எமக்குள் வாதப் பிரதிவாதங்கள் இருக்க முடியும். எவ்வாறிருந்தாலும் நாம் முதலில் நிறுவனத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" ஐ செனலின் ஒளிபரப்பு நேரத்தை குத்தகைக்கு விடுவது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இப்போது ஓரளவுக்குத் தணிந்துள்ள போதிலும் அதன் உண்மைத் தன்மையினை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக தெளிவான நடவடிக்கையை உடனடியாகப் பின்பற்ற வேண்டும்.

---

LECO

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

### காணியொன்று வாடகைக்கு / குத்தகைக்குத் தேவை கொள்ளுப்பிட்டி

**விலைக்கோரல் இல. LECO/23/NCB/PR4/173**

பின்வரும் முகவரியிலிருந்து 350 மீற்றருக்குள் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான, பாதுகாப்பு காவற் கூடம் மற்றும் மலசலகூட வசதிகள் சகிதம் காலி வீதிக்கு முகப்பாக அல்லது அதற்கு அண்மையில் அமைந்துள்ள காலி வீதிக்கு இலகுவில் பிரவேசிக்கக் கூடிய 30-40 பேர்ச்சிற்கிடையிலான மேடு பள்ளமற்ற வெற்றுக் காணியொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உடனடியாகத் தேவை. காணியைச் சுற்றிலும் வேலி அல்லது மதிலொன்று இருத்தல் வேண்டும்.

உத்தேச வாடகை அல்லது குத்தகைக் காலம் 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023-09-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விலைமனுக்கள் திறக்கப்படுவதானது, விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து இடம்பெறும். இந்தப் பெறுகைக்கு இயைபான விலைமனு ஆவணங்களிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களுடன் முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- விலைக்கோரல் ஆவணத்தில் (கேள்விப் படிவத்தில்) வேண்டப்பட்டுள்ள சகல விபரங்கள்
- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை / குத்தகை தொகை
- விதிகள் மற்றும் நிபந்தனைகள் சகிதம் காணியின் உறுதி, கட்டிடத்தின் விபரங்கள் மற்றும் காணி வரைபடத்தின் பிரதியொன்று

இந்தப் பெறுகைக்கான விலைமனு ஆவணங்களை www.leco.lk ("Tender Notice" Section) இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது www.promise.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது LECO பெறுகைப் பிரிவை 011-2371637 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடலாம். (தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரத்திற்கு முன் வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்)

இடப்பரப்பின் உரிமையாளர் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து 011-2371600 என்ற தொலைபேசி எண்ணினூடாக மனித வளங்கள் மற்றும் நிர்வாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனி,**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**இல. 411, காலி வீதி, கொழும்பு- 03**

PROCUREMENT NOTICE
www.leco.lk

LECO

---

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

### தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக பாதுகாப்பு சேவை வழங்கல் 2023/2024

### விலைமனு அறிவித்தல்

2023/2024 ஆம் ஆண்டுக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து போட்டி ரீதியான விலைமனுகோரல் முறைக்கு அமைய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கீழ் குறிப்பிடப்பட்ட அடிப்படை தகைமையை பூர்த்தி செய்கின்ற நிறுவனங்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியம்.
   - i. இலங்கையில் வர்த்தக பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றாக 03 ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
   - ii. பாதுகாப்பு சேவை வழங்குவது தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு, அது தொடர்பில் குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட கடிதத்துடன் சேவை வழங்கிய நிறுவனத்தில் இருந்து வழங்கப்படும் கடிதம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
     - அரச நிறுவனம்/ தனியார் நிறுவனம்
   - iii. நெருங்கிய முந்திய வருடத்திற்காக தமது வர்த்தக பதிவு பெயரின் கீழ் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அனைத்து பாதுகாப்பு ஒழுங்குபடுத்துனர் மற்றும் பாதுகாப்பு பரிசோதகர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு பணத்தை செலுத்தி இருப்பதாக இலங்கை மத்திய வங்கியில்/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் சீ அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். (2021/ 2022 ஆம் ஆண்டுக்கு மாத்திரம்)
   - iv. நெருங்கிய முந்திய வருடத்திற்காக பாதுகாப்பு சேவை நிறுவனம் என்ற பெயரில் வெட் வரி/ வருமான வரி செலுத்தியுள்ளதாக அத்தாட்சியை உறுதி செய்தல் வேண்டும். (வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயரிலும், தனிநபர்/ கூட்டு' நிறுவனத்தின் அனைத்து கூட்டாண்மையாளர்களின் பெயரிலும், நெருங்கிய முந்திய வருடத்திற்கான வருமான வரி, வெட் வரி செலுத்தி உள்ளது என்பதற்கு எழுத்துமூல ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (2021/ 2022 ஆம் ஆண்டுக்கு மாத்திரம்)
   - v. ரூபா 300,000.00 பெறுமதியான வங்கி பிணை அல்லது இலங்கை வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிதி நிறுவனம்/ பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் இருந்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயருக்கு எழுதப்பட்ட விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற திகதியில் இருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியான வகையில் பெற்றுக்கொண்ட விலைமனு பிணை முறி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையேல் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயருக்கு இலங்கை வங்கியில் 78088835 என்ற கணக்கு இலக்கத்திற்கு மேலுள்ள பெறுமதிக்கு பொருந்தும் பணத்தை வைப்புச் செய்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சிறாப்பர் பிரிவில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை அதற்காக சமர்ப்பிக்க முடியும்.
02. விலைமனு விண்ணப்பங்களை 2023.08.28 ஆம் திகதி தொடக்கம் 2028.09.18 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இல. 47, டபிள்யு.ஏ.டி ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகை துறைக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு விண்ணப்பத்தை பெறுவதற்கு மீளளிக்கப்படாத ரூபா 3000.00 கட்டணம் ஒன்றை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியின் 78088835 என்ற கணக்கிற்கு வைப்புச் செய்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சிறாப்பரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - a. வர்த்தகப் பதிவு சான்றிதழ்
   - b. 06 மாதங்களுக்குள் கீழுள்ளவாறு பிரதேச செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட (170 பொது வடிவத்தின்) பெறுமதியுடன்
   - c. 03 ஆண்டுகள் அனுபவத்தை உறுதி செய்வதற்கான குறித்த ஆவணங்கள்
03. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2023.09.19 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இல. 47, டபிள்யு.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் அல்லது இல. 47, டபிள்யு.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்கு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனு ஆவணத்தை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023/2024 ஆம் ஆண்டுக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பாதுகாப்பு சேவை வழங்கல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் காணாமல்போன விண்ணப்பங்கள் தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பொறுப்பேற்காது என்பதோடு தாமதித்து கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. விலைமனு ஆவணங்களை 2 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறாக உறைகளில் இட்டு அந்த இரு உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 2023.09.19 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு இந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். இது தொடர்பில் மேலதிக விபரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகை நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். (தொ.பே. 011 2 303 157/ 011 2 303 124)
06. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை**
**நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10.**

---

## விலைக்கோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| விலைக்கோரல் பெயர் மற்றும் இலக்கம் | அளவிட்டுச் சபை<br>04/10/001/0001/001 |
| விலைக்கோரல் விபரம் | ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட, பழுதுபார்க்கமுடியாத மற்றும் நன்னிலைப்படுத்த முடியாத பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அகற்றுவதற்குமான விலைக்குறிப்பீடுகளுக்கான அழைப்பு |
| உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் | மேசைகள், அலுமாரிகள், இறாக்கைகள் மற்றும் கதிரைகள் உள்ளடங்கலாக அலுவலக தளபாடங்களையும், நிழற்பட பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், நிலைமின் விசிறிகள், தொலைபேசிகள், கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள் போன்ற அலுவலக உபகரணங்கள் மற்றும் சமையலறை அலுமாரிகள், உறையவைக்கும் கருவி மற்றும் குளிர்சாதனப்பெட்டி போன்ற சமையலறை உபகரணங்கள் போன்றன. |
| விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் | 2023 ஓகத்து 23 **தொடக்கம்** 2023 செத்தெம்பர் 06 **வரை**<br>வங்கி வேலை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரை<br>**அமைவிடம்:** இல 25, வைட்வேஸ் கட்டடம், சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணைகள் கருமபீடம்.<br>(மேலும், விலைக்குறிப்பீட்டு ஆவணங்களை இலங்கை மத்திய வங்கியின் இணையதளத்திலும் (www.cbsl.gov.lk) ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் இணையதளத்திலும் (www.epf.lk) தரவிறக்கம் செய்யலாம்) |
| பொருட்களைப் பார்வையிடுதல் | 2023 ஓகத்து 28 **தொடக்கம்** 2023 செத்தெம்பர் 04 **வரை**<br>வங்கி வேலை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை<br>**அமைவிடம்:** இல. 58, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் (தொகுதி இலக்கங்கள் 01 தொடக்கம் 60 மற்றும் 67, 68) மற்றும் இல. 25 வைட்வேஸ் கட்டடம், சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 அமைந்துள்ள ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திலும் (தொகுதி இலக்கங்கள் 61 தொடக்கம் 66) |
| விலைக்குறிப்பீட்டை மூடுதலும் திறத்தலும் | **திகதி:** 2023 செத்தெம்பர் 06 **நேரம்:** பி.ப 02.30 மணி<br>**அமைவிடம்:** ஜோன் எக்ஸ்டேர் குழு அறை, இல.30, இலங்கை மத்திய வங்கி, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. |

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள் மற்றும் அவர்களது உடனடிக் குடும்ப உறுப்பினர்கள் இவ்விலைக்கோரலுக்கு விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு தகைமையற்றவர்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு
மூத்த உதவிக் கண்காணிப்பாளரைத் தொடர்பு
கொள்ளவும் 011-2477969 அல்லது 011-2477237

கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்

---

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான பெறுகை அறிவித்தல்**
**(ஒப்பந்த இல.: NDL/MA/Eq-B/2023)**

01. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) பிரிவுகளில் ஒன்றான தேசிய மருந்துத் தரம் உறுதிப்படுத்தல் ஆய்வுகூடத்திற்காக (NMQAL) பின்வரும் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுகாதார அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சார்பில், தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இல. | உபகரணம் | அளவு |
|---|---|---|
| 01 | Dry Block Heater | 01 |
| 02 | Hot Plate with Magnetic Stirrer | 03 |
| 03 | pH Meter with printer | 03 |
| 04 | UV – Visible Spectrophotometer | 01 |
| 05 | Atomic Absorption Spectrophotometer | 01 |
| 06 | Digital Polarimeter | 01 |
| 07 | Centrifuge | 01 |

02. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (GOSL) பெறுகை வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும் என்பதோடு விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகைமை தேவைகளை பூர்த்தி செய்த அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.
03. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 10, நொரிஸ் கெனல் வீதி, இல. 120, NMQAL/ பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மேலுள்ள முகவரியில் NMQAL இன் அலுவலகத்தில் 2023 ஓகஸ்ட் 28 ஆம் திகதியில் இருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (0900 மணி – 1500 மணி) கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொலைபேசி: 2687741/3/4, தொலைநகல்: 2689704), ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கீழுள்ள பந்தியில் (4) விபரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
04. மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய வைப்பு ரசீது ஒன்றுடன் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கொழும்பு 02, டபிள்யு.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை/ கணக்காளரிடம் இருந்து (தொலைபேசி 011-2303157) வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 2023 ஓகஸ்ட் 28 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 20 ஆம் திகதி வரை ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும். கட்டணமானது இலங்கை வங்கியின் 78088835 என்ற கணக்கு இலக்கத்திற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பெயரில் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.
05. உங்களது கூறுவிலைகளை 2023 செப்டெம்பர் 20 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, 47, டபிள்யு.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவும் அல்லது அதே முகவரியில் கணக்காளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படாது என்பதோடு நிராகரிக்கப்படும்.
06. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணத்தில் விலைமனு தரவு தாளில் (BDS) குறிப்பிடப்பட்டவாறு இலங்கை ரூபா தொகையில் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள படிவத்தை பயன்படுத்தி வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்களின் செல்லுபடிக் காலத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு விலைமனு பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
08. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
09. மேலுள்ள பந்தியில் (4) தரப்பட்டுள்ள முகவரியில் NMRA அலுவலகத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சேர்ப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது எந்த ஒரு இழப்புக்காகவும் NMRA பொறுப்பேற்காது.

**தலைவர்**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை**
**120, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10**
**2023 ஓகஸ்ட் 27**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Uva Wellassa University

### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்

### UWU/G/NCB/FOM/23/01

கீழே விபரிக்கப்பட்டவாறு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக **மருத்துவ பீடத்திற்கு மருத்துவ உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்** ஆகியவற்றிற்காக தகுதி மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
2. விலைமனுதாரர் இலங்கையில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பதுளை, பசறை வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக களஞ்சியசாலைகள் மற்றும் வழங்கலுக்கான பிரதி நிதியாளரிடமிருந்து 055-2226475 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் மற்றும் 055-2226633 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் பெற்று பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் 2023.08.28 ஆம் திகதியிலிருந்து 2023.09.18 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரொக்கப் பணத்தில் 8,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பதுளை, பசறை வீதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக களஞ்சியசாலைகள் மற்றும் வழங்கலுக்கான பிரதிநிதியாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பல்கலைக்கழகத்தின் **www.uwu.ac.lk** என்ற இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை விலைமனுதாரர் பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் விலைமனுதாரர் முழுமையான ஆவணங்களை ''ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில்'' வழங்கப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணமான 8,000 இலங்கை ரூபாவிற்கான வங்கி வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது 3114820 என்ற ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கணக்கிலக்கத்திற்கு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணக்கொடுப்பனவை மேற்கொள்ளலாமென்பதுடன் பணப்பற்றுச்சீட்டின்/ பண வரவுத் துண்டின் வாடிக்கையாளரின் பிரதியானது விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். ஆவணங்கள் 2023.09.18 ஆம் திகதி வரையும் கொள்வனவு செய்யப்படலாம்.
5. **2023 செப்டெம்பர் 19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர்,திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை** என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply, Delivery, Installation and Commissioning of Laboratory Equipment for the Faculty of Medicine, Uva Wellassa University" என்ற சொற்கள் குறித்துரைக்கப்படல் வேண்டும்.**
6. பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதும் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்** என முகவரியிடப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இனம் | அம்ச இல. | அம்சத்தின் பெயர் | அளவு (எண்ணிக் கையில்) | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| பொதி 01 | 01. | Auto Clave (Bench top) | 2 | 267,600.00 |
| | 02. | Digital Top Loading balance | 2 | |
| | 03. | Analytical balance | 1 | |
| | 04. | Bunsen Burners | 20 | |
| | 05. | Centrifuge machine (15ml and 50ml Tubes) | 1 | |
| | 06. | Centrifuge machine – Eppendorf (micro-centrifuge) tubes | 1 | |
| | 07. | Cyclo/Vortex mixer | 2 | |
| | 08. | Distillation water plant | 1 | |
| | 09. | Magnetic stirrers with hot plate | 3 | |
| | 10. | (2-20) µl Micro pipettes | 5 | |
| | 11. | (2-200) µl Micro pipettes | 5 | |
| | 12. | (100-1000) µl Micro pipettes | 5 | |
| | 13. | (0.5-10)) µl Micro pipettes | 2 | |
| | 14. | Hot Air Oven | 2 | |
| | 15. | pH meter (bench top) | 3 | |
| | 16. | Double beam Spectrophotometer (UV/Visible) with 5 cuvettes | 1 | |
| | 17. | Water bath (Boilding) | 1 | |
| | 18. | Vacuumed Pump | 2 | |
| | 19, | Heating Mantle 500ml | 1 | |
கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் ஐயா உலகறிந்த, புகழ்பூத்த தனித்துவமான ஆளுமை மிக்கவர். தமிழ்நாடு புதுக்கோட்டை கம்பன் கழகத்தால் இவ்வாண்டு கம்பன் விழாவின் போது "கம்பன் மாமணி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலக்கியம், சமயம், தத்துவம் என பலதுறைகளிலும் தனக்கென தனியிடம் பிடித்துள்ள கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா, அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணக் கம்பன் கழகம் என்பவற்றை நிறுவி அவற்றின் மூலம் அளப்பரிய சேவைகள் செய்து வருகிறார். சர்வதேசம் அறிந்த சிறந்த பேச்சாளரான இவர் உரை நிகழ்த்தாத கம்பன் விழாக்கள் உலகில் எங்கும் நடப்பதில்லை எனும் அளவுக்கு, பல உலக நாடுகளில் சிறப்புரைகள் ஆற்றி வருகிறார். மரபிலக்கியங்களிலும் சைவ சித்தாந்தத்திலும் சிறந்து விளங்கும் இவர் இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, கனடா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பல தொடர் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார்.



வருடம் தோறும் இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கம்பன் விழாக்களையும், இசைவிழாக்களையும், நாட்டிய விழாக்களையும் இவர் நடத்தி வருவது உலகறிந்த விடயம். கொழும்பில் பிரமாண்டமாக இவர் நடத்தும் கம்பன் விழாக்களுக்காக காத்திருப்பவர்கள் தொகை மிக அதிகம்.

அழியா அழகு, பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள், உலகம் யாவையும், மாருதி பேருரைகள், விஸ்வரூபம், செல்லும் சொல்வல்லான், ஜெயராஜ்ஜியம், உன்னைச் சரணடைந்தேன் உட்பட பல நூல்களை எழுதியுள்ள இவர், "உரலார் கேள்வியும், உலக்கையார் பதிலும்" எனும் தலைப்பில் ஜனரஞ்சகமான கேள்வி, பதில் பகுதியொன்றை எழுதி வருகிறார். நிகழ்கால விடயங்கள் தொடர்பில் அருமையான விளக்கங்கள் இதில் இடம்பெறுகின்றன.



தமிழ்நாடு அரசின் 'கம்பர் விருது', தருமைபுரம் ஆதீனம் வழங்கிய 'சித்தாந்த கலாநிதி' விருது, திருவாவடுதுறை ஆதீனத்தின் 'சிவஞான கலாநிதி' விருது, சென்னைக் கம்பன் கழகத்தின் 'கம்ப கலாநிதி இரா. இராதாகிருஷ்ணன் விருது', புதுவைக் கம்பன் கழகம் அளித்த 'பானுமதி அறக் கட்டளைப் பரிசு', தமிழ்நாடு பேராசிரியர் அறவாணன் அறக்கட்டளை வழங்கிய 'உலக சாதனையாளர் விருது', வேலூர்க் கம்பன் கழகத்தின் 'கம்பர்சீர் பரவுவார் விருது', திருக்கோவலூர்ப் பண்பாட்டுக் கழகத்தின் 'கபிலர் விருது' என்று எண்ணற்ற விருதுகளைப் பெற்றுள்ள ஐயா கம்பவாரிதி இலங்கை ஜெயராஜுக்கு, இப்போது தமிழ்நாடு புதுக்கோட்டை கம்பன் கழகம், "கம்பன் மாமணி" விருது வழங்கி கௌரவம் பெற்றுள்ளது.

தாம் பெற்றுள்ள உயர் விருதுகளை, இன்னுமொரு விருதினால் அதிகரித்துக் கொண்டுள்ள ஐயா கம்பவாரிதி இலங்கை ஜெயராஜை பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறோம்.

## புது வரவு

### "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்"

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவாக, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்து, யாழ்ப்பாணம் வசந்தம் வெளியீட்டகம் வெளியிட்டுள்ள தொகுப்பு நூல், "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்".

'இலங்கை பத்திரிகைத்துறை வரலாற்றில் மிக நீண்ட காலம் ஒரு தேசிய பத்திரிகையில் பிரதம ஆசிரியராக பணிபுரிந்தவர்' என்ற பெருமையைப் பெற்ற, பத்திரிகைத்துறை ஜாம்பவான் கலாசூரி இ. சிவகுருநாதன் பற்றிய, கட்டுரைகள், கவிதைகள், இரங்கல் செய்திகள், தகவல்கள், படங்கள் என்பவற்றின் சிறந்ததொரு தொகுப்பாக இந்த நூல் வெளிவந்துள்ளது.




மூன்று பகுதிகளை கொண்டதாக வெளியிடப்பட்டுள்ள இந்த நூலின் முதல் பகுதி "ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு களம் தந்த தினகரன் சிவகுருநாதன். திறனாய்வும் வரலாற்றுப் பதிவுகளும்" எனும் தலைப்பில் கலாசூரி இ. சிவகுருநாதன் பற்றிய முப்பத்தியிரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எஸ். திருச்செல்வம், முருகபூபதி, வி. தனபாலசிங்கம், தி. ஞானசேகரன், தே. செந்தில் வேலவர், என். எம். அமீன், உடுவை தில்லை நடராஜா, போன்ற பலர் முக்கிய பிரமுகர்கள் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

இவற்றோடு கே. எஸ். சிவகுமாரன், வி. சபாநாயகம், கார்த்திக், அஜித் சமரநாயக்க ஆகியோர் எழுதியுள்ள நான்கு ஆங்கில கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில் "பத்திரிகை ஆசிரியர்களுள் 'மக்கள் திலகம்' அஞ்சலிகளும் ஆராதனைகளும்" எனும் தலைப்பில் 38 ஆக்கங்கள் உள்ளன அவற்றில் அரசியல்வாதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், போன்ற முக்கியஸ்தர்களின் இரங்கல் செய்திகளும், அனுதாப செய்திகளும் உள்ளன. இவற்றோடு பல்வேறு ஊடகவியல் சமூக சேவை சமய அமைப்புகளின் இரங்கல் செய்திகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதி, "பூமாலைக்கு ஏன் பாமாலை? கவிதைகளில் தெரிந்த சிவகுருநாதன் சிந்தனை" எனும் தலைப்பில் கவிதைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. கலாசூரி சிவகுருநாதன் பற்றி பிரபல கவிஞர்கள் எழுதியுள்ள இருபது கவிதைகள் இப்பகுதியில் உள்ளன. ஜின்னாஹ் ஷரிபுத்தீன், சில்லையூர் செல்வராசன், அல் அசூமத், கலைவாதி கலீல், நாவலர் ஈழ மேகம் பக்கீர் தம்பி, மேமன்கவி, எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எச்.எம். ஷம்ஸ், எஸ். ஐ. நாகூர் கனி உட்பட சிரேஷ்ட கவிஞர்கள் பலரதும் சிவகுருநாதன் பற்றிய சிறப்புக் கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கலாசூரி சிவகுருநாதன் தொடர்பான கருப்பு வெள்ளை புகைப்படங்கள், பத்து பக்கங்களில் "என்றும் நீங்கா நினைவலைகளில்..." எனும் மகுடத்திலும், "இலங்கை இதழியலில் தடம் பதித்த செய்தி மன்னன்" எனும் தலைப்பில் பன்னிரெண்டு பக்கங்களில் வர்ணப் புகைப் படங்களும் இடம் பெற்றுள்ளன.

இலங்கையின் பல தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் துணையாக இருந்த கலாசூரி சிவகுருநாதன், பலரதும் கண்ணோட்டத்தில், அவர்களது மனங்களில் எவ்வாறு சிறப்பாக இடம்பெறுகிறார் என்பதை மிகச்சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் வாசகர்கள் அனைவரும், குறிப்பாக கலாசூரி சிவகுருநாதனின் அபிமானிகள் தவறாது வாசிக்க வேண்டிய ஒரு களஞ்சியமான நூலாகும்.

நூல்: இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆசிரியர்: ஐங்கரன் விக்கினேஸ்வரா, முதற்பதிப்பு: 08. ஆகஸ்ட் 2023, வெளியீடு: வசந்தம் வெளியீட்டகம், யாழ்ப்பாணம் விலை: ரூபா. 1500/00

## கைவண்ணம் காணீர்





**திருவள்ளுவர்** எனும் தெய்வீக முகாமையாளர்




கே. பத்மானந்தன் 53

# திருவள்ளுவத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

பொதுவாக விளம்பரங்கள் சந்தைப்படுத்தலில் மிக முக்கியமான ஒன்றாக அமைகின்றன. விளம்பரம் (advertising) என்பது நிறுவனங்கள் தகுதியுள்ள வாடிக்கையாளர்கள் தங்கள் ஒரு குறிப்பிட்ட வகை தயாரிப்புகள் அல்லது சேவைகளை அதிக அளவில் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கிய தொடர்பு சாதனம் ஆகும். போதுமான விளம்பரமின்றி எந்தத் தரமான பொருட்களையும் வெற்றிகரமாக சந்தைப்படுத்த முடியாது. இந்த உண்மையை உணர்ந்து கொண்ட காரணங்களால் தான் விளம்பரங்களுக்காக நிறுவனங்கள் தமது பணத்தையும் சக்தியையும் நேரத்தையும் செலவு செய்கின்றன. நிறுவனங்கள் விளம்பரங்களைத் தயாரிக்கும் போது தேவையற்ற பயனற்ற விடயங்களை நீக்கித் தேவையான விடயங்களை மட்டும் மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விதமாக தயாரிக்க வேண்டும். மக்களிடம் மகிழ்ச்சியான மனநிலையை உண்டாக்கும் விளம்பரங்களே வெற்றி பெறுகின்றன. அப்போதுதான் அத்தகைய விளம்பரங்கள் எதிர்பார்த்த பலனை நிறுவனங்களுக்கு வழங்கிப் பொருட்களின் சந்தைப்படுத்தலை விரிவாக்க உதவும். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாந் தூது".( குறள் 685)**

தனது அரசிடம் சொல்லவேண்டிய பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், வெறுப்பு ஊட்டக் கூடிய பயனற்றவைகளை நீக்கியும் விலக்கியும் இனிய சொற்களால் மனம் மகிழக் கூறித் தம் சொந்த நாட்டிற்கும் தன் தலைவனுக்கும் நன்மையைத் தேடித்தர வேண்டியது தூதரின் பண்பாகும் என்கிறார் திருவள்ளுவர். இங்கு திருவள்ளுவர் கையாண்ட தொகச் சொல்லுதல், தூவாத நீக்கி நகச் சொல்லுதல் ஆகிய சொற்றொடர்கள் விளம்பரத்தை தயாரிப்பதில் மிகவும் முக்கியம். விளம்பரத்தில் சொல்ல வேண்டிய விடயத்தை சுருக்கமாகத் தொகுத்தும் காரண காரியத்துடன் இயைவுபடவும் சொல்ல வேண்டும். வளவளவென்று ஏதாவது ஒரு விடயத்தினைக் கூறுதல் கேட்பவர்களிடம் சலிப்பை ஏற்படுத்தும் எனவே தொகுத்து சுருங்கச் சொல்லலே சிறப்பு அதைத்தான் திருவள்ளுவர் தொகச் சொல்லுதல் என்கிறார். அதேபோன்று விளம்பரத்தில் தேவையற்ற சொற்களை வெறுப்புண்டாகும் சொற்களை கடுமையான சொற்களைத் தவிர்த்து கேட்போர் மனதில் விருப்பினை மகிழ்ச்சியினை உண்டாக்கும் சொற்களைப் பயன்படத்த வேண்டும். இதனைத்தான் திருவள்ளுவர் தூவாத நீக்கி நகச் சொல்லுதல் என்கிறார். அதாவது விளம்பரங்கள் மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செய்திகளைச் சொல்ல வேண்டும் என்ற கருத்தினை இங்கே திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.



அதேபோன்று இன்று பல நிறுவனங்கள் தமது தயாரிப்புகளை விளம்பரப்படுத்தி சந்தை வாய்ப்புகளைக் கூட்டுவதற்காக விளம்பர தூதுவர்களைப் (Brand Ambasidors) பயன்படுத்துகின்றன. இவ் விளம்பரத் தூதுவர்கள் மக்கள் அறிந்த பிரபலமானவர்களாக அறிவு, திறமை, கல்வி, அழகு உள்ளவர்களாக இருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் நிறுவனங்கள் தமது விளம்பரத் தூதுவர்களாக பிரபல நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களைப் பயன்படுத்துகின்றார்கள். இக்கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

**"அறிவுரு வாராய்ந்த கல்விஇம் மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு". (குறள் 684)**

இயல்பான இயற்கையான நல்லறிவு, காண்பவர் விரும்பத்தக்கத் தோற்றம், பலரோடும் பலகாலமும் ஆராய்ச்சி செய்து பெற்ற கல்வி ஆகிய இம் மூன்றையும் நிறையப் பெற்றுச் சொல்ல வேண்டியதைத் தானே எண்ணிச் சொல்லும் திறம் படைத்தவரே விளம்பரத் தூதர் பணிக்குச் செல்ல வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இங்கு அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி, செறிவுடையான் என்று திருவள்ளுவர் பயன்படுத்திய சொற்கள் அர்த்தம் மிகுந்தவை. விளம்பரத் தூதுவராக இருக்க வேண்டியவருக்குத் தான் விளம்பரப்படுத்தப்போகும் பொருள் அல்லது நிறுவனம் பற்றிய அறிவு இருக்க வேண்டும். அதேபோன்று மக்களைக் கவரக்கூடிய தோற்றம் அல்லது உருவம் இருக்க வேண்டும். அதேபோன்று தான் விளம்பரம் செய்ய உள்ள நிறுவனம் மற்றும் பொருட்கள் பற்றித் தேவையான ஆய்வு செய்து அறிந்து கொள்ள வேண்டும். இந்த அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி மூன்றும் மிகையாக உடைய ஒருவனே விளம்பரத் தூதுவராக இருக்கக் கூடியவன் என்பதனையே திருவள்ளுவர் செறிவுடையான் என்கிறார்.

இன்று பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களும் TRP (Total Rating Point), GRP ( Gross Rating Point) போன்ற முறைகளைப் பயன்படுத்தி தமக்கு தேவையான குறிபிட்ட பார்வையாளர்களை அடையச் சரியான நேரத்தையும் இடத்தையும் அறிந்து தமது விளம்பரங்களை ஒளிபரப்புவதன் மூலம் அநேக வாடிக்கையாளர்களை அவ் விளம்பரங்களைப் பார்க்கச் செய்து சந்தைப் படுத்தலை விரிவாக்கு கின்றன. இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"கடனறிந்து காலங் கருதி இடனறிந்து எண்ணி உரைப்பான் தலை".( குறள் 687)**

தன் கடமை இன்னதென்று தெளிவாக அறிந்து அதாவது தன் நாட்டுக்காக அடுத்த அரசிடம் தான் ஆற்றவேண்டிய கடமையை அறிந்து சொல்ல வேண்டியதை முன்னதாகவே மனதுள் திட்டமிட்டு அதைச் செய்வதற்கு ஏற்றகாலத்தையும் தக்க இடத்தையும் கண்டு சொல்பவனே தூதருள் தலைமையானவன் என்கிறார் திருவள்ளுவர். எவ்வாறு ஒரு தூதுவன் நாட்டிற்கும் அரசனுக்கும் நன்மை பயக்கும் விடயங்களை மட்டும் ஆய்ந்து அறிந்து திட்டமிட்ட செயல்களை செய்வதற்குப் பொருத்தமான காலத்தையும் இடத்தையும் சொல்கின்றானோ அவ்வாறே தொலைக்காட்சி நிறுவனங்கள் தமது விளம்பரங்களை ஒளிபரப்பு செய்வதற்கு பொருத்தமான நேரத்தையும் இடத்தையும் தேர்வு செய்ய வேண்டும் என்ற கருத்துக்களை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

இங்கு திருவள்ளுவர் பயன்படுத்தும் கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து, எண்ணி உரைப்பான், தலை ஆகிய சொற்கள் யாவுமே தொலைக்காட்சி விளம்பரம் தொடர்பில் மிகவும் முக்கியமானவை. ஏனைய தொலைக்காட்சிகளின் விளம்பர முறையினை நிலையினை அது தொடர்பான விபரங்களை அறிவதுடன் தாம் எவ்வாறு விளம்பரங்களைச் செய்ய வேண்டும் என்பதனையும் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதனையே திருவள்ளுவர் கடன் அறிந்து என்கிறார். பார்வையாளர்கள் கூறுகின்ற விடயங்களை ஏற்றுக்கொள்ளும் நல்ல மனநிலையில் இருக்கும் சமயம் பார்த்து மகிழ்ச்சியுடன் இருக்கும் நேரம் பார்த்து விளம்பரங்களை ஒளிபரப்ப வேண்டும் என்பதனையே காலம் கருதி என்கிறார்.

அதேபோன்று விளம்பரங்கள் சென்று அடையும் இடங்கள் அங்கிருக்கும் மக்கள் பற்றிய தெளிவு வேண்டும் என்பதனையே இடன் அறிந்து என்கிறார். அதேபோன்று விளம்பரம் சொல்லப்படும் முறை பற்றி இதை இப்படிச் சொன்னால் இன்ன பயன் விளையும் என்பதைக் கருதி சொல்லும் வழியை முன்னரே தனக்குள் ஆய்ந்து சொல்வதனையே எண்ணி உரைப்பான் என்கிறார். இவ்வாறு எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு செய்யப்படும் விளம்பரமே தலை சிறந்தது என்பதனையே திருவள்ளுவர் தலை என்கிறார்.

(தொடரும்)

# பரதநாட்டிய அரங்கேற்றம்

## தொன்மாவிலங்கை



கருப்பொருளுடன் கூடிய புத்தாக்க நடன மார்க்கங்களை தொடர்ந்து வழங்கி வரும் அபிநயஷேத்ரா நடனப்பள்ளியின் புதிய படைப்பாக அரங்கேறுகிறது அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவி காவியா திலீபனின் பரதநாட்டிய அரங்கேற்றம் "தொன்மாவிலங்கை". 02.09.2023 மாலை 5.30க்கு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"கலாசூரி" திவ்யா சுஜேனின் உருவாக்கத்தில் தாய்நாடான இலங்கையின் புகழ் கூறும் விதமாக அமைந்துள்ள இம் மார்க்க உருப்படிக்களுக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி இசையமைப்பு வழங்கியதோடு நிகழ்விற்கு பிரதமவிருந்தினராகவும் வருகை தரவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனும் கலந்து சிறப்பிக்க, சிறப்பு விருந்தினர்களாக நாட்டிய கலாகேந்திரா இயக்குநர் "கலாநிதி" கிருஷாந்தி ரவீந்திரவும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 77

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| | 07 | | 08 | | 09 |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| 15 | | 16 | 17 | | 18 |
| 19 | 20 | | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | | 27 | |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) புவியில் வாழ்கின்ற உயிரினங்களில் (தரை, நீர்) உருவத்தில் மிகவும் பெரியது இது.
(10) நாகபாம்பு கொடிய விஷம் கொண்டது. ஆனால் அப்பாம்பை அச்சமின்றி தங்களுடன் கொண்டுதிரிகின்ற பாம்பாட்டிகளை உங்களில் பலர் பார்த்திருப்பீர்கள். பாம்பாட்டி தனது கையில் வைத்திருக்கும் இசைக்கருவியின் பெயர் இது.
(13) பூட்டிய கதவைத் திறக்க வேண்டுமானால், அதற்குத் தேவையானது இது. (தலைகீழான சொல்)
(16) பூக்களைக் கொண்டு கோர்க்கப்படுவது இது. அந்திப்பொழுதையும் இச்சொல் குறிக்கும்.
(19) மற்றையோருக்குத் தீங்கிழைப்பதற்கான இரகசியத் திட்டத்தைக் குறிக்கும் சொல்.
(21) பதினெட்டு வயதுக்குக் குறைந்த சிறுபராயத்துப் பெண்ணைக் குறிக்கும் சொல்.
(24) பெற்றோரின் அன்புக்கும், பாசத்துக்கும் உரியவள் இவள். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(2) உணவுப் பொருட்களுக்கு சுவையூட்டியாகச் சேர்க்கப்படுவது. உறைப்புச் சுவைதான், ஆனால் மிளகாய் அல்ல.
(4) நியூஸிலாந்து நாட்டின் தேசியப் பறவையான இது, உருவத்தில் மிகவும் சிறியது.
(6) நம் அன்றாட வாழ்வில் தவிர்க்கவே முடியாமல் போன சக்திவடிவம். எமது அத்தியாவசிய உபகரணங்கள், கருவிகளை இயக்குவதற்குத் தேவையான கண்ணால் பார்க்க முடியாத சக்தி இது. (தலைகீழான சொல்)
(10) நம் உணவுக்கு சுவையும் மணமும் ஊட்டுவதற்கான இயற்கைப் பொருள் இது. தாவரமொன்றின் வேர்த்தண்டுப் பகுதி. நிறம் ஒன்றையும் இச்சொல் குறிக்கும்.
(12) ஒன்றின் மேல் ஒன்றாக நிர்மாணிக்கப்பட்ட அடுக்குவீட்டை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(17) சிற்பிகள் வடிக்கும் கலைப்படைப்பு (தலைகீழான சொல்)
(20) பொருளொன்றின் அசைவு அல்லது வாகனத்தின் வேகத்தை சரியாகக் கூறுவதாயின் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது ஓரலகு நேரத்தில் ஒரு பொருள் சென்ற தூரம். (தலைகீழான சொல்)
(22) நீர்நிலைகளில் இதுவும் ஒன்றாகும் (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 76

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பாரதி 04. கனி 07. கதிரை 10, அலகு
13. சனி 16. பால் 18. கட்டுரை 24. தோழன்

**மேலிருந்து கீழ்**

01. பாக்கு 03. அகதி 04. கரைசல் 11. லட்டு
16. பாகன் 18. கீரை 22. தோடு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 75

### பாராட்டு பெறுவோர்

**1. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. ப. தையிபா**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் ஒழுங்கை, கிறேன்பாஸ், கொ-14.

**3. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**4. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**5. சு. ஜகஸ்வனி**
தரம் 09A, தி/தி கமைகள் ம.வித்தியாலயம்,
இல. 975, அம்பாள் வீதி, அன்புவழிப்புரம்,
திருகோணமலை.

**6. சமீம் அஜிமுசான் அகமட்**
தரம் 11, பபிள்ஸ் தேசிய பாடசாலை,
அக்கரைப்பற்று 02.

**8. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 05, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 77
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



இனியவை கூறல்: துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்
யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

*தெளிவுரை :*
இன்சொல் பேசி எல்லோரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு `நட்பில் வறுமை' எனும் துன்பமில்லை

# ஆசை அழிவுக்கு வழிவுக்கும்



ஒருவன் தன் வேலையில் இடமாற்றம் காரணமாக, இருந்த வீட்டைக் காலி செய்து கொண்டு வேறு ஊருக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த ஊருக்குப் போகவேண்டுமானால், வழியில் உள்ள ஒரு பெரிய ஆற்றைக் கடந்தாக வேண்டும். ஆறு நிறைய தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடப்பதற்கு, ஒரு படகை வாடகைக்குப் பேசி ஏற்பாடு செய்து கொண்டான்.

வீட்டில் இருந்த பொருட்களை எல்லாம் படகில் ஏற்றினான். மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் படகில் ஏறி அமர்ந்து கொண்டான். ஆற்றில் சிறிது தூரம் சென்றவுடன் படகு ஆடத் தொடங்கியது. படகில் அளவுக்கு அதிகமான பாரத்தை ஏற்றியதன் காரணமாக, படகு மெல்ல மெல்ல ஆற்றில் அமிழத் தொடங்கியது. ஆற்றுநீர் கொஞ்சம் கொஞ்சமாக படகின் உள்ளே வரத் தொடங்கியது. நிலைமையின் ஆபத்தைப் புரிந்துகொண்ட அவன், விரைந்து செயலாற்றத் தொடங்கினான். பாரத்தைக் குறைப்பதற்காக, ஒவ்வொரு பொருளாக எடுத்து ஆற்றில் வீசினான். இவ்வாறு கட்டில், பீரோ, கிரைண்டர், குளிர்சாதனப் பெட்டி என்று ஒவ்வொன்றாக ஆற்றிலே தள்ளி விட்டான். ஓரளவு பாரம் குறைந்தவுடன் படகு மெல்ல மெல்ல மேலே எழும்பி வந்தது. படகில் நீர் நுழைவதும் நின்றுவிட்டது. படகு பாதுகாப்பாக மறு கரையை வந்து அடைந்தது. கவலையுடன் இருந்த மனைவியைப் பார்த்துக் கணவன் சொன்னான், "கவலைப்படாதே, இந்தப் பொருட்கள் எல்லாம், நம்மை விட்டுப் போகாமல் இருந்தால், நம்முடைய உயிர், நம்மைவிட்டுப் போயிருக்கும். நம்முடைய அருமைக் குழந்தைகளையும் நாம் இழந்திருப்போம். நம்மை விட்டுப் போன இப்பொருட்களை எல்லாம், நாம் திரும்பப் பெற முடியும். ஆகையால், நீ கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறினான்.

அவன் மனைவி, கண்களில் ஆனந்தக் கண்ணீரோடு அதை ஆமோதித்தாள். ஆம் நட்புறவுகளே. ஆசை இல்லாமல் வாழ நாம் புத்தர் அல்ல. அதே வேளையில் ஆசையை கட்டுபடுத்தி வாழப் பழக வேண்டும். எதன் மீதும் அதீத பற்று வைக்காதீர்கள். அது அதிக ஆபத்தை தரும். ஆசை அழிவுக்கு வழிவகுக்கும்.

சாரா...

# இவ்வார மழலை




ஷிஹார் / ஹஸ்னா

# தென் ஆபிரிக்கா

* பிரிட்டோரியா மற்றும் கேப்டவுன் ஆகிய இரு தலைநகரங்களை கொண்டுள்ள ஒரே நாடு தென் ஆபிரிக்கா.
* 9 மாகாணங்களை தனக்குள் கொண்டுள்ள தென் ஆபிரிக்கா ஒவ்வொரு மாகாணங்களுக்கும் தனித்தனியே சட்டமன்றம், நிர்வாகம், பிரதமர் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
* 9 மாகாணங்களில் ஒன்றான குவாசுலுநடால் மட்டும் முடியாட்சி கொண்டு இயங்குகிறது.
* தென் ஆபிரிக்கா 11 மொழிகளை அதிகார பூர்வ மொழியாக கொண்டுள்ளது.
* உலகின் மிக பழமையான மலைகளில் ஒன்றான டேபிள் மலை(Table Mountain) தென் ஆபிரிக்காவில் தான் உள்ளது. இந்த மலை 260 மில்லியன் ஆண்டுகள் பழமையானது.
* உலகில் உள்ள மிக உயரமான நீர்வீழ்ச்சிகளில் இரண்டாவதாக உள்ள துகேலா நீர்வீழ்ச்சி ஆபிரிக்காவில் உள்ளது. இது 2,800 அடி உயரமானது.
* தங்கத்தை விட விலை மதிப்புள்ள பிளாட்டினம் 80 சதவிகிதம் இங்கு தான் அதிகமாக உள்ளது.
* உலகில் உள்ள அனைத்து வகையான உயிரினங்களும் ஆபிரிக்க காடுகளில் தான் உள்ளதாம்.
* உலகின் அதிக இறைச்சி உற்பத்தியில் முக்கியமான பங்கு வகிக்கிறது தென் ஆபிரிக்கா.
* உலகின் முதல் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த நாடு தென் ஆபிரிக்கா.



ஹார்வெஸ்ட் எலிகள் மகரந்தத்தை சாப்பிட பூக்களின் உள்ளே செல்லும், சில சமயங்களில் அவற்றில் கூட தூங்குகின்றன.



சிவப்பு பண்டாக்கள் எதிரிகளால் அச்சுறுத்தப்படுவதை உணரும் போது, அவை எழுந்து நின்று தங்கள் நகங்களை பெரிதாகவும் ஆபத்தானதாகவும் காட்ட இவ்வாறு செய்யும்.

# அகர முதல் எழுத்தின் அத்திவாரம் எனும் அந்நூரே

என்ன ஒரு ஆச்சரியம்
மழலையாக நான் அழுத நாட்கள்
மாணவனாக விடை பெறும் நொடியில்
மீண்டும் வேண்டும் என்றேன்.

என்றும் என்னுடன் நீ என்றது அந்நூர்.
ஒருமித்த அகர எழுத்தில் இரட்டை பிறவிகளை போல
இரு எழுத்துக்களும் நாமே என்றது அந்நூர்.

எழில் தந்த மரங்களும்,
நிழல் இடையே அமர்ந்த நாட்களும்,
நீதானா என்ற
மாணவத்தலைவனின் குரல்களும்,
விட்டுக்கொடுக்காத சகபாடியின்
வார்த்தைகளும்,
அவன் ஜெயிப்பான் என்ற
ஆசான்களின்
கைதட்டுதல்களும்,
தந்தைக்கு நிகரான அதிபரின்
வலிமை தரும் சொற்களும் எங்கனம்
நான் மறப்பேன்.

சிற்பியின் வியர்வைகளுடன் சிலைகள் பேசவில்லை
என்றான் அவன்
சிற்பிகளை செதுக்கும் அந்நூர் சிற்பிகளின் மூச்சிலே
என்றேன் நான்.

வகுப்பறை முகவரியில்
வாசிகசாலையை ஆராய்ச்சி இடமாய்,
உணவகத்தை ஓய்விடமாய்,
மைதானத்தை சொர்க்கமாய், மாற்றியமைத்தாய்
எங்களுடன்.
இன்றோ
சமூகத்தில் அடையாளமாய் வாழ்கின்றாய் எங்களுடன்.

ஏ.எம் அப்பாஸ் (BBA) ....
2008 O/L Batch

# நான்கு

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு — நான்கு
இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் — நான்கு
கிரேதா, திரேதா, துவாபர, கலியுகம் — நான்கு
அறம், பொருள், இன்பம், வீடு — நான்கு
சாமம், பேதம், தானம், தண்டம் — நான்கு
பெயர், வினை, இடை, உரி — நான்கு
தேர், யானை, குதிரை, காலாட் படை — நான்கு

சாரணா கையூம்....

# எமது உடல்

* எமது உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. முள்ளந்தண்டில் மொத்தம் 33 எலும்புகள் உள்ளன. விலா எலும்புகள் 12 சோடிகள் உள்ளன. மனித உடம்பில் மிக நீளமாக எலும்பு தொடை எலும்பாகும். மனித உடம்பில் மிகச் சிறிய எலும்பு காதிலுள்ள சம்மட்டி எலும்பாகும்.
* 12 வயதிற்கு மேல் பல் விழுந்தால் மீண்டும் முளைப்பதில்லை. நகமும் உரோமங்களும் உயிருள்ளன. அதனால் தான் அவை வெட்ட வெட்ட வளர்கின்றன.
* மனித இதயம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவைகள் துடிக்கின்றது. இதயம் 25 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 900 கோடி தடவைகள் துடிக்கிறது. இதயத்தின் நிறை சராசரியாக 340 கிராமாகும். இதயம் ஒரு நிமிடத்தில் ஒரு பைன்ட் (12 அவுன்ஸ், இரத்தத்தை வெளியேற்றுகிறது.
* வளர்ந்த ஒருவருடைய உடலில் 4.75 லீற்றர் குருதி இருக்கும். குருதியின் அடர்த்தி நீரைப் போன்று ஆறு மடங்காகும்.
* கருவில் கண்கள் தான் முதலில் உருவாகும். பிறந்த சில நாட்களுக்குப் பிறகே குழந்தை வலி உணர்வை உணருகின்றது.
* பிறவிச் செவிடர்கள் ஊமையாக இருப்பார்கள். கண்ணீர் ஒரு கிருமிநாசினியாகும். இரத்த வகைகள் 4 ஆகும். அவையாவன A,B, AB, O. ஒரு மனிதனின் சராசரி உடல் வெப்ப நிலை 37 செல்சியஸ் (98.4 பரனைற்) ஆகும்.
* உடலைப் பேண, உடற்பயிற்சி செய். அதிக நீர் பருகு. நிறை உணவு உண். சுத்தமான காற்றை சுவாசி. கவலையை தவிர்த்து மகிழ்ச்சியாக இரு.

எம். லாபீர் (பதுளை)....

# கண்டுபிடிப்பாளர்கள்

## கூடைப்பந்தாட்டத்தின் முன்னோடி டாக்டர் ஜேம்ஸ் நெய்ஸ்மித்

டாக்டர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் (Dr. James Naismith) ஒரு கனடிய விளையாட்டு கல்வி ஆசிரியரும், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளரும், அமெரிக்க காற்பந்தாட்டத்தில் தலைக்கவசத்தை கண்டுபிடித்தவரும் ஆவார். இவர் கூடைப்பந்தாட்ட விதிகளை எழுதி கேன்சஸ் பல்கலைக்கழகத்தில் கூடைப்பந்து திட்டத்தை நிறுவினார்.

1891இல் இவர் முதல் 13 கூடைப்பந்து சட்டங்களை கூறியுள்ளார். இச்சட்டங்களில் 12 இன்று வரை ஏதாவது ஒரு விதத்தில் பயன்படுகின்றன.

நெய்ஸ்மித் 1861ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் திகதி கனடாவின் மேற்கு அல்மொன்டேயில் பிறந்தார். தனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் அனாதையாக இருந்த இவர் தனது அத்தை மற்றும் மாமாவுடன் பல ஆண்டுகள் வாழ்ந்து, அல்மொண்டேக்கு அருகிலுள்ள அல்மொண்ட் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்கு 1883 இல் பட்டம் பெற்றார். அதே ஆண்டில், மொன்றியலில் உள்ள மெக்கில் பல்கலைக்கழகத்தில் நுழைந்தார். இவர் ஒரு திறமையான மற்றும் பல்துறை விளையாட்டு வீரராக இருந்தார்.

கனடிய கால்பந்து, லாக்ரோஸ், ரக்பி, கால்பந்து மற்றும் சீருடற்பயிற்சிகள் ஆகியவற்றில் மெக்கில் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார். அது மட்டுமல்லாது பல்கலைக்கழகத்தின் கால்பந்து அணியிலும் விளையாடினார்.

1891 இன் பிற்பகுதியில், மாசசூசெட்ஸில் உடற்கல்வி ஆசிரியராக இருக்கும் பொழுது கூடைப்பந்து விளையாட்டைக் கண்டுபிடித்தார்.

கூடைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, நெய்ஸ்மித் 1898 இல் டென்வரில் மருத்துவப் பட்டம் பெற்றார். பின்னர் கேன்சஸ் பல்கலைக்கழகத்திற்கு வந்த இவர், தடகள இயக்குநராகவும் பயிற்சியாளராகவும் ஆனார்.

13 ஆண்டுகளுக்குப் பின்னர் 1904 இல் ஒலிம்பிக் போட்டிகளில் சோதனை போட்டியாக அறிமுகப்படுத்தப்பட்டு 1936 இல் ஒலிம்பிக் போட்டிகளில் முதன் முறையாக கூடைப்பந்து விளையாட்டு கொண்டுவரப்பட்டது.





# விளையாட்டு




# எல்.பி.எல் இலங்கைக்கு உதவுமா?

இம்முறை லங்கா பிரீமியர் லீக் தொடர் வனிந்து ஹசரங்கவின் போட்டியாக மாறியது. தொடரில் அதிக விக்கெட், அதிக ஓட்டங்கள், அணித் தலைவராக சம்பியன் கிண்ணம் என்று ஒட்டுமொத்தமாக அனைத்தையும் வென்றார் ஹசரங்க.

இந்திய பிரீமியர் லீக்கின் வெற்றியை அடுத்து உலகெங்கும் தோன்றிய கிரிக்கெட் லீக்குகளில் ஒன்றான லங்கா பிரீமியர் லீக் இல்லாவிட்டால் எல்.பி.எல் தொடரின் நான்காவது தொடராகவே இம்முறை போட்டிகள் நடைபெற்றன. என்றாலும் கடந்த முறைகளில் இருந்து போட்டியின் கட்டமைப்பில் மாற்றங்க கொண்டுவரப்பட்டதால் தொடர் முழுவதும் விறுவிறுப்பு கூடி இருந்தது.

குறிப்பாக அணிகளில் மாற்றம் மற்றும் வீரர்களில் மாற்றம் என்று முற்றாக மாற்றமடைந்த தொடராகவே எல்.பி.எல் நடந்தது. கடந்த தொடர்களில் அணிகள் வீரர்களை ஒருவகையில் நேரடியாக வாங்கிய நிலையில் இம்முறை ஏல விற்பனை மூலம் வீரர்கள் வாங்கப்பட்டனர்.

இது முழு தொடரிலும் தாக்கம் செலுத்துவதாக இருந்தது. இதனால் அனைத்து அணிகளும் சரி சமமாக திறமையை வெளிப்படுத்தியதோடு புதிய சம்பியன் ஒன்றும் தேர்வு செய்யப்பட்டது.

இது ஜப்னா அணிக்கே பெரும் பாதகமானது. கடந்த மூன்று தொடர்களிலும் ஜப்னா அணியே முழு ஆதிக்கம் செலுத்தியது. 2020 ஆம் ஆண்டு நடந்த முதல் தொடரில் ஜப்னா ஸ்டாலியோன்ஸ் சம்பியனானதோடு அடுத்த இரண்டு தொடர்களிலும் ஜப்னா கிங்ஸ் கிண்ணத்தை வென்றது.

என்றாலும் இம்முறை வீரர்கள் ஏலம் பரபரப்பாக நடந்ததால் மற்ற அணிகளாலும் திறமையான வீரர்களை போட்டி போட்டி வாங்க முடிந்தது.

என்றாலும் லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணியே வீரர் ஏலத்தில் அதிக விலைக்கு வீரர்களை வாங்கிய அணியாக இருந்தது. அதாவது எல்.பி.எல் ஏலத்தில் அதிக விலைபோன வீரராக இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க இருந்தார்.

அவரின் அடிப்படை விலை 20,000 டொலர்களாக இருந்த நிலையில் ஜப்னா கிங்ஸ் 92,000 டொலர்களுக்கு வாங்கியது. வீரர் ஏலம் இடம்பெற்ற காலத்தில் மதுஷங்கவின் திறமை உச்சத்தில் இருந்தது சந்தையில் கேள்வி அதிகரிக்க காரணமாக இருந்திருக்கலாம்.

அதேபோன்று இலங்கையில் இளம் துடுப்பாட்ட வீரர் சரித் அசலங்க இரண்டாவது அதிக விலையாக 80,000 டொலருக்கு ஜப்னா கிங்ஸ் அணியால் வாங்கப்பட்டார். அவரது அடிப்படை விலையாக 40,000 டொலர்களாக இருந்தபோது ஜப்னா கிங்ஸ் பணத்தை அள்ளி வீசியது.

என்றாலும் இம்முறை ஐ.பி.எல் தொடரில் இந்த இரு வீரர்களும் திறமையை வெளிப்படுத்த தவறிவிட்டனர். சரித் அசலங்க 8 போட்டிகளில் ஆடி 98 ஓட்டங்களையே பெற்றதோடு ஓட்ட சராசரி 12.25 ஆகவே இருந்தது. மதுஷங்க 7 போட்டிகளில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பந்துவீச்சு சராசரி 26.71 ஆக இருந்தது.

எனவே ஜப்னா கிங்ஸ் அணியால் தொடரில் நான்காவது இடத்தையே பிடிக்க முடிந்தது.





> இலங்கை அணி ஆசிய கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத்தை நெருங்கிய நிலையிலேயே லங்கா பிரீமியர் லீக் தொடரில் களமிறங்கியது. என்றாலும் எல்.பி.எல் கிரிக்கெட்டின் டி20 பாணி நடக்கப்போகும் ஒருநாள் கிரிக்கெட்டுகளுக்கு உதவுமா? என்பது பெரிய கேள்வி.

இம்முறை எல்.பி.எல் இறுதிப் போட்டிக்கு முதல் முறையாக வனிந்து ஹசரங்க தலைமையிலான பி லவ் கண்டி மற்றும் குசல் மெண்டிஸ் தலைமையிலான தம்புள்ளை அவுரா அணிகள் தகுதி பெற்றன. கடைசியில் கண்டி அணி முதல் முறையாக கிண்ணத்தை வென்றது.

சுழற்பந்து வீச்சாளர், துடுப்பாட்ட வீரர் மற்றும் அணித் தலைவர் என்று வனிந்து கண்டி அணியை இறுதிப் போட்டி வரை அழைத்து வந்தார். கண்டி அணி இறுதிப் போட்டி வரை முன்னேறுவதற்கு அந்த அணி வெற்றியீட்டிய ஆறு போட்டிகளில் நான்கு ஆட்டங்களில் வனிந்து ஹசரங்கவே ஆட்ட நாயகன் விருதை வென்றிருந்தார்.

வனிந்து ஹசரங்க 10 போட்டிகளில் மொத்தமாக பெற்ற 279 ஓட்டங்களுமே இந்த தொடரில் வீரர் ஒருவரின் அதிகூடிய ஓட்டங்களாக இருந்ததோடு அவர் 10 போட்டிகளிலும் பெற்ற 19 விக்கெட்டுகளுமே அதிக விக்கெட்டுகளாகவும் இருந்தது.

தவிர துடுப்பாட்டத்தில் இலங்கை வீரர்கள் என்று பார்த்தால் தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் சதீர சமரவிக்ரம போன்ற வீரர்கள் சோபித்ததோடு டி20 லீக் கிரிக்கெட்டின் விசேட வீரராக மாறி வரும் மதீஷ பத்திரணவும் பந்துவீச்சில் திறமையை காட்டி இருந்தார்.

இலங்கை அணி ஆசிய கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத்தை நெருங்கிய நிலையிலேயே லங்கா பிரீமியர் லீக் தொடரில் களமிறங்கியது. என்றாலும் எல்.பி.எல் கிரிக்கெட்டின் டி20 பாணி நடக்கப்போகும் ஒருநாள் கிரிக்கெட்டுகளுக்கு உதவுமா? என்பது பெரிய கேள்வி.

இதற்கான சாதக சூழல் எப்படி இருந்தபோதும் உடன் விளைவாக பாதகமான நிலைமையை பார்க்க முடிகிறது. இலங்கையின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உபாதைக்கு உள்ளாகி இருக்கிறார். சமீரவின் கிரிக்கெட் வாழ்க்கை உபாதைகளால் நிரம்பி இருந்தபோதும் அண்மையில் அவர் மீண்டும் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய நிலையில் மீண்டும் காயத்திற்கு உள்ளாகி இருக்கிறார்.

எல்.பி.எல் போட்டியில் தோள் பட்டை காயத்திற்கு உள்ளான அவர் எதிர்வரும் ஆசிய கிண்ணத்தில் ஆட முடியாத நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்கிறார். அவரது விலகல் நிச்சயமாக அணிக்கு பெருத்த பின்னடைவாக இருக்கும். என்றாலும் உலகக் கிண்ணத்தை எதிர் கொண்டிருக்கும் நிலையில் அவர் முழு உடல் தகுதியுடன் இருப்பதற்கு ஆசிய கிண்ணத்தை விட்டுக் கொடுப்பது பெரிய இழப்பாக இருக்காது.

அதாவது ஓர் ஆண்டு காலமாக உபாதைகளுக்கு முகம்கொடுத்து வரும் சமீர இலங்கை அணி கடைசியாக விளையாடிய 32 போட்டிகளில் இரண்டில் மாத்திரமே விளையாடி இருக்கிறார்.

சமீர இல்லாதபோது கசுன் ராஜித்த போன்ற வீரர்கள் அணிக்கு அழைக்கப்படலாம். என்றாலும் அணியின் வேகப்பந்தில் முழு திறமையை எதிர்பார்க்க முடியாது.

வனிந்து ஹசரங்கவுக்கு பின்தொடை பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனால் அவர் லங்கா பிரீமியர் லீக்கின் இறுதிப் போட்டியில் கூட ஆடவில்லை. இப்படி இருக்க ஆசிய கிண்ண தொடரில் இருந்தும் அவர் விலகி இருக்கிறார். இது துஷ்மன் சமீரவின் இழப்பை விடவும் அதிகம் தாக்கம் செலுத்துவதாக இருக்கிறது.

மற்றது டி20 பாணியிலான கிரிக்கெட் போட்டியில் இருந்து ஒருநாள் கிரிக்கெட்டுக்கு திரும்பும்போது ஆட்ட முறை, போட்டி தந்திரங்களில் மாற்றங்களை செய்ய வேண்டி இருக்கும். அது வீண் சிரமமாகக் கூட மாறலாம். கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி எல்.பி.எல் தொடர் நிறைவடைந்த நிலையில் பத்து நாட்களில் அதாவது ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆசிய கிண்ண போட்டி ஆரம்பமாகவுள்ளது. ஒரு போட்டி முறையில் இருந்து மற்றொரு போட்டி முறைக்கு மாறுவதன் அவகாசமும் குறைவு.

இப்படி குறுகிய காலங்கள் இருக்கும்போது மற்ற நாடுகள் இரு தரப்பு ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்கே அவதானம் செலுத்துவதை பொதுவாக பார்க்க முடிகிறது. ஆப்கான் அணி கூட பாகிஸ்தானை அழைத்து இலங்கையில் ஒருநாள் போட்டிகளை ஆடி வருவதை பார்க்க முடிகிறது.

இலங்கைக்கு இப்போது அதற்கான அவகாசம் இல்லை. நல்லதோ, கெட்டதோ ஒருநாள் கிரிக்கெட்டுக்கு திரும்புவதற்கு இப்போது எல்.பி.எல் அனுபவம் தான் இலங்கை வசம் இருக்கிறது.

எனவே, இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெறப்போகும் ஆசிய கிண்ணத்தை உலகக் கிண்ணத்திற்கான பயிற்சியாக பயன்படுத்தினாலே பொருத்தமாக இருக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...




# இழுபறிக்குப் பின் ஆசிய கிண்ணம் ஆரம்பம்

எத்தனையோ இழுபறிக்கு பின்னர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஓர் ஆண்டுக்கு முன்னர் டி20 வடிவத்தில் நடந்த ஆசிய கிண்ணத்தில் இலங்கை அணி சம்பியனான நிலையில் இம்முறை ஒருநாள் போட்டிகளாகவே நடைபெறப்போகிறது.

இந்தியா பாகிஸ்தான் செல்ல மறுக்க, பதிலுக்கு பாகிஸ்தான் அணி இந்தியா செல்லப்போவதில்லை என்று அடம்பிடிக்க பல மாதங்கள் நீடித்த இழுபறிக்குப் பின்னரே பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் போட்டிகளை நடத்த உடன்பாடு எட்டப்பட்டது.


போட்டியை நடத்தும் நாடு பாகிஸ்தானாக இருந்தபோதும் தொடரில் குறைவான போட்டிகளே பாகிஸ்தானில் நடைபெறப்போகிறது. அதாவது பாகிஸ்தானில் மொத்தமாக நான்கு போட்டிகளே நடைபெறவிருப்பதோடு இலங்கையில் இறுதிப் போட்டி உட்பட ஒன்பது ஆட்டங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 30 ஆம் திகதி முல்தானில் பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகளுக்கு இடையிலான போட்டியுடன் ஆரம்பிக்கும் ஆசிய கிண்ணத் தொடர் செப்டெம்பர் 17 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டியுடன் நிறைவடையப்போகிறது.

இதில் இலங்கை அணி கண்டி பல்லேகலவில் பங்களாதேஷை ஓகஸ்ட் 31 ஆம் திகதி எதிர்கொள்வதோடு ஆசிய கிண்ணத் தொடரை ஆரம்பிக்கும். என்றாலும் தனது இரண்டாவது போட்டியில் ஆடுவதற்காக இலங்கை பாகிஸ்தான் செல்ல வேண்டி இருக்கும். அந்தப் போட்டி ஆப்கானிஸ்தானுக்கு எதிராக லாகூரில் செப்டெம்பர் 5 ஆம் திகதி நடைபெறும்.

இதில் பி குழுவில் ஆடும் இலங்கை அணி அந்தக் குழுவில் இரண்டாம் இடத்தை பிடித்தால் தனது சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் ஆடுவதற்கு செப்டெம்பர் 6 ஆம் திகதி லாகூரில் இருக்க வேண்டி இருக்கும். என்றாலும் இந்தியா பாகிஸ்தான் செல்வதை தவிர்க்கும் பகையிலேயே அட்டவணை போடப்பட்டிருப்பதால் அதற்கமை சுப்பர் போர் போட்டிகளின் இடம் மாறக் கூடும்.

ஆசிய கிண்ண ஆரம்ப சுற்றில் ஏ குழுவில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகளும் பி குழுவில் இலங்கையுடன் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகளும் ஆடுகின்றன.



எனவே, ஆரம்ப சுற்றில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தவிருக்கின்றன. ஒட்டுமொத்த தொடரிலும் இது தான் முக்கியமான போட்டி. ஒருவேளை இறுதிப் போட்டியை விடவும் பரபரப்பாக இருக்கக்கூடும்.

செப்டெம்பர் 2ஆம் திகதி கண்டி பல்லேகலவில் நடைபெறும் இந்திய – பாகிஸ்தான் போட்டிக்கான டிக்கெட்டுகள் விற்பனை ஆரம்பித்து சில மணி நேரத்திலேயே விற்றுத் தீர்ந்துவிட்டன. அதுவும் டிக்கெட்டின் உச்சபட்ச விலை இலங்கை நாணயத்தில் ஒரு இலட்சத்தை எட்டுகிறது. இந்த போட்டிக்காக இலங்கை கிரிக்கெட் சபையோடு அரச தரப்புகளும் தீவிர ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

இந்தியா–பாகிஸ்தான் அணிகள் ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் மோதவிருப்பது, இங்கிலாந்தில் நடந்த 2019 உலகக் கிண்ணத்திற்கு பின்னர் இது முதல் முறை என்பதால் பிரத்தியேக ஆர்வம் காட்டப்படுகிறது. இதில் இந்த இரு அணிகளில் ஒன்று நேபாளத்திடம் தோற்காமல் இருந்தால் மீண்டும் சுப்பர் போர் சுற்றிலும் மோதும். பின்னர் சுப்பர் போர் சுற்றில் ஒன்று மற்றும் இரண்டாவது இடங்களை பிடித்தால் இந்தியா–பாகிஸ்தான் அணிகள் மீண்டும் இறுதிப் போட்டியிலும் பலப்பரீட்சை நடத்தும்.

எனவே இரண்டரை வாரங்களுக்கும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மூன்று முறை பலப்பரீட்சை நடத்த வாய்ப்பு இருக்கிறது. இந்த அனைத்துப் போட்டிகளும் இலங்கையில் நடைபெறுவதால் விளையாட்டுக்கு அப்பால் பொருளாதார ரீதியிலும் இலங்கைக்கு நன்மை தருவதாக இருக்கும்.

இது தவிர பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிதான் போட்டி மற்றும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் போட்டிகள் அதற்கே உரிய பண்புகளோடு பரபரப்பானவையே குறிப்பாக பங்களாதேஷின் நாகின் ஆட்டத்தை ஓட்டி ஏற்பட்ட மோதல்களை இலங்கை இன்னும் மறந்திருக்காது.

அதேபோன்று நேபாளம் முதல் முறையாகவே ஆசிய கிண்ணத் தொடரில் ஆடவுள்ளது. கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தனது சொந்த மண்ணில் நடந்த ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் பிரீமியர் கிண்ணத்தில் வெற்றி பெற்றே நேபாளம் ஆசிய கிண்ணத்திற்கு தகுதி பெற்றது. ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் 15 ஆவது இடத்தில் இருக்கும் நோபாள அணி அதிர்ச்சி கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இல்லை.

ஆரம்ப சுற்றில் இரண்டு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் போர் சுற்றில் ஆடும். சுப்பர் போர் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் ஒரு முறை மோதவுள்ளன. இதில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இந்தியாவில் ஒக்டோபர் 5 ஆம் திகதி உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாகவிருக்கும் நிலையிலேயே ஆசிய கிண்ணப் போட்டி நடைபெறுகிறது. அடிப்படையில் உலகக் கிண்ணத்திற்கான பயிற்சியாகவே ஆசிய கிண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடலாம். எனவே அதனை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள அனைத்து அணிகளும் முயற்சிக்கும்.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# யானை - மனித மோதல் தீர்வுதான் என்ன?

**தற்போது இலங்கையில் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான முரண்பாடு பாரிய பிரச்சினையாகக் காணப்படுவதுடன், இந்த பிரச்சினைக்கு சரியான தீர்வைக் கண்டுபிடித்து, மனிதர்களையும் யானைகளையும் பாதுகாக்க வேண்டிய பிரதான கடப்பாட்டை எமது நாடு மிக அவசியமாக தற்போது எதிர்நோக்கி வருகின்றது.**

யானைகளினால் மனிதர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை தடுப்பதற்கும் மனிதர்களால் யானைகளுக்கு ஏற்படும் ஆபத்துகளை தடுப்பதற்கும் அரசாங்கம் மின்சாரவேலி அமைக்கும் நடைமுறை உள்ளிட்ட பல விடயங்களை கையாண்டு வருகின்றது. அண்மையில் கூட இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய கொள்கையொன்றை தயாரிக்கவுள்ளதாக, வன ஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார்.

மனித, யானை முரண்பாடு தொடரும் பிரச்சினையாக நீண்டு கொண்டு போகாமல், இது தொடர்பாக சிந்தித்து நிலையான தீர்வுத் திட்டத்தை வெகு விரைவில் கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில், நாளாந்தம் இடம்பெறும் யானைகளின் தொல்லைகளினால் மனித உயிரிழப்புகளும் அவர்களின் உடைமைகள் சேதமாக்கப்படுகின்ற சம்பவங்களும் பதிவாகுவதையும் யானைகளின் தொல்லைகளிலிருந்து தம்மை மனிதர்கள் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அவற்றுக்கு எதிராக மனிதர்கள் செயற்படுவதினால் யானைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகுவதையும் செய்திகள் வாயிலாக எமக்கு அறியக் கிடைக்கின்றது.

ஆக மொத்தத்தில், மனிதர்களும் யானைகளும் தமக்கான பாதுகாப்பையும் தமக்கான அடிப்படைத் தேவைகளையும் நாடுவதனால் எமது குறுகிய நிலப்பரப்பில் மனித யானை முரண்பாடு பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் உலகிலுள்ள காட்டு யானைகளை பாதுகாக்கும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி 'உலக யானைகள்' தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், யானைகள் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களின் பட்டியலிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கடந்த 2022ஆம் ஆண்டில் 463 யானைகள் உயிரிழந்துள்ளதாக, இலங்கை சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது. எமது நாட்டில் கடந்த 10 வருடங்களில் உயிரிழந்த யானைகளை



விடவும், கடந்த வருடமே அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளதாகவும், அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் பிரிவுத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சண்முகசுந்தரம் விஜயமோகன் கருத்துத் தெரிவித்த போது,

முதலில் யானை மனித முரண்பாடா? அல்லது மனித யானை முரண்பாடா எனும் இரண்டு கோணங்களில் நாம் நோக்க வேண்டியுள்ளது.

யானைகளின் வாழ்விடங்களுக்கு மனிதர்கள் செல்கின்றனரா? அல்லது மனிதர்களின் வாழ்விடங்களுக்குள் யானைகள் நுழைகின்றனவா எனும் கோணத்திலேயே நாம் நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஏனெனில், விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதர்களின் இறப்பு வீதம் குறைவடைந்து, அபரிமிதமான சனத்தொகை பெருக்கத்தினால் குடியிருப்புகளை அமைப்பதற்காகவும் மனிதர்களின் உணவுத் தேவை கருதி விவசாயச் செய்கைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

மனிதர்களின் இந் நடவடிக்கை காரணமாக யானைகளின் வாழிடம் அழிக்கப்பட்டு, யானைகள் அங்கு மிங்குமாக அலைந்து திரிவதும் மனிதர்களின் குடியிருப்பு பகுதிகளை நோக்கி யானைகள் நகரும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன், ஒழுங்காக வடிவமைக்கப்படாத திட்டங்களாலும்

யானைகளின் வாழ்விடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு, மனிதர்களின் வாழ்விடங்களுக்குள் யானைகள் நுழைகின்றன.

சூழல் தொகுதியாக நோக்குமிடத்து மனிதர்களின் சூழல் தொகுதியில் யானைகளும் யானைகளின் சூழல் தொகுதியில் மனிதர்களுமாக வாழும் நிலைமையே தற்போது உருவாகி வருகின்றது.

அதாவது, எமது நாட்டில் 30 சதவீதமான உலர் வலயப் பகுதிகளில் யானைகள் வாழ்வதாகவும், அவர் தெரிவித்தார்.

யானையொன்றுக்கு அதன் வாழ்விடத்துக்காக உலர் வலயத்தில் தசம் ஐந்து சதுர கிலோமீற்றர் தேவைப்படும் அதேவேளை, சுமார் 120 மனிதர்கள் ஒரு சதுர கிலோமீற்றரில் வாழ்ந்துவரும் நிலைமையே உள்ளது. அத்துடன், யானைகளுக்கும் மனிதர்களுக்கும் அடிப்படைத் தேவைகளாக உணவு, நீர், வாழிடம் ஆகியவையே காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

யானையொன்று நாளொன்றுக்கு சராசரியாக 40 முதல் 50 கிலோமீற்றர் தூரம்வரை நடக்கும். நாளொன்றுக்கு சுமார் 250 கிலோகிராம் வரை உணவை உட்கொள்வதுடன், சுமார் 150 லீற்றர் தண்ணீரை அருந்தும். யானைகள் ஒரு இடத்தில் உட்கொண்ட உணவின் மூலம் அவை கழிவாக வெளியேற்றும் இலத்தியிலிருந்து விதைகளுக்கு உயிர் கொடுத்து, புதிய செடிகளையும் மரக்கன்றுகளையும் பிறிதொரு இடத்தில் உருவாக்குமென்றும் கூறப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் மனித யானை முரண்பாடு பல இடங்களில் காணப்பட்ட போதிலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைப் பகுதிகளிலேயே இந்த பிரச்சினை தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. யானைகளின் தொல்லைகளினால் வடக்கு, கிழக்கு மாகாண எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், அதிகளவில் பாதிப்பை எதிர்நோக்கி வருவதை செய்திகள் வாயிலாக அறிகின்றோம்.

இதேவேளை, எமது நாட்டில் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் சுற்றுலாத்துறை வளர்ச்சியில் யானைகளின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளை கவர்ந்தவையாக யானைகள் காணப்படுவதினால், அவை அருகிச் செல்லாமல் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு யானைகளை பாதுகாக்க முடியாது போகும் பட்சத்தில் அது சுற்றுலாத்துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென்பது திண்ணம்.

மனிதர்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் அதேவேளை, யானைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். மனித, யானை முரண்பாட்டுக்கு தீர்வை எட்டுவதென்பது மிகக் கடினமான விடயமாகக் காணப்படுகின்றது. இருந்த போதிலும், இந்த பிரச்சினைக்கு தீர்வை எட்ட வேண்டிய அவசியம் காணப்படுவதாகவும், அவர் சுட்டிக் காட்டினார்.

மனித, யானை முரண்பாட்டுக்கான தீர்வாக யானைகள் காடுகளை விட்டு வெளியில் வருவதை தடுக்கும் வகையில் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட வேண்டும்.

காடுகளை அண்டிய இடங்களில் வசித்து வரும் விவசாயிகள் தென்னை, வாழை, கரும்பு ஆகிய பணப்பயிர்களை அதிகளவில் பயிரிடுகின்றனர். இந்த பயிர்கள் யானைகளுக்கு மிகவும் விருப்பமானவையென்பதால், அந்த பயிர்களை நாடி காடுகளை விட்டு விவசாய நிலங்களுக்கு யானைகள் நகர்கின்றன. ஆனால் யானைகளுக்கு விருப்பமில்லாத பணப்பயிர்களும் உள்ளன. அவற்றை பயிரிடுவதால், மனித, யானை முரண்பாட்டை ஓரளவிலேனும் தவிர்க்க முடியும்.

மற்றுமொரு தீர்வாக, யானைகள் வாழும் இடங்களில் 5 கிலோமீற்றர் தூரத்தினுள் நீர் நிலைகளை உருவாக்கி, அவற்றுக்கு தேவையான உணவுகளை தயார்ப்படுத்துமிடத்து மனித, யானை பிரச்சினையை ஓரளவுக்கேனும் தவிர்க்க முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

யானைகள் காடுகளை விட்டு வெளியில் நகரும் போது, அது தொடர்பாக வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு நாம் தகவல் வழங்கி, எமக்கான பாதுகாப்பை கோர முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

எந்தவொரு விலங்கினமும் தானாக மனிதர்களைத் தாக்குவதில்லை. இயற்கையை மனிதன் சொந்தம் கொண்டாட நினைப்பதன் விளைவுகளையே யானை, மனித மோதலாக, துருவப் பனி உருகுதலாக, பூகோள வெப்ப அதிகரிப்பாக இன்னும் பலவாறான இயற்கையின் சீற்றங்களாக நாம் காண்கின்றோம்.

துரித நகரமயமாக்கலால் யானையின் வாழிடங்களான காடுகள் அழிக்கப்படுவது தவிர்க்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எந்தளவில் உள்ளன என்பது கேள்விக்குறியே.

ஆனாலும் யானையில் வாழிடங்களை இயன்ற வரை நாம் குழப்பாவிட்டால் யானை, மனித மோதலென்பது தீர்ப்பதற்குச் சாத்தியமற்றதாக இராது!



ஆர்.சுகந்தினி

# இலங்கையில் அறிமுகமாகவுள்ள யு.பி.ஐ பரிவர்த்தனை முறை



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

**சிங்கப்பூர், பிரான்ஸ் வரிசையில் தற்போது இந்தியாவுக்கும்- இலங்கைக்கும் இடையே யு.பி.ஐ பரிவர்த்தனை மேற்கொள்வதற்கு புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்தியாவில் யு.பி.ஐ பரிவர்த்தனை முறை ஒவ்வொரு ஆண்டும் பிரபலமடைந்து வருகிறது. யு.பி.ஐ பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையும், மதிப்பும் தொடர்ந்து உயர்ந்துகொண்டே வருகிறது. சிறு வியாபாரிகள் முதல் பெரிய வணிக வளாகங்கள் வரை எல்லா இடங்களிலும் யு.பி.ஐ பரிவர்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கு இடையே யு.பி.ஐ பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்த ரிசர்வ் வங்கியும் இந்திய அரசும் முயற்சித்து வருகின்றன. இந்தியாவுக்கும் – இலங்கைக்குமிடையே யு.பி.ஐ பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான இந்த ஒப்பந்தத்தால் நிதிநுட்ப இணைப்பு அதிகரிக்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தை மேற்கொண்ட போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

"மாற்றம் ஒன்றே மாறாதது" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. உலகம் தோன்றியது முதல் மாறாதது மாற்றம் ஒன்றுதான். என்றாலும் மாற்றத்தைத் தொடக்கத்தில் எதிர்ப்பது என்ற ஒன்றும் மாறாததாகவே இருந்து வந்திருக்கின்றது. அதுவும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நமக்குப் புரியாத ஒன்றை எதிர்ப்பது மனிதகுலத்தின் வழக்கம். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும் விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கத்தை மனிதன் ஏற்றாக வேண்டியது காலத்தின் கட்டாயம். வங்கித்துறையும் தொழினுட்ப வளர்ச்சியும் இதில் குறைந்துவிடவில்லை. வங்கித் துறை வங்கிப் பரிவர்த்தனைகளை எளிதாகச் செய்வதற்கு வசதியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒன்றுதான் யு.பி.ஐ (UPI) ஆகும். அதாவது, ஒருங்கிணைந்த பரிவர்த்தனைத் தரவு (Unified Payments Interface). யு.பி.ஐ / UPI இந்த வார்த்தையை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அது என்ன? எப்படிச் செயல்படுகிறது? என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. எந்த ஒரு மாற்றத்தையும் புரிந்து செய்யும்போது அதை ஏற்றுக் கொள்ளத் தயாராவது எளிது என்பதற்கேற்ப இங்கு யு.பி.ஐ/UPI பேமெண்ட்டுகளில் என்ன நடக்கிறது என்பதை அலசுவோம்.

Unified Payments Interface (UPI)) என்பது 2016 ஆம் ஆண்டில் இந்தியத் தேசிய கொடுப்பனவு கழகத்தால் (National Payments Corporation of India (NPCI)) உருவாக்கப்பட்ட நிகழ்நேர கட்டண முறை ஆகும். இது பயனர்கள் தங்கள் மொபைல் ஃபோன்களைப் பயன்படுத்தி வணிகர்கள், நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு உடனடி பணம் செலுத்த அனுமதிக்கிறது. UPI என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமான கட்டண முறைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மாதமும் 1.5 பில்லியன் பரிவர்த்தனைகள் செயலாக்கப்படுகின்றன.

2022இல் இந்தியாவும் இலங்கையும் UPIஐ ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த உடன்படிக்கையானது நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல், செயற்திறனை அதிகரிப்பது மற்றும் செலவுகளைக் குறைப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. யு.பி.ஐ/UPI என்பது மிகவும் அணுகக்கூடிய கட்டண முறையாகும். ஏனெனில் இதனை ஸ்மார்ட்போன் மற்றும் வங்கிக் கணக்கு உள்ள எவரும் பயன்படுத்த முடியும். 70%க்கும் அதிகமான மக்கள் முறையான வங்கிச் சேவைகளைப் பெறாத நிலையில் இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கான மதிப்புமிக்க கருவியாக இது அமைகின்றது. மக்கள் பணம் செலுத்துவதையும் பெறுவதையும் எளிதாக்குவதன் மூலம் இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை அதிகரிக்க யு.பி.ஐ/UPI உதவும். எடுத்துக்காட்டாக, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்தவும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பணம் அனுப்பவும் மற்றும் பயன்பாட்டு பற்றுச்சீட்டின் கொடுப்பனவினை செலுத்தவும் யு.பி.ஐ/ UPI பயன்படுத்தப்படலாம். இது பணத்தின் பயன்பாட்டினை பாரிய அளவில் குறைக்க உதவுகின்றது.

யு.பி.ஐ/UPI மிகவும் திறமையான கட்டண முறையாகும். ஏனெனில் இது பயனர்களை உடனடியாக பணம் செலுத்த அனுமதிக்கிறது. இது வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தலாம். ஏனெனில் அவர்கள் காசோலைகள் அல்லது ஏனைய முறைமைகளில் மட்டும் முழுமையாகத் தங்கியிருக்க வேண்டியதில்லை. வணிகங்கள் பரிவர்த்தனைகளை நடத்துவதை எளிதாக்குவதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்திறனை மேம்படுத்தவும் யு.பி.ஐ / UPI உதவும். எடுத்துக்காட்டாக சப்ளையர்களுக்கு பணம் செலுத்தவும் ஊதியம் செலுத்தவும் வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் வசூலிக்கவும் யு.பி.ஐ / UPI பயன்படுத்தப்படலாம். இது இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான செலவைக் குறைக்க உதவும். யு.பி.ஐ / UPI என்பது மிகவும் செலவு குறைந்த கட்டண முறையாகும். ஏனெனில் இதற்கு எந்தவிதமான உட்கட்டமைப்பும் தேவையில்லை. இதன் பொருள் வணிகர்கள் அல்லது நுகர்வோர் யு.பி.ஐ / UPI ஐப் பயன்படுத்துவதற்கு எந்தக் கட்டணமும் இல்லை. வர்த்தகர்கள் புள்ளிவிற்பனை முனையங்கள் point of sale (POS) அல்லது பிற கட்டணச் செயலாக்க கருவிகளில் முதலீடு செய்வதற்கான தேவையை நீக்குவதன் மூலம் இலங்கையில் வணிகம் செய்வதற்கான செலவைக் குறைக்க யு.பி.ஐ/UPI உதவும். இது வணிகங்களுக்கு கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்தலாம். அதன் செயற்பாடுகளில் மீண்டும் முதலீடு செய்யலாம்.

இலங்கையில் யு.பி.ஐ / UPI இன் நடைமுறைப்படுத்தல் இன்னும் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. ஆனால் அது பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளது. NPCI பல இலங்கை வங்கிகளுடன் UPIஐ வெளியிடுவதற்கு கூட்டு சேர்ந்துள்ளது. மேலும் UPI இயக்கப்பட்ட வணிகர்களின் எண்ணிக்கை வரும் மாதங்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அரசாங்கமும் UPI முன்முயற்சிக்கு ஆதரவாக உள்ளது. மேலும் அதை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, அரசு நிறுவனங்களால் செய்யப்படும் UPI கட்டணங்களுக்கான 1% பரிவர்த்தனை கட்டணத்தை அரசாங்கம் தள்ளுபடி செய்துள்ளது. இலங்கையில் UPIஐ நடைமுறைப்படுத்துவது நாட்டின் நிதித்துறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். UPI ஆனது நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கவும் செயற்திறனை அதிகரிக்கவும் மற்றும் செலவுகளைக் குறைக்கவும் திறன்களைக் கொண்டுள்ளது. இலங்கையில் UPI தொடர்ந்து வளர்ந்து வருவதால் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் இது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**UPI ஆனது இலங்கையில் உள்ள வர்த்தகர்களுக்கு பல நன்மைகளை வழங்க முடியும். அவையானவை;**

அதிகரித்த வாடிக்கையாளர் வசதி:

UPI வாடிக்கையாளர்கள் தங்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்தி உடனடியாகவும் பாதுகாப்பாகவும் பணம் செலுத்த அனுமதிக்கிறது.

வாடிக்கையாளர்கள் இனி பணத்தை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை அல்லது பணம் செலுத்த வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை என்பதால் வணிகர்களின் கடைகளில் கொள்வனவு செய்வதற்கு இது மிகவும் வசதியாக இருக்கும்.




**குறைக்கப்பட்ட பரிவர்த்தனைச் செலவுகள்:**

வணிகர்கள் பாயின்ட் ஆஃப்சேல் (POS) டெர்மினல்கள் அல்லது பிற கட்டணச் செயலாக்க சாதனங்களில் முதலீடு செய்ய UPI தேவையில்லை.

இது பரிவர்த்தனை கட்டணத்தில் வர்த்தகர்களின் பணத்தை சேமிக்க முடியும். இது குறைந்த விலையில் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.

**மேம்படுத்தப்பட்ட பணப்புழக்கம்:**

UPI கட்டணங்கள் உடனடியாகத் தீர்க்கப்படும்.

இது வர்த்தகர்களின் பணப்புழக்கத்தை மேம்படுத்த உதவும். அதிக மதிப்புள்ள பொருட்களை விற்கும் வர்த்தகர்களுக்கு அல்லது சப்ளையர்களுக்கு வழக்கமான பணம் செலுத்த வேண்டியவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு:

இரண்டு காரணி அங்கீகாரம் மற்றும் குறியாக்கம் உட்பட வாடிக்கையாளர் தரவைப் பாதுகாக்க UPI பல பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துகிறது. இது வர்த்தகர்களை மோசடி மற்றும் பிற நிதி அபாயங்களிலிருந்து பாதுகாக்க உதவும்.

**பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைய வாய்ப்பாக உள்ளது:**

UPI என்பது இந்தியாவில் பிரபலமான கட்டண முறையாகும்.

மேலும் இலங்கையில் அதை ஏற்றுக்கொள்வது வர்த்தகர்களுக்கு பரந்த வாடிக்கையாளர் தளத்தை அடைய உதவும். இந்தியாவில் பிரபலமான தயாரிப்புகள் அல்லது சேவைகளை விற்கும் வர்த்தகர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவர்களின் வியாபாரத்தை விரிவுபடுத்த உதவுகின்றது: இலங்கை அல்லது இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் செலுத்துவதை எளிதாக்குவதன் மூலம் வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்த UPI உதவும்.

இது வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை வளர்த்து புதிய சந்தைகளை அடைய உதவும்.

ஒட்டுமொத்தமாக, இலங்கையில் வர்த்தகர்களுக்கு UPI ஒரு மதிப்புமிக்க கருவியாக இருக்க முடியும். UPI அமுலாக்கத்தில் இருந்து இலங்கையில் உள்ள வர்த்தகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இங்கே:

உங்களின் UPI பின் இலக்கம்/pin number பாதுகாப்பானது என்பதையும் யாருடனும் பகிரவில்லை என்பதையும் உறுதிசெய்யவும். உங்கள் UPI பின் என்பது உங்கள் UPI கணக்கிற்கான அணுகலாகும். எனவே அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியம். உங்கள் பின்னை யாருடனும் அதாவது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

பொது வைஃபை நெட்வொர்க்குகளில் உங்கள் UPI பின்னை உள்ளிடும் போது கவனமாக இருக்கவும். பொது வைஃபை நெட்வொர்க்குகள் எப்போதும் பாதுகாப்பாக இருக்காது. எனவே இந்த நெட்வொர்க்குகளில் உங்கள் UPI பின்னை உள்ளிடும்போது கவனமாக இருக்க வேண்டியது அவசியம். முடிந்தால், பொது வைஃபை நெட்வொர்க்குகளில் உங்கள் பின்னை உள்ளிடுவதைத் தவிர்க்கவும்.

உங்கள் மொபைல் ஃபோனைப் பாதுகாப்பாக வைத்திருங்கள். அதை இழக்காதீர்கள். உங்கள் மொபைல் போன் உங்கள் UPI அணுகல் சாதனம். எனவே அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியம். மேலும் உங்கள் UPI கணக்கை அணுக வேறு யாரும் உங்கள் மொபைல் ஃபோனைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள்.

உங்கள் UPI பரிவர்த்தனைகள் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்களுக்குத் தவறாமல் கண்காணிக்கவும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் போன்ற சந்தேகத்திற்கிடமான செயல்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும்.

உங்கள் UPI கணக்கு திருடப்பட்டதாக நீங்கள் சந்தேகித்தால் அல்லது ஏதேனும் சந்தேகத்திற்குரிய செயற்பாட்டைக் கண்டால் உடனடியாக உங்கள் வங்கிக்குத் தெரிவிக்கவும். உங்கள் வங்கியின் செயற்பாட்டை ஆராய்ந்து உங்கள் கணக்கைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் UPI கணக்கை மோசடி மற்றும் பிற நிதி அபாயங்களிலிருந்து பாதுகாக்க உதவலாம். UPIஐப் பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கான சில கூடுதல் குறிப்புகள் இங்கே:

உங்கள் UPI கணக்கிற்கு வலுவான கடவுச்சொல்லைப் பயன்படுத்தவும்.

உங்கள் UPI கணக்கிற்கு இரு காரணி அங்கீகாரத்தை இயக்கவும் (Two factor authentication). நீங்கள் உள்நுழையும்போது கடவுச்சொல்லுடன் கூடுதலாக உங்கள் தொலைபேசியிலிருந்து ஒரு குறியீட்டை உள்ளிடுவதன் மூலம் இரண்டு காரணி அங்கீகாரமானது உங்கள் கணக்கில் கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கிறது.

உரைச் செய்திகள் அல்லது மின்னஞ்சல்களில் உள்ள இணைப்புகளைக் கிளிக் செய்யும் போது கவனமாக இருங்கள். மோசடி செய்பவர்கள் UPI பின்களை திருடுவதற்கு மின்தூண்டிலிடல் (phishing) மோசடிகள் ஒரு பொதுவான வழியாகும். உங்கள் UPI பின்னை உள்ளிடும்படி கேட்கும் உரைச் செய்தி அல்லது மின்னஞ்சலைப் பெற்றால் செய்தியில் உள்ள எந்த இணைப்பையும் கிளிக் செய்ய வேண்டாம். அதற்குப் பதிலாக செய்தியின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க உங்கள் வங்கியை நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

உங்கள் UPI பயன்பாட்டைப் புதுப்பித்த நிலையில் வைத்திருங்கள். UPI பயன்பாடு தொடர்ந்து புதிய பாதுகாப்பு அம்சங்களுடன் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் சமீபத்திய பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த உங்கள் பயன்பாட்டைப் புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதை உறுதிசெய்யவும்.

இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் UPI கணக்கையும் உங்கள் நிதித் தகவலையும் பாதுகாக்க உதவலாம்.

இலங்கையில் யு.பி.ஐ / UPI இன் அறிமுகமானது நாட்டின் நிதி நிலைமையை மாற்றும் ஆற்றலைக் கொண்ட ஒரு பாரிய அபிவிருத்தியாகும். UPI என்பது மிகவும் அணுகக்கூடிய, திறமையான, மற்றும் செலவு குறைந்த கட்டண முறையாகும்.

இலங்கையில் UPI தொடர்ந்து வளர்ந்து வருவதால் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் இது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அறுகம்பை சுற்றுலா வலயத்தில்

# சுற்றுலா மேம்பாட்டு திட்டங்கள் ஆரம்பம்

பொத்துவில், அறுகம்பை சுற்றுலா வலயத்திற்கு சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ விஜயம் செய்ததைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து அறுகம்பையில் பல வேலைத் திட்டங்களை அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

அறுகம்பை சுற்றுலா வலயத்துக்கு மேற்கொண்ட விஜயத்தைத் தொடர்ந்து இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

அந்த வகையில் அறுகம்பை பிரதான கடற்கரையில், கடற்கரை சுத்தம் செய்தல், களப்பு பிரதேசங்களில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் சிறிய படகு ஓட்டுனர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்குதல், அறுகம்பை கடற்கரையில் குப்பைத் தொட்டி வைத்தல், ஊரணி விஸ்கி கடல் பிரதேசத்தில் மண் அரிப்பைத் தடுக்க மண் மூட்டைகள் அடுக்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நளின் பெரேரா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார், அவர் இந்நிகழ்வில் உரையாற்றும் போது, 'சுற்றுலாத்துறை முன்னேற்றமானது வருமானத்தை மாத்திரமல்லாமல் வேலைவாய்ப்புக்களையும் அதிகளவில் பெற்றுத்தரக்கூடியது என்றும், இத்துறையை பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.



இவ்வேலைத்திட்டங்களில் தன்னார்வ தொண்டர்கள், இளைஞர் அமைப்பு, விளையாட்டுக் கழகம், ஹோட்டல் உரிமையாளர்கள், அறுகம்பை வாகன உரிமையாளர்கள் சங்கம், அரச அதிகாரிகள், முப்படையினர், பொத்துவில் பொலிஸ், பொத்துவில் பிரதேச சபை, பொத்துவில் பிரதேச செயலக சீ.சீ.டி மற்றும் எம்.ஈ.பி.ஏ ஆகியவற்றின் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம். ஜாஃபர் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வேலைத் திட்டத்தை அமுல்படுத்த உதவிய சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, அமைச்சின் செயலாளர், சுற்றுலா அதிகார சபைத் தலைவர், பொத்துவில் பிரதேச சபை செயலாளர் ஆகியோருக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

## பெண்களுக்கு நட்பான பணியிட விருதை வென்ற Brandix:




நிறுவனசார் தலைமைத்துவத்தை வெற்றிகரமாக வெளிப்படுத்தி, 2023ஆம் ஆண்டின் பெண்களுக்கு நட்பான பணியிட விருதுகள் வழங்கும் நிகழ்வில் மிகவும் சிறந்த பெண்களுக்கு நட்பான பணியிட விருதை Brandix சுவீகரித்திருந்தது. மேலும் ஒன்பது நிறுவனங்களுடன் இணைந்து இந்த விருதை Brandix பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. AICPA மற்றும் இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் (CIMA) ஆகியன SATYN சஞ்சிகையுடன் இணைந்து இந்த கௌரவிப்பை வழங்கியிருந்தன. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல் ஆகியவற்றில் Brandix காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இந்த கௌரவிப்பு அமைந்திருந்தது.

இலங்கையின் முன்னணி ஏற்றுமதியாளராகத் திகழும் Brandix, பெண்களுக்கு வலுவூட்டுவதற்கான சிறந்த முன்மாதிரியான நிறுவனமாக அமைந்திருப்பதுடன், ஆரோக்கியம், நிபுணத்துவ வளர்ச்சி மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றைக் கொண்ட சூழலை வழங்குகின்றது. இலங்கையில் Brandix இன் 77% ஆன ஊழியர்கள். பெண்களாக அமைந்திருப்பதுடன், சிறந்த மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திறமைசாலிகளில் 27% ஆனவர்கள் பெண்களாக உள்ளனர்.

## ISO/IEC 27001:2013 சான்றிதழுடன் மீள உறுதி செய்யப்பட்டுள்ள அமானா வங்கி

தகவல் பாதுகாப்பு நியமங்களை பேணுவதற்கான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், அமானா வங்கி மீண் டும் ISO/IEC 27001:2013தரச் சான்றிதழை வெற்றிகரமாகப் பெற்றுள்ளது.

தகவல் பாதுகாப்பு மற்றும் பேணலுக்கான உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ISO தரத்தை, ஐக்கிய இராஜ்ஜிய தரப்படுத்தல் சபையின் (UKAS), Bureau Veritas ஸ்ரீ லங்காவினால், வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் மற்றும் இடர் மீட்டல் ஆகியவற்றினால் பேணப்படும் தகவல் தொழில்நுட்ப பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு போன்றன தொடர்பான தகவல் பாதுகாப்பு நிர்வாகத்துக்காக முறையான, சுயாதீன மீளாய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. இந்தச் சான்றிதளைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் அமானா வங்கியின் பிரதம தகவல் பிரிவு அதிகாரி சமாஹமட் கியாசுதீன் கருத்துத் தெரிவிக்கையில், "எமது வங்கி மீண்டும் ஒரு தடவை பெருமைக்குரிய ISO/IEC 270001:2013 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். எமது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான வங்கிச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாக இது அமைந்துள்ளது. இந்த சாதனையுடன், Bureau Veritas இனால் முன் னெடுக்கப்பட்ட மீளாய்வினூடாக, துரித தகவல் பாதுகாப்பு செயற்பாடுகளை பேணல் மற்றும் வாடிக்கையாளர் பிரத்தியேகத் தன்மையையும், தகவல் பாதுகாப்பையும் தொடர்ந்தும் பேணுவதை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கான எமது அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது" என் றார்.



## 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு நிதிப்பெறுபேறுகளை வெளியிட்ட SLT குழுமம்

நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டில் SLT PLC இனால் 2.4% (ரூ. 400 மில்.) வருமான வளர்ச்சி பதிவாகியிருந்த நிலையில், மொபிடெல் 9.3% (ரூ. 1,066 மில்.) சரிவை பதிவு செய்திருந்தது. எனவே, குழுமத்தின் வருமானம் 2.8% (ரூ. 763 மில்.) இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

SLT PLC வருமான அதிகரிப்பில் புரோட்பான்ட், IPTV மற்றும் நிறுவனசார் வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன.

எவ்வாறாயினும், சர்வதேச இடம்மாற்று வருமானம் 90.3% (ரூ. 614 மில்) குறைவடைந்தமை காரணமாக இந்த அதிகரிப்பும் குறைந்திருந்தது. சர்வதேச இடம் மாற்று வருமானம் என்பது எவ்விதமான எல்லைப் பெறுமதிகளையும் கொண்டிருக்காது என்பதை குறிப்பிட வேண்டும். SLT PLC வருமான வளர்ச்சி பிரதானமாக, ஃபைபர் வலையமைப்பு மற்றும் வாடிக்கையாளர் வெளியேற்றம் போன்றவற்றினால் தாமதமடைந்தது. மொபிடெல் வருமான வீழ்ச்சியில், வாடிக்கையாளர் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி பங்களிப்புச் செய்திருந்தது. ஜூன் 2022 முதல் 2023 ஜூன் வரையான காலப்பகுதியில் வாடிக்கையாளர் இருப்பு 1 மில்லியனினால் வீழ்ச்சியடைந்திருந்தது.



SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவுகள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் 15.1% இனால் (ரூ. 2,513 மில்.) அதிகரித்திருந்தது.

மொபிடெல் வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்தாலும், தொழிற்பாட்டு செலவுகள் 30.4% இனால் (ரூ. 1,998 மில்.) அதிகரித்திருந்தது.

## Dr.Fixit இன் வர்த்தக நாம தூதுவராக ரொஷான் மகாநாம நியமனம்

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நீர்த்தடுப்பு தயாரிப்பான Dr.Fixit இன் வர்த்தக நாம தூதுவராக பிரபல முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் ரொஷான் மகாநாம நியமிக்கப்பட்டுள்ளதாக Pidilite Lanka நிறுவனம் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. Pidilite Lanka நிறுவனமானது புகழ்பெற்ற இலங்கை McLarens Group இல் ஒன்றான Macbertan மற்றும் Pidilite Industries ஆகியவற்றுடன் இணைந்த கூட்டு நிறுவனமாகும்.

Pidilite Industries நிறுவனத்தின் சர்வதேச செயல்பாடுகளுக்குப் பொறுப்பான தலைமை வணிக அதிகாரி திரு. யோகேஷ் ஆனந்த் இதன்போது கூறியதாவது, "வீடுகளை நிர்மாணிக்கும் மற்றும் புதுப்பிக்கும் போது சரியான வகை நீர்ப்புகா தீர்வுகளைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானது. இல்லையெனில், நீர் கசிவு காரணமாக பல்வேறு வகையான சேதங்கள் ஏற்படலாம், இதனால் பெரும் இழப்புகள் மற்றும் மோசமான சுகாதார நிலைமைகள் ஏற்படலாம். இதனால் Pidilite அறிமுகப்படுத்திய மிகவும் வெற்றிகரமான நீர்த்தடுப்பு தயாரிப்பான Dr.Fixit, நீர்ப்புகா பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து இலங்கையர்களுக்கு தெளிவூட்ட எதிர்பார்க்கின்றது.

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரான ரொஷான் மகாநாமவை எமது வர்த்தக நாம தூதுவராக நியமித்ததன் மூலம், இந்த விழிப்புணர்வு பணிகளுக்கு பெருமளவு ஒத்துழைப்புகள் கிடைக்கும். கிரிக்கெட் வீரராக அவர் பெற்றுள்ள நம்பகத்தன்மையே இதற்குக் காரணம்.




இந்த ஒத்துழைப்பின் மூலம், நீர்த்தடுப்பு முக்கியத்துவம் குறித்து இலங்கையர்களுக்கு வெற்றிகரமான விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஒவ்வொரு இலங்கையரையும் நீர்க் கசிவு இல்லாத வீட்டு உரிமையாளராக மாற்றவும் எங்களுக்கு முடியுமாக இருக்கும்''

## கண்டியை வண்ணமயமாக்கிய Coke Kottu Beat Party




CocaColaவின் 'Now Kandy's cooking' Campaign இலங்கையின் உணவு மற்றும் கலாசாரத்தை கொண்டாடும் அதன் புகழ்பெற்ற Coke Kottu Beat Party கடந்த ஜூலை 29 ஆம் திகதி சனிக்கிழமை குண்டசாலை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 25,000க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். இளைஞர்களின் இதயங்களை கொள்ளைகொண்ட பிரபலமான இசைக்குழுவான, மிட்லேன் இசைக்குழுவுடன் நான்கு கலைஞர்களால், இந்த அற்புதமான மாலைபொழுது வண்ணமயமானது மற்றும் பங்குபற்றியவர்களுக்கு பல்வேறு வகையான சுவையான Kottuகளை அனுபவிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு கூடியிருந்த அனைவரினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில் Coke Kottu Battle போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளருக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

## கேம்பிரிட்ஜ் இன்டர்நஷனல் 2023 பெறுபேறுகள் வெளியீடு

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்கள் கேம்பிரிட்ஜ் இன்டர்நஷனல் AS மற்றும் உயர் தரம், IGCSE மற்றும் சாதாரண தரத்திற்கான பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்

கேம்பிரிட்ஜ் இன்டர்நஷனல், 2023 ஜூன் பரீட்சைத் தொடரின் பெறுபேறுகளை கடந்த வாரத்தில் இலங்கையிலுள்ள மாணவர்கள் பெற்றுள்ளனர். கேம்பிரிட்ஜ் IGCSE மற்றும் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் ஆகஸ்ட் 16 ஆம் திகதியும், கேம்பிரிட்ஜ் இன்டர்நஷனல் AS மற்றும் உயர் தர பெறுபேறுகள் ஆகஸ்ட் 10 ஆம் திகதியும் வெளியிடப்பட்டன. இந்த பெறுபேறுகள் அவர்களின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான கட்டத்தின் முடிவைக் குறித்து நிற்பதுடன், தொழில் புரிந்தாலும் அல்லது படிப்பைத் தொடர்ந்தாலும், இது உலகில் அவர்களின் அடுத்த கட்டத்திற்கு அவர்களைத் தயார்படுத்துகின்றன.

ஒரு இலாப நோக்கற்ற ஸ்தாபனமான கேம்பிரிட்ஜ் இன்டர்நஷனல், உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகும். அத்துடன் 3 முதல் 19 வயதுடையவர்களுக்கான சர்வதேச கற்கை நெறிகள் மற்றும் தகைமைகளின் உலகின் மிகப்பெரிய சேவை வழங்குநராகும். அதன் 2023 ஜூன் பரீட்சைத் தொடரின் பெறுபேறுகளை உலகம் முழுவதும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வெளியிட்டுள்ளது.

## தெற்காசியாவின் விசாலமான சொகுசு முதியோர் நலன்பேணும் இல்லம்

இலங்கையின் விசாலமானதும் முதன்மையானதுமான முதியோர் நலன்பேணுகைச் சேவை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ரோயல் நர்சிங் ஹோம் தனியார் நிறுவனம் தனது மூன்றாவது முதியோர் நலன் பேணுகை இல்லத்தை கல்கிஸ்ஸை பகுதியில் அண்மையில் திறந்துள்ளது.

காலி வீதிக்கு அண்மித்ததாக கல்கிஸை நகரில் இரண்டு ஏக்கர் பரப்பளவிலான அழகிய இடத்தில் அமைந்திருந்த Palm Beach 04 நட்சத்திர ஹோட்டல் வளாகமே இவ்வாறு சொகுசு வசதிகளுடன் கூடிய 100 அறைகளை கொண்ட சர்வதேச தரத்துக்கமைய ISO 9001_2015 தரச் சான்றிதழை வென்ற முதியோர் நலன்பேணுகை இல்லமாக மாற்றப்பட்டுள்ளது. இது தெற்காசியாவின் முதலாவது விசாலமானதும் அதி சொகுசு மிக்கதுமான முதியோர் நலன் பேணுகை இல்லம் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்க்கையின் அந்திம காலத்தை மகிழ்ச்சியாகவும் ஓய்வாகவும் கழிப்பதற்கு இந்த முதியோர் நலன்பேணுகை இல்லம் சகல சொகுசு வசதிகளையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸ கிளையின் வதிவிட முகாமையாளர் சரித்த ஜயசிங்க குறிப்பிட்டார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிரேஷ்ட பிரஜைகளுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரியும் பிள்ளைகளின் அன்பான பெற்றோருக்கு பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும், சுயமரியாதையுடனும் மருத்துவர்கள்,



தாதியர்கள் மற்றும் கனிவான பணியாட்டொகுதியினரின் அரவணைப்பில் வசிப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு அறுசுவை உணவு பானங்கள் மற்றும் சகல வசதிகளும் கொண்டதாக மாதமொன்றுக்கான அறை வாடகை 560 டொலர்களிலிருந்து தொடங்குகிறது.

# விவாகச் சக்கரம்

ரிஸானாவுக்கு தலைப்பிள்ளை கிடைத்திருந்தது. வகுப்புத் தோழிகள் எல்லோரும் பிள்ளை பார்க்க அங்கு செல்வதாக ஏற்பாடாகி இருந்தது. ஸாஜிதா விடியும்வரை காத்திருந்து முந்திக் கொண்டு ஓடினாள். முதலில் புகுந்த அவளுக்கு பெரும் வரவேற்புக் காத்திருந்தது. ரிஸானாவை வார்த்தெடுத்தது போன்ற குழந்தை கைகால்களை அடித்து ஆரவாரம் செய்தது. ஸாஜிதாவின் நெஞ்சுக்கள் இலத்திரன் வேகத்தில் கற்பனைக் கோடுகள் ஓடின. அதற்கிடையில் சுகுரா...முஸ்பிரா...ரஷ்மியா...ருஷ்தா...எல்லோரும் கூடவே கலகலப்பையும் சுமந்துகொண்டு வந்து ஏறினர். அவர்களைப் பின்தொடர்ந்து எல்லோரது பங்களிப்புடன்கூடிய பரிசுப் பொதியும் ஆட்டாவில் வந்து சேர்ந்தது.

"ஃபொடொகொபி அடிச்சமாதிரி ஒன்னப் போலவே தான்டி புள்ளேம்" ருஷ்தா தொடக்கி வைத்தாள்.

"அடீ நீ அப்பிடிச் சென்னா அவள்ட பொடியனுக்கு கோவம் வரும். நிக்கியோ தெரியா " அடுத்த கட்டத்துக்கு தாவினாள் முஸ்பிரா.

" ஏன் கோவம் வார ? தாயப்போல புள்ள நூலப்போல சேலயென்டு ஹம்தூன் ஸேர் படிச்சித் தந்தது நெனவில்லயா " தன் பண்டிதத் தனத்தைக் காட்டினாள் சுகுரா.

இப்படியாக குழந்தையின் தூக்கத்தையும் தாயின் அசௌகரியங்களையும் கவனத்திற் கொள்ளாது தங்களின் உலகத்தில் அவர்கள் சஞ்சரித்தனர்.

தேநீர் உபசாரத்திற்கும் குறைவிருக்கவில்லை. வேறு பெண்களும் பிள்ளை பார்க்க வந்த வண்ணம் இருந்தனர். எப்படியோ ஒருமணி நேரத்திற்குமேல் அங்கு கடத்திவிட்டனர். அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விடைபெறும் நேரம் வந்துவிட்டது.

"ரிஸ்னா நாங்க பொகப்போறடி.ம்...நாங்க இன்னோம் அவடத்திலதான். நீ ரெண்டு பாச்சல் முன்னுக்கு பாஞ்சிட்ட. சரி, சரி எங்கட கலியாணத்துக்கு புள்ளயேம் கூட்டிக்கொணுவா "சிரிப்பைக் கிளறிவிட்ட ரஷ்மியா எல்லோரையும் இழுத்துக்கொண்டு முற்றத்துக்குப் பாய்ந்தாள்.

"இன்னும் எத்தினயோ எடத்துக்கு ஏறோணும். நாங்க ரெண்டுமணிக்குப் பொறகு தான் ஊட்டுக்கு போற. உம்மாமாறு சோறாக்கி வெக்கட்டும்"

குழுத் தலைவியாக தன்னைப் கற்பனை செய்துகொண்ட ருஷ்தா சொன்னதை எவரும் வெட்டிப் பேசவில்லை. மௌனம் விருப்பத்தின் அடையாளம் அல்லவா?

###

ஸாஜிதா வெளியே சென்றுள்ளதால் மூன்றுபேர் சேர்ந்து செய்யும் சமையல் வேலையை அன்று இருவர் செய்ய வேண்டியிருந்தது. தங்கை அமீனாவும் உம்மாவும் உதுலக்காவிடம் வல்லாரைக் கீரையும் சைக்கிள் மீன்காரனிடம் பாரை மீனும் காலையிலேயே வாங்கி வைத்திருந்தனர். வழமையான பருப்பும் சோறும் அதில் சேர்ந்துகொள்ளும்.

உம்மா மீன் கழுவுகையில் அமீனா வல்லாரை இலை பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

" தாத்தோட சென்னா உம்மா ? " தயங்கித் தயங்கித் தான் அமீனா கேட்டாள்.

இளையவள் இப்படிக் கேட்பாளென்று உம்முஹபீபா எதிர்பார்க்காததால் ஒருகணம் திக்குமுக்காடிப்போனாள்.

"தாத்த ஈக்கச்செல்லே தங்கச்ச பொண் கேட்டுவந்து எல்லாரும் புரியப்பட்டீக்கென்டு எப்பிடியன் மகள் செல்லிய.ம்...அவள் கண்கலங்கினா என்னால பொறுக் கேலுமா ?" என்று கேட்டபடியே புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவசரப்பட்டு ஏன் கேட்டேனென்று ஆதங்கித்தாள் அமீனா.

" சீக்கரமா தாத்தக்கும் ஒரு விஷயம் சரிவரோணுமென்டு வாப்பாம் ஓடித்திரீத..நாலஞ்சி விஷயம் பாத்தும் ஒன்டும் சரிவரல்ல. நானும் அஞ்சி நேரமும் தொழுது தொழுது துவாவும் கையுமா நிக்கிய."

அமீனா திடுக்கிட்டாற்போல் எழுந்து ஜன்னலுக்கு வெளியே அங்குமிங்கும் பார்த்தாள்.

" தாத்த வாரோ தெரியான்டு பாத்தும்மா"

"கூட்டாளிமாரு சேந்தா டைம் போறது வெளங்கியல்ல மகள். தாத்த வரச் சொணங்கும்.ம்... நாங்க சென்னாலும் செல்லாட்டீம் எப்பிடிச்சரி தெரீமாகியதானே?. தாத்தக்குச்சரி தங்கச்சிக் குச்சரி நல்ல விஷயமொண்டு தேடிவந்தா கையுடேலுமா புள்ள? அல்லாஹ்தான் மொகம் பாக்கோணும்"

உம்முஹபீபா மீன் குழம்பை அடுப்பில் வைத்துவிட்டு மகளைப் பார்த்தாள். வல்லாரைச் சம்பல் வேலைதான் எஞ்சியிருந்தது. அவள் வல்லாரைத் தட்டையும் அரிந்த வெங்காயம் மிளகாயையம் உம்மாவிடம் கொடுத்து நிமிரும்போது சின்னப் பள்ளிவாசலில் ளுஹருக்கான அதான் ஒலிப்பது கேட்டது

"நான் தொழுது கொள்கிறேன் அம்மா ". என்றவாறு அமீனா பைப்படிக்குச் சென்றாள்.

###

ரஷ்மியாவும் முஸ்பிராவும் ஸாஜிதாவை வீட்டடியில் விட்டுவிட்டு மேலே நடந்தனர்.

பேச்சுக் குரல் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள் உம்முஹபீபா. ஸாஜிதாவின் முகத்தில் அலாதியான தொரு பிரகாசம் தெரிவது ஏனென்னு அவளது உம்மாவுக்கு விளங்கவில்லை.

"ரெண்டுமணி பிந்தீட்டு. சாப்பாடும் தின்னாம எங்கியன் திரிஞ்சிட்டு வார?" அவளது கேள்வி.

"நான் திண்டும்மா. ருஸ்தியாங்கட மரத்தால பிலாக்கயொண்டு பிச்சி... அவிச்சி... கருவாடும் தீச்சிக் கொண்டு எல்லாரும் ஜாதியாத் திண்ட" குதூகலத்துடன் சொன்னாள் ஸாஜிதா.

" கொமருவள் சேந்தா இனிக் கூத்துத்தான்" என்றவாறு மெல்லிய சிரிப்புடன் 'மகளுக்கு கோப்பி கொஞ்சம் ஊத்திக் குடுக்கோம்' என்று எண்ணியபடி சமயலறைப் பக்கமாகச் சென்றாள் உம்மா.


ஸாஜிதா முகம், கை கழுவிக்கொண்டு வருவதற்கும் அமீனா அறையிலிருந்து வெளிப்படுவதற்கும் சரியாக இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

அக்கா தங்கை என்றாலும் ஒரு வருட வித்தியாசம் தான். அவர்கள் பாடசாலை, மத்ரஸா, கந்தூரி, கல்யாணம், விளையாட்டு...இப்படி எங்குமே ஒன்றாகத் தான் போவார்கள். தோழிகள் போல. அதுமட்டுமன்றி கல்வியை முடித்தபின் வேலையா? திருமணமா? இதில் எது முந்துகிறதோ அதை ஏற்கவும் அவர்கள் தயாராகவே இருந்தனர். ஆனால் அக்காவுக்கு முன் தங்கைக்கு என்று அவர்கள் நினைக்காததுதான் நடந்து விட்டது.

"அமீனா அல்லாஹ்ட நாட்டப்படிதான் எல்லம் நடக்கிய. நீ ஒண்டுக்கும் கவலப்பட வாண"

அவளுக்கு வார்த்தைகளே வரவில்லை. விம்மிவிம்மி அழுதாள். ஸாஜிதாவும் அழுதாள். கட்டிப் பிடித்தபடி இருவருமே அழுதனர்.

கோப்பிக் கோப்பையுடன் வந்த உம்முஹபீபா கல்லாகிப் போனாள்.



###

அமீனாவின் கைபேசி அழைத்தது. ஞாயிற்றுக் கிழமை அல்லவா? அவளும் எதிர்பார்ப்புடன் தான் இருந்தாள்.

"இன்னும் ஆறு மாஸ்த்தேல நான் லீவில ஊருக்கு வருவன். கலியாணத்த முடிச்சி ஒங்கள கட்டாருக்க கூட்டிக் கொணுவரத்தான் யோசின." ரம்ஸீனின் குரல் அவளுக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை.

"எல்லம் தாத்தட கலியாணத்துக்கு பொறகுதான்" அவள் தீர்க்கமாகச் சொன்னாள்.

ரம்ஸீன் திடுக்கிட்டான்." தாத்தாக்கு பேசி முடிச்சிருந்தா ரெண்டேம் ஒன்டாச் செஞ்சாலும் பிரச்சினில்ல."

"துஆச் செஞ்சிக்கோங்க" என்று சொன்னபடி அவள் கைபேசியைத் துண்டித்தாள்.

ரம்ஸீனின் அவசரம் நியாயமானதாக இருந்தாலும் அவள் அவசரப் படவில்லை.

தாத்தாவுக்கான ஏற்பாடு சரியானபின் இருவரும் சேர்ந்து அடுத்த கட்டத்தைச் சித்திப்பதே அவளது இலக்காக இருந்தது.

ரம்ஸீன் கட்டாரில் ஒரு கம்பனியில் உதவிக் கணக்காளராக கடந்த மூன்று வருடங்களாக வேலை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பழைய வீட்டை உடைத்து மாடிவீடாக கட்டியுள்ளதும் வாப்பாவுக்கு ஒரு ஜவுளிக்கடை அமைத்துக் கொடுத்துள்ளதும் தம்பியை துபாய் போக வைத்துள்ளதும் அவனது உண்மைத் தன்மையை உறுதி செய்கின்றன.

நிறையவே அவனுக்கு நல்ல வசதியுள்ள இடங்களிலிருந்து பேச்சுக்கள் வந்தபோதிலும் அமீனாவைக் கேட்டுவந்ததற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. காதல் என்று பலரும் நினைத்தபோதும் அப்படி எதுவுமே இல்லை. மொத்தத்தில் அவளுக்கு அவன் யாரென்றுகூட திட்டவட்டமாகத் தெரியவில்லை. உம்மா, வாப்பா உள்ளிட்ட அனைவருமே நல்ல விஷயம் என்று சொல்லி ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஏதோ ஒருவகையில் அமீனா அதிர்ஷ்டசாலிதான். இருந்தும் அவள் தாத்தாவுக்குப் பிறகுதான் எனக்கு என்பதில் உறுதியாக நின்றாள்.

###

அஸர் தொழுதுவிட்டு வந்தால் ஜமால் நானாவுக்கு கோப்பி ஒரு கோப்பை குடித்தேயாகவேண்டும். பின் விறாந்தைப் படிக்கட்டில் வந்து அமர்ந்து கொள்வார். அன்றும் அப்படித்தான். அவர் ஒன்றும் பெரிய வசதிகாரனல்ல.

ஒரு பழைய வீடும் இரண்டு பெண் பிள்ளைகளும் தான் அவரது சொத்துக்கள். பிள்ளைகள் அரசாங்க வேலையொன்றில் சேரக்கூடியளவு படித்திருந்தனர். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்ட வண்ணமிருந்தனர். பாரம்பரிய கடைக் கணக்கு வேலை செய்வது தான் அவரது தொழில். இதனால் பல வசதிகாரர்களின் தொடர்பு அவருக்குண்டு. பிள்ளைகளின் தேவைகள் வந்தால் அவர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது.

"இந்தாங்க கோப்பி"

கோப்பிக் கோப்பைகளோடு இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர். பொதுவாக கோப்பி வேளையில்தான் இருவரும் பலதும் பத்தும் பேசிக் கொள்வார்கள்.

"பொம்புளப் புள்ளயள் பெருக்கப் பெருக்க ஏன்ட ரெத்தோட்டம் கூடிக்கொண்டீந்த." ஜமால் நானா ஆரம்பித்தார்.

"இப்ப கொஞ்சம் கொறஞ்சீக்குமேன் "உம்முஹபீபா மெல்லிய சிரிப்போடு கூறினாள்.

"ளயவளுக்கு வந்தது மூத்தவளுக்கு வந்தீந்தா இந்த மட்டுக்கு கலியாணம் நடந்தும் முடிஞ்சீக்கும். அவங்க சீக்கரம் கலியாணம் எடுக்கோணுமென்டு செல்லிய. மூத்தவளுக்கு பேசியது பேசியதெல்லம் ஒடஞ்சிபோற"

"நீங்க செல்லியது மெய்தான். அரவாசிக் கரவாசி இப்ப எங்கட செலவு கொறஞ்சிட்டேன். இதுக்கு நாங்க அல்லாஹ்வுக்கு சுகூர் செய்யோணும்."

"அத்தாஸ் மௌலானா பேசிய அந்த வெலியாமத்து விஷயமாலும் சரிவரோணும் "

"இங்க பாருங்கொ. தெரிஞ்ச மனிசரா ஈக்கோணும். பாலத்துக் கங்கல பாரக் கடயாப்பம் எண்டு செல்லியத்த நெனவு வெச்சிக்கோங்க"

"இந்த ரெண்டு மூணு மாஸ்தேக்குள்ள பாலத்துக் கிங்கல ஆறு விசயம் பாத்த...எல்லமே தோத்துப் பெய்த்த. அந்த பென்ஷனெடுத்த ஜவாது மாஸ்டரு நல்லநல்ல விஷயமியள் கொணுவாராமெண்டு கேள்விப்பட்ட. அஸருக்கு பொறகுதானாம் அவர அம்புடேன்டிய. அப்ப அங்கல பெய்த்திட்டு வரவா நான். " என்றவாறே எழுந்தார்.

"அல்லாஹ்தான் ஈக்கான்" என்றபடி கோப்பிக் கோப்பைகளோடு உம்மு ஹபீபாவும் எழுந்தாள்.

###

கடந்த நாலைந்து நாட்களாகவே துபாயிலுள்ள இளைய மகன் அகமதுக்கு கோல் அடித்தபோதும் தொடர்பு கிட்டவில்லை. வேலை நெருக்கடி தவிர வேறு காரணம் இருக்க முடியாது.

மூத்தவன் விடயத்தை ஊர் அறிந்ததும் இளையவனின் கோவை மேலே வந்திருக்கிறது. கல்யாணப் பேச்சுக்கள் வந்த வண்ணமுள்ளன. வருவதை கணவனும் மனைவியுமாக அலசிப் பார்த்து பிடித்தவற்றை உடனுக்குடன் மகனுக்கு அறிவித்துக்கொண்டருந்தனர்

அப்படி ஒன்று சொல்லத்தான் எதிர்பார்ப்பு. இன்று விடுமுறை நாள் எப்படியும் எடுப்பான் என்ற நம்பிக்கை. நினைத்தது போலவே தொடர்பு கிட்டியிருந்தது. வழமைபோலவே சுக சுவாத்திய விடயங்கள் முதலில் பேசியாயிற்று.

"பெரியோரெடத்திலீந்து ஒரு விஷயம் வந்தீக்கி. படிச்ச புள்ளயாம். மதுரஸாக்கும் மூணு வருஷம் போனாம். நல்ல பஸந்தாமெண்டும் செல்லியாங்க. ஜெஸாயிர் மொதலாளீட மகளாம். ஒரேயொரு பொம்புளப் புள்ளயாம். மகன் எனத்தியன் செல்லிய ?"

"இப்ப நானட கலியாணமேன் முந்தி நடக்கோணும். ஆறு மாஸ்தேல நான வார. கலியாணத்தச் செஞ்சி மைனியேம் கூட்டிக்கொணு பொகோணுமென்டு செல்லிய. ம்.. இனி ஏத்தியனும்மா நெலம"

"மூத்தவளுக்கு இன்னும ஒன்டும் சரிவரல்லேன். தாத்தட கலியாணம் முந்தி நடக்கோணுமென்டு அமீனா ஒரே புடியா நிக்கிய. இந்தக் காலத்தில தாத்த தங்கச்சி பாக்கியல்ல. முன்னுக்கு வாரத்த செஞ்சிபோடிய. தாத்தக் காரீம் தங்கச்சட விஷயத்த செய்யச் செல்லித்தான் செல்லிய"

"எனக்கெண்டா தலசுத்துது உம்மா. நான் பொறகு எடுக்கியன்" மணிக் கணக்கா கதைப்பவன் பத்து நிமிடத்தில் முடித்துக் கொண்டான். எதுவும் கதைக்காமல் உம்மாவும் மகனும் பேசுவதற்கு காது கொடுத்துக் கொண்டிருந்த ஐயூப்காக்கா "அகமதுக்கு மட்டுமல்ல எனக்கும் தலசுத்துது. எல்லாம் கொழம்பிப் பெய்த்திருமோ தெரிய" என்றார்.


"அல்லாஹ் காப்பத்தோணும்" என்று மனப் பாரத்துடன் சொல்லிக் கொண்டாள் மரியம்.

###

மனச் சஞ்சலத்துடன் இரவு கடந்துபோய் புதிய காலை விடிந்தது. இருவரும் தொழுது... குர்ஆன் ஓதி... நீண்ட துஆக்களில் மூழ்கினர். தொலைபேசி அழைத்தது. 'இந்த டைமில தாரு' என்ற கேள்வியுடன்தான் மரியம் தூக்கினாள். இளைய மகன் அகமதின் குரல். அவன் சொல்வதை எல்லாம் நுணுக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஐயூப் காக்கா காலைக் கடன்களில் மூழ்கிப் போயிருந்தான். ஓடோடிச் சென்று மகன் சொன்ன முக்கியமான விடயங்களைக் கணவனுடன் பகிர்ந்து கொண்டாள். இருவரும் உடுப்பு மாற்றிக்கொண்டு வீதிக்கிறங்கினர். த்ரீவீலர் ஒன்றில் ஏறிக் கொண்டனர். வண்டி உம்மு ஹபீபா வீட்டுப் பக்கமாகத் திரும்பியது. அவர்களது இளைய மகன் அகமதுக்கு, ஜமால் நானா உம்மு ஹபீபா தம்பதியின் மூத்தமகள் ஸாஜிதாவை பெண் கேட்கத்தான் போய்க்கொண்டிருந்தனர். முடங்கிக் கிடந்த விவாகச் சக்கரம் இனி எந்தத் தடையுமின்றி சுழலத் தொடங்கிவிடும்.

**திக்குவல்லை கமால்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 84



திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 84
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 84

### இடமிருந்து வலம்

1. மானமுள்ளவர்களுக்கு உதாரணமாகச் சொல்லப்படும் ஒரு விலங்கு
5. சில ஆண்களுக்கு இது உண்டு (திரும்பியுள்ளது)
7. கணிதத்தில் வரும் கழித்தல் குறியீடு(திரும்பியுள்ளது)
8. பாதம்
9. ஓர் உறுப்பு ( திரும்பியுள்ளது)
10. காடு
12. பன்றி
13. இந்தியாவில் பேசப்படும் ஒரு மொழி (குழம்பியுள்ளது)
15. இப்போது பலரது உணவு இதுதான் (திரும்பியுள்ளது)
16. நீர் குடிக்கப் பயன்படும் கைப்பிடி இல்லாத சிறு பாத்திரம்
19. ஒரு கருமத்தை நிறைவேற்றுவதற்காக தீவிரமாகச் செயலாற்றுதல்
21. எப்போதும்
23. சமாச்சாரம் (குழம்பியுள்ளது)
25. விளக்கு எரிக்க இதுவும் தேவை (திரும்பியுள்ளது)
26. பெற்றோர் பிள்ளைகளுடன் கூடி வாழும் சமூக அமைப்பு (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கீழ்த்தரமானவன் அல்லது தீயகுணமுடையவன்.
2. உரைநடை
3. அன்னை
4. திருடன் குழம்பிவிட்டான்
5. மத்திய மாகாணத்தின் ஒரு பெரும் நகரம் (தலைகீழ்)
6. நீர் வேட்கை
11. தலையற்ற உடல் தலைகீழாகக் காட்சி தருகின்றது.
14. குடிப்பதற்கான திரவப் பொருள் (குழம்பியுள்ளது)
16. வானரம்
17. பரம்பரை
18. இனிப்பான தின்பண்டம்
20. வதனம்
22. மருத்துவமனையில் சேவையாற்றுபவர்
24. கணவன் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 83

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. உதவி
4. முஸ்தீபு
7. மாதிரி
8. தினை
9. சுரம்
10. ரகம்
11. அன்னம்
15. சனி
16. வாசி
18. காது
19. திகதி
21. தரணி
23. மதுரை
25. பம்பல்
26. கமம்

**மேலிருந்து கீழ்**

1. உதிரம்
2. தரிசு
3. விமானம்
4. முனை
5. ஸ்திரம்
6. புறம்
12. அசதி
13. கன்னி
14. மதுரம்
17. சிரமம்
18. காதல்
20. கதிரை
22. பணி
24. மது

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 83

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **எம்.எச்.சீ.என். ஹனீபா,**<br>சாஹிரா தேசிய கல்லூரி<br>கின்தோட்டை<br>காலி | **பி. குணசேகரன்**<br>வன்னியர் வீதி,<br>களுதாவளை | **எம்.ஏ . அத்தாஸ்**<br>141, குமாரதுங்க மாவத்தை,<br>மாத்தறை |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ் தவநாயகி** – மட்டக்களப்பு
2. **மல்லிகாதேவி பத்மநாதன்** – பசறை
3. **என்.கே. வேணி** – பலாங்கொடை
4. **த. நாகையா** – கல்முனை
5. **எம்.எல். ஆதம்லெப்பை** – அக்கரைப்பற்று – 6
6. **எஸ். சிறிகிருஷ்ணராஜா** – மட்டக்களப்பு
7. **எச்.எம்.எம்.தாஹா** – பதுளை
8. **எம். கவிதா** – கண்டி
9. **எப்.எம். சாந்தி** – அச்சுவேலி
10. **எல்,எம் . தௌபீக்** – கிண்ணியா



# வாரபலன்

27.08.2023 - 02.09.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

புதன் 5ஆம் வீட்டில் இருக்கிறார். இராசியில் குருவோடு ராகு இணைந்து இருக்கிறார். பூர்வ புண்ணிய சூரியன் ஆட்சி பெறுகிறார். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். எல்லா முயற்சிகளும் வேகம் எடுக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும் வணிக ஆர்டர்கள் கிடைக்கும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு முட்டுக் கட்டைகள் நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நீண்ட நாள் நண்பர்கள் ஒன்று சேர்வார்கள். கேட்ட இடத்தில் பண உதவிகள் கிடைக்கும். வீடு மனை வாங்க யோகம் உண்டு. தொழில் விஸ்தரிப்பு இப்போது செய்ய வேண்டாம். செலவு அதிகரிக்கும். நட்பு சில நேரம் பகையாகும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

விரயத்தில் குரு இருக்கிறார். 4இல் சூரியன் ஆட்சி பலம். கூட புதன் இருக்கிறார். சூரிய பலத்தால் தைரியம் மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீடு கட்டுவதில் உள்ள தடை நீங்கி மறுபடி ஆரம்பிப்பீர்கள். மனை வாங்கும் முயற்சி வெற்றி பெறும். பூர்வீக சொத்து பிரச்சினை தீரும். சகோதரர்களால் பயன் உண்டு. கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். வக்கிர சனியும் நன்மை செய்யும். உடல் நலம் நன்றாகவே இருக்கும். பழைய கடன்கள் வசூல் ஆகும். கேது 6இல் இருக்கிறார். ஆலய தரிசனம் செய்யும் வாய்ப்பு ஏற்படும். பிறர் பற்றிய தவறான விமர்சனங்கள் மற்றும் பிறரைப் பற்றி பேசுதல் வேண்டாம். கணவன் மனைவி உரசல்கள் வரும். உங்களுக்கு வேலை செய்யும் வேலையாட்கள் ஒத்துழைக்க மறுக்கலாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

2 இல் சுக்கிரன். 3 இல் சூரியன் ஆட்சி பெறுகிறார். குருவின் பார்வையும் அவருக்கு உண்டு. இராசிநாதனின் சஞ்சாரம் சாதகமாகவே இருப்பதால் புதிய வேலைவாய்ப்புகள் உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். நல்ல தகவல்கள் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடக்கும். அதில் பங்கு பெறுவீர்கள். முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வணிகம் இலாபகரமாக இருக்கும். திருத்தல மற்றும் ஆன்மிக தரிசனம் உண்டு. பல கிரகங்கள் உங்களுக்கு அனுகூலமாகவே சஞ்சரிக்கின்றன. சிலருக்கு சந்ததி விருத்தி உண்டாகும். வீடு கட்டும் வாய்ப்பும், புதிய வீட்டுக்கு குடி போகும் வாய்ப்பும் உண்டு. பிறர் விஷயங்களில் தலையிடாதீர்கள். சனியின் சஞ்சாரத்தினால் வேலைகளில் கவனச்சிதறல் உண்டு.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இராசியில் சுக்கிரன் வக்ர கதியாக வர இருக்கிறார். 2 இல் சூரியன் ஆட்சி பெற்றிருப்பது ஒரு சிறப்பு. சனியின் வக்கிரகதியும் ஓரளவு அஷ்டம தோஷத்தை நீக்கி நல்லது செய்யும் ஒரு அமைப்பாகும். உடல் பாதிப்புகள் குணமடையும். மருத்துவ சிகிச்சை பலன் தரும். பூர்வீக சொத்து வில்லங்கங்கள் விலகும். நட்பு உள்ளங்கள் உதவி செய்யும். கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள் கலைத்துறையில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதிய ஆடை ஆபரணம் வாங்குவதும், சொந்த ஊர் பிரயாணம் மற்றும் உறவுகளைச் சந்திப்பதும் நடைபெறும். வேலையில் சிரமம் உண்டாகும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

பல கிரகங்கள் சுபத்துவத்தோடு இருக்கின்றன. எனவே பிரச்சினை இல்லாத வாரமாக அமையும். தசாபுத்தி சரியில்லாதவர்களுக்கு குறைந்த பிரச்சினை உள்ள வாரமாக அமையும். புதன் அமைப்பில் பேச்சில் இனிமை இருக்கும். சாதுர்யமாக பேசுவீர்கள். எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விடுவீர்கள். ஆற்றலோடு காரியங்களை செய்வீர்கள். குடும்ப பிரச்சினைகள் நீங்கி பெயரும் புகழும் அதிகரிக்கும். அதிகாரிகள் புகழ்வார்கள். திருமணம் போன்ற சுப முயற்சிகள் சாதகமாக அமையும். வழக்குகளில் வெற்றி பெறும் அமைப்பு உண்டு. கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். கடன் வசூல் பிரச்சினையில் பிறர் தலையீடுகள் இருக்கும். கொடுத்த கடனைப் பெறுவதில் கவனம் தேவை.

## கன்னி

(உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2ஆம் பாதம்)

சுக்கிரன் 11 இல் வக்கிரம். 12 இல் சூரியன் மற்றும் புதன். வீடு, வாகனம் வாங்குவீர்கள் அல்லது மாற்றக் கூடிய வாய்ப்பு இருக்கும். குடும்பத்தில் இனிமை இருக்கும். சந்தோஷம் இருக்கும். பிள்ளைகளின் நல்வாழ்வு குறித்த நயமான செய்தி வரும். விட்டுப் போன உறவு கிட்ட வரும். கௌரவம், பதவி உயர்வு தேடி வரும். சுக்கிரன் வக்கிரமாக இருந்தாலும் எதிர்பாராத அதிர்ஷ்ட செய்திகளும் வரும். கணவன் – மனைவி அந்நியோன்யம் நன்றாக இருக்கும்.

ஆரோக்கிய விஷயத்தில் கவனம் தேவை. சிறு தவறும் பெரிய பிரச்சினைகளில் கொண்டு போய்விடும். காரணம் குருவும் ராகுவும் சேர்த்து இருக்கிறார்கள்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

11 இல் சூரியன் ஆட்சி என்பது நல்ல அமைப்பு. கூடவே பாக்கியாதிபதி புதன் இருக்கிறார். 10இல் இராசிநாதன் சுக்கிரன் வக்கிரமாக இருக்கிறார். 7ஆம் பார்வையாக குரு பார்வை இராசியில் விழுகிறது. நல்ல செயல்கள் தாமதம் இன்றி நடக்கும். பிறருடைய உதவி கிடைக்கும். சந்தித்த பிரச்சினைகள் மெல்லமெல்ல தீரும். முயற்சிகள் பலிக்கும். உத்தியோகம் கிடைக்காதவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு உண்டு. வீட்டை மாற்றுவது மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. குரு இராசியைப் பார்ப்பதும், 5ஆம் பார்வையாக இலாபஸ்தானத்தைப் பார்ப்பதும் நன்மையான பலன்களைத் தரும். எந்த சிக்கலுக்கும் விடைகள் கிடைக்கும். இராசிநாதன் வக்கிரம் என்பதால் எதிர்மறை சிந்தனைகள் அலைக்கழிக்கும். தேவையில்லாத கோபம் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். அது அவருக்கு தொழில் இடம். எனவே ஆசைகள் நிறைவேறும். அரசாங்க அலுவல்கள் சாதகமாக நடைபெறும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் வக்கிரம் அடைந்திருக்கிறார். 11 இல் இராசிநாதன் செவ்வாய் இருப்பதும் சிறப்பு. சென்ற காலம் சற்று தலை தூக்கிய பிரச்சினைகள் எல்லாம் சுமுகமாக தீரும். ஆரோக்கியம் முன்னேறும். தன்னம்பிக்கை வளரும். குடும்ப வருமானம் வளர வழிபிறக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த வணிகம் வளர்ச்சி நோக்கி நகரலாம். கலைஞர்களுக்கு ஆதரவும் வருமானமும் பெருகும். குரு ராகுவின் சேர்க்கை சாதகமாக இல்லை. உங்கள் பேச்சு சற்று எதிர்வினையாக மாறலாம்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

சூரியன் தனது சொந்த வீட்டில் ஆட்சி பெற்றிருக்கிறார். பாக்கியாதிபதி ஆட்சி பெறுவது சிறப்பு. தந்தை வழி கருத்து வேறுபாடுகள் நீங்கும். காரணம், குரு பார்வையும் இருக்கிறது. பூர்வீக சொத்து வழக்குகள் சற்று நிம்மதி தரும். நல்லவர்களும் செல்வாக்கு மிகுந்தவர்களும் உதவி செய்வார்கள். புதிய நட்புகள் உருவாகும். பழைய விட்டு போன உறவுகள் வந்து சேரும். வாழ்வில் சில முக்கிய முன்னேற்றத்துக்கான வாய்ப்பு கதவு தட்டும். பாக்கிய ஸ்தானத்தில் உள்ள கிரகங்கள் உங்களுக்கு ஆறுதலாக இருக்கும். பிரயாணங்களும் திருத்தல தரிசனமும் நிகழும். குலதெய்வ இஷ்ட தெய்வ வழிபாடுகள் செய்ய முடியும். அதிக செலவுகள் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். தொழில் வணிகப் போட்டிகளால் வருமானத்தை தக்க வைத்துக் கொள்ள போராட வேண்டி இருக்கும்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

சனி வக்கிரமடைந்து மறுபடி இராசிக்கு வருகிறார். 7இல் சுக்கிரனும் வக்கிரமடைந்து இருக்கிறார். பஞ்சமாதி சுக்கிரனும் பாக்கியாதி புதனும் நன்றாக இருப்பதாலும் குருவின் பார்வையாலும் கவனத்தோடு பிரச்சினைகளை சமாளிக்கும் திறன் பெறுவீர்கள். புதன் 8 இல் இருந்தாலும் நற்பலன்களையே செய்யும். கூர்மையான மற்றும் சாதுரியமான அறிவோடு பிரச்சினைகளை வெற்றி கொள்வீர்கள். கணவன் மனைவி சிறுசிறு உரசல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் வரும். யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்து விடுங்கள். எதுவும் கெட்டுவிடாது. வியாபாரத்தில் கவனம் இன்மை மற்றும் அலட்சியம் கூடாது. வேலைப் பளு அதிகரிக்கும்.

## கும்பம்

(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

7இல் சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். புதன் சூரியன் இணைப்பு மற்றும் குரு பார்வை சப்தம இராசிக்கு வருவதால் கணவன் மனைவி கருத்து வேறுபாடு இன்றி குடும்ப ஒற்றுமை ஓங்கும். குறிப்பாக செய்தி, தகவல் ஊடகங்களில் பணிபுரிபவர்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். வருமானமும் சீராக இருக்கும். புதிய வேலை சிலருக்கு கிடைக்கும் அல்லது வேலை மாற்றம் நடக்கும். 3 இல் உள்ள ராகு உங்களுக்கு மன தைரியத்தையும் நல்ல வாய்ப்புகளையும் பெற்றுத் தரும். வெளியூர் பயணங்கள் மற்றும் பணிச்சுமை இவைகளால் சோர்வு அதிகரிக்கும். செலவுகள் வருமானத்தைவிட கூடுதலாகி கடன் வாங்கும் நிலை வரலாம்.

## மீனம்

(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

சூரியன் 6 இல் ஆட்சி பெற்று இருக்கிறார். "நினைத்ததை முடிப்பேன்" என்பது போல, திட்டமிட்ட காரியங்களை முடிப்பீர்கள். அரசாங்க ஆதரவுண்டு. 7 1/2 சனி வக்கிரகத்தை அடைந்திருப்பதால் சற்று நிம்மதி தரும். கிளம்பிய பிரச்சினை சற்று தளர்ச்சி அடையும். சொந்த வீடு அமையும். அல்லது நல்ல வீட்டுக்கு மாற்றம் கொள்ள வேண்டி இருக்கும். காரணம் இராசிநாதன் நல்ல படியாக இருக்கிறார். 6,8,10 இராசிகளைப் பார்க்கிறார். வேலை, உத்தியோகம் சிறப்பாக இருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டு. எதிர்பாராத சில நல்ல விஷயங்கள் நடைபெறும். கவனம் தேவை: 5 இல் சுக்கிரன் வக்கிரம். குழந்தைகள் நடவடிக்கைகள் ஏமாற்றம் அளிக்கலாம். ஆரோக்கியக் குறைவும் ஏற்படலாம். நண்பர்களுடன் தேவையற்ற பகை வேண்டாம்.

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 01

# மனதுக்கு பிடித்த மலேசியப் பயணம்

நாடுகளுக்கிடையிலான பயணங்கள் என்றவுடன் "மார்க்கோபோலோ" என்ற பெயர்தான் ஞாபகத்துக்கு வருகிறது. உலக இலக்கிய செல்நெறியில் பயண இலக்கியமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக வளர்ந்துள்ளது. தேடல் ஆர்வத்தின் பொதுத் தன்மையோடு பெற்ற அனுபவத்தின் ஊடாக ஊகித்துக்கொள்கின்ற, உணர்ந்துகொள்கின்ற பாங்கின் பதிவுகளாக இப் பயண இலக்கிய வடிவம் தனித்துவம் பெறுகிறது. ஒவ்வொரு மொழியிலும் பயண இலக்கியம் பொதுத் தன்மையை உள்ளடக்கியுள்ளமை கவனிக்கதக்கது.

பயணம் என்பது மகிழ்வுக்குரியது. பாடசாலைக் காலங்களிலும் சுற்றுப்பிரயாணம் என்றவுடன் கொண்டாட்டத்தின் எல்லைக்கே சென்றுவிடுவது வழமை. பங்கேற்கும் பயணம் பற்றிக் கட்டுரை எழுதப் பணிக்கும் போது ஆர்வப்படுபவர்கள் சிலர். ஆத்திரப்படுபவர்கள் பலர். கட்டுரை எழுதுவதைத் தவிர்க்கவே சுற்றுப்பயணங்களை தவிர்த்த அனுபவங்களும் சிலருக்கு இருக்கும்.

பயணக் களைப்பு, விடுப்பட்டிருந்த வேலைகளை சீர் செய்தல், பயணத்தின் செலவால் ஏற்பட்ட மாதாந்த பட்ஜெட்டை சீர் செய்வதில் ஏற்படும் உள்ளார்ந்த சுமை என்பதெல்லாம் மன அழுத்தத்திற்குரியதாகவும் அமையும். இச் சுமையில் இருந்து சற்று விடுபடுகின்ற போதுதான் பயணத்தின் அனுபவங்கள் மனதில் மீளுருவாக்கம் பெறும். அண்மையில் சென்று வந்த மலேசிய பயணமும் அவ்வாறான அனுபவத்தைக் கொண்டதாகவே அமைகிறது. 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஏற்பாடுகள் கடந்த ஒரு வருட காலமாகவே ஏற்பாட்டாளர்களின் கடும் பிரயத்தனத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. வலைத் தளங்களில் மாநாடு தொடர்பில் நான் அறிந்ததன் பின்னர் பலரும் அறியும் வகையில் புலனக் குழுக்களில் பகிர்ந்தேன். சிலருக்கு தனிப்பட்ட வகையில் தொலைபேசி அழைப்பு எடுத்தும் கூறினேன். யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவரவில்லை.

ஏற்பாட்டுக் குழுவில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவேறு தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு அணியினரும் ஆய்வாளர்களை தெரிவு செய்யும் நோக்கில் ஆய்வுச் சுருக்கத்தை அனுப்பி வைக்குமாறு கோரியிருந்தார்கள். இரண்டு ஏற்பாட்டாளர்களுக்கும் அனுப்பி வைத்தேன். ஒன்றை சிங்கப்பூரிலும் மற்றையதை சவுதி அரேபியாவிலும் நடத்துவதற்கான ஏற்பாடாகவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. சிங்கப்பூரில் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்வு 2023 ஜூலை 7ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. சவுதிஅரேபியாவில் திட்டமிடப்பட்ட நிகழ்வே மலேசியாவில் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இரண்டு மாநாடுகளுக்குமான எனது கட்டுரைச் சுருக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறித்து மின்னஞ்சல் தகவல் மூலம் அறிந்தேன். விரிவான கட்டுரை இம் மாநாட்டிற்காக மின்னஞ்சலில் விரைந்தது. அதன் விளைவாகவே கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிய எனது பயணமும் அமைந்தது. 18.08.2023 கட்டுநாயக்க விமான நிலையம். உள் நுழையும் முனையத்தின் முன் பகுதியில் மலேசியாவில் நடைபெறவிருக்கும் 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இலங்கையில் இருந்து ஆய்வாளர்களாக பங்கேற்கும் அணியினர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் ஒன்று கூடினோம். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பிரதம நூலகர் இரா.மகேஸ்வரன், கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் திருமதி சாந்தி கேசவன், கிழக்குப் பல்கலைக்கழக நுன்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சந்திரகுமார். மட்.மே நாவற்காடு நாமகள் வித்தியாலய ஆசிரியர் ந. கோவேந்தன், பூபாலசிங்க புத்தகசாலை அதிபர் பூ.ஸ்ரீ தர்சிங், ஆகியோர் உட்பட நானும் அக் குழுவில் அங்கம் வகித்தேன்.



கடவுச்சீட்டு, 11வது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினரால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட விமான டிக்கட், மலேசியாவுக்குள் நுழைவதற்கு கிடைக்கப்பெற்ற அனுமதி வீசா ஆகிய ஆவணங்கள் மற்றும் பொதிகளுடன் உள் நுழைகிறோம். செல்லும் வழியில் பணம் பரிமாற்றம் செய்யும் கருமபீடம். ஒரு நாட்டுக்குச் செல்லும் போது அந் நாட்டில் புழக்கத்தில் உள்ள நாணயத்தை மாற்றிக் கொள்வது வழமை.

மலேசிய நாணயம் மலேசிய வெள்ளி (மலேசிய ரிங்கிட்) என அழைக்கப்படுகிறது. 100 சென்ஸ் 1 ரிங்கிட் ஆகிறது. மலேசிய மொழியான மலாய் மொழியில் ஒரு காசு என்பது 1 சென் என அழைக்கப்படுகிறது. இந்த நாணயத்தை மலேசிய நெகரா வங்கி வெளியிடுகிறது. (Central Bank Of Malaysia) இது 1975 வரையில் டொலர் என்றே அழைக்கப்பட்டது. அதன் பின்னர்தான் ரிங்கிட் என அழைக்கப்படுகிறது.

16ம் நூற்றாண்டில் போர்த்துகேயர்கள் மலாக்காவை ஆட்சி செய்த காலம். அவர்கள் பயன்படுத்திய நாணயம் ஸ்பானிய வெள்ளியாகும். ஸ்பானிய நாணயங்களின் ஓரங்களில் சிதறல்கள் போல மேடு பள்ளங்கள் காணப்படும். இவ்வாறான சிதறல்கள் "ரிங்கிட்" என மலாய் மொழியில் குறிப்பிடப்படும். ரிங் என்பது வளையல் எனப் பொருள்படும். கிட் (பனை) என்பது மேடு பள்ளம் எனப் பொருள்படும். இச் சொற்கள் இரண்டினதும் சேர்க்கையாகவே ரிங்கிட் என யதார்த்தமாக அழைக்கப்படுகிறது.

1980களில் கிளாந்தான் மாநிலத்தில் "கும்பாங்" எனும் தங்க நாணயம் புழக்கத்தில் இருந்துள்ளது. அம் மாநிலத்தில் பத்து காசு "சத்து கும்பாங்" எனவே அழைக்கப்படுகிறது. 1909களுக்குப் பின்னர் "கும்பாங்" எனும் சொல் பாவனையில் இருந்து விலக்கப்பட்டுள்ள நிலையிலும் "கும்பாங்" எனும் சொல் பேச்சு வழக்கில் உள்ளமை கவனிக்கத் தக்கது.

1967.06.12ம் திகதியே மலேசியாவின் முதல் நாணயம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1967 ஜூன் 12இல் வெளியிடப்பட்ட ரிங்கிட் நாணயம் சமகாலத்தில் பின்வருமாறு பெறுமானம் கொண்டதாக அமைகிறது. ஒரு மலேசிய ரிங்கிட் இலங்கை பெறுமதியில் ரூபாய் 69.2404 ஆகிறது. அவ்வாறே ஒரு ரிங்கிட் இந்திய ரூபாயில் 17.8736 ஆகிறது. அமெரிக்க டொலர் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு 4.6525 மலேசிய ரிங்கிட் தேவைப்படுகின்றது.

இவற்றையெல்லாம் அசைபோட்டவாறே ஒருவாறு விமான வெளிச் செல்லல் நடைமுறைகளை நிறைவு செய்த நிலையில் எயார் ஏசியா விமானம் நோக்கி பயணிக்கிறோம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்
2023 ஓகஸ்ட் 27 ஞாயிற்றுக்கிழமை


Daniya
Pic. by: Sudath Malaweera

இனிய நந்தவனம் 04
இதழ் வெளியீட்டு விழா

அகில இலங்கை கிராமிய 07
கலைகள் ஒன்றிய கலாரத்ன
விபூஷண் விருது பெறுவோர்

தமிழை வளர்த்துத் தரணி– 06
யில் விதைப்பதில் அதீத ஆசை

Senthooram
செந்தூரம்

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# கூரை இல்லாத விமானம்!

1988ஆம் ஆண்டு அமெரிக்காவின் அலோஹா ஏர்லைன்ஸ் விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது அதன் கூரையின் ஒரு பகுதி வீசி எறியப்பட்டுவிட்டது. விமானம் 24,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோதே இந்த பயங்கரம் நிகழ்ந்தது. அப்போது விமானத்தின் 18 அடி பாகமே பீய்த்துக்கொண்டு போனது. நல்லவேளை விமானத்தில் இருந்த பெரும்பாலானவர்களுக்கு ஒன்றுமாகவில்லை.

விமானப் பணியாளர் ஒருவர் விமானத்தில் இருந்து தூக்கிவீசப்பட்டு விட்டார். அவரது உடல் கடைசிவரை கண்டுபிடிக்கப்படவில்லை. 65 பயணிகள் காயமடைந்தனர். விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியதுதான் பெரும் சாகசம். விமானப் பயண வரலாற்றி இந்த சம்பவம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக மாறியது. இதற்கு பின்னரே விமானத்தின் பாதுகாப்பு பற்றி மேலும் கரிசனை காட்டப்பட்டது. இருக்கை பட்டி அணிவதில் மேலும் கவனம் செலுத்தப்பட்டது.




# 'யுனிகோன்' அரசியல்

ஸ்கொட்லாந்தின் தேசிய விலங்கு யுனிகோன். அதாவது புராணக் கதைகளில் வரும் நெற்றியில் ஒற்றை கொம்பு முளைத்த குதிரைதான் இந்த யுனிகோன். மற்றபடி அப்படியோர் விலங்கு பூமியில் இல்லை, கடந்த காலத்தில் சுற்றித் திரிந்ததற்கான ஆதாரங்களும் இல்லை. அப்படி இருக்க இந்த கற்பனை விலங்கை ஸ்கொட்லாந்து ஏன் தேர்ந்தெடுத்திருக்கும்?

ஸ்கொட்லாந்து என்பது ஐக்கிய இராச்சியத்தில் ஓர் அங்கம். இந்த இராச்சியத்தில் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தும் உட்பட்டது. இப்போது யுனிகோனின் அரசியலுக்கு வருவோம்.


யுனிகோன் என்பது சிங்கத்தின் பரம எதிரியாம். அதிலும் வீழ்த்த முடியாத விலங்காம். இங்கிலாந்தின் தேசிய விலங்கு எது தெரியுமா? வேறு என்ன சிங்கம்தான்!



# தாய்வானில் நிகழ்ந்த பயங்கரம்



தாய்வானின் கோசியுங் நகரில் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற எரிவாயு வெடிப்பு திரைப்படத்தில் வரும் காட்சி போல இருக்கும். ஆனால் மிகப் பயங்கரமானது. வீதியில் இருக்கும் வாகனங்கள் தூக்கி வீசப்பட்டதோடு வீதி நெடுக பெரும் பள்ளத்தாக்காக மாறியது. நிலத்தடியிலேயே இந்த எரிவாயு கசிவு ஏற்பட்டதோடு வெடிப்போடு பெரும் தீயும் பரவியது. இதில் 25 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 267 பேர் காயமடைந்தனர்.



# 200 ஆண்டு நன்கொடை

அமெரிக்காவின் நிறுவனர்களில் ஒருவர் என்று அழைக்கப்படுபவர் பெஞ்சமின் பிராங்க்ளின். அதாவது அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டவர்களில் ஒருவர். 1706இல் பிறந்து 1790இல் மரணித்த பிராங்க்ளின் அப்போது அமெரிக்காவில் வாழ்ந்த முன்னணி விஞ்ஞானி, தத்துவவாதி முதல்கொண்டு அரசியல்வாதியும் கூட. எல்லாவற்றுக்கும் மேலே கொழுத்த பணக்காரர். அவர் இறக்கும்போது பொஸ்டன் மற்றும் பிலடெல்பியா இரு நகரங்களிலும் தலா 2,000 டொலர் பணத்தை விட்டுவிட்டுச் சென்றார். இளைஞர்களுக்கு உதவட்டுமே என்பதுதான் அவர் எண்ணம். ஆனால் 2000 ஆண்டுகளாக அந்தப் பணம் பயன்படுத்தப்படவில்லை. 1990 ஆம் ஆண்டு அதன் பெறுமதி 6.5 மில்லியன் டொலர்களாக இருந்தது. அந்த நிதி இப்போது புலமைப்பரில்கள், பெண் சுகாதாரம், தீயணைப்பு படையினர் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு உதவி புரிய பயன்படுகிறது.

# சொக்லேட் மழை



சுவிட்சர்லாந்து நகரொன்றில் 2020 ஒகஸ்ட் 14 ஆம் திகதி சொக்லேட் மழை பொழிந்தது ஊரில் உள்ள எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. நகரில் இருக்கும் சொக்லேட் உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட கோளாறுதான் இதற்குக் காரணம். தொழிற்சாலையின் காற்றோட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினையால் அங்கிருக்கும் சொக்லேட் தூள் காற்றில் கலந்து வெளியேறி இருக்கிறது. நகரெங்கும் காற்றுடன் பரவிய அந்த சொக்லேட் தூள் பின்னர் மழையாக பொழிந்திருக்கிறது.

# இரவு வானம் ஒற்றைத் தருணமல்ல

நாம் இரவு வானில் காணும் நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே வயதுடையவை அல்ல. ஒரே காலத்தில் அவை உங்களின் கண்களில் தெரிந்தாலும் அவைகளில் சில மில்லியன் ஆண்டுகள், இல்லை பல பில்லியன் ஆண்டுகள் பழைமையானவை. எனவே, இரவு வானம் என்பது பிரபஞ்சத்தின் ஒற்றைத் தருணமல்ல, அது பல பில்லியன் ஆண்டு காலத்தை ஒன்றிணைத்த தருணம்.

புரியும்படி சொல்வதென்றால் நமது கண்களில் தெரியும் நட்சத்திரங்கள் பல மில்லின் இல்லையென்றால் பல பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கின்றன. எனவே அந்த ஒளி எம்மை வந்தடைய அவ்வாறே மில்லியன், பில்லியன் ஆண்டுகள் எடுக்கும்.





"உன் மாமியார் அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப் போய் எதுக்கு வாயில் தையல் போட்டுக்கறாங்க...?"
"அவங்கதான் வாய் கிழியப் பேசுவாங்களே!"



கோபு : ஓட்டப்பந்தயத்துல தங்க மெடல் வாங்கினா "ஊக்க மருந்து"ன்னு சொல்லி தடை செஞ்சிடுறாங்க. சரி கடைசில வந்தவங்களையும் ஏன் செக் பண்றாங்க?

பாபு : இவங்க ஏதாவது "தூக்க மருந்து" சாப்பிட்டு இருப்பாங்களோன்னுதான்.



ஒருவர் : லோகோ எதுவும் சட்டைல போடக்கூடாதுன்னு ரூல்ஸ் இருக்கு தெரியுமில்ல?
மற்றொருவர் : டிரிங்க்ஸ் குடிக்கறப்ப ஜூஸ் சிந்திடுச்சி சார்!



"தலையிலேர்ந்து அடிக்கடி முடி கொட்டறதுக்கு முக்கிய காரணம் என்னன்னு தெரியுமா...?"
"தெரியலையே.... என்னது?
"தலையிலே முடி இருக்கிறது தான்...!"



"பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை ஷாக் ஆகிட்டாரா... அப்படி என்ன சொன்னாங்க?"
"பொண்ணுக்கு சமைக்கத் தெரியும்னு சொன்னாங்களாம்..."

"ஊசி போடும்போது கண்ணை மூடிட்டீங்களே.... மனசுல சாமியை நினைச்சுக்கிட்டீங்களா?"
"இல்ல டாக்டர்.... நர்ஸை நினைச்சுகிட்டேன்....!"





ஆசிரியர் : துரியோதனன் தன்னோட உயிர தொடைலதான் வச்சுண்டுருந்தானாம்.
மாணவன் : இதென்ன சார் பெரிய விஷயம் நம்ம கிளா ரவி அவனோட உயிர ரம்பாவோட தொடைலல்ல வச்சுருக்கான்.

"காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுறாங்க?"
"அவங்க "மெய்" மறந்து காதலிக்கிறவங்களாச்சே!"






"நம்ம தலைவர்கிட்ட சரக்கு இல்லாதப்பவும் ஒரு மணிநேரம் தொடர்ந்து பேசினாரே.... எப்படி?"
"சரக்கு"ல இருந்ததுனாலதான்!"



"உங்க ஆபீஸ்ல எல்லாரும் எப்படி இருக்காங்க?"
"படுத்த படுக்கையா!"




தமிழக அரசின் தகைசால் தமிழர் விருது பெற்ற தமிழர் தலைவர் கி வீரமணியை பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சார்பில் தந்தையார் பெருங்கவிக்கோ தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளுவர் கண்டு நூல்கள் வழங்கி வாழ்த்தினர்.

# காத்தான்குடியில் "இனிய நந்தவனம்" இலங்கைச் சிறப்பு இதழின் வெளியீட்டு விழா

















இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பு இதழின் வெளியீட்டு விழா காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி மாநகரில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாவதி பத்மராஜா , முன்னிலை வகித்த புரவலர் ஹாசிம் உமர், தலைமை வகித்த கவிமாமணி ஜெவ்பர்கான், நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பிரமுகர்கள் பலரும் காணப்படுகின்றனர். (படம் ஆரையம்பதி, புதிய காத்தான்குடி நிருபர்கள் )









# இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்தவர்



P. விக்னேஸ்வரன்





1950 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் திகதி பிறந்த P. விக்னேஸ்வரன் தனது கல்லூரிப் படிப்பை காங்கேசன்துறை, நடேஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்டார். படிப்பில் சராசரிக்கும் சற்றுக் கூடுதலான நிலையில் இருந்த அவர், விளையாட்டு, நாடகம், பேச்சு முதலிய துறைகளில் மிக முன்னணியில் திகழ்ந்தார்.

கல்லூரிக்கு வெளியேயும் 'இளந்தமிழர் மன்றம்' என்ற மன்றத்தில் இணைந்து தனது நாடக ஆர்வத்தையும் திறமையையும் வளர்த்துக்கொண்டார்.

மருத்துவத்துறையில் ஈடுபடுவதற்கான படிப்பை மேற்கொள்ளும் நோக்குடன் அதற்கான பல்கலைக்கழகப் படிப்புக்கு அனுமதி பெறுவதற்கான பாடங்களைத் தெரிவுசெய்து உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருந்தபோது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்துத் தெரிவான அவர், தனது பத்தொன்பதாவது வயதில், 1970ஆம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் 7ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொண்டார்.

அதே ஆண்டுப் பிற்பகுதியில் தமிழ்த் தேசிய சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் தெரிவான விக்னேஸ்வரன், இந்தியத் திரைப்படங்களின் கதைகளைச் சுருக்கி ஒரு மணித்தியால 'ஒலிச்சித்திர'மாக ஒலிபரப்பும் நிகழ்ச்சியைத் தயாரிக்கத் தொடங்கினார்.

1971ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சிப் பிரிவு நடத்திய உரைச்சித்திரத் தயாரிப்புப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

ஒலிபரப்பு உதவியாளராகப் பணியாற்றிக்கொண்டே தேசிய சேவையில் 'இரசமஞ்சரி' என்னும் சஞ்சிகை நிகழ்ச்சியைத் தயாரிக்கத் தொடங்கியவர், அந்நிகழ்ச்சியை இரண்டு காலாண்டுகளுக்குத் தயாரித்தபின்னர் பரீட்சார்த்த நாடகங்களைத் தயாரித்தார்.

1976ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் வர்த்தக சேவை நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகப் பதவி உயர்வுபெற்ற விக்னேஸ்வரன், வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகும் பல நிகழ்ச்சிகளுக்குத் தயாரிப்பாளராகவும் அச்சேவையில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளுக்கு நேயர்களிடமிருந்து வரும் பிரதிகளைத் தெரிவு செய்பவராகவும் பணியாற்றினார். அதேகாலப்பகுதியில் செய்தி வாசிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட விக்னேஸ்வரன், செய்தி வாசிப்பவராக மக்களின் கவனத்தைப் பெற்றார். வர்த்தக சேவையில் தயாரிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோதே தேசிய சேவையில் ஒலிபரப்பான பதினைந்து நிமிட நாடகங்களைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், 1978ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ்ச் சேவையின் பிரதான நாடகத் தயாரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

அந்தக் காலப்பகுதியில் நேர்முக வர்ணனையாளராகப் பல முக்கியமான தேசிய நிகழ்ச்சிகளிலும் பணியாற்றிய விக்னேஸ்வரன், இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய தமிழ்த் திரைப்படப் பிரதி எழுதும் போட்டியில் பங்குபற்றி முதற்பரிசு பெற்றார்.

1981ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட அவர், இலங்கையில் ஆரம்பிக்கப்படவிருந்த தேசிய தொலைக்காட்சி சேவையில் பணியாற்றுவதற்குத் தெரிவாகி, மலேசியாவில் பயிற்சிபெற்றுத் திரும்பினார். 1981ஆண்டு, நவம்பர் மாதத்திலிருந்து இலங்கைத் தேசிய தொலைக்காட்சியில் பணியாற்றுவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து விடுவிக்கப் பட்டார்.

உடனேயே தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கு ஆரம்பித்த விக்னேஸ்வரன், 1982ஆம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியின் நாடகப் பிரிவில் நிறைவேற்றுத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ரூபவாஹினியில் ஆரம்ப காலத்தில் இலங்கைத் தொலைக்காட்சித் துறையில் பல முதல் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் வாய்ப்பைப் பெற்ற அவர், இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்தவர் என்ற பெருமையைப் பெறுகிறார். ரூபவாஹினியிலும் தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பவராகத் தெரிவுசெய்யப்பட்ட விக்னேஸ்வரன், அவர் அங்கு பதவிவகித்த காலம்முதல் நிகழ்ந்த அனைத்து தேசிய நிகழ்வுகளிலும் வர்ணனையாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

நிறைவேற்றுத் தயாரிப்பாளராகக் 'கலையரங்கம்' என்ற பிரதான தமிழ் நிகழ்ச்சிக்காகப் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளைத் தயாரித்த விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழ்மக்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பல நிகழ்ச்சிகளையும் பல தொலைக்காட்சி நாடகங்களையும் தயாரித்ததோடு, இலங்கையில் மேடையேற்றப்பட்ட பல மேடை நாடகங்களையும் ரூபவாஹினிக்கெனத் தயாரித்திருக்கிறார்.

1984ஆம் ஆண்டு, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கான பிரிவொன்று தாபிக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்று, 1990ஆம் ஆண்டுவரை பணியாற்றிய விக்னேஸ்வரன், 1991ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் ரூபவாஹினியிலிருந்து பதவி விலகிக் கனடாவில் குடியேறினார்.

கனடாவிலும் பல்வேறு தமிழ் வானொலிச் சேவைகளில் தனது பங்களிப்பை வழங்கிய விக்னேஸ்வரன், 2001ஆம் ஆண்டு, கனடா ரொரன்ரோவில் ஆரம்பிக்கப்பட்ட இருபத்தி நான்குமணிநேரத் தமிழ்த் தொலைக்காட்சி சேவையில் முக்கிய பொறுப்பை ஏற்று, இளைஞர்களைத் தொலைக்காட்சித் துறையில் பயிற்றுவித்ததோடு, பல நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பவராகவும் பணியாற்றினார்.

கனடாவின் முதல் பல்கலாச்சார பண்பலை வானொலியின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான விக்னேஸ்வரன், பின்னர் தொலைக்காட்சியின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்று அதைப் பல வருடங்கள் நிர்வகித்த பின்னர் 2016ஆம் ஆண்டின் இறுதியில் ஓய்வு பெற்றார்.

கனடாவில் ஒலி, ஒளிபரப்புத் துறைகளில் இளைஞர்களைப் பயிற்றுவிப்பதிலும் பத்திரிகைகளில் எழுதுவதிலும் தீவிரமாக ஈடுபட்ட விக்னேஸ்வரன், ரொரன்ரோவில் மேடை நாடகத் துறையிலும் ஈடுபட்டுப் பல வெற்றிகரமான தமிழ் மேடை நாடகங்களைத் தயாரித்திருக்கிறார்.

பிரபல ஆங்கில நாடகங்கள் இரண்டை மொழிபெயர்த்து வெற்றிகரமான மேடை நாடகங்களாகத் தயாரித்தோடு, அவற்றில் ஒன்றை நூலுருவிலும் வெளியிட்டிருக்கிறார். இலங்கையில் அவரின் முதல் பரிசுபெற்ற 'கிராமத்தின் இதயம்' என்ற திரைக்கதைப் பிரதியும், ரொரன்ரோவில்தயாரித்துஒலிபரப்பான'வாழ்ந்துபார்க்கலாம்'என்றவானொலித் தொடர் நாடகமும் நூலுருவில் வெளிவந்துள்ளன. தான் ஊடகத்துறையில் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக ஈடுபட்டுப் பெற்ற அனுபவங்களைத் தொகுத்து 'நினைவு நல்லது' என்ற தலைப்பில் இப்போது நூலாக வெளியிட்டிருக்கிறார்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



## ஒலி, ஒளி ஊடகர் P. விக்னேஸ்வரனின் "நினைவு நல்லது" நூல் வெளியீடு




**ஒலி, ஒளி ஊடகர் P. விக்னேஸ்வரனின் ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வைக் கொண்ட நினைவு நல்லது என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 2023.08.29ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.**

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் வரவேற்புரை நிகழ்த்த, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையுரை ஆற்றுவார். சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா அறிமுகவுரை ஆற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்குவார். அரசியல் ஆய்வாளர் நிஸாந்தன் ஆய்வுரை நிகழ்த்த, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் முன்னைநாள் பணிப்பாளர் எஸ். விஸ்வநாதன் நயப்புரை வழங்குவார். ஊடகக் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஷ் கொடுதோர் நன்றியுரை ஆற்றுவார்.**

# தமிழை வளர்த்துத் தரணியில் விதைப்பதில் அதீத ஆசை கொண்ட பெண் எழுத்தாளர்

## கனடா தொலைக்காட்சியிலும் அசத்தும் திருமதி வாசுகி பி வாசு

















தனியார்துறை ஆசிரியையும், சமூகசேவகியும் தையற்கலை ஆசிரியையும் கவிதை, கட்டுரை, சிறுகதை எழுத்தாளருமாகத் திகழ்பவர் திருமதி வாசுகி பி வாசு. இலக்கிய உலகில் உலா வரும் இவர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர், கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவர்.

யாழ்ப்பாண வைத்தீஸ்வரா கல்லூரியில் கல்வி பயின்ற இவருக்கு தமிழின் மீது சிறுவயதிலேயே ஆர்வம் ஏற்பட்டது. மேடைகளில் அவ்வப்போது தன் இலக்கிய ஆளுமைகளை வெளியிட்டு வரும் இவர், கனடா தொலைக்காட்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளைச் செயலாளராகவும் செயற்படுகிறார். தமிழ் இலக்கிய இந்தியக் கவித்தளங்களில் நடுவராகவும் இணை நிறுவனராகவும் இணைத் தலைவராகவும் நிர்வாகியாகவும் நெறியாளராகவும் பலதரப்பட்ட துறைகளில் இவர் பங்காற்றி வருகிறார்.

இலங்கை, இந்தியா, அவுஸ்ரேலியா, ஈராக், அமெரிக்கா, கட்டார், ஜேர்மன், கனடா போன்ற கவித் தளங்களிலும் தொலைக் காட்சி நிகழ்வுகளிலும் பங்குபற்றி தன் திறனை காட்டி வருகிறார். இலக்கிய உலகில் இன்னொரன்ன பணிகளை ஆற்றிவரும இவர், பலதரப்பட்ட சான்றிதழ்களையும், விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்று வருகிறார்.

இவர் தனது கன்னி நூலாக சிறுவர் பாடல் மலர் எனும் நூலை வெளியிட்டார். இந்த நூலின் வெளியீட்டு விழா கடந்த வருடம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இவர் இரண்டாவதாக கவிதை நூலொன்றை வெளியிடவுள்ளார். "மழையில் நனைந்த மகுடம்" என்ற கவிதை நூல் அடுத்த மாத வெளியீடாக வலம்வர இருக்கிறது. தமிழை வளர்த்துத் தரணியில் விதைப்பது தான் தனது அதீத ஆசை என்று அவ்வப்போது கூறி வருவது மட்டும் அல்ல, அதற்குரிய ஆக்கபூர்வமான பணிகளிலும் அவர் ஈடுபட்டு வருகிறார்.

கதைகள் மீதுகொண்ட தீவிர கரிசனை காரணமாக அவ்வப்போது கதைகளையும் எழுதி வருகிறார். தான் கதைகள் எழுதுவதோடு நின்று விடாமல் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு நூலொன்றையும் வெளியிட உத்தேசம் கொண்டுள்ளார். இவர் கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி பல்வேறு நூல்களையும் வெளியிட இருக்கிறார். எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது தான் இவரது ஆத்ம நம்பிக்கை என்று அடிக்கடி கூறுவார்.

**கவிதா உலகுக்குள் நுழைய அடித்தளமாக காதல் உள்ளது என்று சொல்லலாமா?** என்று இவரிடம் கேட்கப்பட்ட போது...

அப்படி என்று சொல்ல முடியாது. எனது தமிழ் ஆசிரியரின் ஊக்குவிப்பும் அரட்டையடிப்புமே காரணம்.

**உங்களை கவிதை எழுதத் தூண்டியது எது?**

பாடசாலைச் சுற்றுலா

**நீங்கள் எத்தனை வயதில் கவிதை எழுதத் தொடங்கினீங்கள்?**

எட்டாம் வகுப்பில் படிக்கும் போதே சிறு சிறு கவிதைகள் எழுதுவதுண்டு

**பெண் என்ற ரீதியில் நீங்கள் சந்தித்த சவால்கள் எதிர் கொண்ட போராட்டங்கள் என்னென்ன?**

யாழ் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய சூழ்நிலையில் பிரச்சினைகள் காரணமாக எத்தனையோ சவால்களைச் சந்தித்தும் கல்யாணம் மட்டுமே நிறைவேறியது.

**நீங்கள் ஆற்றும் சமூகசேவைகள் என்னென்ன?**

இலைமறை காயாக இருக்கும் கவிஞர்களை வெளிக் கொணர்தல், கவிதை கருத்துக்களம் நிகழ்வுகள் மூலமாக ஊக்குவிப்பு செய்தல் ஆகும்.

**கனடா தொலைக்காட்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளைச் செயலாளராக செயற்படுகின்றீங்கள். அதுபற்றி என்ன கூறவிரும்புறீங்கள்?**

உலகத்தில் பிரபல்யமாகி வரும் நிகழ்வாக தமிழாழி என்னும் காட்சிக்களம் இருக்கிறது. இலங்கையிலும் அதைப் பிரபல்யமாக்கி இலங்கைக்கிளை துணைத் தலைவராக திருமதி தாட்சாயினி சர்மாவையும் துணைச் செயலாளராக வாசுகி வாசுவையும் செயற்பட வைத்துள்ளார்கள். இது நம்மீது கொண்ட நம்பிக்கையாலும் தமிழின் மீது நமக்கு இருக்கும் ஆர்வத்தினாலும் ஆகும்.

**தமிழின் மீது தீவிர ஆர்வம் கொண்ட நீங்கள் ஏன் தொடர்ந்து படிக்கவில்லை?**

நான் உயர்தரத்தை முடித்து பிரச்சினை காரணமாகத்தான் கொழும்புக்கு வந்தேன். கொழும்புக்கு வந்து பாடசாலையொன்றில் இணை ஆசிரியையாக சேவை செய்து தனியார் துறை நிறுவனத்திலும் படிப்பித்து வந்தேன். தொடர்ந்து படிப்பித்து வருகிறேன்.

**நீங்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் வருவதாக கூறப்படுகிறதே!**

உண்மைதான் நான் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் அதற்கான வாய்ப்புகள் கிடைத்திருப்பதாலும் வெளிநாடுகளுக்கு அடிக்கடி போவதைத் தொடருகிறேன்.


பகிரங்கமாக எழுதிய கவிதை என் நண்பி காதலில் ஏமாந்த கவிதை

**உள்ளத்தில் உதித்தது உன்னினைவு**
**உதிரத்தில் கலந்தது உன்னுறவு**
**உல்லாசம் போனோம் ஓரிரவு**
**நீயின்றி எனக்கேன் வேறுறவு**

**நாங்கள் மாதா மாதம் ஒருவரை கௌரவிக்க முடிவெடுத்து முதன் முதலில் கலைஞர் எஸ். என். நடராஜாவை கௌரவித்தபோது எந்தவித அறிவிப்பும் இன்றி திடீரென வந்து மேடையில் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவத்தீங்களே. அது ஏன்? அவரை முன்பே தெரியுமா?**

இல்லை. ஆனால் அவர் ஒரு பழைய கலைஞர் என்ற ரீதியில் கலைஞர் எஸ். என். நடராஜாவை பொன்னாடை போர்த்தி கௌரவித்தேன்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



தினகரன் THINAKARAN
தினகரன் வாரமஞ்சரி

2023.09.17 காலை 10 மணிக்கு வத்தளை,
ஹெந்தலை சந்தியிலுள்ள நகர சபை மண்டபத்தில்

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் கலாரத்ன விபூஷண் விருது பெறுவோர்



# நடிகையின் சேலையை பிடித்து இழுத்த நடிகர்



கேங்ஸ் ஆப் கோதாவரி' படத்தின் புரமோஷன் விழா, ஐத ராபாத்தில் நடந்தது தெலுங்கில் கிருஷ்ணா சைதன்யா இயக்கி வரும் 'கேங்ஸ் ஆப் கோதாவரி' படத்தில் விஸ்வக் சென் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக நேஹா ஷெட்டி நடிக்கிறார். படத்தின் புரமோஷன் விழா, ஐதராபாத்தில் நடந் தது. இதில் விழா மேடையில் ஹீரோ விஸ்வக் சென் மற்றும் ஹீரோயின் நேஹா ஷெட்டி ஆகியோர் நடனம் ஆடினார்கள்.

அப்போது நேஹா ஷெட்டியின் சேலையை பிடித்து இழுத்து விஸ்வக் சென் நடனம் ஆடினார். சற்று அதிர்ச்சியானாலும், நடிகையும் அவருக்கு ஒத்துழைப்பு தந்து நடனம் ஆடினார். இருவரும் சேர்ந்து ஒரே சேலையில் பல அசைவுகளில் நடனம் ஆடினார்கள்.

இந்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. என்னதான் இருந்தாலும் மேடையில் நடிகையின் சேலையை பிடித்து இழுத்து ஆடியது முகம் சுளிக்க வைப்ப தாக ரசிகர்கள் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். ஒட்டி வந்தது யாரு... ஒத்துழைத்தது யாரு? என்பது கேள்வியாக இருந்தாலும், மேடையில் போட்ட சேலை ஆட்டம் ரசிகர்களை வெகுவாக கவர்ந் துள்ளது.

# பரத் கிருஷ்ணமாச்சாரி இயக்கும் நிகில் சித்தார்த்தின் 20ஆவது படம்



நிகில் சித்தார்த்தின் 20வது படத்தை பரத் கிருஷ்ணமாச்சாரி இயக் குகிறார். இப்படம் தமிழ் உட்பட ஐந்து மொழிகளில் உருவாகவுள்ளது. தெலுங்கு திரையுலகின் பிரபல நடிகரான நிகில் சித்தார்த், ஹேப்பி டேஸ் படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். பின்னர், அவர் யுவதா, சுவாமி ராரா, கார்த்திகேயா, கார்த்திகேயா 2 போன்ற படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். இயக்குனர் பல்னட்டி சூர்ய பிரதாப் இயக்கத் தில் நிகில் சித் தார்த் நடித்த '18 பேஜஸ்' திரைப்ப டம் கடந்த ஆண்டு வெளியாகி கலைவையான விமர்சனங்களை பெற்றது.

இதைத்தொடர்ந்து நிகில் சித்தார்த்தின் 20வது படத்தை மிஷ்கினிடம் பணியாற்றிய பரத் கிருஷ்ணமாச்சாரி இயக்குகிறார். 'சுயம்பு' என பெயரிடப்பட்டுள்ள இப்படம் தமிழ் உட்பட ஐந்து மொழிகளில் உருவா கவுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளி யாகியுள்ளது. அதன்படி, 'சுயம்பு' படத்தின் படப்பிடிப்பு இன்று துவங்கியுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர்.



# பிரபாஸுக்கு ஜோடியாகும் நிதி அகர்வால்



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் 'கல்கி 2898 ஏடி' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். தெலுங்கு திரையுல கின் முன்னணி நடிகரான பிரபாஸ், இயக்குனர் நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் 'கல்கி 2898 ஏடி' (KALKI 2898AD) படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் தீபிகா படுகோனே, அமிதாப் பச்சன், கமல், திஷா பதானி, உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின் றனர். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். சயின்ஸ் ஃபிக் சன் படமாக உருவாகும் இப்படத்தை வைஜெயந்தி மூவிஸ் நிறுவனம் தயா ரிக்கிறது. இதைத்தொடர்ந்து, பிரபாஸ், இயக்குனர் மாருதி இயக்கத்தில் 'ராஜா டீலக்ஸ்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இப்படத்தின் கதாநாயகி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ராஜா டீலக்ஸ்' திரைப்படத்தில் நடிகை நிதி அகர்வால் இணைந் துள்ளார். இதனை தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள இயக்குனர் மாருதி இது தொடர் பான பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "எதிர் கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள் மற்றும் விரைவில் படப்பிடிப்பு தளத்தில் உங்களை காணலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். 'ராஜா டீலக்ஸ்' திரைப்படத்தில் நிதி அகர்வால் இணைந்துள்ளது ரசிகர்கள் மத்தியில் எதிர் பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

# ஆண்கள் மீது எனக்கு கோபம் தான்





சினிமா நடிகைகளில் 'சேலையில் தான் இவர் ரொம்ப அழகா இருப் பார்' என்று மனதில் நினைத்தால் 'டக்'கென தோன்றுபவர், நம்ம வாணி போஜன்தான். சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்து ஜொலிக்கும் வாணி போஜன், உண்மையிலேயே அழகுப் பதுமைதான். நடையிலும், உடையிலும், பேச்சிலும் வசீகரிக்கும் நடிகையாக திகழ்கிறார். 'ஓ மை கடவுளே...', 'லாக்கப்', 'மலேசியா டூ அம்னீசியா', 'மிரள்', 'பாயும் ஒளி நீ எனக்கு', 'லவ்' போன்ற படங்களில் நடித்துள்ள 'ஊட்டி ஆப்பிள்' வாணி போஜனை, 'நட்சத்திர பேட்டிக்காக சந்தித்தோம். மனம் விட்டு பேசினார், மனதில் உள்ளதை கொட்டினார். அவரது 'பளிச்' பேட்டி, இதோ...

ஆண்கள் மேல் என்ன கோபம் உங்களுக்கு...?

ஆண்கள் மீது கோபம் இருக்கு. எல்லோரின் மீதும் கிடையாது. மணிப்பூ ரில் நடந்த பாலியல் பிரச்சினையில் ஈடுபட்டது ஆண்கள் தானே... இப்படிப் பட்ட ஆண்கள் மீது எனக்கு கோபம் உண்டு. நீ மரியாதை தந்தா நானும் மரியாதை தருவேன். அவ்வளவுதான். ஆண்கள், பெண்கள் என்பதெல் லாம் பார்ப்பதே கிடையாது. அடிதான்.

எப்போது தான் பெண்கள் மேலே வருவது?

இப்படி தட்டிக்கிட்டே இருந்தா எப்படி வரமுடியும்? ரெயில் நிலையங்க ளில் பெண்களுக்கு எப்படியெல்லாம் கொடுமை நடக்குதுனு தெரியுமா? எத்தனை ஆண்களை நான் துரத்தி அடிச்சிருக்கேன்னு தெரியுமா? ஒருமுறை அப்படிப்பட்ட ஒருத்தனை அடிக்க ஓடினேன். தப்பிச்சு டிரெய்ன்ல ஏறிட்டான். டிரெயின்ல விழுந்து செத்திருந்தா கூட சந்தோஷப்பட்டிருப் பேன். இப்படிப்பட்ட ஜென்மங்கள் இருக்கவே கூடாது. இப்ப சொல்லுங்க, ஏன் ஆண்கள் மீது கோபம் வரக்கூடாது? ஷூட்டிங்கிற்கு காரில் வந்து நடிச்சு கொடுத்திட்டு காரிலேயே ஏறி போற பொண்ணு நான் கிடையாது. (டென்ஷன் ஆகிறார்)

ஏன் இப்படி டென்ஷன் ஆகுறீங்க...?

நான் 'செலிபிரிட்டி' என்பதால் சாதுவாக இருப்பது போல நடிக்க முடி யாதுங்க.

அழகாக இருக்கீங்களே... உங்கள் அழகுக்கு என்ன காரணம்?

அம்மா, அப்பாதான்.

சின்னத்திரையில் இருந்து வெள்ளித்தி ரைக்கு வந்தவர் நீங்கள். இரண்டிலும் உள்ள வேறுபாடு என்ன? சின்னத்தி ரையில் ஒரு தொடர் என்பது 5 ஆண் டுகள் வரைப் போகும். ஆனால் வெள் ளித்திரையில் டக்கென காலம் ஓடிடும். அதேவேளை வெள்ளித்திரையில் வித் தியாசமான கதாபாத்திரங்களில் நடிக் கலாம்.

வாணி போஜன் என்றாலே 'மீம்ஸ்' பிரியர்கள் குஷியாகி விடுகிறார்களே...?

20 வயதில் இப்படி 'மீம்ஸ்'களை பார்த் திருந்தால் வருத்தப்பட்டிருக்கலாம். நான் இப்போது 30ஐ கடந்தாச்சு. இப்போகூட யாரோ எழுதியதை நினைச்சு கவலைப்பட் டுக்கிட்டு இருந்தா, என் வாழ்க்கையை நான் எப்போ வாழுறது?

உங் களைப் போலவே சின்னத்திரையில் இருந்து வந்த பிரியா பவானி சங்கரு டன் உங்களுக்கு தொழில் போட்டி என்று கூறுகிறார்களே...?

எனக்கும், அவருக்கும் இடையே நல்ல புரிதல் உள்ளது. எங்களுக்குள் எந்த போட்டி, பொறாமையும் இல்லை.

ரசிகர்கள் கனவில் நீங்கள் வந்தாலும், சேலை கட்டித்தான் வரீங்க... சேலைக்கும், உங்களுக்கும் அப்படி என்ன கனெக்ஷன்?

இப்படி கேக்கும்போதே சந்தோஷமா இருக்கு. 'தெய்வமகள்' சீரியலில் தாசில்தாராக நான் நடிச்சபோது, அந்த கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுக்க நினைச்சேன். எனவே சேலை கட்டி நடிச்சேன். அது அப்படியே தொடர்ந்து விட்டது. சேலை என்பது என்னோட 'லைப் அட்டாச்மெண்டாக' ஆயிடுச்சு.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?

என்னை பொறுத்தவரை காதலும், திருமணமும் ஒன்னுதான். ஒரு வனுக்கு ஒருத்தி. பிடிக்கலைனாலும் வாழ்ந்தாகணும். இதுலாம் இந்த சமூகம் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கும் விஷயங்கள். என்னை பொறுத் தவரையில் காதலில் இருக்கும் உறவும், அன்பும் கல்யாணத்தில் இருக் குமா? என்பது 'டவுட்' தான்.

இப்போதைய திருமண பந்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இப்போ நான் பார்க்கும் எந்த தம்பதிகள் மேலேயும் எனக்கு நம்பிக்கை கிடையாது.

சினிமாவுக்கு வந்த அனுபவம் பற்றி சொல்லுங்களேன்...

சின்னத்திரையில் நடித்தது போதுங்கிற முடிவுக்கு வந்தபோது ஒரு வருஷம் 'பிரேக்' எடுத்தேன். 5 வருஷம் தொடர்ந்து சீரியலில் நடிச்சேன். அந்த 'கேப்'பில் நிறைய படவாய்ப்புகள் வந்தது. ஒரு படிக்கட்டில் நிற்கும் போது கீழே இறங்கவேண்டுமா, மேலே ஏற வேண்டுமா? என்பது நம் முடி வுதான். ஏன் ஏறிப் போகக் கூடாது? என்று யோசித்தேன். சினிமாவுக்கு வந்து விட்டேன்.

இது ஆசையா, பேராசையா?

நான், நீங்க, யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், மனிதனின் ஆசை எப்போதுமே ஒரு இடத்தில் நிற்காது. அடுத்தடுத்து போய்கிட்டே இருக்கும்.

நடிகர்களுடன் உங்களை இணைத்து ஏதேதோ பேசுகிறார்களே...?

என்னை வச்சு வரும் 'கிசுகிசு' பற்றி சந்தோசம்தான் படுறேன். ஏனா என்னை பத்தி ஏதோ எழுதுறாங்கல்ல. கிசுகிசு வந்தா பேமஸ் ஆகலாம். டிரெண்டிங்கில் தொடர்ந்து இருப்போம்ல... எனவே கிசுகிசு வரட்டும். சந் தோஷம்தான்.

மறக்க முடியாத விஷயம் எது?

என்னை ரிஜெக்ட் செய்த ஒரு மாடலிங் ராம்ப் வாக் நிகழ்ச்சியில், ஒரு கட்டத்தில் 'செலிபிரிட்டி'யாக ஒய்யாரமாக நடந்து சென்றேன். எப்படி சூப் பர்ல?

வாணி போஜனின் கொள்கை?

ஊட்டியில் எங்களுக்கு சொந்த டீ எஸ்டேட் இருக்கு. அதை வைத்துத்தான் குடும்பம் ரன் ஆகுது. என் தந்தை சொத்து அது. அவர் சேர்த்தது. அது என் னுடையது கிடையாது. நான் சேர்க்கும் சொத்துதான் என்னு டையது. எந்த சூழலிலும் பெற்றோரிடம் எதிர்பார்த்து நிற் கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கேன்.

மீண்டும் சின்னத்திரையில் தலைகாட்டுவீர் களா?

சின்னத்திரைதான் எனது தாய் வீடு. அதை மறக்கவில்லை. எனவே கெஸ்ட் ரோலில் நடிக்க கூப்பிட்டாலும் போவேன். அதுவும் குமரன் சார் டைரக்டு செய்யும் சீரியலில்தான் அப்படி நடிப் பேன். ஏன்னா 'தெய்வமகள்' சீரியல் மூலமாக, எனக்கு முகவரி கொடுத்தது அவர்தான்.

'பேச்சுலர்' படத்தில் நடிக்காதது ஏனோ?

எத்தனையோ படங்களை தவறவிட்டு வருந்தியிருக்கிறேன். ரீசண்டா அப்படி தவறவிட்ட படம்னா 'பேச்சுலர்'தான். சீரியலில் 'சத்யா' கேரக்டரில் என்னை பொதுமக்கள் பார்த்து அடையாளம் தந்துட்டாங்க... எனவே எனக்கும் ஒரு பொறுப்பு வந்துடுச்சு. அந்த ரெஸ் பான்ஸிபிலிட்டியை பிரேக் பண்ண வேண்டாம்னுதான் பார்க்கிறேன்.

எந்த கதாபாத்திரம் உங்களுக்கு பொருந்தும்னு நினைக் கிறீங்க...

துணிச்சலான எந்த கதாபாத்திரமும் எனக்கு பொருந்தும் என்று நினைக்கிறேன். ஏன்னா சாப்டா நடிக்கிற ஏஜ்ல நான் இல்ல.

சினிமாவில் 'அட்ஜெஸ்மெண்ட்' என்ற புகார்கள் அடிக்கடி வருகிறதே... நீங்களும் இதை எதிர்கொண்டீர்களா?

சினிமாவில் மட்டுமில்லீங்க... எல்லா இடங்களிலும் பெண் களுக்கு இந்த பிரச்சினை இருக்கு. சினிமா ஒரு பெரிய இண் டஸ்ட்ரி என்பதால் இந்த பிரச்சினை பூதாகரமாக வெடிக்கிறது. எனக்கு இதுபோன்ற பிரச்சினைகள் எதுவும் வரவில்லை.

நடிக்க செல்வதற்கு முன்பாக 'ஹோம் ஒர்க்' செய்யும் பழக்கம் உண்டா?

நோ... ஜாலியாக போவேன். நடிப் பேன். அவ்வளவுதான்.

உங்களை எளிதாக ஏமாற்றிவிட லாமா?

என்னோட பலமும், பல வீனமும் எமோஷனல்தான். என்னை ஈசியாக ஏமாற்றிவி டலாம். மற்றவர்களுக்காக பரிதாபப்பட்டு, இரக்கப்பட்டு என் வாழ்க்கையை நான் வாழுறதே இல்லை.

உற்ற துணை யாரோ...?

மனசாட்சிதான். அது எனக்கு எப்போதுமே துரோகம் செய்வது கிடையாது.

எதிர்காலத்தைப் பற்றி சிந் திப்பது உண்டா?

எதிர்காலத்தைப் பற்றி யோசித்து யோசித்து இன்றைய வாழ்க்கையை தொலைக்க நான் முட்டாள் இல்லை.

சினிமாவில் சாதிப்ப தற்கு தேவை திறமையா, சிபாரிசா?

உண்மையிலேயே திறமைதான்.

அடைய வேண்டிய இலக்கு?

அதிக படங்கள் நடிச்சு சாதிக்க நினைக் கல. நடிச்ச படங்களில் 'வாணி போஜன் சூப்பரா நடிச்சுருக்காங்கப்பா' என்று அனைவரும் சொன்னால் போதும்.

சின்ன ஆசை? சூர்யாவுடன் ஒரு படத்தில் நடிக்கனும்னு ஆசை இருக்கு.

இவ்வாறு கலகலப்பாக பேசி முடித்தார், வாணி போஜன்.

# சொந்த முயற்சியில முன்னேறியவர்தான் அஜித் -கஸ்தூரி



நடிகை கஸ்தூரி அவ்வப்போது இணையத்தில் சர்ச்சை கருத்துகளை பதிவிட்டு வருகிறார். அரசியலிலும் பல்வேறு கருத்துகளை கூறி சர்ச்சை ஏற்படுத்தி இருக்கிறார். தமிழ் திரையுலகில் 90களில் முன்னணி நடி கையாக வலம் வந்தவர் கஸ்தூரி. 'ஆத்தா உன் கோயிலிலே' என்ற திரைப்படத்தின் மூலம் சினிமா வில் அறிமுகமான இவர் சின்னவர், புதிய முகம், அமைதிப்படை போன்ற பல படங்களில் நடித்துள் ளார். இவர் நடிப்பதோடு மட்டுமல்லாமல் பல நிகழ்ச்சியை தொகுத்தும் வழங்கினார். சினிமாவில் இருந்து விலகியிருந்த நடிகை கஸ்தூரி ஒரு சில படங்களில் குத்து பாடலுக்கு நடனமாடினார். இவரின் நடனத்திற்கு பலரும் சர்ச்சை கருத்துகளை தெரிவித்து வந்தனர். சமூக வலைதளத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை கஸ்தூரி சர்ச்சையான கருத்துகளை கூறி பரபரப்பு வளையத் துக்குள் இருந்து வருகிறார். அரசியலிலும் பல்வேறு கருத்துகளை கூறி சர்ச்சை ஏற்படுத்தி இருக்கிறார். இந்நிலையில், இவர் நடிகர் அஜித் குறித்து பதிவிட்டுள்ளது சமூக வலைத ளத்தில் வைரலாகி வருகிறது. அந்த பதிவில், "அஜித்துனா யாரு? கேட்கமாட்டாங்களா பின்னே? பெரிய புள்ளி யாருக்காச்சும் மகன், பேரன், மறுமவன் இப்படி எதுவுமில் லாமே யாரும் தூக்கி விடாம யாரையும் கெடுக்காமே சொந்த முயற்சியில மேல வந்தவரு... அவரையெல்லாம் எப்பிடி தெரியும்?" என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.

# பெண்களின் முகத்திற்கு ஏற்ற பொட்டு

பெண்களின் முகத்திற்கு அழகையும் வசீகரத்தையும் தருவது நெற்றி பொட்டுதான். ஒவ்வொருவரும் தங்களின் முகத்திற்கேற்றவாறு பொட்டு வைக்க வேண்டும். நம் முன்னோர்கள் அனைவரும் நெற்றியில் வைக்கும் குங்குமப்பொட்டின் அழகே தனி என்று தான் சொல்ல வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் முகத்திற்கேற்றவாறு பொட்டு வைக்க வேண்டும்.

மருத்துவ ஆராய்ச்சிகளின்படி, நினைவாற்றலும் சிந்தனைத்திறனும் திறனுக்கும் உரிய இடம் நெற்றி. யோகக் கலையில் இதனை ஆக்ஞா சக்கரம் என்கிறது. எலக்ட்ரோ மேக்னடிக் என்ற மின்காந்த அலைகளாக மனித உடல் சக்தியை வெளிப்படுத்தும்.



அதிலும் முன்நெற்றி மற்றும் நெற்றிப் பொட்டு இரண்டும் மின்காந்த அலைகளை வெளியிடுவதில் முக்கியமானவை. அதனால்தான், நம் மனம் கவலையால் வாடும்போது, தலைவலி அதிகமாவதை நாம் உணர்ந்திருப்போம். நாம் வெறும் நெற்றியாக இருக்கக்கூடாது என்று முன்னோர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. நெற்றியில் இடும் திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விக்கிறது. நம் உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. எனவே வெறும் நெற்றியாக இருக்கக் கூடாது என்கின்றனர் முன்னோர்கள். இன்றைக்கு ஸ்டிக்கர் பொட்டுக்களின் வருகைக்குப் பின்னர் மங்கையர்கள் பல வித டிசைன்களில் முகத்தை அழகுபடுத்தி கொள்கின்றனர். நாம் வைக்கும் பொட்டு நம் முகத்திற்கு ஏற்றதாக இருந்தால் அது அழகினை அதிகரித்துக் காட்டும். ஆதலால் முக அமைப்பிற்கு ஏற்ற பொட்டுகளை தேர்வு செய்து முகத்தின் அழகை அதிகரிக்க செய்யுங்கள் என அழகியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

வட்ட வடிவ முகம் உள்ளவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்கவேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகு தரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும். இதய வடிவ முகம் கொண்டவர்கள் சற்றே வித்தியாசமானவர்கள்.

இவர்கள் குங்குமத்தினால் பொட்டு இட்டுக் கொள்வது முகத்தைஅழகாக்கும்.ஸ்டிக்கர்பொட்டுக்களில் சிறிய அளவில் நீளமான பொட்டுகள் முக வசீகரத்தை அதிகரித்துக் காட்டும்.

ஓவல் வடிவ முகம் கொண்டவர்கள் புருவத்திற்கு சற்று மேலே நெற்றியில் வட்டப் பொட்டு வைப்பது அழகை அதிகரிக்கும். நீளமான ஸ்டிக்கர் பொட்டு வைத்தாலும் வசீகரமாக இருக்கும்.

# வீட்டு வன்முறையும் பெண்கள் உரிமையும்

பெண்கள் பற்றி ஊடகங்களிலும் மேடைகளிலும் நூல்களிலும் வீர வசனங்கள் பேசப்பட்டாலும் வீட்டு சூழலில் கூட பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்பதே அதிகளவான உண்மை. இதில் எவ்வயதினராக இருந்தாலும் தப்பிக்க வில்லை என்பதே உண்மை.



சமூகத்தில் முக்கிய பகுதியினராக காணப்படும் பெண்கள் அவர்களது வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அப்பிரச்சினைகளுள் வீட்டு வன்முறை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வீட்டு வன்முறைகளின் தளமாக பெண்களின் வாழ்விடங்கள் அமைந்திருப்பது துரதிஸ்டவசமானது

அதிலும் நாம் வன்முறைக்கு உள்ளாகியுள்ளோம் என்கிற சிந்தனையே இல்லாமல் அல்லது தெரியாமல் அதில் உழன்றுக் கிடப்பதே மிகவும் கொடுமையாக உள்ளது.

அதேவேளை வீட்டு வன்முறைகளின் தாக்கம் இன்று குடும்பங்களுக்கு அப்பால் சமூக மட்டத்தில் பாரியதொரு பிரச்சினையாகவும் மாறிவருகின்றது. இதனால் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் குறித்த சர்வதேச, தேசிய மட்ட ஆய்வுகளும் அதிகரித்தவண்ணமுள்ளன.

20ஆம் நூற்றாண்டின் 3 ஆம் காலப்பகுதி வரைக்கும் வீடு வன்முறை தொடர்பான ஆய்வினை சமூக விஞ்ஞானிகள் ஆய்வுக்கு உட்படுத்தியது மிகக் குறைவு . 1970 ஆண்டே குடும்ப வன்முறை பற்றிய ஆய்வை மேற்கொண்டனர். `தீர்வும் வகுத்தனர் 1980 ஆம் ஆண்டு சீதனம் தொடர்பான வன்முறைகளையும் 1989 ஆம் ஆண்டு மனைவிகளை அடிப்பது தொடர்பான வன்முறைகளையும் ஆய்வு செலுத்தினர். ஆம் வன்முறைகளில் மனைவிமார்கள் அடி வாங்குவது மிகப் பெரிய வீட்டு வன்முறையாக நாம் கொள்ளலாம்.

அத்துடன் டேவிட் லெவின்சொன் (1989) Yala பல்கலைக்கழகத்தில் செய்த ஆய்வின் ஊடாக இதனை கண்டறிந்தார்.அத்துடன் 74.5% மனைவிமார்கள் அடிபடுவதையும் 15.5 % சமூகத்தில் இவை வழமையாக நடப்பதையும் அறிவித்தார் (தகவல் திரட்டல் google )

ஆய்வுகள் அனைத்தும் ஒரு பக்கம் இருக்க சாதாரணமாக வீடுகளில் பெண் குழந்தைகள் மட்டுமே சில வேலைகளை செய்ய வேண்டும் என்கிற வற்புறுத்தல், வேற்று மனிதர்கள் கூறும் காரணத்தை ஆராயாமல் வீட்டுப் பெண்களை அடித்தல், அத்துடன் ஒரு தவறு நிகழ்ந்து விட்டால் தவறுக்கான காரணம் யாதென அறியாமல் அல்லது அதற்கான தீர்வை தேடாமல் அடித்தல், வார்த்தைகளால் துன்புறுத்தல் ஒதுக்கி வைத்தல் போன்ற பல நிகழ்வுகள் நடந்தாலும் சில விளையாட்டுகள், சில முடிவுகள் என்பவற்றை ஆணுக்கே உரியது என்கிற கோட்பாட்டில் நிராகரித்தனர். இவையெல்லாம் வீடு வன்முறைகளே. தொலைக்காட்சியிலும், ஊடகங்களிலும் சில பெண்களின் சாதனைக் கண்டு பூரித்து போகும் சமூகம் தன் வீட்டுப் பெண் அந்த கட்டத்தை தொட முயல தடையாக இருப்பது குடும்பமே எனலாம்.

**தொடரும்...**



நடராஜா தாமரைச்செல்வி

# பெண்களுக்கு ஏன் பிங்க் (Pink) வண்ணம் பிடிக்கும்

சந்தைகளில் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், நிறங்களை கொண்டே தங்கள் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களை கவர்கிறார்கள்.

வீதி விளக்குகளை கண்டதுண்டா, சிகப்பு, மஞ்சள், பச்சை இதில் கூட சிகப்பு என்றால் நிற்கவேண்டும் என்று காட்டப்படுகிறது.


மற்றும் மஞ்சள் என்றால் தயாராகுங்கள், பச்சை என்றால் அனுமதி, செல்லலாம் என நம்மை பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்களே தவிர அவை நமக்கு இயற்கையாகவே மனதிலிருந்து தோன்றுபவை அல்ல.

அதுபோலத்தான் இந்த வர்த்தக உலகில், நீங்கள் கூறும் பிங்க் என்பது, பெண்களுக்கு பெருமை அளிப்பதை போல கட்டுவார்கள். பெண்களுக்கு கண்ணியம் சேர்ப்பதாக போற்றுவார்கள், அவை அனைத்தும் விற்பனை தந்திரமே!


ஆண்களுக்கு நீல வண்ண ஆடை அணிவது அவர்களின் பொறுப்பை உணர்த்துவதாக வெளிகாட்டப்படுகிறது.



# மதுரை காமராஜர் பல்கலையில் அவுஸ்திரேலிய எழுத்தாளர் மாத்தளை சோமுவின் படைப்புலகம்








மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பிரபல அவுஸ்திரேலிய எழுத்தாளர் மாத்தளை சோமுவின் படைப்புலகம் என்னும் ஒருநாள் கருத்தரங்கில், நோக்கவுரை ஆற்றிய மதுரை காந்தி கிராம, கிராமிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பா.ஆனந்தகுமார், ஆயிரக்கணக்கான மக்களை இழந்து துன்பக்கேணியில் வாழ்ந்த மலையக மக்கள் குடியேற்றப்பட்ட வரலாற்றுக்கு வயது 200 ஆண்டுகளாகும்.

இந்த ஆண்டில் அந்த மலையகத்தில் பிறந்து அவுஸ்திரேலியாவில் வாழும் மாத்தளை சோமுவின் சிறுகதைகள், நாவல்கள், ஆய்வு நூல்கள், பயண இலக்கியம், மொழி பெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் நோக்கில் மாத்தளை சோமுவின் படைப்புலக கருத்தரங்கம் நடத்துவது பொருத்தமானது.

காலனித்துவ ஆட்சியில் இலங்கை, மலேசியா, பிஜி, மொரீசியஸ், ரியூனியன், பர்மா ஆகிய நாடுகளுக்கு குடியேற்றப்பட்ட தமிழர்களே முதன் முதல் புலம் பெயர்ந்தவர்கள். அவ்வகையில் அவர்களின் குமுறல்கள் தோட்டப் பாடல்களாக வந்துள்ளன.

கண்டி கண்டி எங்காதீங்க
கண்டியில படும்
சீரழிவை கண்டவங்க சொன்னாங்க

என்ற மலையகப் பாடலே அதனை உறுதிப்படுத்துகிறது. இன்று புலம் பெயர்ந்து வாழும் மாத்தளை சோமுவின் படைப்புகள் இரண்டு புலம் பெயர்வுகளை ஒட்டி எழுதப்பட்டவை.

முதலில் இலங்கை மலையகம் குறித்ததாகும்.மற்றது அவுஸ்திரேலியாவை குறித்ததாகும். புலம் பெயர் இலக்கியங்கள் தமிழுக்கு புதிய உலகத்தை,புதிய தரிசனங்களைக் காட்டுவதாக உள்ளன.சங்க இலக்கியங்கள் ஐந்து திணைக்களம் சொல்கின்றன. தற்போது ஆறாம் திணையாக புலம் பெயர் இலக்கியம் இருக்கின்றன. அந்த புலம் பெயர் இலக்கியத்தில் மிக முக்கியமான படைப்பாளியாக மாத்தளை சோமு இருக்கிறார். அவரின் படைப்பலக கருத்தரங்கை மலையக 200 இல் நடத்துவது பொருத்தமானது என்றார். கருத்தரங்கிற்கு பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் ம.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வரவேற்புரை ஆற்றிய பல்கலைக்கழக தமிழாய்வு தலைவர் வை இராமராஜபாண்டியன், எழுத்தாளன் வாழும் காலத்திலேயே அவருக்கான படைப்புலக கருத்தரங்கு நடத்துவதில் நாம் பெருமை கொள்கிறோம் என்றார். நிறைவுப்பேருரை ஆற்றிய எழுத்தாளர் மாத்தளை சோமு, எனது படைப்புகள் சார்ந்த கருத்தரங்கம் நடத்த முன் வந்ததில் இதனை படைப்புக்கான அங்கீகாரமாக பார்க்கிறேன். இக் கருத்தரங்கை எனக்கு முனைவர் பட்டம் வழங்கியதாக உணர்கிறேன். மலையக 200 ஆம் ஆண்டில் இது நடத்தப்பட்டது. மலையக இலக்கியத்தையும், புலம் பெயர் இலக்கியத்தையும் போற்றியதற்கு ஒப்பாகும். புலவர்களைப் போற்றியது சங்ககால மதுரை தமிழ்ச்சங்கம். இன்று அந்தப் பணியை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் தொடர்ந்துள்ளது என்றார்.

கருத்தரங்கில் மலேசியாவைச் சேர்ந்த வழக்கறிஞர் ம.மதியழகன், நா.புருசோத்தமன், கு குருசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். உதவிப் பேராசிரியர் மு.கிறிஸ்டோபர் முனைவர் ஆ.பாண்டியன், விரிவுரையாளர் ப.சுடலைமணி, முனைவர் ந.முருகேச பாண்டியன், முனைவர் யாழ் சு.சந்திரா, முனைவர் சு.வேணுகோபாலன்,முனைவர் க.நாகநந்தினி பேராசிரியர் உ.அலிபாவா ஆகியோர் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்கள்.

கருத்தரங்கை காந்திகிராம கிராமிய நிகர் நிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் பா.ஆனந்தகுமார், பாரதிதாசன்பல்கலைக்கழகப் பேராசிரியர் உ.அலிபாவா மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் வை.இராமராஜபாண்டியன் ஆகியோர் ஒருங்கிணைத்தார்கள். விழாவை ஒட்டி கருத்தரங்கு கட்டுரைகள் அடங்கிய மாத்தளைசோமு படைப்புலகம் என்னும் நூலும் மாத்தளை சோமு எழுதிய ஒற்றைத்தோடு என்னும் சிறுகதைத்தொகுதியும் வெளியிடப்பட்டது.

தகவல் :
எச்.எச்.விக்ரமசிங்க














## நிறம் தீட்டுங்கள்



## விலங்குகளின் பெயர்களை கண்டுபிடியுங்கள்



குதிரை | மாடு | ஆடு



குருவி | கழுகு | கோழி



பூனை | ஆடு | நாய்



வாத்து | பறவை | கோழி




குதிரை | மாடு | ஆடு



முயல் | மான் | ஆடு

## வழிகாட்டுங்கள்




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






## இடைவெளி நிரப்புங்கள்

உ | ஊ | எ | ஏ




____லகம்



____ஞ்சல்



____லி



____ணி





# 'Back to school' நிகழ்வையொட்டி விறுவிறுப்பாக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டி

**பாடசாலை அணி கிண்ணத்தை வென்றது**

**சிறந்த பந்துவீச்சாளர் ஆசிரியர் பி.வி.பரத்; சிறந்த துடுப்பாட்ட வீரராக மாணவர் நவீட் தெரிவு**



தென் மாகாணத்திலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் பழைமையான பாடசாலைகளில் ஒன்றான அறபா தேசிய பாடசாலை 'Back to school' நிகழ்வை பிரமாண்டமான முறையில் நடத்த தயாராகி வருகிறது. இதனை முன்னிட்டு பல்வேறுபட்ட நிகழ்வுகளும் விழாக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 2030 இல் முன்னேற்றகரமான பாடசாலையாக மாற்றும் தொலைநோக்குடன் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் இந்த முன்னெடுப்புகள் இடம்பெற்று வருகின்றன.



134 ஆவது வருடத்தில் கால்பதித்திருக்கும் அறபா மேலும் சாதனைகளை படைக்க வேண்டும் என்ற அவாவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்களில் வயது வித்தியாசம் இன்றி பழைய மாணவர்கள் பலரும் ஆவலுடன் பங்கேற்று வருகின்றனர். அனைவரையும் இணைத்துச் செல்லும் வகையில் பழைய மாணவர் சங்கம் தொடர்ச்சியாக பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

'Back to school' நிகழ்வு செப்டம்பர் மாதம் 30 மற்றும் ஒக்டோபர் 1 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. முதல் நாளில் ஆண்களுக்கும் இரண்டாம் நாளில் பெண்களுக்கும்நிகழ்வுகள்ஏற்பாடாகியுள்ளன.

இந்த நிலையில் 'Back to school' நிகழ்வை முன்னிட்டு சங்கத்தினதும் முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கிரிக்கெட் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. வழமையாக வருடாந்தம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நடைபெறும் போட்டி இம்முறை பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 5 ஓவர் போட்டியாக நடைபெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் பாடசாலை ஆசிரியர் குழு பழைய மாணவர் குழு மற்றும் மாணவர் குழு என்பன பங்கேற்றன. பாடசாலைக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையில் நெருக்கத்தையும் நட்புறவையும் ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடந்தன.



நட்புறவு ரீதியில் நடைபெற்றாலும் விட்டுக் கொடுக்காமல் போட்டித் தன்மையுடன் ஆட்டங்கள் விறுவிறுப்பாக இடம்பெற்றன. ஆசிரியர்களும் தங்கள் பழைய திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆர்வமாக இதில் கலந்து கொண்டதோடு பழைய மாணவர்களும் ஆர்வத்துடன் விளையாடி தமது திறமைகளை வெளிக்காட்டினார்கள். இறுதிப் போட்டிக்கு பழைய மாணவர் சங்க அணியும் பாடசாலை அணியும் தெரிவாகியிருந்தன. இதில் பாடசாலை மாணவர் அணி வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டிக்கு தெரிவாகா விட்டாலும் பாடசாலை அணிக்காக விளையாடிய ஆசிரியர் பி.வி. பரத் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக மாணவர் நவீட் தெரிவு செய்யப்பட்டார்.

இவர்களுக்கான விருதுகளையும் கிண்ணத்தையும் பாடசாலை அதிபர் முதஹ்ஹர் மற்றும் உப அதிபர்முன்திர்,விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் ரிகாஸ் அகமட் பழைய மாணவர் சங்க உறுப்பினர் பதால் ஸாகிரி ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இதேவேளை விளையாட்டுத் துறையில் பாடசாலை மாணவர்கள் மீண்டும் திறமை செலுத்தி வருவதோடு மாவட்ட,மாகாண மட்டங்களில் பல்வேறு போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர். இந்த நிலையில் விளையாட்டு ஆடை ஒன்றும் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.







எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

புதுநானூறு 2

# புதுக்கவிதையை புதுக்க விதைத்து கவிதைக்கு உயிர்ப்பூட்டியவர் ந.பி.

இபுதுநானூறு 2


புதுக்கவிதையை புதுக்க விதைத்து கவிதைக்கு உயிர்ப்பூட்டியவர் ந.பி.

ந.பிச்சமூர்த்தி என நன்கறியப்பட்ட தமிழ் புதுக் கவிதை வரலாற்றின் தொடக்கப்புள்ளி இவர்.

பிக் கவிதைகள்' கவிதையைப் பற்றி நான் திட்டவட்டமான கருத்துக்கள் உடையவன். கருத்தாழமோ உணர்ச்சியோ இயற்கையின் தரிசனமோ இல்லாத ஓசைப்பந்தைக் கட்டும் தந்திரத்தைப் பிற்காலத் தமிழ்க்கவிகள் கற்று விட்டார்கள். அதன் விளைவாக ஓசை இன்பமே கவிதை என்ற கொள்கை பரவிவிட்டது. இக்கொள்கைக்கு என் கவிதை மறுப்பு' என்பார். மரபோசை தாண்டிய உணர்வுச்சுழற்சியைப் புதுச்சொல்லில் பாய்ச்சியவர் ந.பி.

காட்டு வாத்து முதலான இவரது கவிதைப்பனுவல்கள் தமிழ்ப்புதுக்கவிதைக்குப் புது உந்துதல் எனலாம்.

ந.பிச்சமூர்த்தியின் பூக்காரி முக்கியமான கவிதை.உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு முறையிலும் சொல்




லுத்தியிலும் முனைப்புற்றது பூக்காரி என்காற படிமம்.

இனி பூக்காரியைத் தரிசிப்போம்னி பூக்காரியைத் தரிசிப்போம்.

மழைக்காலின் மையிருட்டில்/ மேகம் குனிய இடிமுழங்க/வீடு வந்த மழையின் கண்ணீர்/பூக்காரி பொங்கும் குரல்/மையிருட்டில் மேவி ஓங்கி/மழை நீரின் குரலினொடு/ பரவிற்று திசையெங்கு/'மல்லிகை வேணுமா?/ஜாதிமல்லிகை?'/

மழை இருட்டில்/தெருவிலொரு/ஈ குருவி பறக்கவில்லை/மேகம் வலுத்தது/மழை மீன்கள் துள்ளின/ மின்னல்கள் சிரித்து/மேகத்தைகா கொளுத்தின/கூதலெனும் நாகம்/ குடையோடு சீறிற்று/அஞ்சி ஒடுங்கிய அழகிய பெண்கள்/அடுப்பங்கரை சேர்ந்து/கணப்பை மருவினர்/

'மல்லிகை ரத்தினம்/மருக் கொழுந்து பச்சை/ஏறிமணக்கும்/ கூந்தலோர் வாரீர்!/மல்லிகை வேணுமா?/ஜாதி மல்லிகை!/'என்ற முதாள் பூக்காரி/பூக்காரி பொங்கும் குரல்/பெண்களை எழுப்பவில்லை/ சாரலின் கடுஞ்சினத்தில் பூ மோகம் ஆடவில்லை/பூக்காரி குரலினோடு/ கூடிற்று மழையின் கண்ணீர்/பூக்காரி பொட்டுக்கூடை/திரும்பிற்று வீடு நோக்கி/

உலகெங்கும் உற்பத்தியாய்/ நாடெல்லாம் சந்தை மேடாய்/வியாபாரத்தில் போட்டி மூள/சந்தைக் குரலிடையே /போர் விதைகள் கருவடைந்த/கனவுத் தெய்வம் கடைத் தெருவில்/கொட்டின்றி முழக்கு மின்றி/தூக்கிப் பேச ஆளுமின்றி/ அருஞ்சரக்கை விரித்து வைத்து/ வாங்குவோர்க் கேங்கிற்று/'அன்புச்சரக்கு /அழியாத சரக்கு/ தின்றாலும் எக்காலமும்/ தித்திக்கும் சரக்கு/ வேண்டுவோர் வாரீர்!/ வாங்குவோர் கூவீர்'/ சந்தைக்கலவரத்தில்/தெய்வக் குரல் கேட்கவில்லை/சந்தைக்கடை கலைந்ததும்/கனவுத் தெய்வம் போக வில்லை/

சூலம் எழுந்தது/அண்டம் அதிர்ந்தது/உலகெங்கும் கூடாரம்/ ஊரெங்கும் விஷப்புகை/வானெங்கும் பிளேனிறகு/தெருவெங்கும் பிணமலை/பீரங்கிக் குரல் பேச/ கேட்டதொரு வேறு குரல்/

அன்பும் அஹிம்சையும்/ விற்று வந்தேன்/ ஆதிமுதல்/ பூக்காரி பூவைப்போல /கண்ணெடுப்பார் யாருமில்லை/ருத்திரனின் வெறிக்கூத்தில்/கடுமோகம் கொண்டு விட்டார்/காமனை எரித்த ருத்திரன்/கண் சிமிட்டில் தணிந்து போவான்/'அன்பே சிவமாவான்/ மங்கலமாய் மலர்தருவான்/வேண்டுவோர் வாரீர்!/வாங்குவோர் கூவீர்'/

பிளேனிறகின் உயரம்/தெய்வக் குரல் ஏறவில்லை/நெஞ்சுடையாக் கனவுத் தெய்வம்/கூவுதலைக் குறைக்கவில்லை/'அன்பே சிவ மாவான்/மங்கலமாய் மலர் தருவான்/வேண்டுவோர் வாரீர்!/ வாங்குவோர் கூவீர்!'/

பூக்காரி கவிதையினூடாக அன்பின் பெறுமானத்தை நிறுவ முற்படுகிறார் கவி.

போரின் கொடுமையும்,போரீடு பாடும் மனுக்குலத்தை அழித்தன. அன்பும் அருளும் அறமுமற்ற வாழ்வின் இழப்பை துயரமனசோடு கவிதை பதிகிறது.


கதை போலான கவிதை ஒரு முற்றுருவப்பாங்கின் அடையாளம்.

'அழிவை அழித்து அன்பையளிப்பதே மேல்' என்கிற தத்துவத்துவம் பிச்சமூர்த்தி கவிதை பூக்காரி.

பூக்காரி பூ விற்கிறாள் வாங்குவார் யாருமில்லை;கனவுத் தெய்வம் அன்பைபரிமாறத் துடிக்கிறார் அணுகுவருமில்லை' ஒப்பீட்டு நகரும் ஒரு குறியீடு பூக்காரி.

வன்முறை பூமியில் மென்முறை எப்போது?'அன்புச்சரக்கு அழியாச்சரக்கு தின்றாலும் எக்காலமும் தித்திக்கும் சரக்கு வாங்குவோர் வாரீர் வாங்குவோர் கூவீர்' அன்பின் அழைப்பு தோற்குமிடத்தில் மானுடம் வற்றிப் போகிறது.எனினுமென்ன அன்புடையோன் மங்கலமாய் மலர் தருவான்

# சிதறும் செம்பனி/ஹுமைரா கதையுலகு





கதையுலகுக்கு இன்னொரு வரவு ஹுமைரா அல் அமீன் எழுத்து செம்பனிச்சிதறல்கள்.

நூலகாடி பதிப்பித்திருக்கும் இப்பிரதி ஒன்பது கதைகளைக் கொண்டிருக்கிறது. எளிமையான சொற்களில் இயல்பாகப் பேசுகிறதெனினும் கதை தரும் அதிர்வு கவனிப்புக்குரியது. பதுளை ஹாலி எல ஊரின் ஊற்றெ முத்தாய் இப்பனுவல் வழி எழுகிறார் ஹுமைரா.

'சரளமான நடையில் மனித நேய உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கினை ஹுமைராவின் சிறுகதைகள் கொண்டுள்ளது'என மூத்த இலக்கிய ஆளுமை சாரணா கையூம் அணிந்துரைக்கிறார்.

சந்தியா கதை வேலைதேடலின் நிலையை அல்லது மனோபாவத்தை சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டுப் பின்புலத்தில் விபரிக்கிறது. இது ஹுமைராவின் முதல் கதை எனினும் கச்சிதமான வடிவமைப்பாகி நிற்கிறது. பிரதி முழுவதுமாக ஹுமைரா வார்த்திருக்கும் பாத்திரங்கள் சமூக இயங்கியலின் யதார்த்தத்தை உணர்வு வற்றாமல் வெளிப் படுத்துகின்றன. கதை சொல் முறை நவீன பின் நவீன முறையியலில் பெருமாற்றங்கண்டுள்ள சூழலில் வெளிவரும் இப்பனுவல் மரபுசார் சொல்முறையைப்பிரதி செய்கிறதெனினும், இதனூடாக ஹுமைரா மேலும் பல பிரதிகளை எதிர்வருங்காலங்களில் படைத்தளிப்பாரென நம்பலாம்.

# ஔவன் கவிதை



**ஆற்றொழுகு**

3
அறிதல் பிரவாகம் கடலென விரிந்–
தெழும் அலையின் துளியில் நுழை
2
வாசலில் உன் பெயரெழுதும்
திறனென திரளெடு
ஆற்றொழுகும் புதுவிதி வழி விரி
3
மனத்திரை வரை
நற்பாங்கென தூய்மையுணர்
வாழ்தலின் மானுடப்புலம் விதை
விருட்ஷமென வியாபித்தலுன்
கடன்
அறி மனமே

# எண்மம் கடத்தல்

குடிசையின் கூரையில் உதிர்ந்த மழைத்துளிகளை எண்ணிக்கொண்டிருக்கையில் கனவு முறிந்திருக்க வேண்டும்.

மழைத்துளியெண்ணிக்கையளவு ஞாபகங்களின் சப்தம் இருந்தது.

கண் விழித்து வெளியே வந்த போது லங்கேஸ்வரன் முகத்தில் அங்கங்கே வெண் மயிர்த்துளிகள் வளர்ந்திருந்தன.

காலம் இவ்வளவு விரைவு.

முன் முற்றத்துப் புளிய மரம் பட்டிருந்தது.

புளியமரக் காகமான காலம் லிங்கேசனுக்குள் சிறகுவிரித்தது.

அவன் புலர்த்திய மென்காலைகள் பச்சையிழந்திருந்தன. பின்வளவுத் தோட்டத்தில் தலையுடைந்த ஒற்றைப் பனையில்

ஒற்றைச்சிறகுடன் கிளியொன்று பறத்தல் அவாவிற்று.

ஒழுங்கையெங்கும் முள்முளைத்த காலடிகளின் தடம் கிடந்தது.இவன் அத்தடங்களிடை தேடினான்; பரவசத்துடன்,ஏக்கத்துடன்,அதீத ஆவலுடன் தேடிக்கொண்டிருந்தான்.அவனின் தேடல் முகங்கள் அழிந்திருந்தன.

நட்பு வட்டம் திசை மாறித் திசையெங்கும் பரவியிருக்க வேண்டும். யாரையும் காணோம்.முன்னர் அவர்கள் முழங்கிய குரல்கள் மட்டும் இவன் காதுகளுக்குள் அலைந்து திரிந்தன.

இப்போ வெவ்வேறு வடிவத்தில் புது முகங்கள் வருகின்றன.காய்ந்த ஒற்றைப்புன்னகையை வலுக்காரமாக வெளியே எடுக்க முயன்றான் இவன்.

எனினும் புன்னகையுமற்ற மனாதர் காலத்தின் பிரதிநிதி இவனென,இவனுக்குள் பழைய கவிஞன் எழுதினான்.

ஊருக்குள் நுழைந்து பார்த்தான்;எதிர்ப்பட்டவர்கள் லங்கனை வித்தியாசமாகப் பார்த்தார்கள்.

காட்டுவாசியா? காலங்கடந்தவாசியா? இவனை வாசித்துக்கொண்டிருந்தனர்.

இவனது வாசிப்பு பக்கம்பக்கமாய் விரிந்தது.

ஊருக்குள் பண்பாடு, பழக்கவழக்கம்,எல்லாம் தலை கீழாகியிருந்தது.



இவன் பேசிய மொழி கூட திரிபாயிற்று. அதன் அர்த்தங்களை மொழிபெயர்க்க புதிதாயொரு அகரமுதலி தேவைப்பட்டதாய் லங்கேஸ்வரன் அங்கலாய்த்தான்.

காலம் இவனை இத்தனை காலம் கடத்தி வந்திருக்கிறது;கனவுடைந்த மனிதனின் நிகழ்காலம் அர்த்தங்களை இழந்துவிட்டதாக மனசுக்குள் கூவினான்.இது பின் எண்மயுகம் என்பதாக வாசிப்பொன்று செய்தான் டிஜிற்றல் சிந்தனைகளின் பின்காலத்தின் வடிவத்தை வியத்திருக்க இவனால் முடியவில்லை.இவனது மூளையும் மனமுமான மனிதம் இருபதாம் அல்லது இருபத்தோராம் நாற்றாண்டில் கிடந்தது.

கனவில் முறிந்த மழைத்துளிகளை மேலும் எண்ண முயன்றான் வரன்.

இப்போது ஒவ்வொரு மழைத்துளியும் கீழிருந்து வானோக்கி ஏகிற்று. இது கடன் திரும்பு காலம்?

மழைத்துளி வந்த காலத்தில் பூமி கண்ட பயன்தான் என்ன?

பசுமை வரண்ட நிலத்தில் நிற்கிறான்; காய்ந்துக்கிய இயற்கைமீது ஒரு செயற்கை அரவம் அடர்ந்திருந்தது.

வர்ணங்கள் ஒன்பதா?ஓராயிம் கலந்தான வர்ணக் கோலமொன்று கண்களைக்கலக்கின்இவனுக்குக் கண்ணீர்கூட பல் வர்ணத்திலிருந்ததை ஆச்சரித்தான்.

புல்லில்லை; பூச்சியில்லை; தரு இல்லை; தரு தரு நிழலில்லை; நிஜமில்லை. எல்லாமும் எண்மங்கடந்த ஆர்டிபிஷன்

இவனது பெயரைக் கூட அமிர்தலிங்கம் லிங்கேஷ்வரன் என எழுத முடிவதில்லை. அது வேறு குரலில் உச்சரிப்புச் செய்யப்படுகிறது.

அந்த உச்சரிப்பைப் படிக்க வொண்ணா துயருற்றானா அல்லது மகிழ்வுற்றானா இவனுக்கே விளங்கவிலாலை.

லிங்கி லிங்கியென பின்னணிக்குரல் கூப்பிட்டுக்கொண்டிருந்தது.

காலம் மாறியதா? காலத்தின் மனிதம் மாறியதா? வாழ்வு மாறியதா?வாழ்தலின் அர்த்தம் மாறியதா? கேள்விக்குறி மாறாமல் இருந்தது.

வானம் மழைத்துளிகளை உறிஞ்சியது;வெயிலை;நிழலை உறிஞ்சியது.

பூமியின் நிழல் வானத்தில் படியத்தொடங்கியது.

இடியும் முழக்கமும் இங்கிருந்து போயின.

வானத்திலிருந்து மண் உதிர்ந்தது.பூமியின் மேற்குப்புறத்தில் ஏதோவொன்று வெளிச்ச நிறத்தில் பரவிற்று; அதனைச்சுற்று கிழக்குப் புறமிருந்து இருள் வர்ணமொன்று வளர்ந்திற்று.

லிங்கி ஆச்சரியப்பட்டான் ; அதிய சித்தான் தன் காலடிகளை வானத்தில் பதித்தான் தலை பூமிக்கு நேரெதிரே நின்றது. எல்லாம் தலைகீழென்றது இவனது பழங்காலத்து மனசு.

**பொன்மீரா**

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—22

எம்.ஜி.ஆர் இதற்கு முன் எம்.ஜி.ஆர் நாடகமன்றம் என்ற பெயரில் சில நாடகங்களை சொந்தமாக நடத்தினார். எம்.ஜி.ஆர் சினிமாவில் நேரத்தை செலவழித்ததால் நாடகம் நடத்த முடியவில்லை. அதனால் நாடக நடிகர்கள், சீன்செட்டிங் மைக் உள்ளிட்ட தொழில்நுட்ப கலைக்கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு வேலை இல்லை. அதனால் அவர்களுக்கு வேலை கொடுக்க விரும்பி எம்.ஜி.ஆர் தானே "எம்.ஜி.ஆர்பிரர்சர்ஸ்" எனும் படக்கம்பெனி தொடங்க வேண்டியதாயிற்று. 16.06.1959 அன்று எம்.ஜிஆர் சீர்காழியில் "இன்பக்கனவு" நாடகத்தில் நடித்து கொண்டிருக்கும் போது அவரது இடது கால் முறிந்து சென்னையிலுள்ள தாய் வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டார். எம்.ஜி.ஆர் தூங்கி கண்விழித்த போது ஜானகி நின்று கொண்டிருந்தார். ஜானகி எம.ஜி.ஆரின் அருகே அமர்ந்து பரிமாறுவதிலும் உடலை தேற்றுவதிலும் ஈடுபடுவதை நோயாளியாக படுக்கையில் கிடந்த சதானந்தவதி கண்ணீர் மல்க பார்த்துக் கொண்டிருந்தார். ஜானகி, சதானந்தவதியின் அருகில் வந்ததும் ஜானகியின் கையைப் பிடித்து சதானந்தவதி முத்தமிட்டார். ஜானகியும் சதானந்தவதியும் நல்ல ஐக்கியமாக கடைசிவரை அக்கா, தங்கை போல இருந்தார்கள். குடும்ப டாக்டர் சுப்பிரமணியம் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் நடராஜனின் விருப்பப்படி எம்.ஜி.ஆரை ராமராவ் நேர்ஸிங் ஹோமில் சேர்த்து எக்ஸ்ரே எடுக்கப்பட்டு சீர்காழியில் போடப்பட்ட கட்டைப் பிரித்து வேறு கட்டு போடப்பட்டது. எம்.ஜி.ஆரின் கால் சீராகும் வரை சில மாதங்கள் படப்பிடிப்பிற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் சில படங்களை முடித்துக் கொடுக்க பல மாதங்கள் தேவைப்பட்டது. "கலையரசி" படத்தின் தயாரிப்பாளர் வந்து தனது படத்தை கால் குணமானதும் முதலில் முடித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வீட்டுக்கு அழைத்து வரப்பட்ட எம்.ஜி.ஆர் கால்



முறிந்ததால் படப்பிடிப்பிற்கு செல்ல முடியாததால் கிடைத்த காலத்தில் படுக்கையில் இருந்து கொண்டு 16 எம்.எம்.புரொஜக்டரை வாங்கி அமைத்து பல ஆங்கில படங்களை வரவழைத்து போட்டு பார்ப்பதில் காலத்தை பிரயோசனப்படுத்தினார். டாக்டர் நடராஜன் அவர்கள் எம்.ஜி.ஆரிடம் உடல் கனத்தை அதிகமாக்கக் கூடாதென்று கண்டிப்பாக சொன்னார். ஆனால் இரு மனைவிகளும் போட்டி போட்டு வற்புறுத்தி வயிறு புடைக்க உண்ணக் கொடுத்து விளைவு என்ன தெரியுமா? 67 கிலோ 74 கிலோவாக மாறியது. எம்.ஜி.ஆரின் கால் முறிந்ததும் 'ராமச்சந்திரனால் இனிமேல் நடிக்க முடியாது. குறிப்பாக சண்டைக்காட்சிகளில் நடிக்கவே முடியாது' என்று தமிழக சினிமாத் துறையில் இருந்த பெரும்பாலானோர் முடிவு கட்டி விட்டனர். எம்.ஜி.ஆர்ருடன் ஒப்பந்தம் செய்து படமெடுத்த பலர் ஏறத்தாழ பாதியும் முக்காலும் முடிய வேண்டிய நிலையில் இருந்த தயாரிப்பாளர்கள் ஏங்கினர். ஆனால் சில மாதங்களின் பின்னர் எம்.ஜி.ஆர் ஒப்பந்தம் செய்த அனைத்து படங்களையும் வெற்றிகரமாக முடித்து கொடுத்து தயாரிப்பாளர்களை திருப்தி செய்தார். எம்.ஜி.ஆர் தனது கடும் உழைப்பினாலும் அண்ணனுடைய உழைப்பாலும் தாயுடைய சிக்கன செலவாலும் தான் வெற்றிகரமாக வீடு ஒன்று சொந்தத்தில் வாங்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. சத்திய தாய் எம்.ஜி.ஆருக்கு அடிக்கடி சிக்கனம் முக்கியம், சேமிப்பு அவசியம் என்று சொல்லி எம்.ஜி.ஆருடைய முன்னேற்றத்திற்கு சத்திய தாயே காரணமாக இருந்தார். எம்.ஜி.ஆர் மேலும் சொந்தத்தில் சினிமா படத்; தயாரிப்பு, சொந்தத்தில் கல்யாண மண்டபம், கார், சொந்தத்தில் சிறிய மார்க்கட், சொந்தத்தில் பாடசாலை போன்றவைகளும் வைத்திருந்தார்.எம்.ஜி.ஆர் சென்னை நகருக்கு வெளியே பல ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய வயல் வெளியை வாங்கி அவ்விடத்தில் தென்னந்தோப்பு அமைத்தார். அதன் நடுவில் ஒரு பங்களா கட்டினார். மேலும் நெல்வயல், காய்கறித் தோட்டம் அமைத்தார். பத்து பசுக்களைக் கொண்டு ஒரு மாட்டு பண்ணை வைத்தார். ஆடு, மாடு, கோழி, குருவிகளும் வளர்த்தார். மீனும் வளர்த்தார். நீச்சல் குளமும் கட்டினார். எம்.ஜி.ஆர் தோட்டத்தின் நடுவே அமைந்த பங்களாவினுள் அண்டர் கிரவுண்ட் எனும் ஒரு நிலவறையும் அமைத்தார். நிலவறையினுள் ஏராளமான புத்தகங்களை எம்.ஜி.ஆர் சேர்த்து வைத்திருந்தார. கம்பராமாயாணம், வால்மீகி ராமாயணம், ராஜாஜி எழுதிய நூல்கள், காண்டேகர் நாவல்கள், திருக்குறள் உள்ளிட்ட பல நூல்கள் இருந்தன. சுமார் 1500 நூல்கள் இருந்தன.சத்தியதாய் மகன் எப்படி வாழவேண்டும் என்று நினைத்தாரோ அப்படி நினைத்ததை முடித்தவர்தான் எம்.ஜிஆர் ஆவார்.

சத்தியதாயின் கனவுகளை எம்.ஜிஆர் நிறைவேற்றினார். எம்.ஜி.ஆர் நாய்க் குட்டிகளும் வளர்த்தார். ஓர் அழகான குட்டி நாயை ஒரு பெரிய நாய் அவரது கண் முன்னாலேயே கடித்து குதறி கொன்று விட்டது. இந்நிகழ்ச்சிக்கு பிறகு அவர் வளர்ப்பு பிராணி என்று எதையும் வளர்ப்பதை விட்டு விட்டார். தோட்டத்தில் தனது தாய்க்கு எம்.ஜி.ஆர் கோயிலும் கட்டினார். எம்.ஜி.ஆர் தினந்தோறும் தாயை வணங்கி விட்டுத்தான் செல்வார். நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சதானந்தவதி 1962 இல் இறந்து போனார். எம்.ஜி.ஆர் ராய பேட்டையில் "தாய் வீடு" எனும் வீட்டில் ஒரு பெரிய தாயின் படம் சத்யா ஸ்ரூடியோவிலும், அலுவலகத்திலும் மாம்பழும் அலுவலகத்திலும் தாயின் படம் காணப்பட்டது. "தாயே தெய்வம்" என்று தினந்தோறும் பூஜித்து வந்தார்.எம்.ஜி.ஆர் தனது தாய் இறந்த பிறகு தனது அண்ணன் சக்கரபாணியை தாயாக நினைத்து எந்த விடயமாக இருந்தாலும் கலந்து பேசியே செய்வார். நாடகக் கம்பனியின் சினிமா கம்பனியின் முழுப் பொறுப்பையும் எம்ஜி.ஆர் தனது அண்ணனிடமே கொடுத்திருந்தார். அண்ணனுக்கு துணையாக ஆர். எம்.வீரப்பனையும் கணக்கு வழக்குகளை கவனிக்கும்படி நியமித்திருந்தார். அண்ணன் சக்கரபாணி தனது தம்பி, தங்கையையும் மனைவி, பிள்ளைகளையும் எந்த குறைகளும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறார் என்று பெருமையுடன் கூறுவாராம்.



(தொடரும்)

கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# "விஞ்ஞானத்த வளர்க்கப் போறேண்டி"

## இந்தியாவின் சாப்ளின் என்.எஸ்.கிருஷ்ணன்

கரகரவென சக்கரம் சுழல
கரும்புகையோடு வருகிற ரயிலே
கனதனவான்களை ஏற்றிடும் ரயிலே
ரயிலே ரயிலே ரயிலே ரயிலே ரயிலே ரயிலே
மறையவரோடு பள்ளுப் பறையரை ஏற்றி
மதபேதத்தை ஒழித்திட்ட ரயிலே."


ரயில் பயணத்தை வர்ணித்து பாடும் போது, கலையினை அழகியலோடு சுருக்கி விடாமல், ரயில்கள் சாதி, மதத்தினை ஒழித்துவிட்டு அனைவரையும் இணைத்து செல்கின்றன என்று பாடி சமூக மாற்றத்தின் கூறுகளை முன்னிறுத்தியவர் என்.எஸ்.கிருஷ்ணன் .

கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் நாகர்கோயில் அருகில் உள்ள ஒழுகினசேரியில் 1908ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி சுடலைமுத்து – இசக்கியம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

நாடகக் கொட்டகைகளில் சோடா விற்கிற சிறுவனாகத் துவங்கி, நாடக நடிகராக கலையுலகில் காலடி பதித்த என்.எஸ்.கிருஷ்ணன் சிறந்த நடிகராக, நாடக ஆசிரியராக, பாடலாசிரியராக, திரைப்பட இயக்குநராக, திரைப்பட தயாரிப்பாளராக என பல்வேறு பரிமாணங்களில் உச்சங்களைத் தொட்டார்.

சதிலீலாவதி படத்தில் வில்லுப்பாட்டுக்காரராக அறிமுகமான அவர், சமூக சீர்திருத்த கருத்துகளை, மூடநம்பிக்கை எதிர்ப்பு கருத்துகளை மக்களிடம் பரப்புவதற்கு கலைத்துறையைப் பயன்படுத்தியவர்.

கே.தியாகராஜ பாகவதர் புதிய இல்லத் திறப்பு விழாவுக்கு சேங்காலிபுரம் அனந்தராமர் தீட்சிதரை கலாட்சேபம் செய்ய அழைத்தபோது. கோயில் நிகழ்ச்சிகளுக்கும் பிராமணர் வீட்டு விசேஷங்களுக்கு மட்டுமே நான் போவேன் என்று அனந்தராமன் மறுத்தார். அனந்தராமன் மறுத்ததை அறிந்த கலைவாணர், 'கிந்தனார்' காலட்சேபம் என்ற ஒன்றை உருவாக்கி பாகவதர் வீட்டு நிகழ்வில் அரங்கேற்றினார். தீண்டாமை, ஜாதிக் கொடுமைகளை மிகச் சிறப்பாக விளக்கிய அந்த நிகழ்ச்சியானது, உடுமலை நாராயணகவி பாலாசிரியராக, அண்ணா திரைக்கதை வசனம் எழுதி, என்.எஸ்.கே இயக்கிய நல்லதம்பி திரைப் படத்தில் காட்சியாகவும் சேர்க்கப்பட்டது.



என் . எ ஸ் . கே கலைத்துறையில் தீவிரமாக இயங்கிய காலம் என்பது பல்வேறு புதிய மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். அதேபோல சமூக மாற்றுக் கருத்துக்கள் பலவற்றை மக்கள்முன் வைத்தவர் என்.எஸ்.கே.

சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல் ஒரு கொடை வள்ளலாகவும் என்.எஸ்.கே விளங்கினார். ரசிய அரசின் அழைப்பின் பேரில் 1951ம் ஆண்டு அங்கு சென்று கலை நிகழ்ச்சிகள் பல நடத்தியவர். என்.எஸ்.கிருஷ்ணனிடம் ரஷ்யப் பயணம் குறித்து பத்திரிகையாளர்கள் கேட்ட போது, ரஷ்யாவில் "அக்ரஹாரமும் இல்லை..சேரியும் இல்லை" என்று பதில் சொன்னார்.

952ல் நாடக கழகத் தலைவராகவும், 1956ல் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குறியவர்.

பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் என்.எஸ்.கிருஷ்ணர் அவர்களுக்கு கலைவாணர் என்ற பட்டத்தை அளித்தார். அதுமுதல் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் என்றுதான் என்.எஸ்.கே அழைக்கப்பட்டார். முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களை "நகைச்சுவை அரசு" என்று பாராட்டினார்.

உங்கள் கொள்கை என்னவென்று பத்திரிக்கையாளர்கள் கேட்டபோது, சுயமரியாதை என்று சொன்ன என்.எஸ்.கே எல்லா கட்சியினராலும் நேசிக்கப்பட்ட மனிதராக இருந்தார்.

கலைவாணர் குறித்து பேசுகிற போது பெரியார், "இனி என்.எஸ்.கிருஷ்ணன் செத்தாலும் சரி, அவர் பணம் காசெல்லாம் நழுவி 'அன்னக்காவடி கிருஷ்ணன்' ஆனாலும் சரி, நாடகப் புரட்சி உலகைப் பற்றி சரித்திரம் எழுதப்பட்டால், அட்டைப் பக்கத்தில் கிருஷ்ணன் படம் போடாவிட்டால், அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும்." என்கிறார்.

திராவிட இயக்கங்களை தீவிரமாக ஆதரித்த என்.எஸ்.கே தனது இறுதி நிகழ்வாக சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் நடந்த அண்ணாவின் படத்திறப்பு நிகழ்வில்தான் கலந்துகொண்டார்.

1969 அண்ணா தனது கடைசி நிகழ்வில், என் எஸ் கேவின் சிலையை திறந்து வைத்து, "வெறும் கலைஞராக இருந்து தங்களுடைய கலைத்தொண்டை ஆற்றியவர்கள், கலையுலகத்துக்கு மட்டும் தொண்டாற்றுகிறார்கள். வெறும் கலைஞராக இருந்து தங்களுடைய சொந்த வருவாயைப் பெருக்கிக்கொள்பவர்கள், தங்களுடைய குடும்பத்தையும் நண்பர்களையும் நல்ல முறையிலே வைக்கின்றார்கள். ஆனால் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் கலையுலகத்திற்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கு தன்னுடைய தொண்டுகளைச் செய்ய வேண்டும்; அதற்கு இந்தக் கலை ஒரு வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்ற முறையில் கலைத்துறையைத் தேர்ந்தெடுத்தார்கள்" என்று பேசினார்

1957ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் தனது கலைப்பயணத்தை நிறுத்திக் கொண்டார் கலைவாணர். "விஞ்ஞானத்தை வளர்க்க போறேண்டி" என்று அறிவியலைப் பாடி, சமத்துவத்தைப் பாடி, இந்தியாவின் சாப்ளின் என்றும் நாகரிகக் கோமாளி என்றும் புகழப்பட்ட கலைவாணர் என்.எஸ்.கேவின் இடம் அவருக்கு பின் நிரப்பப்படாமலேதான் இருக்கிறது.





**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை



திருக்கோவில் தீர்த்தத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடன்.... சகா



Thavaraj S. T. Deva



R. J. Prabu



Chandrakasan Gnana Prasanthan



பதிவு திருமணத்தில் ஏகலைவன்



friends



kaiSri



thurairasa Suresh



சகா

# சுவர்ணா கௌரிபாலாவின் நூல் வெளியீட்டு விழா









நாம் இப்பூவுலகின் எந்த மூலையில் வாழ்ந்த போதிலும், மொழி எம்மை ஒன்றுசேர்க்கும். அந்த அடிப்படையில் கொடிகாமத்தைச் சேர்ந்த கவிஞர் ஔவையும் பல வருடங்களாக கடல் கடந்து லண்டனில் வாழ்ந்தாலும் கூட தமிழ் அபிமானம், பற்றுதலுடன் நூலாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள்,வணிகபீட சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி தெரிவித்தார்.

கவிஞர் திருமதி சுவர்ணா கௌரிபாலா (ஔவை) எழுதிய திருத்தொண்டர் சரிதம் மற்றும் உண்மையைத் தேடி ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு விழா தென்மராட்சி கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நிகழ்வு சைவப் புலவரும் ஸ்ரீபாத தேசிய கல்வியியற்சி கல்லூரி ரேஷ்ட விரிவுரையாளருமான சி.கா. கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே பேராசிரியராக வேல்நம்பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உசன் கந்தசுவாமி ஆலயப் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். நூல் வெளியீட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் ச.லலீசன்நி கழ்த்தியதுடன் நூலின் முதற் பிரதிகளை கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவர் இ.குழந்தை வடிவேல் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சு.சுந்தரேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். லும், நூல் ஆய்வுரைகளை கல்வியியலாளர் க. தர்மராசா மற்றும் துணுக்காய் கல்வி வலய தமிழ்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சு. லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், புலம் பெயர்ந்து செல்லும் மக்களில் அதிகமானோர் அந்தந்த நாடுகளின் மொழி, கலாசாரத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்றனர்.ஒரு சிலர் மட்டுமே தமிழ் பற்றுடன் இருக்கின்றனர்.

அதற்கு கவிஞர் ஔவையும் சிறந்தொரு எடுத்துக்காட்டாகும். எமது வாழ்வு செப்பனிடப்பட வேண்டுமென்றால் பெரிய புராணத்தைப் படித்தல் வேண்டும் என்பது ஆன்றோர் கருத்தாகும்.

தமிழ் மக்களைத் தாண்டி உலகில் உள்ள அனைவரும் பெரிய புராணத்தில் விடயங்களை கற்றால் தமது வாழ்க்கை முறைமையை சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும். வெவ்வேறு நாடுகளில் வேற்று மொழி பேசுகின்றவர்கள்கூட, தமிழ் மொழியைப் பயின்று ஆய்வரங்குகளில் தமிழ் மொழியூடாக தமது கருத்துக்களைப் புலமைப் படுத்துகின்றனர்.

**(எம்.எஸ். எம்.முன்தஸிர் பாணந்துறை)**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.